# தமிழ்ப் பேராய்வு
## ஆய்விதழ்

தொகுதி - 8 (பகுதி 1)
Volume - 8 (Issue 1)

ஜூலை / July 2019

# JOURNAL OF TAMIL PERAIVU

Published by
**Department of Indian Studies**
**Faculty of Arts and Social Sciences**
**University of Malaya**

Indexed by MyJurnal
Malaysian Citation Centre

UNIVERSITY OF MALAYA
*The Leader in Research & Innovation*

MCC Malaysian Citation Centre
Pusat Sitasi Malaysia

**ISSN 2289- 8379**

**Journal of Tamil Peraivu Editorial office**
**Office of the Editor – in – Chief**

No. 132, Department of Indian Studies, Faculty of Arts and Social Sciences,
University of Malaya, 50603 Kuala Lumpur, Malaysia
Tel: +60379675670
rajanmun@um.edu.my / rajantheran@gmail.com

**Website: https://ejournal.um.edu.my/index.php/tamilperaivu/index**

**Publisher**

Department of Indian Studies,
Faculty of Arts and Social Sciences,
University of Malaya,
50603 Kuala Lumpur, Malaysia.
Tel: +60379675510

**Sponsored by**

Almaa Herbal Nature Pvt ltd
No.1/8, Pinjala Subramanian street,
T. Nagar, Chennai – 600 017
Tamilnadu, India
mglv@rediffmail.com/ www. Almaaherbal.com

**Printed at**

BIG C GRAPHICS (M) SDN. BHD
No. 36, Ground Floor, Jalan Tun Sambanthan 3, Brickfilds, 50470,
Kuala Lumpur, Malaysia

---

The publisher of Tamil Peraivu Aivithal (Journal of Tamil Peraivu), will not be responsible for the statement made by the authors in any articles published in the journal. Under no circumstances will the publisher of this publication be a liable for the loss or damage cost by your reliance on the advice, opinion or information obtained either explicitly or implied through the contents of this publication.

© Department of Indian Studies, Faculty of Arts and Social Sciences, University of Malaya. All rights reserved. No part of this journal may be reproduced in any forms or by any means without publisher’s prior permission.

# Editorial Board
2016-2019

## Editor–in–Chief
## Professor Dr. M. Rajantheran, Malaysia
Indian civilization, Tamil culture and literature, early cultural relations between India and Southeast Asia & culture and life of the Malaysian Indians

## Chief Executive Editor
## Assistant Professor Dr. Silllalee S. Kandasamy
Media, Tamil literature and culture, Malaysian Indians & sociology

## Journal's Web Design and Technical Support
## Dr.Kanmani Munusamy
Software Engineering, ontology, Data Mediation - Information Technology, Centre of Information Technology, University of Malaya, Kuala Lumpur, Malaysia.

&

## Ms.Vijaya Laxmi Maruthaveeran
Librarian, Indian Studies Library University of Malaya, Kuala Lumpur, Malaysia.

## Associate-Editing & Ideating
## Dr.U.Narendranath
English Education, Risk, Strategy, Leadership & Marketing.
Director-Putra Intelek International College, Malaysia.

# Editorial Board Members
**Era. Kamarasu,** Professor Dr – Tamil Language, Classical literature, modern literature & culture, Department of Tamil Literature. Tamil University, Tanjavur, Tamil Nadu, India.

**G. Singaravelu,** Professor Dr- Primary Education, Teacher Education, English Education, Head, Department of Education, Syndicate member of the university, Bharathiar University, Coimbatore, Tamil Nadu, India.

**Ira. Kurinji Vendan,** Professor Dr- Tamil literature, Culture & Diaspora. Post graduate section, Arinyar Anna College, University of Pondicherry.

**Jeevendiran Chemen,** Associate Professor Dr- Ethic identity of Mauritian Tamils, Tamil language and Linguistic & Sociology. Mahatma Gandhi Institute, University of Maurititus.

**Kizhambur S. Sankara Subramanian,** Tamil journalism, Tamil Literature and Culture & Tamil Civilization, India.

**K. Chidamparam**, Assistant Professor Dr. - Linguistics, English, Human rights, International Institute of Tamil Studies,CPT Campus,Taramani, Chennai, Tamil Nadu.

**K. Subashini**, Dr. - Lead IT Architect, DXC Technology & President of Tamil Heritage Foundation International (International Organization for preserving Tamil Heritage).

**Mohanadass Ramasamy,** Senior Lecturer Dr- Language and linguistics, Head Department of Indian Studies. University of Malaya, Malaysia.

**P. Sivakumar,** Professor Dr – Educational Technology, Environmental Education & Biology Education, Dean, Faculty of Education, Alagappa University, Tamil Nadu, India.

**Paramasivam Muthusamy,** Associate Professor Dr- Tamil language and literature, socio-linguistics, pedagogy and Tamil culture. Department of Foreign Languages. Faculty of Modern Languages and Communication, University Putra Malaysia.

**Ponsamy Tiroumalechetty,** (Retired) Associate Professor Dr – Socio- linguistics, Socio Culture of Tamils. Head, School of Indian Studies, Mahatma Gandhi Institute, Mauritius.

**Rakkappan Velmurugan,** Senior Lecturer Dr- Linguistics, Pedagogy, Tamil language, Literature & Grammar. Asian Languages and Cultures Academic group, National Institute of Education, Nanyang Technological University, Singapore.

**Samikkanu Jabamoney Ishak Samuel,** Associate Professor Dr – Malaysian Tamil Literature, Modern Tamil Literature, Tamil Language and Pedagogy. Tamil unit Coordinator, Sultan Idris Educational University.

**Seethalakshmi,** Associate Professor Dr- Tamil lexicography, teaching Tail as a second language, Tamil Pedagogy, Sociolinguistics & Literature through Mass Media. Department of Asian Languages & Cultures (ALC), Nanyang Technological University, Singapore.

**V. Maheswaran,** Professor Dr- Epigraphy, Tamil culture, folklore, literature. Department of Tamil, University of Peradeniya, Peradeniya, Sri Lanka.

**Vasu Aranganathan,** Dr- History of Tamil language, literature, religion, inscriptions & Teaching and learning of Tamil language. South Asia Studies, University of Pennsylvania, USA.

# PREFACE

The Department of Indian Studies, University of Malaya brings out the eighth volume (issue 1) of *Tamil Peraivu* which is a bi-annual journal. Academicians around the globe contribute their articles to this journal. The present volume consist of fifteen research articles. The leit –motive of a research has to be scientific and this is the sole objective of this journal. This volume contains 15 scholarly articles.

The article, 'Sinhala-Tamil Ethnic Conflict in Sri Lanka: An Analysis on its Root Causes' by Dr. Athambawa Sarjoon (Sri Lanka), focuses on the Sri Lankan Sinhala-Tamil ethnic conflict. The ethnic conflict resulted in a three-decade civil war. All initiatives to resolve the Sri Lankan ethnic conflict became unsuccessful due to the failure of understanding and accommodating its root causes. This article analyses the influence of identified root causes of the Sinhala-Tamil ethnic conflict in Sri Lanka.

The following article is by S.Kanmani Ganesan (India) entitled. "An Analytical Study of The Songs of *Makatpaarkaanjiththurai*" is an attempt to analyze twenty songs in *Puranaanooru*; which belongs to the subdivision *makatpaarkaanji.* The subject matter in the songs needs to be studied in detail to know the social history of the early Tamils. This attempt throws light in the plurality of the Dravidian society; the fight for supremacy among the *venthar* and *velir* and the part played by *kizhars* the native people of the Tamil land.

The third article by Bharathes Devi Subramaniam, Ponmalar Panneer Selvam and Dr.Silllalee S. Kandasamy (Malaysia) is entitled, "The Tracts of Tamils on the Riverbank of Sungai Bernam - Good Water Estate". This article provides rare information about the Tamil community that lived at the riverbank of Sungai Bernam, Perak. Following the establishment of British rule in Malaya, the Tamils from South India were recruited to Malaya as wage laborers. This Tamil community explored the dense jungle and helped colonialist to exploit valuable resources in Malaya. Sungai Bernam River Estate is one of the settlements of Tamils in the British Malaya. This article is attempts to describe the life of the Sungai Bernam River Estate's Tamil community.

The next article is by Dr. M S Shri Lakshmi (Singapore) deals with the Translation Literature in Singapore. The author states that the multilingual situation in Singapore has created a positive environment for the growth of the translation literature. The translation literature is seen as one of the ways to bring about unity among the multiracial society of Singapore. This translation literature to be found in almost all the genres of the creative writings, i.e. poem, stories, children's literature and articles. This article studies the environment for the creation of the translation literature and the development of this genre of literature in Singapore.

"Counter-Narrating Ramayan", by Dr. V.Gayathri Priyadarsini (India) is the next article in this volume of the Tamil Peraivu journal. This article explains that the epic Ramayana can be considered as a significant literary work that has a general consensus of creating harmony within India. Though it is a literary work that has been undergoing minor changes in its form, since its inception, it continues to be a work that aids wide readership and re-fictionalization. It can be considered as self-articulated contemporary literature as it has a practical approach towards society, tradition, and politics. Ramayan has led to the discourse of recent ideologies like feminism, Opposition of the 'Varna' system, Social injustice and Aryan-Dravidian conflict.

The following article of Associate Prof. Dr. Samikkanu Jabamoney Ishak Samuel & Prof. Dr. Rajantheran Muniandy (Malaysia) entitled, “Mahabharata in Malay Language”. This article mainly establishes that during the early cultural relationship between India and Southeast Asian countries, many cultural aspects have influenced both the regions. This includes the Indian literary influence over the Southeast Asian countries. This includes the influence of the famous Indian epic the Mahabharata. This article explains that this epic literature was adopted by the ancient Javanese literary tradition before reaching the Malay literary tradition.

The next article entitled, “Roman Trade links with the ancient Tamil countries - Roman documents”, was written by K.Subashini (Germany).This paper deals with the ancient Roman Manuscripts and documents referencing Ancient Tamil countries’ trade networks. This paper examines recorded information in The Peutinger Map, Muziris Papyrus, The Periplus of the Erythraean Sea, Bernardus Sylvanus Map as well as related sources in Plini the Elder and Strabo. This paper suggests for an extensive study that includes a wide range of further Roman period Manuscripts and emphasizes the importance and the need for further archaeological excavation projects at the ancient South Indian Malabar coastal cities and Coromandel Coast.

This following paper by Manonmani Devi D/O M.A.R Annamalai (Malaysia) deals with the influence of the Thirukkural in Seeni Naina Muhammad’s poems entitled, *Thenkudu.* This study had been conducted based on ‘The Concept of Influence’ which is a part of the comparative studies concept. The aim of this article is to study the influence of *Thirukkural,* written during the post-Sangam age, in key concepts found in the anthology of poetry *Thenkudu, w*ritten in the modern age. The author managed to trace the Thirukkural’s influence in the above-mentioned anthology of poems and have analyzed them based on the concept of Influence.

This following paper by Dr. Pa.Su. Mooventhan, (India) entitled, “Thirukuralil ‘Thi’ Thiram” deals with the fact that the Tamils had the knowledge about the five fundamental elements of the world including the fire way before the others, based on the evidence found in Thirukkural a renown Tamil classical text. This article covers the openness of the fire, energy, strength, tenderness, consciousness, function, application, and life’s paradigm in the sense that it speaks of personality and speaks of social behavior.

The next article by Rathidevi & Dr. Mohanadass Ramasamy (Malaysia) describes the virtuous life mentioned by Thiruvalluvar, and changes that can be made by Tamil cinema among Malaysian men and women. The authors are of the opinion that though studies have been done in several angles on this rare couplet work, Thirukkural by many researchers, but still offers ample of room for new studies. Hence, this study presents some insights from the Thirukkural that can be utilised by the Malaysian Tamil film makers to improve their movies.

Dr. S. Ramesh (India) describes the “Marabiyal”, the last part of an ancient Tamil grammar book Tholkaappiyam which deals with the convention of words. Essentially Marabial deals with the poetical conventions in Tamil language. Tholkaappiyam allowed to use the spoken language of people and dramatic words in Tamil poems by traditional manner without phrasing. Marabiyal speaks about class of nouns comprising humans and celestial beings, a class of nouns for non-animate things and for beings other than human and celestial, masculine gender names, feminine gender names, classes of human beings (varnas) and their rights but some of the Tamil researchers told this part of metre or sutrams are interpolations. The aim of this article is to prove those are not interpolations, via the metre order of marabiyal and important messages.

The next article entitled, the concept of idealism in the Upanishad dialogue were authored by Mr. K. Thavaseelan and Dr. (Mrs). V. Pavanesan (Sri Langka). This article explains that the Upanishads are an adaptation of all philosophies found in the Classical Indian Philosophical system. The review of this article has been carried out by analyzing comparative, statistical and historical methods to analyze the sub disciplinary dialogue-based literature only on the basis of how the philosophical concept of the Upanishad dialogue is built on the basis of idealism.

"Tamil and Astrology", by Thilak.K.Baskaran Er.S.Sivaramkrishnan (India) is the next article in this volume of Tamil Peraivu journal. The authors are of the opinion that the Tamil language evolved naturally throughout the ages. Tamil people's life is completely based on the nature (Planets – Astrology). The knowledge and understanding of the ancient Tamil people about Nature – Planetary position (Astrology) is astonishing. Their festivals, rituals, life style, customs etc. are evident that their life was completely based on the nature. The language that evolved naturally and the civilization that grew on the basis of nature should have similarity in it. This article explores such similarity and brings out how Tamil and their civilization are similar in their concepts. It also proves that the concept evolved based on nature will have unique similarity.

The following article by Premananthini Dhemudu and Dr.Mohana Dass Ramasamy (Malaysia) entitled, 'Amaicciyal' in Dr.Mahathir Mohammed's political leadership', is an attempt to expose the political leadership characteristics portrayed by the World renowned Malaysian Prime Minister Dr. Mahathir Mohammed as in Thirukkural under the chapter of 'Amaicciyal' (*Political leadership*). An in-depth focus into the 'Amaiciyal' and the current leaders' charateristics will help to prove that these scripture which is being old in nature but the messages emerged are timely. As a conclusion this article tries to establish with relevant examples the immense contribution of Thirukkural to the world of political leadership.

The final article entitled, 'Thirulokki' of this volume is authored by Dr.S. Anuradha (India). This article deals with the importance of the place referred to as 'Thirulokki' in religious and historical writtings. Thirulokki also known as Thirulokkimadevi chathurvedimangalam. This Chathurvedimangalam was created by Parakesari Rajendra Chola I (AD1012 – AD1044) in memory of his mother Lokamadevi, the wife of Rajaraja I. He has constructed Kailasanatha temple and donated gifts to Sundareswarar temple and Sri Rapthi Sayana Narayana Perumal temple in Thirulokki. After Rajendra I's victory (Gangaikondacholan) over Ganges, he brought Ganga water to purify the God and Goddess of Sundareswar temple at Thirulokki. Further, he installed Devasena sametha Subramaniyar and Rishabavakanar comemorating this victory over the Nolambas.

This Journal in its sustaining effort records the innovative ideas of many researchers. The Editorial Board feels immense pleasure in bringing this eight volume (Issue 1) of *Tamil Peraivu* expressing heartfelt thanks to all the contributors and evaluators of this volume. Last but not least, we would like to thank Mr.MGL.Velayutham – Alma Herbal Nature Pvt. Ltd for his sincere generosity in sponsoring this journal.

**Professor Dr.M.Rajantheran**
**Chief Editor**
**20.07.2019**

# முகவுரை

*தமிழ்ப் பேராய்வு ஆய்விதழின் எட்டாவது தொகுப்பின் முதலாவது பகுதியாகிய இவ்விதழை மலாயாப் பல்கலைக்கழக இந்திய ஆய்வியல் துறை வெளியீடு செய்கிறது. அறையாண்டிதழாக வெளியீடு காணும் இவ்விதழில் பன்னாட்டு அறிஞர்களின் ஆய்வுக் கட்டுரைகள் இடம் பெறுகின்றன. ஆய்வு என்பது அறிவியல் பூர்வமாக இருக்க வேண்டும் என்பதால் இவ்வாய்வேடு அதனை முன்னிருத்தி உருவாக்கம் கண்டுள்ளது. இந்தத் தொகுப்பில் மொத்தம் பதினைந்து ஆய்வுக் கட்டுரைகள் இடம் பெற்றுள்ளன.*

*இந்தத் தொகுதியில் இடம்பெறும், "இலங்கையின் சிங்கள-தமிழ் இனமுரண்பாடு: அடிப்படைக் காரணிகள் குறித்த ஒரு பகுப்பாய்வு", எனும் தலைப்பிலான முதல் கட்டுரை கலாநிதி. ஆதம்வாவா சர்ஜூன் (இலங்கை) அவர்களின் படைப்பாக அமைகின்றது. இக்கட்டுரை இலங்கையின் சிங்கள-தமிழ் இனமுரண்பாடு குறித்து ஆழ்ந்து நோக்குகின்றது. இனமுரண்பாட்டின் தீவிர விளைவு மூன்று தசாப்த ஆயுதப்போராட்டத்துக்கு வழிவிட்டிருந்தது. இனமுரண்பாட்டுக்கான அடிப்படைக் காரணிகளை முறையாகக் கண்டறிந்து நடவடிக்கை எடுக்காததன் காரணமாக இனமுரண்பாட்டை தீர்ப்பதற்கான எல்லா முயற்சிகளும் தோல்வியையே அடைந்தன. இந்தக் கட்டுரை இலங்கையின் சிங்கள-தமிழ் இனமுரண்பாட்டுக்கான அடையாளம் காணப்பட்ட அடிப்படைக் காரணிகளின் செல்வாக்கினை பகுப்பாய்வு செய்கிறது.*

*அடுத்து வருவது, ச.கண்மணி கணேசன் (இந்தியா) அவர்களின், "மகட்பாற்காஞ்சிப் பாடல்கள் - ஒரு பகுப்பாய்வு", எனும் கட்டுரை. இக்கட்டுரையானது புறநானூற்றில் இடம் பெறும் 20 மகட்பாற்காஞ்சிப் பாடல்களைப் பகுத்து ஆய்வதாக அமைகின்றது. அப்பாடல்களே முதல்நிலைத் தரவுகளாகின்றன. பிற சங்க இலக்கியப் பாடல்கள் துணை ஆதாரங்களைத் தருகின்றன. 20 பாடல்களிலும் பண்டைத் தமிழகத்தின் சமூக வரலாறு பற்றிய பல உண்மைகள் பொதிந்து உள்ளமை கூர்ந்து நோக்கின் புலனாகின்றன. பன்முகப் பாங்குடைய அச்சமூகத்தில் வேந்தர்க்கும், வேளிர்க்கும் இடையில் நிகழ்ந்த அதிகாரப் போட்டியும்; அவர்களுக்கிடையே கிழார் ஊடாடிய பங்கும் புலனாகின்றன.*

*இவ்வாய்விதழில் மூன்றாவது கட்டுரை, "சுங்கை பெர்ணம் ஆற்றங்கரையில் தமிழர்களின் சுவடுகள் - நல்ல தண்ணி தோட்டம்" எனும் பாரதிஸ் தேவி சுப்ரமணியம், பொன்மலர் பன்னீர் செல்வம் மற்றும் முனைவர் சில்லாழி கந்தசாமி (மலேசியா) ஆகியோரின் கட்டுரையானது மலேசிய பேராக் மாநில சுங்கை பெர்ணம் நதிக்கரையில் வாழும் தமிழ்ச் சமுதாயத்தின் பண்பாட்டு வரலாற்றச் சொல்வதாக அமைகின்றது. இக்கட்டுரை இந்தியத் துணைக்கண்டத்திற்கும் மலாயாவுக்கும் இடையே ஏற்பட்டிருந்த தொடக்கால பண்பாட்டுத் தொடர்புகளைத் தொட்டு, தற்போதைய மலேசிய இந்தியர்கள் இங்குக் குடியேறிய பின்புலத்தையும் சுட்டி, சுங்கை பெர்ணாம் தோட்ட மக்கள் இவ்வாறாக குடியேறியவர்களுள் ஒரு பகுதியினர் என்பதை அறிமுகப்படுத்துகிறது. இத்தோட்ட மக்களின் பண்பாட்டு வரலாற்றினை இக்கட்டுரை தக்க வரலாற்றுச் சான்றுகளுடன் விளக்குகிறது. இதில் 'பெர்ணாம்' நதியின் பங்களிப்பை இக்கட்டுரை மிகவும் தெளிவாகவும் துள்ளியமாகவும் படைத்துக் காட்டுகின்றது. இதனிடையே மலேசிய நாட்டு வளர்ச்சியில் 'பெர்ணம்' தோட்ட மக்களின் பங்களிப்பையும் கூட இக்கட்டுரை பேசுகிறது.*

*இதனை அடுத்து வரும் முனைவர் எம் எஸ் ஸ்ரீலக்ஷ்மி (சிங்கப்பூர்) அவர்களின் கட்டுரையானது, சிங்கப்பூர் மொழிபெயர்ப்பு இலக்கியம் குறித்து ஆய்வதாக உள்ளது. சிங்கப்பூரில் நிலவும் பன்மொழிச்சூழல் மொழிபெயர்ப்பு இலக்கியம் வளர்வதற்குச் சாதகமான சூழலை ஏற்படுத்தியுள்ளதாகவும், இனநல்லிணக்கம் வளர்க்கும் வழிகளுள் ஒன்றாகவும் இம்மொழிபெயர்ப்பு இலக்கியமும் முக்கியத்துவம் பெருவதாக எழுத்தாளர் குறிப்பிடுகிறார். கவிதை, புனைக்கதை,*

சிறுவர் இலக்கியங்கள், கட்டுரைகள் என அனைத்து இலக்கிய வகைமைகளிலும் மொழிபெயர்ப்பு இலக்கியங்கள் சிங்கையில் உருவாகியுள்ளதை இக்கட்டுரை தக்க சான்றுகளுடன் முன்வைப்பது சிறப்பு.

இவ்வாய்விதழின் அடுத்த கட்டுரை முனைவர் வி.காயத்ரி பிரியதர்ஷினி (இந்தியா) அவர்களின், 'இராமாயணமும் எதிர் கதையாடல்களும்' ஆகும். இராமாயணம் என்ற தொன்மக்கதை இந்தியா முழுவதும் ஒருங்கிணைக்கக்கூடிய பொதுத்தன்மைவாய்ந்த இலக்கியமாகத் திகழ்கின்றது என்பதனை மிகவும் தெளிவாகப் படம்பிடித்துக் காட்டும் கட்டுரை இது. பல்வேறு வடிவங்களில் சிற்சில மாற்றங்களுடன் விளங்கும் இக்காப்பியம் தற்காலம் வரை தொடர்வாசிப்பிற்கும் மீள் புனைவாக்கத்திற்கும் வழிவகுக்கக்கூடிய காப்பியமாகத் திகழ்கின்றது. இவ்வாறு ஏற்பு, எதிர்ப்பு என்று சமகால இலக்கியமாகவும் திகழும் இராமாயணம் திராவிட இயக்கக் கருத்தியலை விளக்கப் பயன்பட்டதும் அவர்களின் கருத்தியல் புலப்பாட்டுத்திறன் படைப்புகளில் வெளிப்படும் முறையும் இக்கட்டுரையில் ஆராயப்பட்டுள்ளது.

இணைப்பேராசிரியர் முனைவர் சாமிக்கண்ணு ஜெபமணி ஈசாக்கு சாமுவேல், பேராசிரியர் முனைவர் ராஜேந்திரன் முனியாண்டி (மலேசியா) ஆகியோரின் மலாய் மொழியில் மகாபாரதம் எனும் கட்டுரை மலாய் மொழியில் இருக்கும் மகாபாரதக் கதையை ஆழ்ந்து நோக்குவதாக அமைந்துள்ளது. இந்தியமயமாதல் அலையின் கீழ் இலக்கியங்களும் கூட தென்கிழக்காசிய மக்களிடையே பரவியமை அறிந்த ஒன்றே. அவ்வகையில் இராமாயணம், மகாபாரதம் ஆகிய இதிகாசங்களே இவற்றுள் முதன்மை இடம் பெறுகின்றன. இவை அடிப்படையில் ஜாவா மொழியில் எழுதப்பட்டு, இஸ்லாமிய வருகைக்குப் பின்னர் மலாய் இலக்கியப் பாரம்பரியத்திற்கு வந்ததாக ஆய்வுகள் காட்டுகின்றன. இக்கட்டுரை மலாய் மொழியில் உள்ள மகாபாரதக் கதையை ஆய்ந்து விளக்குவதாக அமைந்துள்ளது.

தொடர்ந்து வருவது முனைவர் க.சுபாஷிணி (ஜெர்மனி) அவர்களின், பண்டைய ரோமானிய அரசுடனான தமிழக வணிகத் தொடர்புகள் பற்றிய ரோமானிய ஆவணங்கள் கூறும் செய்திகள்' எனும் கட்டுரையாகும். இக்கட்டுரை பண்டையத் தமிழகத்துடனான ரோமானிய வர்த்தகம் தொடர்பான ரோமானிய ஆவணங்களை ஆராய்கின்றது. இவ்வாவணங்களின் வழி வெளிப்படும் பண்டையத் தமிழகம் பற்றிய குறிப்புகள் ஆய்வுக்குட்படுத்தப்பட்டுள்ளன. இந்த ஆவணங்களும் குறிப்புக்களும் பண்டையத் தமிழக வணிகச் சூழலை விவரிக்கும் பாங்கை இக்கட்டுரை ஆய்கிறது. மேலும் பண்டைய ரோமானிய மற்றும் தமிழக வணிக நகரங்கள், துறைமுகங்கள், பண்டைய ரோமானிய வணிக நடைமுறைகள், வழக்கிலிருந்த வர்த்தகச் சூழல்கள், இடைத்தரகர்கள், நிலவழி மற்றும் கடல்வழி வணிகப் பாதைகள், வணிக ஒப்பந்தங்கள், ஏற்றுமதி இறக்குமதி செய்யப்பட்ட வணிகப்பொருட்கள் பற்றியும் விவரிக்கின்றது.

அடுத்தது, 'சீனி நைனா முகம்மது கவிதைகளில் திருக்குறளின் தாக்கம்' எனும் தலைப்பிலான முனைவர் மனோன்மணி தேவி அண்ணாமலை (மலேசியா) அவர்களின் கட்டுரையாகும். இக்கட்டுரை மலேசிய கவிஞர் சீனி நைனா முகம்மது அவர்களின் தேன்கூடு எனும் தலைப்பிலான மரபு கவிதை நூலில் காணக்கிடக்கும் திருக்குறளின் தாக்கத்தை உற்று நோக்குவதாக அமைந்துள்ளது. ஒப்பிலக்கிய ஆய்வில் ஒரு பகுதியாக விளங்கும் 'தாக்கக்கோட்பாடு' (Influence Theory) எனும் அணுகுமுறையின் அடிப்படையில், தற்காலத் தமிழிலக்கியமான தேன்கூடு கவிதைத் தொகுப்பில் சங்கமருவிய காலத்தில் தோன்றிய திருக்குறளின் தாக்கம், அடிக்கருத்துச் மற்றும் புனைவுநிலை சார்ந்து இக்கட்டுரை ஆய்கிறது.

தொடர்ந்து முனைவர் ப.சு. மூவேந்தன் (இந்தியா) அவர்களின் கட்டுரையானது “திருக்குறளில் ‘தீ ’ந் திறம்” எனும் தலைப்பில் அமைந்துள்ளது. தொன்மைச் சமுதாயத்தில் தீயின் கண்டுபிடிப்பு அவர்தம் வாழ்வில் நிகழ்த்திய மாற்றங்கள் பலவாகும். மனித சமூக வளமைக்கும், பண்பாட்டு வளர்ச்சிக்கும் அடித்தளமாக அமைந்தது தீயின் பயன்பாடே. தீயைக் காட்சிப்பொருளாக மட்டுமன்றி, கருத்துப் பொருளாக எடுத்துரைத்தவர் திருவள்ளுவர். தீயின் ஆற்றல், செயல், வலிமை, மென்மை, அறிதிறன், செயல்பாடு, பயன்பாடு, வாழ்வில் முரண்பட்ட தன்மை ஆகியன முப்பால் அறங்களுக்கும் ஏற்றவாறு பொருத்தமுறக் காட்டியுள்ள திறத்தினை இக்கட்டுரையாளர் தெளிவாக ஆய்ந்து வெளிப்படுத்தியிருப்பது இக்கட்டுரையின் சிறப்பு.

அடுத்தது ரதிதேவி சண்முகம், முனைவர் மோகனதாஸ் ராமசாமி (மலேசியா) ஆகியோரின், “திருவள்ளுவம் கூறும் கற்புநெறி வாழ்வும், தமிழ்த் திரைப்படங்கள் மலேசிய ஆண் மற்றும் பெண்களிடையே ஏற்படுத்தவல்ல கற்புநெறி மாற்றங்களும்” எனும் கட்டுரையானது, வள்ளுவத்தின் வாழ்க்கைத் துணைநலம் மற்றும் பிறனில் விழையாமை ஆகியவற்றில் கூறப்படும் ஆண், பெண்ணுக்கான கற்புநெறி ஒழுக்கத்தை, மலேசியத் தமிழ்ச் சினிமாவை முன்னிருத்தி ஆய்வு செய்கிறது. ஆய்வின் பயனாக, சினிமாவின் தாக்கத்தினால், மலேசியாவில் சில குடும்பங்களில் ஏற்பட்ட பாதிப்புகளையும், அதனால் விளைந்த துயரங்களையும் இக்கட்டுரை வள்ளுவத்தின் துணைகொண்டு ஆராய்கிறது.

இத்தொகுப்பில் தொடர்ந்து வரும் கட்டுரையானது, தொல்காப்பிய மரபியல் முறைவைப்புச் செய்திகளை ஆய்வுக்குட்படுத்துவதாக உள்ளது. இக்கட்டுரையில் முனைவர் ச.இரமேஷ் (இந்தியா), மரபியலானது உலக வழக்கையும் செய்யுள் வழக்கையும் மரபு வழுவாமல் செய்யுள் இயற்றப் பயன்படுத்த வேண்டும் எனும் கருப்பொருளைத் தொட்டு எழுதியுள்ளார். இக்கட்டுரையில் அவர் தொல்காப்பிய மரபியல் அஃறிணைப்பெயர்கள், உயர்திணைப்பெயர்கள், ஆண்பாற்பெயர்கள், பெண்பாற்பெயர்கள், உயிர்களின் வகைகள் ஆகியவற்றைப் பேசுவதோடு உயர்திணையான மனிதர்களிடையே இயல்பாக உள்ள வருணாசிரம சமூகவேறுபாடுகளான அவ்வர்ணத்தாருக்குரிய உரிமைகள் குறித்துப் பேசுவதை ஆய்வுகுட்படுத்தியுள்ளார். குறிப்பாக, வருணாசிரமக் கருத்துகள் இடைச்செருகல்கள் என்று கூறப்படுவதை தக்க சான்றுகளுடன் ஆய்வாளர் மறுக்கின்றார்.

அடுத்து வரும், “உபநிடத உரையாடலில் கருத்துமுதல்வாதத்தின் வகிபங்கு” எனும் கு. தவசீலன், கலாநிதி (திருமதி). வி.பவநேசன் (இலங்கை) ஆகியோரின் கட்டுரையானது இந்திய தத்துவ வளர்ச்சியில் அனைத்துத் தத்துவங்களுக்கும் அடிநாதமாக விளங்குவது உபநிடதமே எனும் கருத்தை முன்வைக்கிறது. கருத்துமுதல்வாதம் என்பது கருத்துக்கு முதன்மை கொடுத்து கருத்து மாத்திரம்தான் உண்மை, அனைத்திற்கும் கருத்தே அடிப்படை என்பதை நிறுவுகிறது. உபநிடத உரையாடல் வழி அமைந்த தத்துவக் கருத்துகள் அனைத்தும் எவ்வாறு கருத்துமுதல்வாதத்தின் அடிப்படையில் கட்டமைக்கப்பட்டுள்ளன என்பதனை ஆதாரங்களுடன் இக்கட்டுரை முன்வைக்கிறது.

“தமிழும் சோதிடமும்”, எனும் தலைப்பிலான திலக். கி. பாஸ்கரன், பொறியாளர் சு. சிவராம்கிருஷ்ணன் (இந்தியா) ஆகியோரின் கட்டுரையானது இத்தொகுப்பில் 13-வது கட்டுரையாக இடம் பெற்றுள்ளது. தமிழ் மொழி மற்றும் தமிழர்களின் வாழ்வியல் இயற்கையை மையமாகக் கொண்டுள்ளது என்பதை மையப்படுத்தி இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதில் தமிழரின் சோதிடக் கலை அறிவானது இயற்கையோடு இயைந்து மனித வாழ்வைக் காட்டும் கண்ணாடியாக அமைந்திருக்கும் திறத்தை இக்கட்டுரை ஆய்கிறது.

தொடர்ந்து வரும், பிரேமநந்தினி தேமுடு, முனைவர் மோகனதாஸ் இராமசாமி (மலேசியா)

ஆகியோரின் கட்டுரை, மலேசியப் பிரதமர் துன் டாக்டர் மகாதிரின் அரசியல் தலைமைத்துவத்தைத் திருக்குறளின் ‘அமைச்சியல்’ அதிகாரத்தின் துணைகொண்டு ஆய்கிறது. திருக்குறளின் செய்திகள் காலத்தால் முந்திதயிருப்பினும் அது தற்கால அரசியல் சிந்தனையிலும் பளிச்சிடுவதை இவ்வாய்வு விளக்கப்படுத்துகிறது.

முனைவர் ஸ்ரீ அனுராதா அவர்களின், “திருலோக்கி” (இந்தியா) எனும் தலைப்பிலான கட்டுரை இத்தொகுப்பின் நிறைவுக் கட்டுரையாக அமைகிறது. இக்கட்டுரையில் திருலோக்கி எனும் திருத்தலத்தில் முதலாம் இரசேந்திர சோழனால் கட்டப்பட்ட கைலாசநாதர், திரைலோக்கிய சுந்தரம், ஸ்ரீராப்திசயன நாராயணப் பெருமாள் ஆகிய திருக்கோயில்கள் உட்பட சில சிறுதெய்வங்களுக்கான கோயில்களும் விவரிக்கப்படுகின்றன. இதில் முதலாம் இராசேந்திர சோழனின் பங்களிப்பும் சிறப்பும் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளது.

இந்த ஆய்விதல், பல்வேறு ஆய்வாளர்களின் சிந்தனைகளைத் தொகுக்கும் பெறும் பணியில் ஈடுபட்டுள்ளது. பல அறிஞர்களின் சிறந்த ஆய்வுகளைப் பதிவு செய்வதன் மூலம் ‘தமிழ்ப் பேராய்வு’, தொடர்ந்து நிலைநிறுத்தப்படுகிறது. பதிப்பாசிரியர் குழு இவ்வேளையில் இந்த எட்டாவது தமிழ்ப் பேராய்வின் முதல் பகுதியின் வெளியீட்டிற்குத் துணை புரிந்த கட்டுரையாளர்கள், மதிப்பீட்டாளர்கள் ஆகியோருக்கு நன்றியினைத் தெரிவித்துக் கொள்வதில் மகிழ்வடைகின்றது. இத்தொகுப்பின் பதிப்புச் செலவை மனமுவந்து ஏற்றுக் கொண்ட அல்மா ஹெர்பல் நேச்சர் நிறுவணத்தில் தோற்றுனரும் தலைமை நிர்வாகியுமாகிய திருமிகு MGL. வேலாயுதம் அவர்களின் தாராள மனதை இவ்விடம் நன்றியுடன் நினைத்துப் பார்க்கின்றோம்.

**பேராசிரியர் முனைவர் மு.இராசேந்திரன்**
**தலைமைப் பதிப்பாசிரியர்**
**20.07.2019**

# தமிழ்ப் பேராய்வு ஆய்விதழ் / Journal of Tamil Peraivu
## Vol 8, July 2019

பொருளடக்கம் / Contents — பக்கம் / Page


| | | |
|---|---|---|
| 1 | இலங்கையின் சிங்களதமிழ் இனமுரண்பாடு: அடிப்படைக் காரணிகள் குறித்த ஒரு பகுப்பாய்வு<br>Sinhala-Tamil Ethnic Conflict in Sri Lanka: An Analysis on its Root Causes<br>கலாநிதி. ஆதம்வாவா சர்ஜூன் / Dr. Athambawa Sarjoon | 14 |
| 2 | மகட்பாற்காஞ்சிப் பாடல்கள் ஒரு பகுப்பாய்வு<br>An Analitical Study of the Songs of Makatpaarkaanjiththurai<br>முனைவர் ச.கண்மணி கணேசன் / Dr. S.Kanmani Ganesan | 27 |
| 3 | சுங்கை பெர்ணம் ஆற்றங்கரையில் தமிழர்களின் சுவடுகள் நல்ல தண்ணி தோட்டம்<br>The Tracts of Tamils on the Riverbank of Sungai Bernam - Good Water Estate<br>பாரதிஸ் தேவி சுப்ரமணியம் / Bharathes Devi Subramaniam<br>பொன்மலர் பன்னீர் செல்வம் / Ponmalar Panneer Selvam<br>முனைவர் சில்லாழி கந்தசாமி / Dr.Silllalee S. Kandasamy | 34 |
| 4 | சிங்கப்பூரில் மொழிபெயர்ப்பு இலக்கியம்<br>Translation Literature in Singapore<br>முனைவர் எம் எஸ் ஸ்ரீலக்ஷ்மி / Dr M S Shri Lakshmi | 47 |
| 5 | இராமாயணமும் எதிர் கதையாடல்களும்<br>Counter-Narrating Ramayan<br>முனைவர் வி.காயத்ரி பிரியதர்ஷினி / Dr. V.Gayathri Priyadarsini | 61 |
| 6 | மலாய்மொழியில் மகாபாரதம்<br>Mahabharata in Malay Language<br>இணைப்பேராசிரியர் முனைவர் சாமிக்கண்ணு ஜெபமணி ஈசாக்கு சாமுவேல் / Assoc. Prof. Dr. Samikkanu Jabamoney Ishak Samuel<br>பேராசிரியர் முனைவர் ராஜேந்திரன் முனியாண்டி / Prof. Dr. Rajantheran Muniandy | 74 |
| 7 | பண்டைய ரோமானிய அரசுடனான தமிழக வணிகத் தொடர்புகள் பற்றிய ரோமானிய ஆவணங்கள் கூறும் செய்திகள்<br>Roman Trade Links with the Ancient Tamil Countries-Roman Documents<br>முனைவர்.க.சுபாஷிணி / Dr.K.Subashini | 80 |
| 8 | சீனி நைனா முகம்மது கவிதைகளில் திருக்குறளின் தாக்கம்<br>The influence of Thirukkural in Seeni Naina Muhammad's Poems<br>மனோன்மணி தேவி அண்ணாமலை / Manonmani Devi D/O M.A.R Annamalai | 94 |

9 திருக்குறளில் 'தீ 'ந்திறம் 104
Thirukuralil 'Thi' Thiram
முனைவர் ப.சு. மூவேந்தன் / Dr. Pa.Su. Mooventhan

10 திருவள்ளுவம் கூறும் கற்புநெறி வாழ்வும், தமிழ்த் திரைப்படங்கள் மலேசிய ஆண் மற்றும் பெண்களிடையே ஏற்படுத்தவல்ல கற்புநெறி மாற்றங்களும் 113
Virtuous Life Mentioned by Thiruvalluvar, and Changes That Can Be Made by Tamil Cinema in Malaysian Men and Women
ரதிதேவி சண்முகம் / Rathidevi &
முனைவர் மோகனதாஸ்ராமசாமி / Dr. Mohanadass Ramasamy

11 தொல்காப்பிய மரபியல்முறைவைப்பும் செய்திகளும் 119
The Metre Order and Messages of Marabiyal- A Part Of Tamil Grammar Tholkaappiyam
முனைவர் ச.இரமேஷ் / Dr. S. Ramesh

12 உபநிடத உரையாடலில் கருத்துமுதல்வாதத்தின் வகிபங்கு 128
The concept of idealism in the Upanishad dialogue
திரு. கு. தவசீலன் / Mr. K. Thavaseelan
கலாநிதி (திருமதி). வி.பவநேசன் / Dr. (Mrs). V. Pavanesan

13 தமிழும் சோதிடமும் 137
Tamil and Astrology
திலக். கி. பாஸ்கரன் / Thilak.K.Baskaran
பொறியாளர் சு. சிவராம்கிருஷ்ணன் / Er.S.Sivaramkrishnan

14 டாக்டர் மகாதிரின் அரசியல் தலைமைத்துவத்தில் 'அமைச்சியல்' 146
'Amaicciyal' in Dr.Mahathir Mohammed's Political Leadership
பிரேமநந்தினி தேமுடு / Premananthini Dhemudu
முனைவர் மோகனதாஸ் இராமசாமி / Dr.Mohana Dass Ramasamy

15 திருலோக்கி 151
Thirulokki
முனைவர் ஸ்ரீ அனுராதா / Dr.S. Anuradha

# இலங்கையின் சிங்கள-தமிழ் இனமுரண்பாடு: அடிப்படைக் காரணிகள் குறித்த ஒரு பகுப்பாய்வு

# Sinhala-Tamil Ethnic Conflict in Sri Lanka: An Analysis on its Root Causes

கலாநிதி. ஆதம்பாவா சர்ஜூன் / Dr. Athambawa Sarjoon [1]


## *Abstract*

Sri Lankan Sinhala-Tamil ethnic conflict is an infamously referred conflict in the modern world. The Sinhala-Ethnic conflict resulted in a three-decade civil war. All the initiatives to resolve the Sri Lankan ethnic conflict became unsuccessful due to the abject failure to understand its root causes hence addressing them. This article analyses the influence of the identified root causes to the Sinhala-Tamil ethnic conflict in Sri Lanka. This study has found that the debate over the historical origin of major ethnic groups, their territorial politics, divide and rule policy of British's colonial rulers, ethno-centric political reforms, representative systems, official language policy, opposition to devolution of power, policies in the matters of land, higher education and settlement programs have immensely contributed to the origination and proliferation of Sinhala-Tamil ethnic conflict in Sri Lanka. This study concludes that the exploring and finding solutions to these root causes alone can help to resolve ethnic conflict and facilitate the reconciliatory process in Sri Lanka.



Date of submission: 2019-04-23
Date of acceptance: 2019-05-28
Date of Publication: 2019-07-30


Corresponding author's
Name: Dr. Athambawa Sarjoon
Email: sarjoona@gmail.com


**Key Words:** Sri Lanka, Sinhala-Tamil ethnic conflict, civil war, peace process.

## முகவுரை

சர்வதேச மட்டத்தில் நீடித்து தீர்க்கப்படாதிருக்கும் முரண்பாடுகளில் ஒன்றாக இலங்கையின் இனமுரண்பாடும் உள்ளது. இதனால், முரண்பாடுகள் பற்றிய சர்வதேச ஆய்வாளர்களின் கவனத்தை இலங்கையின் இனமுரண்பாடும் ஈர்த்துள்ளது. இலங்கையின் இனமுரண்பாட்டின் நீடித்த தன்மையும் தீவிரத்தன்மையுமே இதற்காக காரணமாகும். பிரித்தானியர்களின் காலணித்துவ ஆட்சிக் காலத்திலிருந்து வெளிப்படையாக முளைவிடத் தொடங்கிய இனங்களுக்கிடையிலான குறிப்பாக, சிங்கள தமிழ் முரண்பாடு என்பது படிப்படியாக தீவிரத்தன்மையை அடைந்து மூன்று தசாப்தங்களாக ஆயுத மேதலாக வளர்ச்சி பெற்றிருந்தது. இதன் விளைவால் இலங்கைத் தேசமே முரண்பாட்டில் சிக்கி ஒருவரை ஒருவர் பரஸ்பரம் அவநம்பிக்கையாக நோக்கும் நிலை தோண்றியுள்ளது. நீண்டகாலமாக இனமுரண்பாட்டைத் தீர்ப்பதற்கு பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட போதும் அவை முரண்பாட்டை இல்லாமல் செய்வதற்குப் பதிலாக அதிகப்படுத்துவதற்கே வழிவிட்டிருக்கின்றன.

இலங்கையில் இனமுரண்பாட்டின் விளைவான உள்நாட்டு யுத்தம் முடிவுக்கு கொண்டுவரப்பட்டு முரண்பாட்டுக்கு அரசியல் தீர்வு காண்பதற்கு முயற்சிக்கப்பட்டுக் கொண்டிருக்கும்

[1] The author is a Senior Lecturer in the Department of Political Science, Faculty of Arts, University of Peradeniya, Peradeniya-20400, Sri Lanka. Email: sarjoona@gmail.com

இக்காலகட்டத்தில் இனமுரண்பாடு தோற்றம் பெற்று எழுச்சிபெறுவதற்கு அடிப்படையாக அமைந்திருந்த காரணிகளை மீளவும் பரிசீலனை செய்வது முரண்பாட்டை தீர்ப்பதற்கான வழிமுறைகள் கண்டறியப்படுவதற்கு பெரும் உதவியாக அமையும். அந்தவகையில், இலங்கையின் இனமுரண்பட்டுக்கு காரணமான ஆழவேரூண்றிய காரணிகளை பகுப்பாய்வு செய்யும் இக்கட்டுரை இனமுரண்பாட்டுத் தீர்வில் பங்குபெறுகின்ற தரப்பினருக்கும் ஆய்வாளர்களுக்கும் மாணவர்களுக்கும் பெரிதும் பயனமிக்கதாக அமையும் என்பதில் ஐயமில்லை.

## ஆய்வு முறையியல்

இக்கட்டுரையில் பல்வேறு இரண்டாம்நிலைத் தகவல் மூலங்களில் இருந்து பெறப்பட்ட தகவல்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. இத்தகவல்கள் இலங்கையில் இனத்துவ உறவுகள், இனத்துவ அரசியல் மற்றும் இனத்துவ நெருக்கடிகள் குறித்த பல்வேறு வரலாற்று நிகழ்வுகளை பதிவுசெய்திருப்பதோடு அச்சம்பவங்கள் குறித்த கருத்தாடல்களையும் நோக்குகளையும் முன்வைத்திருக்கின்றன. இத்தகவல்கள் விபரிப்பு மற்றும் விமர்சனப் பகுப்பாய்வு நோக்கில் இக்கட்டுரையில் தேவையான இடங்களில் ஆதாரபூர்வமாக முன்வைக்கப்பட்டிருக்கின்றன.

## இலங்கையின் இனத்துவக் கட்டமைப்பு

இலங்கையின் இனமுரண்பாட்டுக்கான அடிப்படைக் காரணிகளை ஆய்வுக்குட்படுத்தும் போது இலங்கையின் இனக்குழுக்களின் கட்டமைப்பு மற்றும் வரலாறு குறித்த அடிப்படைப் புரிதல் மிகவும் அவசியமாகிறது. வரலாற்றின் நீண்ட காலத்திலிருந்தே இலங்கை பல்லின சமூகங்கள் வாழும் ஒரு நாடாகவிருந்திருக்கிறது. இலங்கையில் சிங்களவர்கள், இலங்கைத் தமிழர்கள், முஸ்லிம்கள் (சோனகர்கள்) மற்றும் இந்தியத் தமிழர்கள் என 4 பிரதான இனக்குழுக்களும் வேறு பல சிறிய இனக்குழுக்களும் வாழ்ந்துவருகின்றனர். இறுதியாக நடந்தேறிய (2012) குடிசன கணக்கெடுப்பின்படி இலங்கையில் 20,359,439 பேர் வசித்தனர். இவர்களில் 74.9 வீதமானோர் சிங்களவர்களாகவும் 11.15 வீதமானோர் இலங்கைத் தமிழர்களாகவும் 9.6 வீதமானோர் முஸ்லிம்களாகவும் (இவர்களில் இலங்கைச் சோனகர்கள் 9.3 வீதமாகவும் மீதமானோர் மலாயர்களாகவும் உள்ளனர்) 4.12 வீமானோர் இந்தியத் தமிழர்களாகவும் உள்ளனர் (DCS, 2014).

இலங்கையில் இனக்குழுக்களின் குடிசனப் பரம்பலை நோக்கின் சிங்களவர்கள் வடக்கு கிழக்கு தவிர்ந்த ஏனைய பிராந்தியங்களில் பெரும்பான்மையினராகவும் வடக்குகிழக்கில் சிறுபான்மையினராகவும் வாழ்கின்றனர். இலங்கைத் தமிழர்கள் வடக்குகிழக்கில் அம்பாரை மற்றும் திருகோணமலை மாவட்டங்கள் தவிர்ந்த ஏனைய மாவட்டங்களில் பெரும்பான்மையாகவும் மற்றய பகுதிகளில் சிறுபான்மையாகவும் வாழ்கின்றனர். முஸ்லிம்கள் அம்பாறை மற்றும் திருகோணமலை மாவட்டங்களில் பொரும்பான்மையாகவும் வடக்குக் கிழக்கிலுள்ள ஏனைய மாவட்டங்களில் தமிழர்களுக்கு அடுத்த பெரும்பான்மையாகவும் நாடு பூராக பரந்தும் வாழ்கின்றனர். அவ்வாறே, இந்திய தமிழர்கள் மத்திய பிராந்தியத்திலுள்ள நுவரேலியா மாவட்டத்தில் பெரும்பான்மையாகவும், பதுளை, கண்டி, மாத்தளை மற்றும் இரத்தினபுரி போன்ற மாவட்டங்களில் ஓரளவு பெரும்பான்மையாகவும் வாழ்கின்றனர். இந்தக் குடிசனப் பரம்பல்கூட இனங்களுக்கிடையோன உறவிலும் விரிசலிலும் முரண்பாடுகளிலும் பெரும் தாக்கத்தை செலுத்தியிருந்தன.

## இலங்கை சிங்களதமிழ் இனமுரண்பாட்டின் தோற்றத்துக்கும் வளர்ச்சிக்குமான காரணிகள்

இலங்கையின் பிரதான நான்கு இனக்குழுக்களும் வெவ்வேறு காலகட்டங்களில் வெளிநாடுகளிலிருந்து வந்து குடியேறியவர்களாக இருந்த போதும் வரலாற்றில் இணக்கத்துடனேயே வாழ்ந்துவந்துள்ளனர். காலனித்துவ ஆட்சியாளர்களின் ஆட்சிக்காலத்திலிருந்தே

இலங்கையில் இனக்குழுக்களிடையே முரண்பாடுகள் வளரத் தொடங்கியது. குறிப்பாக, பிரதான இரு இனக்குழுக்களான சிங்களவர்களுக்கும் தமிழர்களுக்குமிடையேயான முரண்பாடு நாடு விடுதலை பெற்றதன் பின்னரான காலங்களில் படிப்படியாக தீவிரமடைந்து வன்முறையாகவும் உள்நாட்டு மோதலாகவும் வளர்ச்சி பெறலானது. இனமுரண்பாட்டின் விளைவு சுமார் 30 வருடகால உள்நாட்டுப் போராகவும் அது மானிட உயிரிழப்பு, இடப்பெயர்வு, அகதிவாழ்வு, சொத்துக்கள் மற்றும் வாழ்வாதாரங்கள் அழிப்பு மற்றும் மனித உரிமை மீறல்கள் என பல்வேறுபட்ட தாக்கத்தினை குறிப்பாக சிறுபான்மையினர் மத்தியில் ஏற்படுத்தி நின்றது. ஆதலால், நீண்டகாலமாக இலங்கையின் இனமுரண்பாடு என்பது சர்வதேசத்தின் கவனத்தை ஈர்த்தவொன்றாக இருந்துள்ளதுடன் ஆய்வுக் களமாகவும் அமைந்திருந்துள்ளது.

வன்முறைசார் உள்நாட்டுப் போர் முடிவுபெற்று 10 ஆண்டுகள் கடந்துள்ளபோதும் இலங்கையின் இனமுரண்பாட்டினை தீர்ப்பதற்கான ஆக்கபூர்வமாக முயற்சிகள் போதுமளவில் எடுக்கப்படவில்லை என்ற ஆதங்கமே உள்ளது. இனமுரண்பாடு தீர்க்கப்படுவதற்கு அது தோற்றம்பெற வழிவகுத்த ஆள வேரூண்றிய அடிப்படைக் காரணிகள் கண்டறியப்பட்டு அவற்றைத் தீர்ப்பதற்காக முயற்சிகள் அடிப்படையில் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

இலங்கையின் சிங்கள தமிழ் இனமுரண்பாட்டுக்க பல காரணிகள் துணை புரிந்திருப்பினும் அவற்றை வரையறை செய்வது என்பது அவ்வளவு இலகுவான காரியமல்ல. சிலரிடம் காலணித்துவ ஆட்சிக்காலத்திலேயே முரண்பாட்டுக்கான விதைகள் விதைக்கப்பட்டுவிட்டன என்ற வாதம் உண்டு. சிலர் அதனை மறுதலித்து சுதந்திர இலங்கையிலேயே பெரும்பான்மைச் சிங்களவர்களே இனமுரண்பாட்டுக்கு வித்திட்டதாக வாதிடுவர். இலங்கையில் இனமுரபாட்டுக்கான காரணிகளை வரையறுப்பது சிக்கலான ஒன்றாகவுள்ள போதிலும் சில பொதுவான காரணிகளை பலரும் ஏற்றுக் கொள்வது குறிப்பிடத்தக்கது. அவற்றில் பினவரும் காரணிகள் செல்வாக்குமிக்கவைகள்.

### 1. வரலாற்றுக் காரணிகளும் ஆள்புல அரசியலும்

இலங்கையின் இனத்துவ வரலாற்றை நோக்கின் தற்போதுள்ள 4 பிரதான இனக்குழுக்களும் இலங்கைக்கு பல்வேறு காலகட்டங்களில் வெளிநாடுகளில் இருந்துவந்து குடியேறியவர்கள் என்பது நிரூபணமான விடயம். ஆனாலும், வரலாற்று ரீதியாக சிங்களவர்களும் தமிழர்களும் தாங்களே இந்நாட்டின் உண்மையான பூர்வீகத்தவர்கள் என உரிமை கொண்டாடி வந்துள்ளனர். உண்மையில், இந்த பூர்வீகம் பற்றிய விவாதங்களே இனமுரண்பாட்டின் ஆரம்ப வேர் என அடையாளம் காணலாம்.

கிறிஸ்து பிறப்புக்கு முன்னர் ஆறாம் நூற்றாண்டிலேயே இந்தியாவிலிருந்து வந்த அசோகனதும் அவனது நம்பர்களதும் குடியேற்றத்தினால் தமது இனத்தின் பூர்வீகம் இலங்கையில் தோற்றம் பெற்றதாகச் சிங்களவாகள் கூறுகின்றனர். இதனால், சிங்கள இனமே முதன்மையானதும் உயர்ந்ததுமாகும் என்ற கருத்தோட்டம் சிங்களவர்கள் மத்தியில் வளரத்தொடங்கியது. மற்றய இனத்தவர்களிலிருந்து தமது இனத்தை பாதுகாக்கும் நோக்கில் காலவோட்டத்தில் 'இலங்கைத் தீவு அபாயத்துக்குள்ளாகிறது' என்ற கருத்தோற்றமும் சிங்களவர்களிடையே வளரவும் இது வழிவிட்டது. இலங்கையில் வாழும் சிறுபான்மை இனத்தவர்கள் அனைவரும் பிற நாடுகளில் இன ரீதியான தொடர்பினைக் கொண்டிருக்கும் போது சிங்களவர்கள் மாத்திரமே இப்பிராந்தியத்தில் சிறூபன்மையினராக உள்ளனர் என்ற அச்சத்திலிருந்து இந்தக் கருத்துநிலை தோண்றியிருக்கலாம். உண்மையில், சிங்களவர்களுக்கு தாய்நாடு என்று கூறுவதற்கு இலங்கையை விட்டால் வேறு நாடு எதுவுமே இல்லை என்ற குமாரி ஜெயவர்த்தனாவின் கருத்தும் இவ்வாதத்துக்கு வலிமை சேர்க்கிறது (பார்க்க: Jeyawardena, 1987, pp.23).

இவ்வாறே, தமிழர்களும் இலங்கையில் தமது பூர்வீக வரலாறு என்பது கி.மு பல நூற்றாண்டுகளுக்கு முன்பிருந்து ஆரம்பிப்பதாக வாதிடுகின்றனர். கலாநிதி புஸ்பரத்தினத்தின் 'தொல்லியல் நோக்கில் இலங்கைத் தமிழர் பண்பாடு' எனும் நூலினை ஆதாரம் காட்டி இலங்கைக்கும் தமிழர்களுக்கும் இடையேயான தொடர்பு கி.மு. 1000 ஆண்டுகளுக்கும் பிந்தியதாகும் என்றும் இதற்கான ஆதாரங்கள் இலங்கையின் வடக்கிலும் ஏனைய பகுதிகளிலும் கண்டுபிடிக்கப்பட்டிருப்பதாகவும் அரசியல் ஆய்வாளர் ஜோதிலிங்கம் சுட்டிக்காட்டுவதுடன் அவரே கி.மு. முதலாம் நூற்றன்டிலிருந்தே தமிழ்நாட்டு அரசர்களின் படையெடுப்புக்கள் இலங்கை மீது நடந்து அவர்களின் ஆட்சி நடைபெற்றதையும் சுட்டிக்காட்டுகிறார் (ஜோதிலிங்கம், 2002, பக்.45).

மேற்படி இருபிரதான இனக்குழுக்களினதும் அவ்வாறே சிறுபான்மைக் குழுக்களதும் வரலாற்று ஆதாரங்கள் மிக நீண்ட காலத்திலிருந்தே இலங்கை ஒரு பல்லின சமூக கட்டமைப்பைக் கொண்ட நாடாக இருந்திருக்கிறது என்பதை விவாதத்துக்கு இடமின்றி உண்மைப்படுத்துகின்ற போதும் இரண்டு பிரதான இனக்குழுக்களின் பூர்வீகம் குறித்த வாதாடல் இரு இனக்குழுக்களையும் படிப்படியாக ஆள்புல ரீதியாக தமது இருப்பையும் ஆதிக்கத்தையும் உறுதிப்படுத்திக் கொள்வதற்கும் வழிவிட்டிருக்கிறது.

அந்தவகையில், வடக்குகிழக்கு பகுதிகளில் தமிழர்கள் தமது வாழ்விடங்களின் செறிவையும் வாழ்வியல் வரலாற்று ஆதாரங்களையும் காட்டி வடக்குகிழக்கு தமிழர்களின் தாயகம் என்று வாதாடி வருகின்றமை இலங்கையை மட்டுமே தமது தாய் நாடாகக் கூற அருகதை பெற்றுள்ள சிங்களவர்கள் மத்தியில் தமிழர்கள் மீதான எதிர்ப்பினை அதிகப்படுத்தியிருக்கும் என்பதில் ஐயமில்லை. இதுவே, சிங்கள ஆட்சியாளர்கள் வடக்குகிழக்கில் தமது ஆதிக்கத்தைத் தக்கவைத்துக்கொள்வதற்கு அதீத முயற்சியை மேற்கொள்ளத் தூண்டிய பிரதான காரணி எனச் சுட்டிக்காட்டலாம்.

உண்மையில், ஆள்புல அரசியல் என்பது இலங்கையின் இரு பிரதான இனக்குழுக்களுக்கிடையேயான உறவிலும் அரசியலிலும் வாழ்வியலிலும் ஒரு மிகவும் சர்ச்சைக்குரிய விவகாரமாகவே இருந்து வந்துள்ளதுவருகின்றது.

## 2. பிரித்தானியர்களின் பிரித்தாளும் கொள்கை

பிரித்தானியர்களின் பிரித்தாளும் கொள்கையும் இலங்கையின் பிரதான இனக்குழுக்களிடையே முரண்பாடுகள் தோண்றுவதற்கும் வளர்ச்சி பெறுவதற்கும் காரணியாக அமைந்திருந்துள்ளன. பிரித்தானியர்களின் குடியேற்ற ஆட்சிக்காலத்தில் பிரித்தாளும் கொள்கை நன்கு வேரூண்றியிருந்தது. பிரித்தானியர்கள் சுதேசிய பெரும்பான்மையின சிங்களவர்களை நம்பமுடியாதவர்களாகவும் தமக்கு சமமாக வைத்து நோக்க முடியாதவர்களாகவும் கருதியிருந்தனர். இதனால், மற்றைய இனத்தவர்களை நம்புவதே அவர்களுக்கு இருந்த ஒரே வழியாக இருந்தது. இதனால், மலாயர்களையும் டச்சுக்காரர்களின் சந்ததியினரான பறங்கியர்கள் ஐரோப்பியர்களையும் நம்பிக்கைக்குரியவர்களாக நிர்வாக மற்றும் பாதுகாப்புப் பணிகளில் உயர்ந்த பதவிகளை வழங்கலாயினர்.

அத்துடன், இலங்கையர்களை பல்வேறு சிறு குழுக்களாக உடைப்பதற்கான முயற்சிகளையும் மேற்கொண்டனர். இதில் கிறிஸ்தவத்துக்கு மதமாற்றம் செய்யப்பட்டவர்கள் முக்கியமானவர்கள். இவர்கள் ஆங்கிலம் பேசுவோராக இருந்ததோடு ஆங்கிலக் கல்வியையும் பெற்றிருந்தனர். இதனால், இவர்களும் நிர்வாக சேவைகளில் உயர் பதவிகளைப் பெற்றனர். இன்னொரு பகுதியினர் தமக்கு விசுவாகமாக இருப்பதற்காக பட்டம் பதவிகளும் நிலங்களும் கொடுத்து உருவாக்கப்பட்டனர். இந்தச் சலுகைகளை அனுபவித்தவர்களில் தமிழ் சிறுபான்மையினரும் அதிகமிருந்தனர். தமிழர்களிடையே காணப்பட்ட சாதிவேறுபாடுகளையும் வகுப்புவாத

புறக்கணிப்புக்களையும் புரிந்துகொண்ட பிரித்தானியர்கள் தமிழர்கள் செறிவாக வாழ்ந்த பல பகுதிகளில் மிசனறிப் பாடசாலைகளைக் உருவாக்கியதன் ஊடாக அவர்களை மதமாற்றம் செய்வதற்கு கல்வியை ஓர் ஆயுதமாகப் பயன்படுத்தினர். ஆங்கிலக் கல்வியை விரும்பிக் கற்றதும் மதமாற்றத்துக்கு ஆதரவாக இருந்ததும் தமிழர்கள் பிரித்தானியர்களால் நம்பிக்கைக்குரியவர்களாக நோக்கப் படுவதற்கும் நிர்வாக கட்டமைப்பிலும் நிபுணத்துவ தொழில்களிலும் உயர் பதவிகளைப் பெறுவதற்கும் வழிவிட்டது (De Silva, 2003, pp.*71-72*).

19 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும் 20 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் கிறிஸ்தவ மிசனெறிகளின் செல்வாக்கு நாட்டில் மேலோங்கியிருந்ததை எதிர்த்து பல்வேறு கிறிஸ்தவ எதிர்ப்பியக்கங்கள் சிங்கள பௌத்தர்களிடத்தில் தோற்றம்பெற்றன. இவை சிங்களபௌத்த குருமார்களின் ஆதரவுடன் செயற்பட்டு மறுமலர்ச்சி இயக்கத்தை தூண்டி பௌத்த மதத்தையும் கல்வியையும் பாதுகாக்க கோசமிட்டன. பௌத்தத்தைப் பாதுகாக்கும் கடப்பாடு இலங்கைக்குரியது, இலங்கை 'தம்ம துவீபம்' (தம்ம தீவு), பௌத்த மதத்தை பாதுகாக்கும் கடமை ஆரிய சிங்கள மக்களுக்கு புத்தபெருமானால் அளிக்கப்பட்டது என்ற கொள்கைகள் இவ்வியக்கங்களில் மேலோங்கியிருந்தன.

பிரித்தானியர்களின் காலணித்துவ ஆட்சிக் கொள்கைகள் சிறுபான்மையினர் நலனை விட பெரும்பான்மையினர் நலனையே பெரிதும் பாதிப்பதாக அமைவதனை இலங்கையர்கள் விடயத்திலும் காணப்பட்டது. 1867 இல் அவர்கள் அறிமுகம் செய்த கல்விக் கொள்கை கிறிஸ்தவ மிசனறிப் பாடசாலைகளை முன்னேற்றுவதாகவும் சுதேசிய போதனா மொழிக்குப் பதிலாக ஆங்கில மொழிக்கல்வியினை முக்கியப்படுத்துவதாகவும் இருக்கிறது என்ற பயத்தை சிங்களவர்கள் மத்தியில் ஏற்படுத்தியதனால் அவர்கள் அத்திட்டத்தினால் அதிக பலனைப் பெறவில்லை. 1869 இல் பாடசாலைகளுக்குச் சேர்ந்த இலங்கையர்களில் 65 வீதமானவர்கள் கிறிஸ்தவர்களாகவிருந்ததுடன் 27 வீதமானவர்கள் மட்டுமே பௌத்தர்களாகவிருந்தனர். 1869 இல் Department of Public Instruction திறக்கப்பட்டு அது மானியங்களையும் உதவிகளையும் வளங்கியபோதும் அதில் அதிக நன்மை பெற்றவர்கள் யாழ்ப்பாணத் தமிழர்களே (Ghosh, 2002, p.*74*).

உண்மையில், பிரித்தானியர்களது பிரித்தாளும் தந்திரச் செயற்பாடுகள் இலங்கையர்களை ஒன்றுபட்ட குரலில் செயற்பட முடியாது தடுத்ததுடன் அவர்கள் இன, மத மற்றும் மொழி ரீதியாக சிந்திப்பதற்கும் செயற்படுவதற்குமே வழிவிட்டது. அது படிப்படியாக இனக்குழுக்களிடையே முரண்பாடுகள் வளர்வதற்கும் காரணமாகியது.

## 3. அரசியல் சீர்திருத்தங்களும் பிரதிநிதித்துவ முறையும்

இலங்கையில் அறிமுகம் செய்யப்பட்ட அரசியலமைப்புச் சீர்திருத்தங்களும் பிரிதிநிதித்துவ முறைகளும் கூட பெரும்பான்மை சிறுபான்மை இனக்குழுக்களிடையே முரண்பாடுகளுக்கு அடிப்படையாக இருந்திருக்கின்றன. 1910 இலேயே பிரதிநிதித்துவத்தை அடிப்படையாகக் கொண்டு சிங்கள தமிழ் அரசியல் தலைவர்களுக்கிடையே முரண்பாடு தோன்ற ஆரம்பித்துவிட்டது. சிங்களத் தலைவர்கள் பிரதேசவாரிப் பிரதிநிதித்துவத்தை வேண்டிநிற்க, தமிழ்த் தலைவர்களோ இனவாரிப் பிரதிநிதித்துவத்தை வேண்டினர். ஆனால், பிரித்தானியர்கள் 1931 வரை வழங்கிய சீர்திருத்தங்களில் பிரதிநிதித்துவத்தை அதிகரித்தபோது இனவாரிப் பிரதிநிதித்துவத்தையே அதிகரித்தனர். இது சிங்களவர்களின் எதிர்பார்ப்புக்கு எதிரானதாக இருந்தது. அவ்வாறே, 1931 இல் பிரதேசவாரிப் பிரிதிநிதித்துவ முறையை வழங்கியபோது அது தமிழர்களின் விருப்புக்கு எதிரானதாக இருந்ததால்

தமிழர்கள் டொனமூர் சீர்திருத்தை எதிர்த்தனர். டொனமூர் அரசியலமைப்பு மசோதா மீதான விவாதத்தில் போசும்போது 'டொனமூர் திட்டமென்றால் இனி தமிழரில்லை' (Donoughmore means Tamils no more) என்ற கருத்துப்பட தமிழ்த் தலைவர் பொன்னம்பலம் இராமநாதன் உரையாற்றியிருந்தமையும் இவ்வாதத்துக்கு மேலும் வலிமை சேர்க்கிறது.

இவற்றுக்கெல்லாம் மேலாக, டொனமூர் அரசியல் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் தமிழ்சிங்கள முரண்பாட்டை மேலும் அதிகப்படுத்த உதவின. 1931 இல் நடந்த சட்டசபைக்கான தேர்தலை தமிழர்கள் புறக்கணித்தனர். ஆனால், 1936 இல் நடந்த தேர்தலில் இலங்கைத் தமிழர்கள் சார்பில் 8 பேரும் இந்தியத் தமிழர்கள் சார்பில் 2 பேரும் தெரிவு செய்யப்பட்ட போதும் மந்திரிசபை அமைக்கப்பட்ட போது சிங்களவர்களே மந்திரிகளாக தெரிவுசெய்யப்படும் வகையில் தந்துரோபாயமாக 7 குழுக்களிலும் சிங்கள பிரதிநிதிகளை பெரும்பான்மையாக உருவாக்கி தனிச் சிங்கள மந்திரிசபையை அமைத்துக்கொண்டமை சிங்களதமிழ் முரண்பாடு மேலும் கூர்மையடைய வழி ஏற்படுத்தியது (Ghosh, 2002, p.10). இதன் பிரதிபலிப்பாகவே ஜி.ஜி.பொன்னம்பலத்தினால் சமப்படுத்தும் பிரதிநிதித்துவம் (Balance Representation) எனும் 50:50 கோரிக்கை முன்வைக்கப்பட்டது. உண்மையில், வில்சன் (Wilson, 1988, p.6) குறிப்பிடுவது போன்று, "1833-1931-1948 வரையில் சிங்கள்தமிழ் அரசியல் உயர் குழாமினரிடையே இடம்பெற்ற சச்சரவுகள் சட்டமன்றத்தின் பிரதிநிதித்துவத்தை பங்குபோடுவது என்பதிலேயே இருந்தது. மாறாக, அரசாங்கக் கட்டமைப்பினைப் பற்றியதல்ல" என்ற கருத்தும் குறிப்பிடத்தக்கது.

1947 இல் அறிமுகம் செய்யப்பட்ட சோல்பரி அரசியலமைப்புக்கூட சிறுபான்மையினரை வேறுபடுத்தும் பல ஏற்பாடுகளைக் கொன்டிருந்தது. அரசியலமைப்பின் 29 ஆவது சரத்து சிறுபான்மையினர் என்ற வேறுபாட்டை அரசியலமைப்பே சுட்டிக்காட்டுவதாக இருந்தது. சிறுபான்மையினருக்கான காப்பீடாக அது சேர்க்கப்பட்டிருந்த போதும் மிகக்குறுகிய காலத்திலேயே அந்த ஏற்பாட்டை மீறும் நடவடிக்கைகள் நடந்தேறின. இந்தியாவை பூர்வீகமாகக் கொண்டிருந்த தோட்டத்தொழிலளார் தமிழர்களின் அரசியல் பலத்தினை இல்லாமல் செய்யும்முகமாக நாட்டுக்கு சுதந்திரம் கிடைத்த மிகக்குறுகிய காலத்திலேயே அவசர அவசரமாக 1948.11.15 இல் 1944 ஆம் ஆண்டின் குடியுரிமைச் சட்ட மூலமும் அவ்வாறே, 1949 டிசம்பரில் இந்திய குடியிருப்போர் சட்ட மூலமும் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டதால் இலெட்சக்கணக்கான இந்திய வம்சாவளித் தமிழர்கள் தமது குடியுரிமையை இழந்ததுடன் தமது பாராளுமன்ற பிரதிநிதித்துவத்தையும் இழந்தனர். இந்தச் சம்பவங்கள் தமிழர்களிடையே இன தனித்துவ உணர்வினை மேலும் அதிகரிக்கச் செய்ததுடன் குடியுரிமைப் பிரச்சினையையும் இனமுரண்பாட்டின் ஓர் அடிப்படைக் கோரிக்கையாக சேர்ந்துகொள்ள வழிவிட்டது.

1970 இல் ஆட்சியமைத்த ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி மற்றும் இடதுசாரிகள் கூட்டு அரசாங்கமானது மூன்றில் இரண்டு பொரும்பான்மையுடன் இருந்ததால் தமிழர்களின் விருப்பங்களையோ எதிர்பார்ப்புக்களையோ பொருட்படுத்தாது 1972 இல் இலங்கை சோசலிச ஜனநாயகக் குடியரசு எனும் ஓர் அரசியலமைப்பை நிறைவேற்றிக் கொண்டது. இவ்வரசியலமைப்பு பௌத்த மதத்துக்கு அரச அந்தஸ்துக் கொடுத்தமை, சோல்பரியில் இருந்த சிறுபான்மையினர் காப்பீடுகளை இல்லாமற் செய்தமை மற்றும் மிகவும் பலம் பொருந்திய தேசிய அரசுப் பேரவையினை (பாராளுமன்றம்) உருவாக்கியமை என்பன சிறுபான்மைத் தமிழர்களின் நலன்கள் விடயத்தில் பெரும் அச்சத்தையும் சந்தேகங்களையும் எற்படுத்தியதடன் அவற்றை உண்மைப்படுத்தும் சம்பவங்களும் இவ்வரசியலமைப்பு அமுலில் இருந்த காலகட்டத்தில் நடந்தேறின. குறிப்பாக

*இந்த அரசாங்கம் முன்னெடுத்த பல்கலைக்கழக புகுமுக தரப்படுத்தல் முறை, பொருளாதார முறை அதனால் ஏற்பட்ட வறுமைநிலை, தொழிலின்மை, இளைஞர் விரக்தி மற்றும் அமைதியின்மை என்பனவையே தமிழ்சிங்கள முரண்பாடு கூர்மையடைவதற்கும் தமிழ் இளைஞர்கள் ஆயுதமேந்திப் போராடுவதற்கும் வழிவிட்ட பிரதான அடிப்படைக் காரணிகள் என்பது வரலாற்றுப் பதிவுகளாக உள்ளன.*

*1977 இல் பதவிக்கு வந்த ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கமும் தமிழர்களின் விருப்பங்களுக்கு மாறாக கொண்டுவந்த 1978 ஆம் ஆண்டைய 2 ஆம் குடியரசு அரசியலமைப்பும் அதன் பின்னரான அரசியல் செயற்பாடுகளும் சிங்களதமிழ் முரண்பாட்டின் வளர்ச்சியில் இன்னுமொரு இருண்ட அத்தியாயத்துக்கு வழிவிட்டன. இந்த அரசியலமைப்பு மிதமிஞ்சிய அதிகாரத்தால் அலங்கரிக்கப்பட்ட நிறைவேற்று அதிகாரம் பொருந்திய ஜனாதிபதித்துவ முறையை அறிமுகம் செய்தது. மீண்டும் பௌத்த மதத்துக்கான அரச அங்கீகாரம் புதுப்பிக்கப்பட்டது. பாராளுமன்றம் ஓரவையாக்கப்பட்டு அதுவரை சிறுபான்மையினருக்கான காப்பீடாகவிருந்த செனட் சபை இல்லாமற் செய்யப்பட்டு ஜனாதிபதியின் முழுக்கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்பட்டது. இவைகளெல்லாம் சிறுபான்மைத் தமிழர்களின் நலன்கள் மற்றும் உரிமைகள் விடயத்தில் பெரும் தாக்கங்களை ஏற்படுத்தின. 1981 மற்றும் 1983 ஆம் ஆண்டைய இனக்கலவரங்களால் அப்பாவித் தமிழ் மக்கள் சொல்லொண்ணாத் துயரங்களை அனுபவிக்க நேரிட்டது. நிறைவேற்று ஜனாதிபதிப் பதவி, பயங்கரவாத தடைச்சட்டம் மற்றும் அவசரகாலச் சட்டம் என்பன நாட்டில் சிங்களதமிழ் இன மோதலை தீவிர ஆயுத மோதல் நிலைக்கு இட்டுச் சென்றன.*

#### 4. அரசகரும மொழிக் கொள்கை

*காலாதிகாலமாக இலங்கை அரசாங்கங்களால் முன்னெடுக்கப்பட்ட அரசகரும மொழிக் கொள்ளை கூட இனமுரண்பாட்டின் தோற்றத்துக்கும் வளர்ச்சிக்கும் பெரும் பங்களிப்புச் செய்திருக்கிறது. உண்மையில், எல்லா சிங்கள அரச தலைவர்களும் சிங்கள மொழியைப் போன்று தமிழ் மொழிக்கு சம அந்தஸ்து வழங்குவதை விரும்பியிருக்கவில்லை. அவ்வப்போது அதற்கான உடன்பாடுகள் காணப்பட்டபோதும் அவைகள் பின்னர் வெளிப்படையாகவே எதிர்க்கப்பட்டு அவற்றை நடைமுறைப்படுத்த மறுக்கப்பட்டிருக்கின்றன. நிச்சயமாக, சிங்களம் மட்டும் அரசகரும மொழியாக்கப்படல் வேண்டும் என்பதற்கு சட்ட அங்கீகாரம் பெறுவதற்கான சிங்கள தலைவர்களின் நடவடிக்கைகள் குறிப்பிட்டத்தக்க அளவில் சிங்களதமிழ் இன முரண்பாட்டில் தாக்கத்தை ஏற்படுத்தியது என்பதிலும் அதுவே தனித் தமிழ்த் தேசியப் போராட்டத்தை மொழித்தேசியமாக கூர்மையடையச் செய்தது என்பதிலும் பலருக்கு உடண்பாடு இருக்கும் என நம்புகிறேன்.*

*வரலாற்றை நோக்கின், 1943 ஜூன் 22 இல் J.R.ஜெயவர்த்தனாவே முதன் முதலில் சிங்களம் இன்னும் சில வருட காலத்தினுள் அரச கரும மொழியாக்கப்படல் வேண்டும் என்று அரச சபையில் பிரேரித்தார். ஆனாலும், அவ்விடயம் பின்னர் 1945 மே 24 இல் தமிழும் சேர்க்கப்படல் வேண்டும் என்ற பலரதும் குறிப்பாக, S.W.R.D.பண்டாரநாயகாவினது வேண்டுதலின் பெயரில் திருத்தத்துடன் சட்டமாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. 1944 இல் பண்டாரநாயகா "இவ்விரு மொழிகளையும் அரச மொழிகளாகக் கொள்வதில் எனக்கு எத்தகைய தனிப்பட்ட எதிர்ப்பும் கிடையாது. இதனால் எத்தகைய தீங்கோ, அபாயமோ, இடர்பாடோ ஏற்படும் என்று நான் கருதவில்லை" (Jeyawardena, 1987, p.96) என்றார். ஆனால், ஜோன் கொத்தலாவல பிரதமராக இருந்தபோது (1953-1956) இப்பிரச்சினை விஸ்வரூபம் எடுத்தது. சிங்களமும் தமிழும் அரசகரும மொழியாக்கப்படல் வேண்டும் என்ற கொள்கையிலிருந்து விலகி 'சிங்களம் மட்டும்' என்ற மேலாதிக்க நிலைப்பாடு தோண்றலானது. சிங்களவர்களின் ஆதரவைப் பெறுவதற்கான அரசியல்*

சதுரங்கப் போட்டியில் இக்கோரிக்கை முக்கிய இடத்தை பெற்றது. குமாரி ஜெயவர்த்தனா (Jeyawardena, *1987*, p.*97*) குறிப்பிடுவது போன்று *19531956* காலப்பகுதியில் சிங்களம் மட்டும் கோரிக்கை நாடு முழுவதும் பரந்திருந்ததுடன் அதற்கான ஆதரவும் அதிகரித்திருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

*1956* தேர்தலில் பல சிங்களக் கட்சிகள் சிங்களம் மட்டும் என்ற கோரிக்கைக்கே ஆதரவு தெரிவித்தன. இதுவே தேர்தல் பிரச்சாரத்தையும் ஆட்கொண்டிருந்தது. இதுவே பண்டாரநாயகாவின் வெற்றிக்கும் வழிவிட்டது. பண்டாரநாயகா ஆட்சிக்கு வந்தபோது பௌத்தசிங்கள இனமேலாதிக்கவாதிகள் அவர்களின் உணர்வுகளை அடையாளம்கான விரும்பியிருந்த ஒரு தலைவராக அவரைக் கண்டனர். அவர்களது கோரிக்கையில் முக்கியமானது சிங்களத்தை அரச கரும மொழியாக்குவதாக இருந்தது. இதனால், பண்டாரநாயகாவின் முதல் மசோதா தனது வாக்குறுதியை நிறைவேற்றுவதற்கான 'சிங்களம் மட்டும் அரச கரும மொழி' என்பதாகவே இருந்தது. இது *1956* ஜூன் *5* ஆம் திகதி பாராளுமன்றத்தில் இரு பிரதான சிங்கள கட்சிகளினதும் ஆதரவுடன் நிறைவேறியது (Midlarsky, *2011*).

சிங்களம் மட்டும் மசோதாவை எதிர்த்து அதே நாள் தமிழரசுக் கட்சி முக்கியஸ்தர்கள் காலிமுகத் திடலிலிருந்த பாராளுமன்றத்திற்கு முன்பு அமைதிவழி சத்தியாக்கிரகப் போராட்டத்தை நடத்தியபோது அதை சிங்களபௌத்த தேசியவாதக் குண்டர்கள் குழப்பியதுடன் தமிழ் தலைவர்களையும் தாக்கினர். தமிழ் தலைவர்களுக்கு எந்தவித பாதுகாப்பையும் அளிக்காது பிரதமர் பண்டாரநாயகா பாராளுமன்ற முற்றத்திலிருந்து பார்த்துக்கொண்டிருந்தார் (நடேசன், *2000*, பக்.*49*). காயங்களுடன் இரத்தம் தோய்ந்த ஆடைகளுடனேயே சில தமிழ்த் தலைவர்கள் பாராளுமன்றத்தில் அம்மசோதாவுக்கு எதிராக வாக்களித்தனர் என்பது வரலாற்று உண்மையாகும்.

'சிங்களம் மட்டும்' சட்டத்துக்கு எதிரான உணர்வலைகளும் அதனை எதிர்த்த தமிழர்களுக்கு எதிரான உணர்வலைகளும் தமிழர்கள் வாழும் பிரதேசங்களெல்லாம் நாடுபூராகவும் பரவியதுடன் பல்வேறு அழிவுகளையும் அது ஏற்படுத்தியது. இச்சட்டத்திற்கான தமிழ் பேசும் மக்களின் எதிர்ப்பினைக் வெளிக்காட்ட தமிழரசுக் கட்சியின் *1956* ஆகஸ்ட் *19* திருமலை மாநாட்டில் தமிழ் மொழிக்கு சமஅந்தஸ்த்து வழங்குவது உட்பட மக்கள் செறிந்து வாழும் வடக்குகிழக்கில் சுயாட்சியை வழங்குதல், குடியுரிமைச் சட்ட வதிகளை இரத்துச் செய்தல் மற்றும் தமிழ் மக்களின் பாரம்பரியப் பிரதேசங்களில் சிங்களக் குடியயேற்றங்களை நிறுத்துதல் ஆகியவற்றை வலியுறுத்தி தீர்மானங்களை நிறைவேற்றி அவற்றை அரசாங்கம் பூர்த்திசெய்ய வேண்டும் என தமது எதிப்பை வெளிப்படுத்தியிருந்தனர்.

ஆனால், இவற்றுக்கான அரசாங்கத் தரப்பு பதில்கள் அராஜகம் மிக்கதாகவே இருந்தன. சிங்கள மொழியை அரச கரும மொழியாக அமுலாக்கும் நடவடிக்கைகள் தீவிரமடைந்தன. அரச அலுவல்கள் யாவும் சிங்கள மொழியில் இடம்பெற திறைசேரி சுற்றறிக்கை வெளியிட்டது. உண்மையில், De Silva (*2003*, p.*75*) கூறுவதுபோல், இந்த 'சிங்களம் மட்டும்' கொள்கை மீதமிருந்த பிரித்தானிய சிந்தனைகளைக் கொண்டிருந்த ஆங்கிலம் பேசும் அலுவலர்களில் பலரை (குறிப்பாக தமிழர்களை) தந்திரமாகவும் நுட்பமான வழியிலும் வெளியேற்றி சிங்களம் மட்டும் பேசும் தேசியவாதிகளை நிரப்புவதற்கான ஏற்பாடாகவே அடைந்திருந்தது. சிங்கள மொழியில் வேலை செய்வதற்கு மறுப்புத் தெரிவித்த பல தமிழ் அலுவலர்கள் வேலை இழந்தனர். சிங்களத்தில் கடமை புரிவதாக எழுத்து மூலம் உறுதியளிக்க ஒவ்வொரு ஊழியரும் பணிக்கப்பட்டனர். சிங்களத்தைக் கற்பிக்க தமிழ்ப் பாடசாலைகளுக்கு ஆசிரியர்கள் அனுப்பப்பட்ட போதும்கூட தமிழர்களின் எதிர்ப்பினால் ஆசிரியர்கள் திரும்பிச் செல்லும் நிலை ஏற்பட்டது.

திருமலை மாநாட்டினை அடுத்து தமிழரசுக் கட்சி தனது சாத்வீக போராட்டத்தினை தீவிரப்படுத்த முயன்றபோது பண்டாரநாயகா இதனை தந்திரமாக

கையாள முயன்றார். தமிழரசுக் கட்சித் தலைவருடன் பேச்சுவார்த்தை நடாத்தி ஓர் ஒப்பந்தத்தையும் செய்து கொண்டார (பண்டாசெல்வா ஒப்பந்தம், 1957 ஜூலை 29). இவ்வொப்பந்தத்தின் ஊடாக பிராந்திய சபைகள் அமைத்தல், தமிழ் மொழி அலுவலக மொழி அந்தஸ்த்து வழங்கல் போன்றவற்றக்கு ஏற்பாடு செய்யப்பட்டது. சிங்களதமிழ் இனமுரண்பாட்டைத் தீர்ப்பதற்கான பலமான அடித்தளமாக அவ்வொப்பந்தம் பலராலும் சுட்டிக்காட்டப்பட்டது.

பல்வேறு அனுகூலமான அம்சங்களைக் கொண்டிருந்த பண்டாசெல்வா ஒப்பந்தத்தை பிரதான எதிர்க்கட்சிகள் எதிர்த்ததுடன் அதற்கெதிரான பிரச்சரத்தையும் மேற்கொண்டன. ஒப்பந்தத்தை எதிர்த்து 1957 ஒக்டோபர் 5 இல் கண்டி நோக்கிய எதிர்ப்பு ஊர்வலத்தை ஐக்கிய தேசியக் கட்சி ஆரம்பித்தது. பௌத்த குருமார்களதும் சிங்கள தேசியவாதிகளதும் எதிர்ப்புக் குரலும் மேலோங்கி நின்றது. இதனால், 1958 ஏப்ரல் 9 இல் பண்டாரநாயகா ஒப்பந்தத்தில் பங்கு கொண்ட மற்ற தரப்பான தமிழரசுக் கட்சியை ஆலோசனை செய்யாது ஒருதலைப்பட்சமாக அதனைக் கிழித்தெறிந்தார். மாறாக, 'ஸ்ரீ' எனும் சிங்கள எழுத்துப் பொறித்த வாகனத் தகடு எனும் கொள்கைக்கும் ஆதரவு தெரிவித்தார். இது நாடுபூராகவும் மேலும் கலவரங்கள் ஏற்பட வழிவிட்டது.

பின்னரான காலங்களில் தமிழ் மொழிக்கான அங்கீகாரத்துக்கான தமிழ்பேசும் மக்களின் போராட்டம் தீவிரமடைந்ததுடன் தமிழ் மக்களின் சிங்கள ஆட்சியாளர்களுடனான முரண்பாட்டின் பிரிக்கமுடியாத ஒரு அடிப்படை விடயமாக 'மொழி' மாறலானது. இன்றுவரை அரச மொழிக்கொள்கையும் அதன் அமுலாக்கமும் இலங்கையின் இனமுரண்பாட்டுக்கான அடிப்படைக் காரணிகளில் ஒன்றாக தொடர்ந்தும் இருந்தவண்ணமே உள்ளன.

## 5. அதிகாரப்பகிர்வுக்கான எதிர்ப்பும் மறுப்பும்

1936 இல் தனிச்சங்கள மந்திரிசபை அமைக்கப்பட்டிலிருந்தே தமிழ்த் தலைவர்கள் மத்தியில் இனக்குழுக்களுக்கிடையே அதிகாரத்தைப் பகிர வேண்டும் என்ற கோரிக்கை வலுப்பெற்றது. இதனாலேயே, ஜி.ஜி.பொன்னம்பலம் 50:50 எனும் சமநிலைப்படுத்தும் பிரதிநிதித்துவக் கோரிக்கையை பாராளுமன்றத்தில் முன்வைத்தார். அவ்வாறே, 1948 இல் தமிழர்களுக்கு நடந்த கசப்பான சம்பவங்களால் அதிகாரப் பகிர்வை வலியுறுத்துகின்ற சமஷ்டிக் கட்சியை (தமிழரசுக் கட்சி என்றே அது தமிழில் விழிக்கப்பட்டது) எஸ்.ஜே.வி.செல்வநாயகம் தோற்றுவித்ததுடன் அவரது பிரதான கோரிக்கைகளில் தமிழர்கள் பெரும்பான்மையாக வாழ்கின்ற வடக்கு கிழக்குப் பிராந்தியத்துக்கு சுயாட்சியை வழங்குகின்ற சமஷ்டி ஆட்சிமுறைக்காக கோரிக்கையையும் ஒன்றாக முன்வைத்தார்.

வரலாற்றை நோக்கின், சுதந்திரத்திற்கு முன்பே 1926 இல் பண்டாரநாயகா பல்லினக் குழுக்களின் அபிலாசைகளை உள்வாங்கி ஆட்சிபுரிவதற்கு சமஷ்டி முறையிலான கட்டமைப்பே அவசியமானது என வலியுறுத்தியதுபோதும் சுதந்திரத்தை அடுத்து வந்த எந்த சிங்கள ஆட்சித் தலைவரும் தமிழர்களுக்கு அதிகாரத்தை பகிர்ந்து கொடுப்பதற்கோ அல்லது சுயாட்சியை வழங்குவதற்கோ மனப்பூர்வமாக விரும்பியிருக்கவில்லை. தமிழர்கள் அதற்கான கோரிக்கையை முன்வைத்தபோதெல்லாம் அதனை அரசியல் இலாபத்துக்கான அல்லது தேர்தலில் வெற்றிபெறுவதற்கான ஒரு வழியாகவே பயன்படுத்தியிருந்தார்கள்.

முதன்முதலில் பண்டாசெல்வா ஒப்பந்தத்தின் (1957) மூலம் பிராந்தியங்களுக்கு அதிகாரப்பகிர்வினை வழங்குவதற்கான ஓர் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. பண்டாரநாயகாவும் பிராந்திய சபைகள் மசோதாவை அறிமுகம் செய்யவும் முயற்சித்தார். ஆனாலும், பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசிய கட்சியினதும் சிங்களபௌத்த தேசியவாத அமைப்புக்களினதும் எதிர்ப்பினால் அத்திட்டத்தை அவரால் அமுல்ப்படுத்த முடியவில்லை. இதேநிலையே டட்லிசேனநாயக செல்வநாயகம்

உடண்படிக்கைக்கும் *(1965)* நடந்தேறியது *(பார்க்க:* Yusoff et al., *2016).*

உண்மையில், தமிழர்களின் சயாட்சிக்கான போராட்டமும் அதனை நசுக்குவதற்கான இலங்கை அரசாங்கங்களின் நடவடிக்கைகளுமே தமிழ் இளைர்களை தீவிர வன்முறையின்பால் நாட வழிவிட்டதுடன் அது இலங்கைத் தமிழர்களிடத்திலிருந்தும் இந்தியாவில் தமிழ்நாட்டு தமிழர்களிடத்திலிருந்தும் இலங்கை அரசாங்கத்துக்கு அழுத்தத்தை ஏற்படுத்த வழிவிட்டது. அத்துடன், இந்தியா இலங்கை இனமுரண்பாட்டில் நேரடித் தலையீட்டைச் செய்யவும் வழிகோலியது. இந்திய மத்தியஸ்தத்தின் கீழ் நடந்தேறிய பேச்சுவார்த்தைகளின் இறுதியில் பிராந்தியங்களுக்கு அதிகாரங்களைப் பகிர்ந்து கொடுப்பதன் ஊடாக இனமுரண்பாட்டைத் தீர்க்க இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்திக்கும் இலங்கை ஜனாதிபதி ஜெயவர்த்தனாவுக்கும் இடையே *1987* ஜூலை *19* இல் இலங்கைஇந்திய ஒப்பந்தம் கைச்சாத்தானது. அவ்வொப்பந்தத்தின்படி ஒவ்வொரு மாகாணத்துக்கும் ஒவ்வொரு மாகாணசபை அமைக்கப்பட்டதுடன் வடக்குகிழக்கு மாகாணங்கள் தற்காலிகமாக இணைக்கப்பட்ட ஒரு மாகாணசபையாக அமைக்கப்பட்டு அவைகளுக்கு மக்கள் பிரதிநிதிகளுடனான பிராந்திய அரசாங்கத்தை அமைப்பதற்கு தேர்தலும் நடந்தன.

மாகாணசபை முறையை பிரதான தமிழ் ஆயுதக் குழுவான தமிழீழ விடுதலைப் புலிகள் முற்றாக எதிர்த்துடன் தேர்தலையும் புறக்கணித்தபோதிலும் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி போன்ற சில தமிழர்சார் இயங்கங்கள் தேர்தலில் வெற்றிபெற்று அரசாங்கத்தை அமைத்தது. ஆனாலும், தனிநாட்டுக் கோரிக்கைக்கு வடக்குகிழக்கு மாகாண முதலைமைச்சர் ஆதரவளித்த காரணத்துக்காக ஒரு வருட காலத்தினுள் வடக்குகிழக்கு மாகாணசபை கலைக்கப்பட்டது. பின்னரான காலங்களில் மத்தியரசின் ஆளுகையின் கீழ் சிங்கள ஆளுணராலும் நிர்வாகிகளாலும் மேற்கொள்ளப்பட்ட அடக்குமுறையிலான மாகாண நிர்வாகம் தமிழ்பேசும் மக்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட பிரதேசம் அவர்களின் கைகளைவிட்டுச் செல்கின்றது என்ற அச்சத்தையும் ஆத்திரத்தையும் தமிழ் மக்கிளிடையே ஏற்படுத்தியது

சிங்களப் பெரும்பான்மை அரசாங்கங்கள் தமிழர்களின் அதிகாரப்பகிர்வுக்கும் சுயாட்சிக்குமான கோரிக்கைகளை தொடர்ந்தும் தீவிரமாக எதிர்த்ததன் காரணமாக தமிழர்களிடையே தீரவிவாதக் குழுக்கள் தோற்றம்பெற்று தமது பூர்வீகப் பிரதேசத்தில் தமிழர்களுக்கான தனியரசை நிறுவுவதற்காக ஆயுதப் போராட்டங்களிலும் ஈடுபடலாயினர். இன்றுவரை தமிழர்களின் பிரதான கோரிக்கையாக வடக்குகிழக்கு பிராந்தியத்துக்கு விசேட அதிகாரப்பகிர்வு அல்லது சுயாட்சிக்கான ஏற்பாடுகளை வழங்க வேண்டும் என்பதாகவே உள்ளது. பல்லினங்கள் பிராந்திய ரீதியாக செறிந்து வாழ்கின்ற போது இனக்குழுக்களின் தனித்துவங்களையும் அடையாளங்களையும் அங்கீகரிக்குமுகமாக அரசியல் தளத்தில் அதிகாரப்பகிர்வு மற்றும் சயாட்சி போன்ற ஏற்பாடுகள் உலகின் பல தேசங்களில் நடைமுறைப்படுத்தப்படுகின்ற போதிலும் இலங்கையைப் பொறுத்த வரையில் இவ்வேற்பாடுகள் சர்ச்சைக்குரியனவாகவும் இனஉறவுகள் மற்றும் இனத்துவ அரசியலில் பாதகமான விளைவுகளை ஏற்படுத்துவனவாகவுமே இருந்து வந்துள்ளன.

## 6. உயர் கல்விக் கொள்கையும் தரப்படுத்தல் முறையும்

காலாதிகாலமாக இலங்கையில் பின்பற்றப்பட்டுவந்த உயர் கல்விக் கொள்கையும் இனங்களிடையே முரண்பாட்டையே அதிகப்படுத்தியுள்ளதை சுட்டிக்காட்டலாம். முன்னர் நோக்கியது போல் பிரித்தானியரது கால்விக்கொள்கை அவர்களுக்கு துதிபாடும் ஒரு வகுப்பினரை உருவாக்கவே விழிவிட்டது. இதனால், யாழ்ப்பாணத் தமிழர்கள் நன்மைபெறுகின்றார்கள் என்ற மனப்பான்மை

சிங்களவர்கள் மத்தியில் வளரத் தொடங்கியது. தவிர, சிங்களவர்களிலும் ஆங்கிலக் கல்வியால் நன்மைபெறுவோர் நகர்ப்புற உயர் வர்க்கத்தினராக மட்டுமே இருந்தனர்.

சுதந்திரத்தின் பின்னரான காலத்தில் ஆட்சியாளர்கள் சுதேசிய மொழி மூலமான கல்விக்கு முக்கியத்துவம் கொடுத்தனர். இதனால், தாய்மொழி மூலக் கல்வி முக்கியத்துவம் பெற்றலானதுடன் 'சிங்களம் மட்டும்' மொழிக்கொள்கையும் வேரூண்றலானது. தாய்மொழிக் கல்வியின் அறிமுகத்தை அடுத்து உயர் கல்வி பெறுவதில் சிங்கள மாணவர்களைவிட கல்வியில் பிரித்தானியர் காலத்திலிருந்து ஆர்வத்தை வெளிப்படுத்திவந்த தமிழ் மாணவர்கள் அதிகளவில் சந்தர்ப்பத்தைப் பெற்றனர். ஆதலால், சுதந்திரத்துக்குப் பின்னரான காலங்களில் பொறியியல் மற்றும் வைத்தியத் துறைகளில் பல்கலைக்கழகங்களில் 50 வீதத்திற்கும் அதிகமான இடங்களை தமிழ் மாணவர்களே நிரப்பிவந்தனர். அப்போது திறமையின் அடிப்படையிலேயே பல்கலைக்கழக தெரிவு இடம்பெற்றது. ஆனாலும், சிங்களம் மட்டும் கொள்கையில் நன்கு வேரூண்றியிருந்த சிங்களபௌத்த தேசியவாதிகள் தமிழர்களின் உயர்ந்த கல்வியடைவை சகித்துக்கொள்ள முடியாமல் கிளர்ந்தெளுந்தனர். அவர்களைத் திருப்பத்திப்படுத்த வேண்டி அரசாங்கம் 1970 களின் ஆரம்பத்தில் பல்கலைக்கழக புகுதலுக்கு தரப்படுத்தல் கொள்கையை (Standardization Policy)அதாவது மலேசியாவில் இருந்த பூமிபுத்திரா கொள்கைக்கு சமமான கொள்கையை அறிமுகம் செய்தது. இக்கொள்கை இனக்குழுக்களின் விகிதாசாரப்படி பல்கலைக்கழக மாணவர்கள் தெரிவு செய்யப்படுவதை வலியுறுத்தியது. இத்திட்டத்தால் சிங்கள மற்றும் முஸ்லிம் மாணவர்களே அதிகளவில் நன்மை அடைந்தனர். வடக்குகிழக்கு தமிழ் மாணவர்களின் பல்கலைக்கழக புகு வீதம் படிப்படியாக சரிவை நோக்கிச் சென்றது (De Silva, 2003, pp.8283).

தரப்படுத்தல் கொள்கையின் தமிழ் மாணவர்கள் மீதான பாதிப்பு குறித்து கவனிக்கப்படாது விடப்பட்டதால் இறுதியில் அதுவே தமிழ் இளைஞர்களிடையே விரக்தி நிலையை அதிகரித்து அவர்கள் அரசுக்கு எதிராக ஆயுதம் ஏந்திப் போராடும் நிலையை ஏற்படுத்தியது. இதன் இன்னொரு எதிரொலியாக அதிகளவான தமிழ் இளைஞர்கள் நாட்டை விட்டு வெளியேறியதுடன் சர்வதேச ரீதியாக தமது இனத்துக்கு எதிரான அநீதிகள் மற்றும் பாரபட்சங்கள் குறித்து பிரச்சாரப்படுத்தலாயினர். நூற்றுக்கணக்கான இளைஞர்கள் ஆயுதப் போராட்டம் மூலம் விடுதலை பெறும் நோக்கில் இயக்கங்களாக ஒன்று சேர்ந்தனர். அவ்வாறு 1976.05.05 இல் உருவான ஒரு பலமிக்க இயக்கமே தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் இயக்கமாகும் (நடேசன், 2000, பக்.120 128).

## 7. காணிக் கொள்கையும் திட்டமிட்ட குடியேற்றத் திட்டங்கங்களும்

சுதந்திரத்துக்குப் பின்னரான இலங்கை அரசாங்கங்கள் முன்னெடுத்த காணிக் கொள்கைகளும் திட்டமிட்ட குடியேற்றத் திட்டங்களும் கூட இனமுரண்பாடு வளர்ச்சி பெறுவதற்கு பெருமளவில் வழிவிட்டிருக்கின்றது. சுதந்திரத்தை அடுத்து கல்லோயா நீர்ப்பாசன அபிவிருத்தித் திட்டம் என்ற போர்வையில் கிழக்கு மாகாணத்தில் தமிழ்பேசுவோர் பெரும்பான்மையாக வாழ்ந்துவந்த மட்டக்களப்பு தொற்கு பகுதியில் தமிழர்களதும் முஸ்லிம்களதும் காணிகள் சூறையாடப்பட்டு அவற்றில் நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்து அழைத்துவரப்பட்ட சிங்கள மக்களை குடியேற்றி திட்டமிட்டவகையில் சிறுபான்மையினரது நிலங்களைப் பறிமுதல் செய்யும் நடவடிக்கைகளை அரசாங்கங்கள் தொடர்ந்தும் மேற்கொண்டன. இதன் தொடர்ச்சியாக, மட்டக்களப்பின் தென்பகுதியையும் வேறுசில மாகாணங்களின் சிங்களப் பொரும்பான்மைப் பகுதிகளையும் ஒன்றிணைத்து 1961 இல் அம்பாறை எனும் தனி நிர்வாக மாவட்டத்தை உருவாக்கி சிங்களவர்களின் இனவிகிதாசாரத்தை கிழக்கு மாகாணத்தில் அதிகரிப்பதற்காக

நடவடிக்கையிலும் அரசாங்கம் ஈடுபட்டது. இவ்வாறே, திருகோணமலையில் அபிவிருத்தித் திட்டம் என்ற போர்வையில் தமிழர்களின் பூர்வீக நிலங்கள் அபகரிக்கப்பட்டு சிங்களக் குடியேற்றங்கள் ஏற்படுத்தப்பட்டு அவர்களுக்காக 'சேருவெல' எனும் புதிய பிரதேச நிர்வாகப் பிரிவும் தேர்தல் தொகுதியும் உருவாக்கி வசதியளிக்கப்பட்டது. இதன் விளைவு, இனவிகிதாசாரத்துக்குப் புறம்பாக அதிகளவான நிலங்கள் சிங்களவர்களைப் பெரும்மையாகக் கொண்ட உள்ளூர் நிர்வாக அலகுகளுக்கு ஒதுக்கப்பட்டதுடன் சிங்களவர்களின் இன விகிதாசாரமும் கிழக்கில் வேகமாக அதிகரித்தது (பார்க்க: Yusoff et al., *2015).*

மறுபுறத்தே, மகாவலி அபிவிருத்தின் திட்டத்தின் ஒரு பகுதியை கிழக்குக்குத் திசைதிருப்பி வடக்குகிழக்கு மாகாணங்களில் எல்லைப்புறங்களில் அபிவிருத்தித் திட்டம் என்ற பெயரில் சிங்கள மக்களைக் குடியேற்றி அடிப்படை மற்றும் நிர்வாக வசதிகளை ஏற்படுத்திக்கொடுத்து வடக்குகிழக்கு மாகாணங்களின் ஆள்புலத் தொடர்ச்சியை இல்லாமற் செய்வதற்காக முயற்சிகளையும் அரசாங்கங்கள் மேற்கொண்டன. இவைகள் எல்லாம் பரம்பரையாக இப்பகுதிகளில் வாழ்ந்துவந்த சாதாரண தமிழ் மக்களிடையேயும் தமிழரின் ஆள்புல சுயாதிக்கத்துக்காக போராடிவந்த தமிழ் குழுக்களுக்கிடையேயும் தீவிர வெறுப்பை ஏற்படுத்தி இனமுரண்பாடும் உள்ளூர் போரும் தீவிரமடைய வழிவிட்டது.

### முடிவுரை

இலங்கையில் இனமுரண்பாட்டின் தோற்றத்துக்கும் வளர்ச்சிக்கும் வழிவிட்ட காரணிகளில் இக்கட்டுரையில் அடையாளம் கண்டவைகள் மிக அடிப்படையானவைகள் என்பதில் சந்தேகமில்லை. குறிப்பாக, இனக்குழுக்களின் பூர்வீக வரலாற்று விவாதங்கள், பிரித்தானிய காலணித்துவ ஆட்சியாளர்களின் பிரித்தாளும் கொள்கைகள், பிரதிநிதித்துவ முறைகளின் குறைகள், அரசியலமைப்புத் திட்டங்களின் இனமேலாதிக்க மற்றும் இன ஒதுக்கல் ஏற்பாடுகள், சிறுபான்மையினர் மொழிக்கான அரச அங்கீகார மறுப்பு, அதிகாரப்பகிர்வுக்காக எதிர்ப்பு, உயர் கல்வியிலும் அபிவிருத்தித் திட்டங்களிலும் பாரபட்சம் காட்டப்பட்டமை மற்றும் நிலச் சீர்திருத்தக் கொள்கைகள் போன்றன இலங்கையின் பிரதான இனக்குழுக்களான சிங்களவர்கள் மற்றும் தமிழர்களிடையே சமூகஅரசியல் ரீதியில் முரண்பாடும் இனத்துவ எதிர்ப்பு அரசியலும் தீவிரமடைய வழிவிட்டிருக்கின்றன.

இனமுரண்பாட்டினால் இலங்கையின் இனக்குழுக்கள் பரஸ்பரம் சந்தேகத்துடனும் அவநம்பிக்கையோடும் நோக்கும் நிலை இன்று தோண்றியுள்ளது. இனமுரண்பாட்டின் விளைவாக சுமார் மூன்று தசாப்தங்களாக இடம்பெற்ற உள்ளூர் யுத்தத்தின் கோர விளைவுகள் அழிக்க முடியாத வடுக்களை இலங்கைச் சமூகங்களிடையே குறிப்பாக சிறுபான்மை இனக்குழுக்களிடையே ஏற்படுத்தியுள்ளன. போருக்குப் பின்னரான இனமுரண்பாட்டுத் தீர்வு முயற்சியில் இனமுரண்பாட்டுக்கான ஆளவேரூண்றிய காரணிகளை முறையாக ஆராய்ந்து அவற்றுக்கு தீர்வுகாண்பதன் ஊடாகவே இனமுரண்பாட்டைத் தீர்ப்பதும் இனஉறவுகளைக் கட்டியெழுப்பபுவதும் சாத்தியப்படும். இனமுரண்பாடுகளுக்கு நீடித்து நிலைக்கக்கூடிய தீர்வுகளைக் காண்பதற்கு அம்முரண்பாடுகளுக்கு காரணமான ஆழவேரூண்றிய அடிப்படைக் காரணிகளை கண்டறிந்து பகுப்பாய்வுசெய்து அவற்றை ஆற்றுப்படுத்துவதே அவசியமாகிறது.

## References


Colombo, Department of Census and Statistics. (2014). *Census and Population Report-Final 2011*. Colombo: DCS.

De Silva, H. (2003), *Power Games in War and Peace*: Colombo.

Ghosh, P. S. (2002). The Historical and Political Background of the Conflict in Sri Lanka. In D.H. Rajanayagam (Ed.). *Peace Initiatives Towards Reconciliation and Nation-Building in Sri Lanka*. (pp.70-83). Kuala Lumpur: The Malaysian Ceylonese Congress.

Jayawardena, K. (1987). *Ethnic and Class Conflict in Sri Lanka*. Madras: Kumaran Publishers.

Jotiliṅgam, C. A. (2002). *Ilaṅkaiyiṉ iṉappiracciṉaiyum araciyal tiirvu yosaṉaikaḷum*. Koḻumpu: Kumaraṉ Puttaka Illam.

Midlarsky, M. I. (2011). *Origins of Political Extremism: Mass Violence in the Twentieth Century and Beyond*. Cambridge: Cambridge University Press.

Nadēsaṉ, G. (2000). *Ilaṅkai iṉa muraṇpaaṭukaḷiṉ varalaaṟu*. Maṭṭakkaḷappu: Abirami Viḷampara Sevai.

Wilson, A. J. (1988). *The Break-up of Sri Lanka: The Sinhalese-Tamil Conflict*. London: Hurst & Company.

Yusoff, M. A., Sarjoon, A., & Abdul Wahid, A. R. (2016). State-Building, Power-Sharing Discourse and Political Autonomy of Minorities Within Ethno-Nationalist Gloom in Sri Lanka. *Journal of Politics and Law*. *9*(1), 88-96.

Yusoff, M.A., Sarjoon, A., Awang, A., & Hamdi, I. H. (2015). Land Policies, Land-Based Development Programs and the Question of Minority Rights in Eastern Sri Lanka. *Journal of Sustainable Development*. *8*(8), 223-233.

# மகட்பாற்காஞ்சிப் பாடல்கள் - ஒரு பகுப்பாய்வு

# An Analytical Study of the Songs of *Makatpaarkaanjiththurai*

முனைவர் ச.கண்மணி கணேசன் / Dr. S.Kanmani Ganesan [1]

**_Abstract_**

This paper is an analytical study of the twenty songs in *Puranaanooru*; which belong to the subdivision *Makatpaarkaanji*. The subject matter in the songs need to be studied in detail to know the social history of the early Tamils. This attempt throws light in the plurality and division in the Dravidian society; the fight for supremacy amongst the *venthar* and *velir* and the part played by *kizhars* the native people of the Tamil land. The twenty songs form the primary sources and the other lyrics in the eight anthologies form the secondary sources. It is evident that out of the total; 70% of the Chieftains were demanding the girls for themselves are *Venthar* and 10% of them are warriors. The remaining are left unidentifiable. 70% of the girls demanded are the daughters of *velirs*; 10% of them are daughters of the downtrodden venthar and 5% of them are daughters of the *kizhars*. The remaining are unidentifiable. All the velirs, downtrodden venthar and the *kizhars* were reluctant to give their daughters in marriage to the *venthars*. To prove their supremacy the *venthar* did not hesitate to set ablaze the paddy fields and their hamlets.

Date of submission: 2019-05-07
Date of acceptance: 2019-06-10
Date of Publication: 2019-07-30

Corresponding author's
Name: Dr. S.Kanmani Ganesan
Email: kanmanitailskc@gmail.com

**Key Words:** Puranaanooru, Makatpaarkaanji; Venthar; Velir, Kizhars.

### முன்னுரை

புறநானூற்றில் இருபது மகட்பாற்காஞ்சித்துறைப் பாடல்கள் உள்ளன (பா.336355). அவற்றுள் எட்டுப் பாடல்கள் சிதைந்த நிலையில் கிடைத்து உள்ளன (அவையும் நமக்குத் துணை செய்யக் கூடியவையே). அவற்றை நுணுகிப் பயிலும் போது அப்பாடற் செய்திகள் பல வரலாற்று உண்மைகளைத் தம்முள் பொதிந்து வைத்து உள்ளமை தெளிவாகிறது. அவ்வுண்மைகள் சங்க காலச் சமூக வரலாற்றை எழுதப் பேருதவியாய் இருக்கக்கூடியவை.

இக்கட்டுரை அவ்இருபது பாடல்களின் தொகுப்பைப் பகுத்தும் வகுத்தும் விளக்க முற்படுகிறது. இருபது பாடல்களும் முதல்நிலைத் தரவுகளாய் அமைய பிற சங்க இலக்கியப் பாடல்கள் துணைநிலை ஆதாரங்களாம்.

### பெண்ணை விழைவோர்

வேந்தர்களும், பிற வீரர்களும் விரும்பிப் பெண் கேட்பதாக மகட்பாற் காஞ்சித் துறைப்பாடல்கள் அமைந்துள்ளன. நான்கு பாடல்களில மட்டும் பெண் கேட்போர் யார் என்ற தகவல் குறிப்பு ஏதும் இல்லை.

### வேந்தர் பெண் கேட்டல்

பதினான்கு பாடல்களில் வேந்தர் பெண் கேட்கின்றனர் என்னும் குறிப்பு; அவர்களை நேரடியாகச் சுட்டியோ, அல்லது அவர்களது மாலை, முரசு, நாற்படை ஆகியவற்றைக் குறிப்பாகச் சுட்டியோ அமைந்து உள்ளது.

*"வேட்ட வேந்தனும் வெஞ் சினத்தினனே"(பா 336 அடி 1)'*

*"வருத லானார் வேந்தர்"(பா 337 அடி 16)*

[1] The author is a retired Principal of an autonomous college in Tamil Nadu, India. kanmanitailskc@gmail.com

*"வேம்பும் ஆரும் போந்தையும் மூன்றும்*

*மலைந்த சென்னியர் அணிந்த வில்லர்*

*கொற்ற வேந்தர் வரினும்"(பா 338 அடி 68),*

*"முறஞ்செவி யானை வேந்தர்"(பா 339 அடி 13),*

*"வேந்து குறையுறவுங் கொடாஅன்"(பா 341அடி 1),*

*"வந்தோர் பலரே வம்ப வேந்தர்"(பா 345 அடி 7),*

*"......................................................வேந்தர்*

*வினைநவில் யானை பிணிப்ப"(பா 347 அடி. 1011),*

*"நிழல்தொறும் நெடுந்தேர் நிற்ப வயின்தொறும்*

*செந்நுதல் யானை பிணிப்ப"(பா 348 அடி 89),*

*"கடிய கூறும் வேந்தே"(பா 349 அடி 2),*

*"படுமழை உருமின் இரங்கு முரசின்*

*கடுமான் வேந்தர்"(பா 350 அடி 45),*

*"வென்றெறி முரசின் வேந்தர்"(பா 351 அடி 56)*

*"கூறிவந்த மாமுது வேந்தற்கு"(பா 353 அடி 12),*

*"அரைசு தலைவரினும் அடங்கல் ஆனா"(பா 354 அடி 1),*

*"கண்ணார் கண்ணிக் கடுமான் கிள்ளி"(பா 355 அடி 5)*

முதலிய மேற்கோள்கள் வேந்தரை நேரடியாகவோ; அல்லது அவர்களது வேம்பு, ஆர், பனம்பூமாலைகள், முரசு; யானை, தேர், வில்வீரர் முதலிய படை எதையேனும் வருணித்தோ; குறிப்பாகச் சுட்டியோ அமைந்துள்ளன. எனவே பெண் கேட்டோர் வேந்தர் என்பது ஒருதலை.

### வீரர் பெண் கேட்டல்

இரண்டு பாடல்கள் பிற வீரர் பெண் விழைவதாக அமைந்துள்ளன. தொடரும் பாடலில்,

*"அணித்தழை நுடங்க ஓடி மணிப்பொறிக்*

*குரலங் குன்றி கொள்ளும் இளையோள்*

*மாமகள்.................................*

*யார்மகள் கொல்என வினவுதி கேள்நீ"(பா 340)*

என்று விளித்துப் பாடுவது யாரோ ஒரு தலைவனைத் தானே அன்றி வேந்தரை இல்லை. சிதைந்திருக்கும் இப்பாட்டில் ஐயத்திற்கும் இடமில்லை. இதேபோல் அரிசில் கிழார் தன்னிடம் வினவும் வீரனைப் பார்த்துப் பாடுங்கால்,

*மயிலைக் கண்ணிப் பெருந்தோட் குறுமகள்*

*ஏனோர் மகள்கொல் இவளென விதுப்புற்று*

*என்னோடு வினவும் வென்வேல் நெடுந்தகை"(பா - 342)*

எனக் கேட்டு அவள் தந்தை வேந்தரோடும் மறுத்துப் போரிடுவதைத் தொடர்ந்து சொல்கிறார். 'வென்வேல் நெடுந்தகை' என்னும் தொடர் அவன் வீரன் என்பதைப் புலப்படுத்துகிறது.

### பெண்ணைப் பெற்றோர்

வேளிரிடம் மகட்கொடை நேரும் பாடல்கள் பதினான்கு. நலிந்த வேந்தரிடம் மகட்கொடை நேரும் பாடல்கள் இரண்டு உள்ளன. கிழாரிடம் மகட்கொடை நேரும் பாடல் ஒன்று உள்ளது. எஞ்சிய நான்கு பாடல்களில் யாரிடம் மகட்கொடை நேர்கிறார்கள் என்ற செய்தி இல்லை.

### வேளிரிடம் மகட்கொடை நேர்தல்

வேளிர்க்குரிய அடையாளமாக அமைவது நெல்/ வயல்/ செறுவும் ஓரேயிலும் ஆகும். பதின்மூன்று மகட்பாற்காஞ்சித் துறைப் பாடல்களில் பெண்ணைப் பெற்றோர் வேளிர் என்பதைக் குறிக்குமுகமாக வயல்வளம் இடம் பெற்றுள்ளது. அவையாவன:

*"காய்நெற் கவளம் தீற்றிக் காவுதொறும்"(பா 337 அடி 14),*

*“பிணங்கு கதிர்க் கழனி நாப்பண் ஏமுற்று “(பா 338 அடி 10),*

*“பைந்தழை துயல்வரும் செறுவில்”(பா 339 அடி 9),*

*“கரந்தையம் செறுவிற் பெயர்க்கும்”(பா 340 அடி 8),*

*“மென்புல வைப்பின்இத் தண்பணை ஊரே”(பா 341 அடி 19)*

*“தண்பணைக் கிழவன் இவள் தந்தையும்”(பா 342 அடி 11),*

*“செந்நெ லுண்ட பைந்தோட்டு மஞ்ஞை”(பா 344 அடி 1),*

*“பன்னல் வேலி இப்பணை நல்லூரே”(பா 345 அடி 20),*

*“வெண்ணெல் அரிஞர் தண்ணுமை வெரீஇ”(பா 348 அடி 1),*

*“ஏமஞ்சால் சிறப்பின் இப்பணை நல்லூரே”(பா 351 அடி 12)*

*“வெண்ணெல் வேலி”(பா 352 அடி 9)*

*“குன்றுகண் டன்ன நிலைப்பல் போர்பு*

*”நாட்கடா அழித்த நனந்தலைக் குப்பை“(பா 353 அடி 89)*

*“வயலமர் கழனி வாயிற் பொய்கை”(பா 354 அடி 4)*

மேற்சுட்டிய பதின்மூன்று புறப்பாடல்களில் வயல்வளம் இடம்பெறுவது போலவே பிற சங்க இலக்கியங்களும் வேளிரைச் சுட்டும் போதெல்லாம் அவர்கள் விளைவித்த நெல் அல்லது கழனி ஆகியவற்றுடன் தொடர்புறுத்தியே பேசுகின்றன.

*“பழம்பல் நெல்லின் வேளூர்” (அகநானூறு - 166)*

எனும் அடி பழைய நெல்லின் மிகுதியை வேளிர் ஊருடன் சேர்த்துப் பேசுகிறது.

*“கழனி காவலர் கடுநந்து உடைக்கும்*

*தொன்றுமுதிர் வேளிர் குன்றூர்” (நற்றிணை 280)*

இது வேளிரது குன்றூரின் கழனி காவலர்; பழன யாமையின் முதுகில் நத்தையை உடைத்து உண்டமையைக் காட்சிப்படுத்துகிறது.

*“......................... தொன்முதிர் வேளிர்*

*குப்பை நெல்லின் முத்தூறு” (புறநானூறு 24)*

இவ்வடி வேளிர் முத்தூற்றில் குவித்து வைத்திருந்த நெல்லைக் கண் முன்னர் கொண்டு வருகிறது.

வேளிர் ஓரெயில் கொண்ட குறுநில மன்னராக மூன்று மகட்பாற்காஞ்சித் துறைப் பாடல்களில் சுட்டப்படுகின்றனர்.

*“................................வண்தோட்டுப்*

*பிணங்குகதிர்க் கழனி நாப்பண் ஏமுற்று*

*உணங்குகலன் ஆழியிற் தோன்றும்*

*ஓரெயில் மன்னன்“ (பா 338)*

என அகழியும், காவற்காடும் இன்றி; ஓரெயில் கொண்டு நெல்வயல்களின் நடுவே வேளாண்மை செய்து ஆண்டவர் வேளிர்’ என்று மேற்சுட்டிய புறநானூற்று மேற்கோள் புலப்படுத்துகிறது. கடல் நடுவே மிதக்கும் கப்பலைப் போல அவனது எயிலுடன் கூடிய மனை நெற்கழனிகளுக்கு நடுவே தோற்றம் அளித்தது என்கிறார் புலவர். பரணரும் வேளிரின் எயிலைப் பற்றிப் பாடுங்கால்,

*“எழுவிட்டமைத்த திண்ணிலைக் கதவின்*

*அரைமண் இஞ்சி நாட்கொடி நுடங்கும்”(பா 341)*

என்றே புனைகிறார். கணைய மரத்தைக் குறுக்கிட்டமைத்த திண்ணிய நிலையை உடைய கதவையும், அரைத்த மண்ணாலமைந்த மதிலையும், வெற்றி பெற்ற நாளில் எடுத்த(காலம் முழுதும் ஏற்றும் கொடி அன்று.) கொடியையும் உடையது என்பது அந்தப் புறப் பாடலின் பொருள். அங்ஙனமே,

*“.........................................பருந்து உயிர்த்து*

*இடைமதிற் சேக்கும் புரிசைப்*

*படைமயங்கு ஆரிடை நெடுநல் ஊரே "(பா 343)*

எனும் பாடலடிகளில் அகழியோ, காவற்காடோ கொத்தளம் பற்றிய குறிப்போ இல்லை. பருந்து இளைப்பாறும் மதில் இருக்க; படை ஏந்திய மறவர் அரிய வழிகளில் நின்றே காவல் காத்தனர் என்கிறது புறநானூறு.

அகநானூறிலும் வேந்தர் ஒன்றுகூடித் தோற்கடித்த குறுநிலமன்னர் ஓரெயிலுடன் கூடிய மனைகளில் வதிந்தமை தலைவியின் துயில் துறந்த நிலைக்கு உவமையாகிறது.

*"........................................வென்வேல்*

*அண்ணல் யானை அடுபோர் வேந்தர்*

*ஒருங்ககப் படுத்த முரவுவாய் ஞாயில்*

*ஓரெயில் மன்னன் போலத்*

*துயில் துறந்தனள் "(அகம். பா 373)*

எனும் பாடற்பகுதி காண்க.

### நலிந்த வேந்தரிடம் மகட்கொடை நேர்தல்

தன் பழம்பெருமை குன்றிய வேந்தரிடம் மகட்கொடை நேர்ந்ததற்கு அடையாளமாக அப்பாடல்களில் அவர்களது தூர்ந்த அகழியும், சிதைந்த கொத்தளமும் வருணிக்கப்பட்டுள்ளன.

*"மதிலு ஞாயி லின்றே கிடங்கும்*

*நீஇ ரின்மையிற் கன்று மேய்ந்து உகளும் "(பா 355 அடி12)*

எனும் அடிகள் வலுவிழந்த கோட்டையைக் காட்டுகின்றன. எனவே அக்கோட்டையின் வேந்தன் தன் பொருளாலும் வலிமையாலும்

சோர்ந்துள்ளான்; அவனிடம் கடுமான்கிள்ளி மகட்கொடை நேர்கிறான் எனல் பொருந்தும். இதே போன்று,

*"தூர்ந்த கிடங்கின் சோர்ந்த ஞாயிற்*

*சிதைந்த இஞ்சிக் கதுவாய் மூதூர்"(பா 350 அடி 12)*

எனத் தொடங்கும் பாடலிலும் தன் திறன் குன்றிய வேந்தனிடம் மகட்கொடை நேரும் கடுமான் வேந்தன் குறிப்பிடப்படுகிறான்.

### கிழாரிடம் மகட்கொடை நேர்தல்

திணைமாந்தராகிய கிழாரிடம் மகட்கொடை நேரும் பாடல் ஒன்று உள்ளது. பெருஞ்சிக்கல் கிழான் மகண்மறுத்ததாக மதுரை மருதனிள நாகனார் பாடியுள்ள பாடல் கையிலிருக்கும் வேலைக் கொண்டு நெற்றி வியர்வையைத் துடைக்கும் வேந்தனைக் காட்சிப்படுத்துகிறது.

*"நுதிவேல் கொண்டு நுதல்வியர் துடையாக்*

*கடிய கூறும் வேந்தே தந்தையும்*

*நெடிய வல்லது பணிந்து மொழியலனே "(பா 349 அடி13)*

என்று தொடங்கி எதிரெதிர் நிற்கும் வேந்தனையும், தன் சொல்லில் மறுப்பைப் பிடிவாதமாகக் காட்டும் கிழாரையும் வருணிக்கிறது.

### பரிசமும் மறுப்பும்

பெண் கேட்கும் வேந்தர் மிகுந்த பொருளைப் பரிசமாகக் கொடுப்பினும் ஏற்றுக் கொள்ள வேளிர் தயாராக இல்லை என்று சுட்டியே அவர்கள் மகட்கொடை மறுப்பதைத் தெளிவாக்குகிறார்கள் புலவோர்.

முசிறித்துறை அளவு பொருளைக் கொடுத்துப் பெண் கேட்டாலும்; தன் பெண்ணுக்கு ஒப்பாரில்லை என்று முடிவு செய்து தன் பெண்ணைத் தரத் தந்தை மறுக்கிறான் எனும் பொருள்பட,

*"முழங்கு கடன் முழவின் முசிறி அன்ன*

*நலஞ்சால் விழுப்பொருள் பணிந்துவந்து கொடுப்பினும்*

*புரையர் அல்லோர் வரையலள் இவளெனத்*

*தந்தையும் கொடான்"(பா 343)*

எனப் பாடுகிறார் பரணர். அதேபோல உறையூரை ஒத்த செல்வத்தைக் கொடுத்தாலும் கொள்ள மறுக்கிறான் என்கிறார்.

*"உறந்தை அன்ன உரைசால் நன்கலம்*

*கொடுப்பவும் கொளான் நெடுந்தகை" (பா 352)*

என்ற அடிகள் நோக்கற்குரியன. மருதவளம் மிகுந்த ஊரோடு மிகுந்த பொருளையும் பரிசமாகக் கொடுக்க முன்வரினும் தன்மகளை மணம்செய்து கொடுக்காமல் போருக்குத் தயாராவதை,

*“துறைநணி மருதத் திறுக்கு மூரோடு*

*நிறைசால் விழுப்பொருள் தருத லொன்றோ*

.........................................

*பண்பில் ஆண்மை தருதல் ஒன்றோ” (பா 344)*

என்ற அடிகள் சொல்லிச் செல்கின்றன. இதே கருத்துப்பட, “செல்வம் வேண்டார் செருப்புகல் வேண்டி”*(பா 345)* என்ற பாடல் அடியும் அமைந்துள்ளது.

பரணர் *(புறம் 343-354)*, கபிலர் *(புறம் 337)*, அரிசில்கிழார் *(புறம் 342)*, அண்டர் நெடுங்கல்லினார் *(புறம் 344-345)*, மதுரைப் படைமங்கமன்னியார் *(புறம் 351)*, காவிரிப்பூம்பட்டினத்துக் காரிக்கண்ணனார் *(புறம் 353)* முதலியோரின் பாடல்கள் வேந்தர்க்குப் பெண் கொடுக்க மறுத்த வேளிரைப் படம்பிடித்துக் காட்டுகின்றன.

### யாருக்கு உரியவள்?

*“இரும்பனை அன்ன பெருங்கை யானை*

*கரந்தையஞ் செறுவிற் பெயர்க்கும்*

*பெருந்தகை மன்னர்க்கு வரைந்திருந் தனனே” (பா 340)*

என்ற அடிகள் வேளிரின் மகள் யாருக்குரியவள் என்பதைத் தெளிவுறுத்துகின்றன. ‘வேந்தனின் படையிலுள்ள கரிய பனை போலும் துதிக்கை உடைய யானையைத் தமது செறுவில் இருந்து பெயர்க்கும் பெருமை பொருந்திய மன்னனுக்கே தன் மகளை மணமுடித்துக் கொடுப்பான்’ என்பதால் வேந்தருக்கும் குறுநில மன்னராகிய வேளிருக்கும் இடையில் இருந்த பகைமை உணர்ச்சியும்; அதிகாரப் போட்டியும் புலப்படுகின்றன. நாற்று நடுவதற்காக செய்நேர்த்தி செய்த வயலே செறு எனப்படும். வேந்தன் வேளிரின் வேளாண்மைக்கு இடையூறு செய்து; அவரது செறுவிற்கு அழிவு நேரும் வண்ணம் தன் யானைப்படையின் பலத்தைக் காட்டிப் பிடிவாதமாகப் பெண் கேட்பது; அவ்விருவருக்கும் இடையிலிருந்த வேற்றுமையையும், முடிந்தமட்டும் துணிந்து எதிர்க்கும் வேகத்தையும் காட்டுகின்றன. அதுபோல்,

*“திருநயத் தக்க பண்பின் இவள் நலனே*

*பொருநர்க் கல்லது பிறர்க்கு ஆகாதே”(பா 342)*

என்று பாடும் அரிசில் கிழாரும் வேந்தரை எதிர்த்து நிற்கும் வேளிர் மகளுக்கு வீரனே தகுந்த மணாளன் ஆக ஏற்றுக் கொள்ளப்படுவான் என்கிறார்.

### மகட்கொடை மறுத்தலின் விளைவு

வேந்தர் விளைநிலங்களை பயனற்றுப் போகுமாறு அழிக்கத் தயங்கவில்லை. பொதுமக்களின் துன்பம், அழிவு பற்றி வேந்தர் கவலை கொள்ளவில்லை. வேளிரின் வயல்களையும், கிழாரின் ஊர்களையும் தீக்கிரை ஆக்கினர். தனது மேன்மையையும், முதன்மையையும் நிலைநாட்டப் பெண்கேட்டுப் போர் செய்தமை தெரிகிறது. போரும், அழிவும், பொதுமக்கட்குத் துன்பமும் தான் விளைவு என்று தெரிந்தும் வேளிரும், கிழாரும், நலிந்த வேந்தரும் மகண்மறுத்தனர்.

*“களிறும் கடிமரம் சேரா சேர்ந்த*

*ஒளிறுவேல் மறவரும் வாய்மூழ்த் தனரே”(பா 336),*

*“கடுங்கண் யானை காப்பனர் அன்றி”(பா 337),*

*“படை தொட்டனனே குரிசில் ஆயிடைக்*

*களிறுபொரக் கலங்கிய தண்கயம் போலப்*

*பெருங்கவின் அழிப்பது கொல்லோ”(பா 341)*

*“கழிபிணம் பிறங்கு போர் படுகளிறு எருதா*

*வாள்தக வைகலும் உழக்கும்"(பா 342)*

*"வினைநவில் யானை பிணிப்ப*

*வேர் துளங்கின நம் ஊருண் மரனே"(பா 347),*

*"செந்நுதல் யானை பிணிப்ப*

*வருந்தின மன்னெம் பெருந்துறை மரனே"(பா 348)*

என்ற அனைத்து மேற்கோள்களும் வேந்தனின் யானைப்படையால் நிகழ்ந்த இடையூறுகளைப் பெரிதும் பேசுகின்றன. யானை இறங்கக் கலங்கும் குளம் போல ஊர் கலங்கியது. யானையைக் கட்டிய மரங்கள் வேர் வெளியே தெரியும்படிப் பாழாயின. எருதுக் கூட்டம் போல யானைக்கூட்டம் அழிவைச் செய்ய பிணங்கள் மிகுந்தன. வேந்தர் ஒரெயிலில் ஏணி சார்த்திப் போருக்குத் துணிந்தமையை

"வாய்ப்பட இறுத்த ஏணி ஆயிடை

வருந்தின்று கொல்லோ ஞ்ஞ்...நெடுநல் ஊரே"(பா 343)

என்னும் மேற்கோள் பேசுகிறது. மக்கள் போர் நெருங்குவதால் வருந்தினர். வளமிக்க ஊர் தீக்கிரையாகிப் பாழாகும் என்று பின்வரும் பாடலடிகள் உரைக்கின்றன.

*"புகைபடு கூரெரி பரப்பிப் பகை செய்து"(பா 344),*

*"என்னாவது கொல் தானே .................. நல்லூரே"(பா 345)*

*"புன்றலைப் பெரும்பாழ் செயும்இவள் நலனே"(பா 346)*

*"மரம்படு சிறுதீப் போல*

*அணங்காயினள் தான் பிறந்த ஊர்க்கே"(பா 349)*

எனும் அடிகள் நோக்கற்குரியன. செருவாய் உழக்கிக் குருதி ஓட்டிப் போர் செய்வதால்(பா 353) "ஊர் கவின் அழியும்"(பா 354) என்று புறப்பாடல்கள் திட்டவட்டமாகக் கூறுகின்றன.

## தொகுப்புரை

இருபது மகட்பாற்காஞ்சித் துறைப் பாடல்களில் பதினான்கு பாடல்கள் வேந்தர் வேளிரிடம் மகட்கொடை நேர்வதைப் பேசுகின்றன. இரண்டுபாடல்கள் வீரர் வேளிர் மகள்களை விழைவதாக அமைகின்றன. ஒருபாடல் வேந்தர் கிழாரின் மகளை வேண்டுவதாக அமைந்துள்ளது. இரண்டு பாடல்கள் நலிந்த வேந்தரின் பெண்களை வேந்தர் கேட்பதாக அமைந்துள்ளன.

வேளிர், கிழார், நலிந்த வேந்தர் யாரும் வேந்தருக்கு மகிழ்ச்சியுடன் பெண் கொடுக்கவில்லை. வேளிர் வேந்தரை எதிர்க்கும் திறனுடைய வீரன் அல்லது குறுநில மன்னனுக்கே பெண் கொடுக்கத் தயாராக இருந்தனர். வேந்தர் தரத் தயாராக இருந்த பரிசப்பொருளை வேளிர் பொருட்படுத்த வில்லை.

வேந்தர் விளைநிலங்களையும், ஊரையும் பயனற்றுப் போகுமாறு அழிக்கத் தயங்கவில்லை. பொதுமக்களின் துன்பம், அழிவு பற்றி வேந்தர் கவலைப்பட வில்லை. தனது மேன்மையையும், முதன்மையையும் நிலைநாட்டவே பெண்கேட்டுப் போர் செய்தமை தெரிகிறது.

### முடிவுரை:

பண்டைத் தமிழகத்தில் வேந்தர், வேளிர், என்னும் இருபிரிவினர் இடையே அதிகாரப் போட்டி இருந்தது. வேந்தர் தமக்குள்ளும் போரிட்டு ஒருவரை ஒருவர் அழித்துக் கொண்டனர். கிழாரையும் ஒடுக்கினர். வேளிர் தமக்குள்ளே போரிட்டமைக்குச் சான்றில்லை. வேளிர், கிழார் இருவரும் வேளாண்மையில் ஈடுபட்டவர்; அவருள்ளும் சண்டை இல்லை. இந்த இருபது பாடல்களையும் பெண்ணிய நோக்கிலும், சமூகவியல் நோக்கிலும் ஆராய்வது இன்னும் பிற உண்மைகளைப் புலப்படுத்தும்.

## References

Naaraayaṇacaami Aiyar, A. *(2007)*. Naṟṟiṇai. Chennai: Saiva Siddhānta Nūṟpatippuk Kaḻagam.

Turaisamippiḷḷai, Au. Su. (2007). *Puṟanaaṉuuṟu* (paakam. 1). Chennai: Saiva Siddhānta Nūṟpatippuk Kaḻagam.

Turaisamippiḷḷai, Au. Su. (2007). *Puṟanaaṉuuṟu* (paakam. 2). Chennai: Saiva Siddhānta Nūṟpatippuk Kaḻagam.

Veṅkadasāmi Naaṭṭaar, Na. Mu., & Veṅkaṭaacalam Piḷḷai, Raa. (2007). *Akanaaṉuuṟu: Maṇimidai pavaḷam*. Chennai: Saiva Siddhānta Nūṟpatippuk Kaḻagam.

# சுங்கை பெர்ணம் ஆற்றங்கரையில் தமிழர்களின் சுவடுகள் நல்ல தண்ணி தோட்டம்

# The Tracts of Tamils on the Riverbank of Sungai Bernam - Good Water Estate

பாரதிஸ் தேவி சுப்ரமணியம் / Bharathes Devi Subramaniam [1]

பொன்மலர் பன்னீர் செல்வம் / Ponmalar Panneer Selvam [2]

முனைவர் சில்லாழி கந்தசாமி / Dr.Silllalee S. Kandasamy [3]

***Abstract***

The aim of this study is to explain about the lives of Tamil community on the riverbanks of Sungai Bernam, Perak. There are many channels of contacts created between the Indian subcontinent south India and Malaya. First, they came to expand the empire of kingdom, trading from both regions and had religious influences. Following the establishment of British rule, Tamils were recruited to Malaya as wage laborers. The Tamil community also migrated to Malaya to seek for a new life and upgrade their status. However, unfortunately they faced many obstacles in the process and they overcame it with grit and strength. South Tamil community also explored the dense jungles thereby helped colonials to exploit valuable resources. In this study, the role of Sungai Bernam River the life of Tamil community is also described. In spite of the British influence, the Tamil community still imitated closely the rules and culture and practices from their motherland. Despite the lack of proper facilities and wages for the estate residents, the community still followed the Tamil traditions. They brought about the changes to the place and the jungles were transformed into cultural legends. The cultural traditions left by the former have been forgotten by the development of the city. Protecting the legacy of their ancestors must be the main duty of future descendants.

Date of submission: 2018-10-03
Date of acceptance: 2019-02-15
Date of Publication: 2019-07-30
Corresponding author/s
Name: Bharathes Devi Subramaniam
Email: bharathipooh5@gmail.com

**Key Words:** Bernam River, Ulu Bernam Estate, Indian Labour, Tamilian, Oil palm, Tamil culture

**முன்னுரை**

தொடக்க காலம் தொட்டே தமிழருக்கும் மலாயா நாட்டிற்கும் பல வழிகளில் தொடர்புகள் ஏற்பட்டுள்ளன. ஆரம்ப காலத்தில், இராஜியத்திற்காகவும், வணிக்கத்திற்காகவும், மதத்தைப் பரப்புவதற்காகவும் தமிழர்கள் தென்கிழக்காசியாவிற்கு வந்தனர். பிறகு இந்தியா, ஆங்கிலேயர் ஆட்சியிலிருக்கும் போது சஞ்சிக் கூலிகளாக தமிழர்கள்

[1] The author is a retired Principal of an autonomous college in Tamil Nadu, India. kanmanitailskc@gmail.com

[2] The author is a masters Degree candidate at the Department of Indian Studies, University of Malaya, Kuala Lumpur, Malaysia. pmalar98@gmail.com

[3] The author is an Assistant Professor in the Department of Modern Languages, University Tunku Abdul Rahman, Kajang, Malaysia. silllalee@utar.edu.my / silllalee@yahoo.com

மலாயாவில் கொண்டு வரப்பட்டனர். திரைகடல் ஓடியும் திரவியம் தேட வேண்டும் என்ற நோக்கிலும் தமிழர்கள் மலாயாவிற்கு வந்தனர். பொருள் ஈட்டுவதற்காகத் தாய்நாட்டைவிட்டு கடல் கடந்து பெர்ணம் ஆறு வழியாகத் தென்னாட்டுத் தமிழர்கள் உலுபெர்ணம் தோட்டத்திற்குக் கொண்டு வரப்பட்டனர். இவ்வாய்வில், பெர்ணம் ஆறு தோட்டத்து மக்களின் வாழ்வதாரத்திற்கு எவ்வாறு பங்களித்துள்ளது என்பதைப் பற்றி விவரிக்கிறது. அதுமட்டுமில்லாமல், தோட்டத்துத் தமிழர்கள் தமிழ்ப் பண்பாட்டைக் காத்த விதங்களும் இக்கட்டுரையில் எழுதப்பட்டுள்ளது.

அக்காலக்கட்டத்தில், தோட்டத்து மக்களுக்குப் போதுமான வசதிகளிலும் ஊதியமும் குறைவாக இருந்தபோதிலும் தமிழர்கள் தமிழ்க் கலைக்கலாச்சாரங்களைப் பின்பற்றிப் பாதுகாத்தனர். பட்டணத்தின்பால் கொண்ட மோகத்தால் முன்னோர் விட்டுச் சென்ற பண்பாட்டு மரபுகள் தற்போதைய தமிழர்களால் மறக்கப்பட்டுள்ளது. ஆகவே, இனிவரும் சந்ததிகள் முன்னோர்கள் விட்டுச் சென்ற மரபைக் காப்பதே தலையாய நோக்கமாக கொண்டிருக்க வேண்டும்.

பூவுக்கும் தேனீக்கும் ஓர் உறவு இருப்பது போல், 3000ஆம் ஆண்டுகளுக்கு முன்பே தமிழர்களைத் தன் தனிச் சிறப்பால் தீபகற்ப மலேசியா (மலாயா) கவர்ந்துள்ளது. இடைக்காலச் சோழர்கள் காலத்தில் கி.பி இரண்டாம் நூற்றாண்டு முதல் கெடாவில் மர்பஸ் நதி, பூஜாங் நதி, பேரா நதி, பெர்ணம் நதி, மூவார் நதி ஆகியவற்றுடன் முகத்துவாரக் குடியிருப்புகளில் தமிழர் ஆட்சி நடைபெற்றதாக டான் ஸ்ரீ உபைதுல்லா என்ற தமிழ்ப் பெரியார் எழுதியிருக்கிறார் (மு.வரதராசு,1990). மேலும், முந்தைய இராஜேந்திர சோழ மன்னர் ஆட்சிக் காலத்திலிருந்து தொடங்கிய இவ்வுறவு, மலாக்கா மன்னர் ஆட்சியிலும் ஜொகூர் மன்னர் ஆட்சியிலும் தொடர்ந்தது. கி.பி 1012-1043 காலக்கட்டத்தில், பெருவாரியாகத் தமிழர்கள் துணிகரமாக கப்பல் வழிப் பயணம் மேற்கொண்டும், அரசு, வணிகம் சார்ந்தும் மெய்க்காப்பாளர்களாகவும் மலாயகத்தில் செயல்பட்டு வந்தனர் (Janaki Raman, 2006, 42 - Malaya A Report on the Census of British Malaya,192,86).

பல தனிச் சிறப்புகளைக் கொண்ட, சுவர்ணப்பூமி எனப் போற்றப்பட்ட மலேசியா மேற்கத்தியர்களைக் குறிப்பாக ஆங்கிலேயர்களை ஈர்த்தது (Carl Vadivella Belle, 2015). ஆங்கிலேயர்கள் கடல் வழிப் பயணம் மேற்கொண்டு கிழக்கு நாட்டின் மன்னர்களோடு வாணிக நட்பை வைத்துக் கொண்டனர். 1700 ஆம் ஆண்டு தொடங்கி, ஆங்கிலேயர்கள் ஆற்று வழி பயணித்தும்; கூடாரம் அமைத்தும்; போர்க்கப்பல் வைத்துக்கொண்டும் சுற்றியுள்ள நாட்டின் வளங்களைக் குறிப்பாக கரும்பு, காப்பி, ரப்பர், ஈயம் போன்ற தொழில்துறை மூலப்பொருள்களைக் கைப்பற்ற முற்பட்டனர் (Zainal Abidin Abdul Wahid & Khoo Kay Kim,1996,86-103 & Neelakandha Aiyer,1938,1-3). 1800ஆம் ஆண்டு முதல், தமக்கே உரிய தந்திரச் சூழ்ச்சியோடு உள்நாட்டு மன்னர்களை வீழ்த்தி மலாயா முழுவதும் தங்கள் ஆதிக்கத்தின் கீழ் படிய வைத்து, ஆட்சியும் அமைத்துக்கொண்டனர் (Barbara Watson Andaya,1982:182).

ஒட்டுமொத்த நாடே வெள்ளையர்களின் ஆட்சியின் கீழ் கொண்டுவரப்பட்டது. சுங்கை பெர்ணமும் இயற்கையாகவே ஆங்கிலேயர் ஆட்சிகீழ் வைக்கப்பட்டது. 1875 ஆம் ஆண்டு, பிரேங்க் சுவேட்டனம் (Frank Swettenham) எனும் ஆங்கிலேய அதிகாரி, சுங்கை பெர்ணாம் வழி பயணித்த போது, அதன் வளங்களையும் சிறப்புகளையும் பற்றி சில குறிப்புக்களை விட்டுச்சென்றுள்ளார் (Susan Martin, 2003, 23). அக்குறிப்புகளில், சுங்கைப் பெர்ணம் வழியே அமைந்துள்ள நிலத்தைப் பற்றியும், காட்டு வளத்தைப் பற்றியும் காட்டு மிருகங்களைப் பற்றியும் கூறிப்பிட்டுள்ளார்.


அதனைத் தொடர்ந்து, கடந்த 20ஆம் நூற்றாண்டு வரையில் ஆங்கிலேயர்களின் பொருளாதார தேவைக்கு ஏற்ப சுங்கை பெர்ணாம் தோட்டம் தவிர்த்து அதன் ஆற்றங்கரைப் பகுதியில் மேலும் பல தோட்டங்கள் உருவெடுத்தன (Annual

Report United Plantation Berhad,*2007,150)*. அத்தோட்டங்கள் யுனைடெட் பிலேன்டெசன் (United Plantation Berhad) என்ற நிறுவனத்தால் உருவாக்கப்பட்டது. அக்காலகட்டத்தில், இந்தியாவும் பிரித்தானியர் ஆட்சியின் கீழ் இருந்தது. தென்னிந்தியத் தமிழர்கள் நிர்வகிப்பதற்கு எளிமையானவர்கள், சத்தியத்திற்குக் கட்டுப்படுபவர்கள், கடுமையான உழைப்பாளிகள் போன்ற காரணங்களாலும் (Janakiraman,2006,52), அவர்களின் வரலாற்றை அறிந்திருந்ததாலும் வெள்ளையர்கள் அவர்களைக் இந்தியாவில் இருந்து, மலாயாவிற்குக் கொண்டு வருவதற்குச் சங்கடங்கள் எதுவும் கிடையாது (Arasarathnam,*1970,22)*. மலாயாவின் தோட்டப்புறங்களின் தொழிலாளர் தேவைக்கு ஏற்ப தமிழர்களைப் பிரித்தானியர்கள் இங்குக் கொண்டு வந்தனர் (Zainal Abidin Abdul Wahid,*1996,239 243)*.

ஆங்கிலேயர்களின் இலட்சியமே மலாயாவிலிருந்து கூடுமானவரை எவ்வளவு செல்வங்களை அவர்கள் நாட்டிற்குக் கொண்டு செல்ல முடியுமோ அவ்வளவு செல்வங்களைக் கொண்டு செல்வதே ஆகும். அதற்காக மலாயாகத்தில் பல தோட்டங்கள் நிறுவப்பட்டன(Virginia Thompson, *1947, 62 88)*. அவற்றுள் உலுபெர்ணம் தோட்டமும் ஒன்று.

## உலு பெர்ணம் வரலாறு

இக்கட்டுரை உலு பெர்ணம் தோட்டத் தமிழர்களின் வாழ்க்கையையும் அவர் தம் வரலாறு குறித்தச் செய்திகளையும் முன் வைப்பதாக அமைகிறது. இத்தோட்டம் நல்ல தண்ணி தோட்டம் என்றும் அழைக்கப்பட்டது. ஹீலிர் பேராக்கில் (Hilir Perak) அமைந்துள்ள சுங்கை பெர்ணம் பகுதியைப் பற்றிய குறிப்புகள் சில வெள்ளையர்களின் குறிப்பேடுகளில்




உலுபெர்ணம் தோட்டம் வரைப்படம்
(Annual Report United Plantations Berhad 2007)

வந்திருப்பதாக அறியப்படுகிறது. இவ்வாறு அறியப்படும் செய்திகளில் கூட உலு பெர்ணம் தோட்ட மக்களைப் பற்றிய குறிப்புகள் குறைவான அளவிலேயே உள்ளதாகவும் தெரிய வருகிறது. ஆங்கிலேயர்கள் பற்றியும், அவர்களின் ஆட்சியைப் பற்றியும், மலாயாவில் அவர்களின் வாழ்க்கையைப் பற்றியும் நிறைய குறிப்புகள் இருக்க, இந்த உலு பெர்ணம் தோட்டத்திற்காக உழைத்தத் தமிழ் மக்களின் வாழ்வு என்பது, இந்த எழுத்துகளிலும் கருப்பொருளாக வைக்கப்படவில்லை என்பதுதான் வருத்தமான செய்தி.

உலு பெர்ணம் தோட்டம் ஹீலிர் பேராக் மாவட்டத்தின் கிழக்குத் திசையில் அமைந்துள்ளது. மலேசியாவின் தலைநகரான கோலாலம்பூரிலிருந்து 148 கிலோமீட்டர் தொலைவில் அமைந்துள்ள சாபாக் பெர்ணம் (Sabak Bernam) அருகே உலு பெர்ணம் அமைந்துள்ளது. சாபாக் பெர்ணமிலிருந்து 68 கிலோமீட்டர் கடந்து இத்தோட்டத்திற்க்குச் செல்ல வேண்டும். தென்னிந்திய மக்களின் வாழ்க்கையோடு இணைந்துவிட்ட அவ்விடத்தில் இருக்கும் சுங்கை பெர்ணம் ஆறு சிலாங்கூருக்கும் பேராவுக்கும் அன்று தொடங்கி இன்றுவரை மாநில எல்லையாகக் கருதப்படுகிறது (நேர்காணல் Gengoo,15.2.2011).

தமிழ் நாட்டில் இருந்து வருவதற்கு முன்னரே மலையகத்தில் நல்ல வளங்கள் உள்ளதாகவும் நல்ல முறையில் வாழலாம் என்றும் தேவையான அளவு செல்வத்தை ஈட்டலாம் என்றும் மக்களுக்கு ஆசை வார்த்தைகளைச் சொல்லியே கங்காணிகள் அவர்களை இந்நாட்டிற்கு வரவழைத்தனர் (Selvarathnam,V.,1980,22). மக்கள் கங்காணியின் உதவியுடனும் ஒப்பந்த முறையிலும் மலாயாவிற்குக் கொண்டு வரப்பட்டனர். இது தவிர, தாமாகவே விருப்பப்பட்டு மலையகத்திற்குப் பொருள் ஈட்ட வந்தவர்களும் உண்டு (Neelakandha Aiyer,1938,6). தமிழகத்தின் விவாசயத் துறை வறட்சிக் காரணத்தால், தென்னிந்தியர்கள் பல இன்னலுக்கு ஆளாயினர். இன்னல்களிலிருந்து தப்பிப்பதற்க்கும் பிள்ளைகளைக் காப்பற்றுவதற்கும் மலாயாவில் தஞ்சம் அடைந்தனர். இதைத் தான் முரசு நெடுமாறன் அவர்கள் தன் மலேசியத் தமிழ்க் கவிதைக் களஞ்சிய தொகுப்பில் கீழ்கண்டவாறு கூறியுள்ளார் :

*சீனிக்குக் காக்கை ஒட்டுற வேலை*

*மரத்தில் பணம் காய்க்கும்*

*ஆவடியில் முந்திக்கிட்டா*

*அதிர்ஷ்டம் தானா வரும் (1997,335)*

இப்பாடலின் வழி, பிறந்த நாட்டில் தாங்கள் எதிர்கொண்ட இன்னல்களைச் சமாளிக்கவும் (Jomo,1988,217) ஆசை வார்த்தைகளை நம்பியும், ஆங்கிலேயர்களின் கட்டளைகளை மீற முடியாமலும் மலாயாவுக்கு வரத் தமிழர்கள் இணங்கினர் என்பதாகத் தெரிகிறது (Anbalakan,2008,312).

இத்தோட்டத்திற்கு ஆயிரத்திற்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் தென்னாட்டிலிருந்து கொண்டு வரப்பட்டனர். தமிழ் நாட்டில் பல மாவட்டங்களிருந்து வந்த மக்கள் நாகப்பட்டினத்திலும் தேவிப்பட்டினத்திலும் கூடி (Ramachandran,T.N,1992:13), கப்பல் வழி இரண்டிலிருந்து மூன்று வாரம் பயணித்து பினாங்குத் துறைமுகத்தை வந்தடைந்தனர். அங்கிருந்து, பெர்ணம் தோட்டத்திற்கு அவர்கள் கொண்டு செல்லப்பட்டனர் (நேர்காணல் Nalayyah,15.2.2011).

## உலுபெர்ணம் தோட்டச் சூழல்

இப்படி பெர்ணம் தோட்டத்திற்கு வந்த தென்னிந்தியர்களுக்கு இங்கு அடர்ந்த காடுகளும் மேடு பள்ளங்களும்தான் காத்திருந்தன. அந்த அடர்ந்த காடுகளைச் சுத்தம் செய்து மேடு பள்ளங்களை ஓரளவுக்குச் சரி செய்து குடியிறுப்பு நிலமாகவும் விவசாயத்திற்கு உகந்த இடமாகவும் உருவாக்குவதே இவர்களின் மிகப் பெரிய தொடக்க வேலையாக இருந்தது. தாய் நாட்டிலிருந்து பிழைப்பைத் தேடி வந்தவர்கள், ஆங்கிலேயர்களின் இலட்சியங்களை நிறைவேற்றும் எந்திரங்களாகவே மாற்றப்பட்டுவிட்டனர். உலகுக்கே பல

வகைகளில் பண்பாட்டையும் சமயத்தையும் போதித்தத் தென்னிந்தியர்களை *(*Saw Swee-Hock,*2007:34),* இந்நாட்டில் ஆங்கிலேயர்கள் சஞ்சிக் கூலி என்ற அவல நிலைக்கு உட்படுத்தியிருந்தனர்.

மலையகத்தில் பிற பகுதிகளில் காப்பித் தோட்டம், கரும்புத் தோட்டம் மற்றும் ரப்பர் தோட்டம் என்று வளர்ந்து கொண்டிருந்த காலக்கட்டத்தில் இந்த உலு பெர்ணம் தோட்டத்தில் மட்டும் செம்பனை மரங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன*(*Annual Report on the Social and Economic Progress of the People of Perak for the year 1929,111*). 1927*ஆம் ஆண்டிலேயே செம்பனைத் தோட்டம் உலு பெர்ணமில் உருவாக்கப்பட்டதாற்கான தரவுகள் கிடைத்துள்ளன. செழிப்பான மண்ணும் நீர் வளமும் செம்பனை மரம் நடுவதற்க்கு வழிவகுத்தது.

**பெர்ணம் ஆற்றின் பங்கு**

இத்தோட்டத்து மக்களின் வாழ்க்கை, பெர்ணம் ஆற்றோடு பிணைக்கப்பட்ட ஒரு அழகான உறவாகும். ஆறு அவர்களின் எல்லாத் தேவைகளையும் பூர்த்திச் செய்ததது. ஆங்கிலேயர்களின் போலி வாக்குறுதிகளால் ஏமாற்றமும் சோகமும் அடைந்த அவர்களுக்குப், புத்துயிர் அளித்தது அழகான வளைவுகளைக் கொண்ட இந்த பெர்ணம் ஆறுதான். ஆற்றின் அருகே உள்ள வளமான




*20ஆம் நூற்றாண்டில் தோட்டத்திற்குக் குடிபெயர்ந்த தென்னிந்தியர்கள் (படம் அர்ஜுனன் ராமசாமியிடம் இருந்து பெறப்பட்டது)*

படுகை நிலங்களில் இத்தோட்ட மக்கள் காய்கறிகளைப் பயிர் செய்து தங்களுக்குத் தேவையான காய்கறிகளை உற்பத்தி செய்து கொண்டார்கள். அவ்வகையில் பயிர் செய்வதற்கான நீர்த் தேவையை இந்த ஆறுதான் பூர்த்திச் செய்தது.

அதுமட்டுமில்லாது, உலு பெர்ணம் தோட்டத்து மக்களின் கால்நடைப் பிராணியான மாடு மற்றும் ஆடுகளை வளர்ப்பதற்கும் இந்த ஆற்றினுடைய தண்ணீர் மிகப் பெரிய மூலமாக இருந்திருக்கின்றது. கால்நடைப் பிராணிகளைக் குளிப்பாட்டிச் சுத்தம் செய்யவும் அதன் தாகத்தைத் தணிக்கவும் இந்நீர் பெரிதும் உதவியது. புரதச் சத்துக்கு முக்கியமான மூலமாக ஆற்றிலிருந்த மீன்கள் திகழ்ந்தன. ஆற்றில் படகுகளைப் பயன்படுத்தி வலைகளை வீசி மீன்கள் பிடித்த அனுபவமும் இவர்களுக்கு உண்டு. பெர்ணம் ஆற்றில் கெளுத்தி மீன், ஓரிக்கெண்டை மீன், வாள மீன், உலவு மீன், விறால் மீன், ஆற்று இறால் மற்றும் நண்டுகள் கிடைக்கும். எஞ்சிய மீன்களை வெயில் நேரத்தில் காய வைத்துக் கருவாடக்கி பயன்படுத்தினர் *(நேர்காணல்* Subramaniam,*12.2.2011).*

தொடக்கக் காலக்கட்டத்தில், கடலில் இருந்து மீன்களைப் பிடித்து வந்து விற்பனை செய்வதற்கு மீனவர்கள் இல்லை. வாரத்தில் ஒருமுறையோ அல்லது ஓய்வு நேரத்திலோ மீன்களைப் பிடித்துச் சமைத்து இவர்கள் உண்டனர். அதே நேரத்தில் புதிதாக உலு பெர்ணம் தோட்டத்தில் குடியேறிய தென்னிந்தியர்களுக்குக் கோழி மற்றும் மூட்டைகள் போன்ற உணவு வகைகள் அக்காலக்கட்டத்தில் கிடைத்ததாகத் தெரியவில்லை.

ஆரம்ப காலத்தில் குடிப்பெயர்ந்த தோட்டத்து மக்களுக்கு நீர்க்குழாய், மின்சார வசதி ஏதுமில்லாத நிலையில் பெர்ணம் ஆறு அத்தோட்டத்து மக்களின் தாகத்தைத் தீர்த்தது. கழிவறை வசதி இல்லாத அக்காலக்கட்டத்தில் சிறுநீர் கழித்தல், துணி துவைத்தல், குளித்தல் போன்ற எல்லாத் தேவைகளுக்கும் இந்த ஆறு மக்களுக்குப் பெரிதும் உதவியது. இந்த பெர்ணம் ஆற்றில் சிறியோர் முதல் பெரியோர் வரை

நீச்சல் அடித்து நாட்களை மகிழ்ச்சியாகக் கழித்துள்ளனர்.

பட்டணம் செல்வதற்கும் பல்லாயிரம் மையில் தொலைவில் தமிழகத்தில் இருக்கும் உற்றார் உறவினர்களைப் பார்ப்பதற்கும் இந்த ஆற்றைக் கடந்தே செல்ல வேண்டும். சாலைகள் தோன்றாத அக்காலக்கட்டத்தில், தோட்டத்து மக்கள் படகு, மற்றும் தோணியியைப் போக்குவரத்தாகப் பயன்படுத்தினர். நீர்வழிப் பயணம் மேற்கொண்டு, தங்களுக்குத் தேவையான பொருள்களை அருகாமையில் இருந்த ஹூத்தான் மெலிந்தாங் (Hutan Melintang) எனும் பட்டணத்தில் வாங்கிக் கொண்டு வந்தனர். பிற்காலத்தில் தமிழகத்திற்குத் திரும்பப் போகும் வாய்ப்பு கிடைத்த போதும் ஆற்றைக் கடந்தே பினாங்கில் அமைந்துள்ள துறைமுகத்தை அடைந்தனர் இத்தோட்ட மக்கள் (Gengoo,*15.2.2011*).

### பண்பாட்டு கலைகள்

வசதிகளும் ஊதியமும் குறைவான அளவில் இருந்தாலும் (Sinnapah Arasaratnam,*1970:49*), தென்னிந்தியர்கள் உயிரோடும் உடலோடும் ஒட்டிக்கொண்ட பண்பாட்டை விட்டுவிடவில்லை. 'கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்' என்பதற்கொப்ப காவல் தெய்வத்திற்கும் அம்மனுக்கும் அத்தோட்டத்தில் கோயில் கட்டி வழிப்பட்டனர். முதன்மைக் கோயிலாக அம்மன் கோயில் விளங்கியது. காவல் தெய்வமான முனியாண்டி, முனிஸ்வரன், மதுரை வீரன் மற்றும் நோக்காலம்மன் போன்ற தெய்வங்களின் ஆசிபெற்று, தோட்ட வேலைக்கு மக்கள் செல்வர். தோட்டப்புற மக்களின் வேண்டுதல் நிறைவேறியப் பின், கால்நடைகளையும் பயிர்களையும் உடைகளையும் நேர்த்திக் கடனாக இறைவனுக்குப் படைப்பர். பின்னர் அம்மன் கோவிலில் பிரதிஷ்டை கருங்கல் சிலைகளைத் தமிழ் நாட்டிலிருந்து கொண்டு வந்து பூஜைகளையும் திருவிழாக்களையும் வெகு விமர்சையாக நடத்தினர். குறிப்பாக, மாசி மகத் திருவிழாவில் கரகாட்டம், நாதஸ்வரம், உருமி, மத்தளம், பொய்க்கால் குதிரையாட்டம் என தென்னிந்தியர்களின் பண்பாடு மறக்கப்படாமல் கொண்டாடப்பட்டது.

மேலும், உரி அடித்தல், வழுக்குமரம் ஏறுதல் போன்ற விளையாட்டுகள் திருவிழாக் காலங்களில் கோவில்களில் நடத்தப்பட்டன. அதனைத் தவிர்த்து, இரத ஊர்வலம், மஞ்சள் நீராட்டு விழா, தீ மிதித்தல், தைப்பொங்கல், தீபாவளி, கார்த்திகைத் திருநாள் மற்றும் மாட்டுப் பொங்கல் எனப் பல பண்டிகைக்களைப் பெர்ணாம் தோட்ட மக்கள் கொண்டாடி மகிழ்ந்தனர் (நேர்காணல் Subramaniam:12.2.2011). திருவிழா காலங்களில் தோட்டத்து மக்களுக்கு சமயம் சார்ந்த நாடகம் பார்க்கும் வாய்ப்பும் கிட்டியுள்ளது. பின்னாளில் திரைப்படக் கொட்டகையில் திரைப்படங்களைக் கண்டுக்களித்தனர்.

### பாரம்பரிய விளையாட்டு

இத்தோட்டத்துத் தென்னிந்தியர்கள் பாரம்பரிய விளையாட்டுகளிலும் தங்களை ஈடுபடுத்திக் கொண்டனர். ஆண்கள் கபடி போன்ற விளையாட்டுகளில் ஈடுபட்டனர். பெண்கள் பெருமளவில் கல்லாங்காய் விளையாடுவர். சிறுவர் மற்றும் சிறுமியர்கள் பல்லாங்குழி, கண்ணாமூச்சி ஆட்டம், கயிறு தாவுதல், நொண்டி ஆட்டம், ஒரு குடம் தண்ணீர், பச்சைக் குதிரைத் தாண்டுதல் என ஆரோக்கியமான விளையாட்டில் நேரத்தைச் செலவித்தனர் (நேர்காணல் Muniammah:*12.2.2011*). இதில் ஒரு சில விளையாட்டுகளை இளைஞர்களும் விளையாடினர். தோட்டப் புறங்களில் மாதத்திற்கு ஒருமுறையும் நாடகத்தையும் சினிமாவையும் கண்டுகளித்தனர். உயர்க்கல்வி பயில வசதி இல்லாவிட்டாலும், பண்பாட்டைப் பேணுவதிலும் ஆரோக்கியத்திலும் விழிப்புணர்வு கொண்டவர்களாகத் திகழ்ந்தனர். பெரும்பாலான நோய்களுக்குப் பாட்டி வைத்தியத்தையும் நாட்டு வைத்தியத்தையும் நம்பியே வாழ்கின்ற சூழல் ஏற்பட்டது.

### தோட்ட மக்களின் வெளியேற்றம்

கொடூரமான மிருகங்கள் இருந்த அடர்ந்த பச்சைக்காட்டை அழித்து, தமிழர்களின்

பண்பாட்டையும் காத்து உலுபெர்ணம் தோட்டத்தில் தடம் பதித்தனர் தமிழர்கள். இந்தத் தொன்மையான மரபையும் பண்பாட்டு அடையாளங்களையும் சீர்குலைத்தது பொருளாதார வளர்ச்சி எனும் பெயரில் நிகழ்ந்த வளர்ச்சித் திட்டங்கள். 20 ஆம் நூற்றாண்டில் தொழில்துறை வருகையால், இத்தோட்டத்து மக்கள் பலர் பட்டண பக்கத்தை நாடிச் சென்றனர்.

இதன் காரணமாக, தோட்டப் புறங்களில் தமிழ் மக்களின் தொகை குறைந்தது. புதிதாகத் தோட்ட வேலைகளுக்கு வங்காள தேசிகளும் இந்தோனேசியர்களும் தோட்டப் புறங்களுக்குக் கொண்டு வரப்பட்டனர். அவர்கள் அனைவரும் முஸ்லீம் மதத்தைச் சார்ந்தவர்கள். இதனால், முன்னோர்கள் விட்டுச் சென்ற கோயில்கள் போதுமான பராமரிப்பு இல்லாத நிலையை அடைந்தன. கலாச்சாரக் கூறுகளுக்கும் ஆரோக்கியமான வாழ்வுக்கும் மகுடமாக இருந்த இடம், இப்போது வெறிச்சோடி இருக்கின்றது. தொழிற்துறை வளர்ச்சியால், அதன் கழிவுகள் ஆற்றில் கட்டுப்பாடின்றி விடப்பட்டதால், நல்ல குடி நீர் மாசுபடிந்து காணப்படுகிறது.

ஆகவே, அடுத்து வரும் சந்ததிகள் முடிந்தவரைக்கும் முன்னோர்கள் விட்டுச் சென்ற மரபைக் காப்பதே தலையாய நோக்கமாகக் கொண்டிருக்க வேண்டும். ஒரு நல்ல வாழ்வைத் தேடி பட்டணத்திற்குச் சென்ற பெருமளவு மக்களுக்கு நல்ல வாழ்வு அமையாத காரணத்தால் புறம்போக்கு நிலத்தில் கூடியேறிய வரலாறு மலேசியாவில் அதிகமாக உள்ளது. தோட்டப்புறங்களில் உள்ள ஒரு கட்டுக்கோப்பான வாழ்க்கை, பண்பாட்டுப் பாதுகாப்பு, சமய பாதுகாப்பு மற்றும் எல்லா நல்ல பழக்க வழக்கங்களும் தகர்க்கப்பட்டுவிட்ட ஒரு நிலையிலேயே இன்றைய சூழல் அமைந்திருக்கிறது.

இது இந்த நல்ல தண்ணி தோட்டத்திற்கு மட்டுமல்ல, ஒட்டு மொத்த மலேசியத் தோட்டப்புறத்தை விட்டு வெளியேறிய தமிழர்களுக்கு நிகழ்ந்த அவல நிலையாகும். கோயில்கள் மட்டுமல்லாது தமிழ்ப்பள்ளிகளும் தோட்டப்புறங்களில் கைவிடப்பட்ட நிலைக்குத் தள்ளப்பட்ட அவலமும் அதிகம் உண்டு. சில தமிழ்ப்பள்ளிக் கூடங்கள் இதனால் மூடப்பட்டுள்ளன.

## முடிவுரை

முடிவாக, இவ்வளவு சிறப்புகளுடன் தமிழர்களின் வாழ்க்கையை வளப்படுத்திக் கொண்டிருந்த இத்தோட்டம் வளர்ச்சி என்ற பெயரால் இன்று கலையிழந்த நிலையில் இருக்கின்றது. ஒரு புறம் வளர்ச்சியைத் தேடி மக்கள் பட்டண புறப்பக்கம் புறப்பட்டுவிட்டார்கள். இன்னொரு பக்கம் அவர்கள் விட்டுச் சென்ற இடத்தைப் பூர்த்திச் செய்வதற்காக வங்காளதேசிகளும் இந்தோனிசிய முஸ்லீம்களும் இணைந்து அத்தோட்டத்தில் வேலை செய்ய ஆரம்பித்தக் காரணத்தால் அத்தோட்டச் சூழல் ஒரு மாறுபாட்டை அடைந்துள்ளது. முழுக்க முழுக்க தமிழ்ப் பாரம்பரியத்தில் வளர்ந்த தோட்டங்கள் இன்று சிதைக்கப்பட்டிருக்கின்றன. இது தவிர்க்க முடியாத ஒரு சிதைவாகவும் நம்மால் கருதப்படுகிறது. பிள்ளைகளின் கல்விக்காகவும் வேலை வாய்ப்புக்காகவும் பட்டணம் செல்ல வேண்டிய இக்கட்டான சூழ்நிலைக்குத் தமிழர்கள் தள்ளப்பட்டனர். எனவே, இந்த வளர்ச்சியானது அடிப்படையான அழகிய கூட்டைக் களைத்து விட்டது போன்ற ஓர் உணர்வு தோன்றுகிறது.

## References


Anbalakan, K. (2008). *Identiti India di Malaysia*. Pulau Pinang: Penerbit Universiti Sains Malaysia.

Andaya, B. W. & Andaya, L. Y. (1983). *Sejarah Malaysia*. Petaling Jaya: Macmillan Press Ltd.

Arasaratnam, S. (1970). *Indians in Malaysia and Singapore*. Kuala Lumpur: Oxford University Press.

Belle, C. V. (2015). *Tragic Orphans: Indians in Malaysia*. Singapore: ISEAS.

Janakiraman Manikkam. (2006). *Maleciya innhthiyarkalin ikkattana nhillai = The Malaysian Indian dilemma.* Selangor: Janakeyraman Manickam

Jomo. (1998). *Pembangunan Ekonomi dan Kelas Sosial di Semenanjung Malaysia*. KualaLumpur: Dewan Bahasa dan Pustaka.

Martin, S. M. (2003). *The UP Saga*. Denmark: Nordic Institute of Asian Studies.

Murasu, N. (1997). *Malaysia Tamil Kavithaik Kalanjiam.* Selangor: Arulmathiyam Publications.

Nathan, J. E. (1921). *Malaya A Report on the Census of British Malaya*. London: Waterlow & Sons Limited.

Perak. (1929). *Annual Report on the Social and Ecpnomic Progress of the people of Perak.*

Ramachandran, T. N. (1992).*The Nagapattinam and the other Buddhist Bronzes in the Madras Museum*. Goverment Museum, Madras, India: Udaya Printers.

Ramasamy, P. (1994). *Plantation Labour,Unions,Capital and the State in Peninsular Malaysia*. Kuala Lumpur: Oxford University Press.

Selvaratnam, V. (1980). *Indian plantation Workers in Peninsular Malaysia*. Bangi: Peasants or Proletarians.

Sinnappah Arasaratnam. (1970). *Indians In Malaysia and Singapore. Kuala Lumpur:* Oxford University Press.

Swee-Hock, S. (2007). *The Population of Malaysia*. Singapore: Institute of Southeast Asian Studies.

United Plantations Berhad. (2007). *Annual Report.*

Varatharasu, M. (1990). *Malaysia Thothath Tholilarkal: Varalarum Pirachanaikalum*. Madras: Tamil Culture Society (Bahasa Tamil).

Zainal Abidin Abdul Wahid & Khoo, K. K. (1996). *Malaysia Warisan dan Perkembangan*. Kuala Lumpur: Dewan Bahasa dan Pustaka.

**Oral sources**

En. Gengoo
Berumur 82 tahun
Bekerja sebagai tindal
No.234, Felda Trolak
Sungkai, Perak

En.Arjunan Ramasamy
Berumur 78 tahun
Bekerja sebagai pekerja ladang
Shah Alam, Selangor.

En. Nalayyah Letchumanan
Berumur 75 tahun
Bekerja sebagai kangani
N0.14 , Jalan Kemuning 14/27
Seksyen 20,
Shah Alam , Selangor.

En.Subramaniam Arulappan
Berumur 70 tahun
Bekerja sebagai pekerja ladang
No.30, Jalan Suria 54,
Bandar Seri Alam,
81750 Masai, Johor.

Pn.Muniammah Sengaram
Berumur 71 tahun
Bekerja sebagai pekerja ladang
No.30, Jalan Suria 54,
Bandar Seri Alam,
81750 Masai, Johor.
Johor.

# பின் இணைப்பு




*வரைப்படம் 2.1: ஹீலேர் பேராக் மாவட்டம்*


(Laporan banci penduduk dan perumahan Malaysia,1991.Hlm 423)




*வரைப்படம் 2.1: ஹீலேர் பேராக் மாவட்டம்*


(Laporan banci penduduk dan perumahan Malaysia,1991.Hlm 423)

தொழிலாளர்களின் அடையாள அட்டை
(Annual Report United Plantation Berhad 2007)



Serial No 153/3 5
Identity No. 678123
Ration No. 175
Name Sennappan S/o Valli
Sex Male
Address Bernam Oil Palm Ltd
34,231

| Name of Dependants | Identity Card No. |
|---|---|
| 1. POONGAVANAM. F | PK678127 |
| 2. KRISHNAN. M | Age 6 |
| 3. PANDURENGAM. M. | 4 1 |
| 4. | |
| 5. | |
| 6. | |
| 7. | |

Date of Engagement 1st May 1926
Date of Discharge
Remarks



Name Maruthayee D/o Ramasamy
Address ulu Bernam Est,
ulu Bernam,
Div. III
Engaged Prior to Jap. June 1930
Discharged
Identity Card No: P.K. 677645
E.P.F. No: 34192
Occupation Weeder
REMARKS

தொழிலாளர்களின் அடையாள அட்டை
(Annual Report United Plantation Berhad 2007)


Serial No. 4/5 18
Identity No. 678158
Ration No. 87
Name Thanapal S/O Muthoo
Sex Male
Address Bernam Oil palm Ltd

| Name of Dependants | Identity Card No. |
| --- | --- |
| 1. ANGAMAH · F | P.K 678159 |
| 2. THNALETCHUMY F | Age 11 |
| 3. PARAMASEEVAN M | " 8 |
| 4. | |
| 5. | |
| 6. | |
| 7. | |

Date of Engagement 2nd June 1927
Remarks.


Serial No. 36/3
Identity No. 678044
Ration No. 73
Name Ponnamah
Sex Female
Address Bernam Oil palm Ltd

| Name of Dependants | Identity Card No. |
| --- | --- |
| 1. | |
| 2. | |
| 3. | |
| 4 | |
| 5. | |
| 6. | |
| 7. | |

Date of Engagement 3rd March 1932
Date of Discharge
Remarks.

# சிங்கப்பூரில் மொழிபெயர்ப்பு இலக்கியம்
# Translation Literature in Singapore

முனைவர் எம் எஸ் ஸ்ரீலக்ஷ்மி / Dr M S Shri Lakshmi [1]

### *Abstract*

The multilingual situation in Singapore has created a positive environment for the growth of the translation literature. The translation literature is seen as one of the ways to bring about unity among the multiracial society of Singapore. This translation literature to be found in almost all the creative writings, i.e. poem, stories, children's literature and articles. Both the government and individuals have contributed immensely to the growth of the translation literature in Singapore. This article adopts an academic approach to the environment for the creation of the translation literature and the genre of this literature in Singapore.

Date of submission: 2019-05-17
Date of acceptance: 2019-06-25
Date of Publication: 2019-07-30
Corresponding author's
Name: Dr M S Shri Lakshmi
Email: visaka_2004@yahoo.com

**Key Words:** Singapore's translation literature, multilingual situation, literary genre, government's effort, individual's efforts.

### முன்னுரை

மொழிபெயர்ப்புக்கலை "வானத்தின் நீலத்தை வட்டிலில் இறக்கும் கலை" என்று கூறத்தக்க நுட்பமும் அருமையும் உடைய கலை. மனிதகுலத்தின் இன்றியமையாத் தேவை. இக்கலை காலங்களை மட்டும் இணைப்பதில்லை. பல்வேறு பண்பாடுகள் கொண்ட மனிதர்களையும் நாடுகளையும் இணைக்கும் உறவுப்பாலம்! அறிவு பெற அரிய மூலதனம்!மொழியை வளப்படுத்தவும் வாழவைக்கவும் உதவும் ஒருகருவி! உலக உறவுக்கு உறுதியான பாலம் சமைக்க உதவும் உபாயம் (Ranjit Bolt, 2012). ஆகவே தான் ஆல்பர்ட் ஜெரார்டு என்னும் அறிஞர் 'உலக இலக்கியத்திற்கு' முன்னுரையாகக் கீழ்வரும் கருத்துகளை எழுதியுள்ளார்.

*"நாம் நம் இனத்தை நேசிப்பது உண்மையாயின் உலகில் சிந்திக்கப் பட்டவற்றிலும் சொல்லப்பட்டவற்றிலும் மிகச் சிறந்தவற்றை அளித்து அதனை வளப்படுத்த ஆர்வமுடையவர்களாய் இருக்கவேண்டும். அதற்கு நிகராக நம்முடைய கருத்துகளை மனித இனத்திற்குப் பொதுவான சேமிப்புக் கருவூலத்தில் சேர்க்கக் கடமைப்பட்டிருக்கிறோம்"*

(ஸ்ரீலக்ஷ்மி, 2010)

### ஆங்கில மொழிபெயர்ப்பு: இன்றைய தேவையும் மோகமும்

இன்று ஆங்கிலம் உலகப்பொதுமொழியாய் உள்ளபட்சத்தில் உலகத்தின் பொதுவான சேமிப்புக் கருவூலமாகவும் திகழ்கிறது. ஆகவே ஓர் எழுத்தாளனின் படைப்புகள் உலகளாவிய கவனத்தை ஈர்ப்பதற்கு ஆங்கிலமொழி அற்புதமான சாதனமாக உள்ளது. இதனால் அதிகமானோர் ஆங்கிலமொழியில் நாட்டங்காட்டுகின்றனர். தம்முடைய நூல் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்படுவதை அரும்பெரும்பேறாகவே கருதுகின்றனர்.

[1] The author is an Associate Lecturer in Singapore University of Social Sciences, Singapore. visaka_2004@yahoo.com

இந்நிலை ஒரு புறம் நிலவப் பல்லினக் கலாசாரச் சூழல் கொண்ட சிங்கப்பூரில் மொழிபெயர்ப்பின் பரிமாணம் மற்றொரு நிலையை எய்தியுள்ளது.

## சிங்கப்பூர் பன்மொழிச்சூழலும் மொழிபெயர்ப்பும்

சிங்கப்பூரில் ஆங்கிலம், சீனம், மலாய், தமிழ் ஆகிய நான்கும் அதிகாரத்துவ மொழிகள் என்பது பலர் அறிந்த உண்மையே. இந்நான்கு மொழிகளுக்கும் அரசாங்கம் சமவாய்ப்புகளை வழங்கிவருகிறது.கலை இலக்கிய வளர்ச்சிக்கு அரசாங்கம் அளிக்கும் பலத்த ஆதரவும் சமநீதி உடையதே. சீனமொழி , மலாய்மொழி, தமிழ்மொழி ஆகியவற்றில் படைக்கப்படும் இலக்கியங்கள் இம்மூன்று மொழிகளுள் ஒன்றிலிருந்து மற்றொன்றுக்கும் (cross-translation) ஆங்கிலத்திற்கும் மொழிபெயர்க்கப்படுகின்றன. அதுபோல ஆங்கிலப்படைப்புகளும் மற்ற மூன்று மொழிகளிலும் மொழிபெயர்க்கப்படுகின்றன. இத்தகைய மொழிபெயர்ப்பினால் அம்மொழிபற்றியும், இலக்கியச் செழுமைபற்றியும், இலக்கியப்படைப்புகளை ஆய்வுப்பூர்வமாக அணுகும் முறைகள் பற்றியும், அம்மொழிவழியான பண்பாடுபற்றியும் அறிந்துகொள்கிறோம். சுருங்கச்சொன்னால் “சென்றிடுவீர் எட்டுத் திக்கும் கலைச்செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்” என்னும் பாரதியின் (Bharathiyar, 1986) வாக்கிற்குச் செயல்வடிவம் கொடுக்கிறது சிங்கப்பூர் அரசு .

இத்தகைய மொழிபெயர்ப்புகள் பெரும்பொருட்செலவில் மட்டுமே உருவாக்கப்படக்கூடியவை. ஆகவே மொழிபெயர்ப்பு இலக்கியம்பற்றிய இக்கட்டுரை இரண்டு கோணங்களில் மொழிபெயர்ப்பு இலக்கியம்பற்றிய விவரங்களைத் தரும் வகையில் எழுதப்பட்டுள்ளது. அரசாங்கரீதியாகவும், அது சார்ந்த அமைப்புகள் வழியாகவும், தனிநபர் முயற்சிகளாகவும் வெளிவரும் மொழிபெயர்ப்புகள் குறித்துப் பேசுகிறது.

## அரசாங்க உதவியால் வெளிவந்த மொழிபெயர்ப்பு இலக்கியங்கள்:

அரசாங்கம் அவ்வப்போது நான்கு மொழி இலக்கியங்களையும் ஒன்றிணைக்கும் வகையிலும், அவற்றை ஒருசேர ஒப்பபிட்டும் உறழ்ந்தும் பார்ப்பதற்கான வாய்ப்பளிக்கும் வகையிலும் நான்கு மொழி இலக்கியங்களுள் சிறுகதைகள், கவிதைகள், நாடகங்கள் ஆகியவறைத் தேர்ந்தெடுத்து ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துத் தொகுப்புகளாக வெளியிட்டுள்ளது. இந்த அடிப்படையில் பல நூல்கள் வெளிவந்துள்ளன. அவை பின்வருமாறு:

1. The Poetry of Singapore சிங்கப்பூர்க் கவிதை (எட்வின் தம்பு, வோங் யூன் வா, லீ சூ பெங், மசூரி பின் சாலிகும், வி.டி.அரசு ஆகியோர் பதிப்பாசிரியர்கள்) 1985.
2. Journeys : Words, Home and Nation (Edwin Thumboo , Wong Yoon Wah, Ban Kah Choon, Naa. Govindasamy, Shaharuddin Maaruf, Robbie Goh, Petrina Chan) 1995.
3. Memories and Desires , A poetic history of Singapore,( Robbie, B.H Goh,) (Translators -Chitra Sankaran, Shurifah Muznah Syed Omar,Robin Loon) 1998.
4. Rhythms: A Singaporean Millennaial Anthology of Poetry ( Hadijah Rahmat, Masuri SN, Chua Chee Lay, Peng Chen Lui, KTM Iqbql, M S Shri Lakshmi, Lee Tzu Peng,Alvin Pong) 2000.
5. Voices of Singapore- Multilingual Poetry and Prose, ( Ed. Anne Pakir ) 1990.
6. Modern Asean Plays ( General Editor: Robert Yeo, Editors- Raman Daud, Naa. Govindasamy, Choo Woon Hock, Max Le Blond ) 1991.
7. The Fiction of Singapore ( Ed.Edwin Thumboo)1990.
8. Poetry of Singapore - 1985.
9. Stories From Singapore ( Ed. George Fernandez ) 1983.

10. Fifty on 50 ( General Editor. Edwin Thumboo; Associatae Editors: Isa Kamari, Chia Huee Pheng, KTM Iqbql ) 2009.

ஆகியவை முறையே சிங்கப்பூர்த் தேசியப் பல்கலைக்கழகம், தேசியக் கலைகள் மன்றம் (கலைகள் மற்றும் தகவல் பிரிவுக்கான) 'ஆசியான் கமிட்டி ,சிங்கப்பூர் எழுத்தாளர் கழகம் போன்ற அமைப்புகளால் வெளியிடப்பட்டவை. இவை கவிதை, புனைகதை,நாடகம் ஆகிய துறைகள் சார்ந்தவை. இவற்றுள் ரிதம்ஸ் என்னும் தொகுப்பு குறிப்பிட்டுச் சொல்லவேண்டிய தொகுப்பாகும். தமிழ்மொழிக் கவிதைகள் ஆங்கிலம், சீனம், மலாய் ஆகிய மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளதைப்போல மற்ற மூன்று மொழிக்கவிதைகளும் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. இவ்வாறேஒவ்வொரு மொழிக்கவிதைகளும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. Cross Translation என்னும் வகைமையுள் 'ரிதம்ஸ்' வெளியிடப்பட்டிருப்பது நான்கு மொழிக்கவிதைகள்பற்றி இலக்கிய ஈடுபாடு கொண்டோர் அறிய நல்லதொரு வாய்ப்பாகும்.

### சந்தங்கள் என்னும் தொகுப்புக் குறித்த பார்வை:

*சந்தங்கள் என்னும் இத்தொகுப்பில் மலாய்மொழிப்பிரிவில் 25 கவிதைகளும் சீனமொழிப்பிரிவில் 28 கவிதைகளும் தமிழ்மொழிப்பிரிவில் 20 கவிதைகளும் ஆங்கில மொழிப்பிரிவில் 28 கவிதைகளும் இடம்பெற்றுள்ளன. இத்தொகுப்பில் உள்ளவற்றை மொழிபெயர்ப்புக் கவிதைகள் என்று கூறுவதைவிட மொழியாக்கக் கவிதைகள் என்று கூறலாம். இந்நூல் சிங்கப்பூரின் விடுதலைக்குப் பிறகு எழுதப்பட்ட கவிதைகளுள் தேர்ந்தெடுக்கப்பட்டவற்றின் தொகுப்பாக அமைகிறது. இக்கட்டுரை மலாய்மொழிக்கவிதைகளையும் சீனமொழிக்கவிதைகளையும் மட்டுமே ஆராய்கிறது. (விரிவஞ்சி ஆங்கிலமொழிக் கவிதைகள் பேசப்படவில்லை).* பல்வேறுவிதமான வாழ்க்கையை அனுபவ மொழிகளால் சித்திரிக்கும் கவிதைகளை இத்தொகுப்பில் காணலாம்.

### மலாய் மொழிக் கவிதைகள்

*'தேஜா' என்னும் மலாய்மொழிக்கவிதை நிலப்பிரபுத்துவ வாழ்வை விளக்குகிறது. இக்கவிதை வரலாற்றுச் சம்பவத்தையும் விவரிக்கிறது. பெண்ணாசை வரலாற்றில் பலவித அழிவுகளை உண்டாக்கியுள்ளதை யாரும் மறுப்பதற்கில்லை. இந்த அடிப்படையில் ,*

*"துன் தேஜாஸ்ரீ புவானா*

*பௌர்ணமியாய்ப் பொங்கும் உன் அங்கங்கள்*

*காமவெறி ஆளும் உலகில்*

*திரெங்கானு இளவரசன் பாஞ்சி ஆலாமுக்கும்*

*மலாக்கா சுல்தானுக்கும் நடுவே*

*எப்படி நீ போராக்கப்பட்டாய்?"*

என்று வினவும் கவிதை தேஜாவின் அழகு வரலாற்றால் மூடப்பட்டு நிலப்பிரபுத்துவத்தால் சீரழிக்கப்பட்டதைப் பேசுகிறது. மனித வாழ்வின் வேதனைகளை "அகதியும் பிளவுபட்ட நிலமும்" *(ப: 26 )* என்னும் கவிதையும் இயற்கை எழிலைப் படிமத்தால் விளக்கும் 'கவின் கவிதை' என்னும் கவிதையும் சித்திரிக்கின்றன. ஹதிஜா ரஹ்மாட் என்னும் கவிஞர் 'பிரபஞ்ச மையத்தில்' என்னும் கவிதையில்

*" என்னைப் போன்ற*

*சிறிய நாட்டின் சிறுபான்மைச் சமூகப் பிரதிநிதியாய்*

*எல்லாவற்றையும் ஆய்ந்து சாரமெடுக்க முடியுமா?"*

எனப் பிரபஞ்சத்தையும், தன் இயலாமையையும், இறையருளையும் பாடுகிறார். இது யதார்த்தமான சிந்தனையை நம்முள் விதைக்கிறது.

*"சிறிய நாட்டின் சிறுபான்மைச் சமூகப்பிரதிநிதி*

*உலகளாவிய அங்கீகாரம் பெற*

*சரித்திரப் பாத்திரமாய் மாற"*

என்னும் கவிதையில் ஒரு வித எள்ளல் தொனிக்கிறது.

ஜொஹார் புவாங் என்பவரின் கவிதை (விஸிஜி) எனப்படும் பெருவிரைவு ரயில் பயணத்தைப் பாடுகிறது. இக்கவிதைப்பயணம் இஸ்லாமியத் தத்துவங்களின் ஊடே பயணம் செய்யும் அனுபவத்தைத் தருகிறது.

'உண்மையா'?என்னும் கவிதையில் ஒரே சொல்லான 'உண்மை' என்பது பல்வேறு அர்த்தங்களில் மீண்டும் மீண்டும் பயன்படுத்தப்படுகிறது. தமிழகப் புதுக்கவிதைகளில் ஒன்று (நிஜத்தை நிஜமாக என்னும் கவிதை) நிஜம் என்னும் சொல் மீண்டும் மீண்டும் பயன்படுத்தப்பட்டு வெவ்வேறு பொருள் தரும் வகையில் பாடப்பட்டுள்ளது. இஃது இருண்மைப் பண்பு உள்ள கவிதையாக உதாரணம் காட்டப்படுவதுண்டு. இக்கவிதையை உண்மை என்னும் மலாய்மொழிக்கவிதையோடு ஒருபுடை ஒப்பிடலாம். ஆயின் மலாய்மொழிக் கவிதையில் இருண்மைப்பண்பு இல்லை.

மலாய்மொழி இலக்கியத்தின் ஆளுமைகளில் ஒருவரான மசூரியின் 'வழக்கம்' என்னும் கவிதை சராசரி வழக்கங்களைக் கூர்மையான பார்வையுடன் பேசுகிறது. 'வீடு" என்னும் கவிதை (மிர்போசா) என்னும் தத்துவப் பார்வையுடன் நிலையாமைபற்றிக் குறியீடுகளாலும் படிமத்தாலும் பேசுகிறது. அலிமான் ஹசான் என்பவரின் 'ஆணிவேர்' என்னும் கவிதையும் குறியீட்டுப் பொருளால் சிறக்கிறது.

மொஹமட் லத்தீப் மொஹமட் என்னும் கவிஞரின் 'என் மலாய்த்தன்மை உன் மலாய்த்தன்மை' என்னும் கவிதை ஒப்பீட்டுப்பார்வையாக மூத்த தலைமுறையினருக்கும் இளைய தலைமுறையினருக்கும் இடையே உள்ள வேறுபாடுகளை நுட்பமாகச் சித்திரிக்கிறது. மேலும் மூத்த தலைமுறையைச் சேர்ந்தவர்கள் அனுபவித்த துயர்களைக் குறியீடுகளாலும் புதிய உவமைகளாலும் சித்திரிக்கிறார் கவிஞர்.

மொஹமட் தஹா ஜமீல் என்பவரின் கவிதை மனிதர்களைப் பார்க்கும் பார்வை புதியது. மனிதர்களிடமே எல்லாக் குறைபாடுகளும் உள்ளன. இக்குறைபாடுகள் 'நோய்கள்' என்று கவிஞரால் வருணிக்கப்படுகின்றன. இந்நோய் நீங்கப்பெற்று மனிதர்கள் ஆன்மீகப் பாதையில் அல்லாஹ் காட்டிய பாதையில் செல்லவேண்டும் என வேண்டுகோள் விடுக்கிறார் கவிஞர். யதார்த்தப் பின்னணியில் ஆன்மீகத்தை வலியுறுத்தும் இக்கவிதை தொனிப்பொருள் கொண்ட கவிதையாயும் அமைகிறது.

*"நோய் என்பது நாமே*

*நமது மனோதிடமும் வாயும்*

*குரலெழுப்புவோம் என்ற அச்சத்தினால்*

*ஊமையாக்கப்பட்டுவிட்டன*

*நாம் சந்தேகப்பட்டியலில் சேர்க்கப்படுவோம்*

*ஹேய் மௌனமாய் இருக்கக் கற்றுக்கொள்"*

இவ்வரிகளில் அமைந்துள்ள தொனிப்பொருள் வாசகர் பார்வைக்கேற்ப வித்தியாசப்படுவதாய் அமைகிறது.

'வாங்க முடியுமா ஒரு மனைவியின் கௌரவத்தை 'என்னும் கவிதை வரலாற்றுச் சம்பவத்தைப் புதியகோணத்தில் பெண்ணியச்சிந்தனையோடு பார்க்கிறது. முற்கூறப்பட்ட தேஜா என்னும் அழகியை ஒப்பற்ற வீராங்கனையாகவும் சித்திரிக்கிறார் கவிஞர் நூருல் ஜன்ஹாஜி குட்சி. பெண்கள் ஆதரவற்றுத் துன்புறும்போது மனிதநீதி என்பது பொருளற்றுப் போய்விடுவது உண்மைதானே?

'உலகம் ஒரு மருத்துவமனை ; என்னும் கவிதை பீட்டர் அகஸ்டின் கோ என்னும் சீனரால் எழுதப்பட்டது. இக்கவிதை உலகம் பலவிதமான நோயாளிகளைக் கொண்டுள்ளது. எல்லாருமே மரணநாளை எதிர்பார்த்திருப்பவர்கள்தாம் என நிலையாமைத் தத்துவத்தைப் பேசுவதாக உள்ளது.

'கவிஞனின் கேரோன்சோங்' என்னும் கவிதையை எழுதியவர் ரோஹ்மான் முனாசிப். 'கேரோன்சோங்' என்பது பாரம்பரிய மலாய் இசையைக் குறிப்பதாகும். கவிதைக் கடமையை மறந்த கவிஞனின் மதிப்பு என்ன?

என்ற கேள்வியை முனவைக்கும் இக்கவிதை ஒரு கவிஞனின் கடமை என்னவாக இருக்கவேண்டும் என்ற எதிர்பார்ப்பைக் கூறுகிறது.கவிஞன் பாரம்பரியத்தையோ மரபுகளையோ மறந்துவிடக்கூடாது என்ற எச்சரிக்கையையும் விடுக்கிறது.

'சுயபிம்பம்'என்னும் கவிதையை எழுதியவர் ஷரிபா யத்திமான் என்பவர். பெண்கள் வாழ்வில் எதிர்கொள்ளும் பல்வேறு தடைகளைப் பாடும் இக்கவிதை பெண்ணியச்சிந்தனை கொண்டது. பெண் தடைகளைக் கண்டு பின்வாங்குவதில்லை. அவற்றை உயர்வதற்கான வழிகளாகவே பெண்கள் ஏற்றுக்கொண்டுள்ளனர். என்று கவிஞர் பேசுவதால் மலாய்ப் பெண்களின் சிந்தனை மாற்றத்தை உணரமுடிகிறது.

'வாழ்க்கை' என்னும் கவிதையை ஷரிபா மஸ்னா சையத் ஓமார் என்னும் கவிஞர் எழுதியுள்ளார். இன்றைய வாழ்க்கைமுறை விழுமியங்களிலிருந்து அன்னியப்படுத்தப்பட்ட நிலையைச் சுட்டிக்காட்டி வாழ்க்கை எவ்வாறு அமையவேண்டும் என்ற சிந்தனையை விதைக்கிறது.

சூராய்டி சிப்பான் என்பவரின் கவிதை 'என் நகரின் நாடித்துடிப்பின் நடுவே' என்னும் தலைப்புக் கொண்டது.நகர வாழ்வின் கடந்தகாலச்சோகங்கள்,வேதனைகள் ஆகியவற்றைக் காட்டி எதிர்கால வாழ்வை நம்பிக்கையுடன் கட்டிப்பிடித்துக் காத்திருக்கும் கவிஞரின் மனநிலையைச் சித்தரிப்பதாகவே இக்கவிதை அமைந்துள்ளது. இந்த நம்பிக்கை கலந்த காத்திருப்புத்தான் வாழ்க்கையில் நாம் பெறும் பாடமாகவும் அமைகிறது.

சுரட்மான் மர்க்காசான் என்னும் கவிஞர் மனிதநேயத்தை வலியுறுத்தும் கவிதையை 'உண்டு பருகும்போது' என்னும் தலைப்பில் எழுதியுள்ளார். சுயநலத்துக்காக இறைவனை மறக்காமல் எப்போதும் நினைக்கும் நாம் பிறர் நலத்துக்காக ஏன் அவ்வாறு செய்வதில்லை?நம்முடைய துன்பத்தில் இறைவனையும் இறைத்தூதர்களையும் நினைக்கும் நாம் மகிழ்ச்சியான நேரங்களில் ஏன் அவ்வாறு செய்வதில்லை? மனிதநேயமற்ற நமக்கு ஒரு வழிகாட்டி தேவை எனக் கூறும் இக்கவிதை அலங்காரமற்ற எளிய கவிதை.

முரண்பாடுகள் நிறைந்த மனித வாழ்க்கையில் சொல்லும் செயலும் வேறுபட்டு நிற்கின்றன. மானிடனின் சின்னங்களான இவற்றைப் பயனுள்ள முறையில் பயன்படுத்தி எதிர்காலச் சந்ததியினருக்கு வழிகாட்டும் வகையில் அமையவேண்டும் என்பதை யத்திமான் யூசோப்பின்'சொல்லும் செயலும்'என்ற கவிதை பேசுகிறது.

"காகிதக் கூழாடை தரித்த என்னை

மேடைக் கூத்தாடிகளோடு

அரங்கேறச் சொல்லாதே"

என்னும் கவிதை அடிகள் சொல்லும் செயலும் முரண்பட்ட வாழ்வைக் காட்டும் யதார்த்தமான அடிகளாகும்.

சுருங்கக்கூறின் மலாய்க்கவிதைகள் வெவ்வேறான பாடுபொருள்களைக் குறியீடுகள், படிமங்கள், புதிய உவமைகள் போன்ற கவிதைக்கூறுகளுடன் பாடியுள்ளன. ஆன்மீக உணர்வு, மனிதநேய உணர்வு போன்ற உணர்வுகளை எழுப்புகின்றன.இயற்கையின் எழில்நலம் பாடுகின்றன. யதார்த்த நிலயைப் படம்பிடிகின்றன. புதிய சிந்தனைகளைப் புதுமைப்பொலிவுடன் வரவேற்கின்றன. எளிய கவிதைகளாயும் அமைகின்றன.

### சீன மொழிபெயர்ப்புக் கவிதைகள்

இயற்கை அழகை ஆராதிக்கும் சீனக்க விஞர்கள் இயற்கையை உருவகமாக,குறியீடாக, படிமமாக, உவமையாகக் கையாள்வர். 'கிரிசேந்திமம்' என்னும் கவிதை காய்சின் (Cai Xin) என்னும் கவிஞரால் எழுதப்பட்டுள்ளது. டாங் ஹுவாங் ச்சாவ் என்பவர் கிரிசேந்திமம் பூக்களைப்பற்றிக் கூறிய வாசகங்கள் இக்கவிஞரின் கற்பனைக்கு விருந்தாகி இக்கவிதையை வடிக்கத் தூண்டியுள்ளது. மற்றப் பூக்களிலிருந்து வேறுபட்டு விளங்கும் கிரிசேந்திமமாகத் தன்னை உருவகித்துக் கொண்டு இக்கவிஞர் பாடியுள்ளார். கிரிசேந்திமத்தின் பெருமித வார்த்தைகள் உருவகம் மூலமாக அழகுற அமைகின்றன. சான்றாக ,

*“நூறுகோடித் தங்கப் படைகளை வழிநடத்திச்செல்லக்கூடியவை”*

*“ஒன்பதாவது நிலவின் எட்டாவது நாள்”*

என்னும் அடிகள் அமைகின்றன.

‘நன்ட்டா சீனக் கலை‘ என்னும் கவிதையை சுவா சீ லே என்னும் கவிஞர் எழுதியுள்ளார். சீனகலாசாரம்பற்றிய கவலையை எதிரொலிக்கும் இக்கவிதை அழகிய புதிய உவமைகளைக் கொண்டுள்ளது. நடுத்தரவயது என்பது “ நீர் பிரியும் மேடு போல” “பாறைகளையும் நீர்வீழ்ச்சிகளையும் கடந்து தியானிக்கும் ஏரி போல‘ என்பனவற்றைக் கூறலாம். இவை ஆழமான நயமான உவமைகள். கிரிசேந்திமம் பூக்கள் இங்குக் கலாசாரக் குறியீடாக விளங்குகின்றன.

சுவா ச்சிம் காங் (ChuaChimKang) என்பவரின் கவிதை “கரடிகள் பனிக்கால உறக்கநிலையில் ஆழ்ந்த பிறகு” என்னும் தலைப்புக்கொண்டது. இது தத்துவப்பொருள் தாங்கிய கவிதை. கரடிகள், ஆழ்ந்த உறக்கநிலை, சிதையும் காடு, ஊற்றுக் கண்கள் ஆகிய சொற்கள் தத்துவக்குறியீடுகளாக அமைந்துள்ளன.

டான் யிங் (Dan Ying) எழுதிய “அவா” என்னும் கவிதை நிறைவேறாக் கனவுகளுக்காக மறுபிறவி வரை காத்திருக்கும் மனநிலையையும், மறுபிறவி உண்டா இல்லையா என்னும் சந்தேகம் எழும் மனநிலையையும் சித்திரிக்கிறது. இக்கவிதை மறுபிறவிபற்றிய சீனர்களின் நம்பிக்கையை எதிரொலிக்கிறது.

ஃபெய்சின் (Fei Xin) “எப்படி ஏன்?” என்னும் தலைப்பில் எழுதியுள்ள கவிதை தத்துவவிசாரணையில் ஈடுபடுகிறது. பொதுவாக மனத்தைக் குரங்குக்கும் குதிரைக்கும் ஒப்பிடும் மரபைத் தமிழ் இலக்கிய உலகில் காணலாம். இந்த அடிப்படையில் இக்கவிதை மனக்குதிரை ஏற்படுத்தும் விளைவுகளையும் உணர்வுகளையும் சிறப்பாகச் சித்திரிக்கிறது. கவிதையின் இறுதிப்பகுதி அடுக்குக் கேள்விகளால் அமைந்திருப்பது தனி அழகு தருகிறது. சிந்தனைக் கேள்விகள் வரிசையாக எழ மனக்குதிரையோ மிக வேகமாகச்செல்கிறது என உருவக அழகால் சிறக்கிறது இக்கவிதை.

ஹான் ச்சுவான் (Han Chuan) எழுதிய கிராமத்து வீட்டைப் பார்க்க வருதல் என்னும் கவிதை சீனாவிலிருந்து முப்பது ஆண்டுகளுக்கு முன் இங்குக் குடியேறிய ஒருவர் மீண்டும் தன கிராமத்தை, வீட்டை, உறவினர்களைப் பார்க்கச் செல்லும்போது ஏற்படும் அனுபவங்களை விவரிக்கிறது. தன் பழைய நினைவுகளை அசைபோடும் வகையில் அமைந்த கவிதையாக (Nostalgic experience), பிறந்த மண்ணின் மீது ஒருவருக்கு உள்ள ஏக்கத்தைப் புலப்படுத்துவதாய் அமைகிறது. அதேவேளையில் எதிர்காலத் தலைமுறையினர் இத்தகைய தேடலில் ஈடுபடமாட்டார்கள் என்னும் நடப்பியல் உண்மையையும் பதிவு செய்கிறது.

கோ ஹாக் ஹியாட் ( Koh Hock Kiat ) என்பவரின் கவிதையும் தேடல்பற்றியதுதான். ஆனால் இக்கவிதை இயற்கையை அணுஅணுவாக இரசிக்கும் தொனியில் அமைந்த தேடலாக அமைகிறது.

லியாங் சன்பாய் (Liang Sanbai) எழுதிய “ஒன்பதுமுறை” என்னும் கவிதை சீனமக்களின் நம்பிக்கைகளை எதிரொலிப்பதாய் உள்ளது. “பூனைக்கு மட்டுமே பத்துப் பிறப்புகள் ஒன்பது இறப்புகள் ” என்னும் அடிகள் மறுபிறவிக் கொள்கையைப் பேசுவனவாக அமைகின்றன. கவிஞனின் இறப்புகளுக்கும் பிறப்புகளுக்குமான காரணங்கள் அவருடைய விருப்புவெறுப்புகளைக்கூட மறைமுகமாகத் தெரிவிக்கின்றன.

“தொலைதூர அழைப்பு” என்னும் கவிதையை லியாங் வெர்ன் ஃபூக் (Liang Wern Fook) என்பவர் எழுதியுள்ளார். இக்கவிதை படிமங்களைக் கொண்டும் கடந்த கால நினைவுகளை அடிப்படையாய்க்கொண்டும் பாடப்பட்டது.

*“எறும்புகள் இழுத்துச்சென்று சேர்க்கும்*

*காலத்தால் மறக்கப்பட்ட பொந்தில்”*

*“.......................இரு வெண்நாரைகள்*

*சூரிய ஒளியில் அலைகளின் வெளிச்சத்திற்குள்*

*சிறகடிப்பதைப் பார்க்கிறேன்.”*

என்னும் அடிகளில் படிமங்கள் சிறப்பாக அமைந்து கவிதைக்கு அழகு சேர்க்கின்றன. பிறந்த மண்ணை விட்டுவந்த ஏக்கம், அம்மாவின் நினைப்பு, அழைப்பு ,யாங்சி நதி ஆகியவற்றின் வழியே புலப்படுகிறது.

லியாங் யூயி (Liang Yue) என்பவர் எழுதிய கவிதை "நிலவொளியில் தனியே குடித்துக்கொண்டிருத்தல்" என்னும் தலைப்பைக் கொண்டது. பணவேட்கைமிக்க இன்றைய சமுதாயத்தை இக்கவிதை,

*" நிலவொளியும் நிழல்களும் கூட*

*அவசரம் அவசரமாகப் புகழுக்காகவும்*

*லாபங்களுக்காவும் அலைகின்றன"*

என யதார்த்தமாய்ப் பாடுகிறது.. அழகிய உவமைகளும் உருவகங்களும் இக்கவிதையின் சிறப்பு அம்சங்கள்.

*"பேராசைக்குக் கொள்ளிவைக்கப்படு வதைப்பார்த்து*

*நிலவொளியை முற்றுகையிட்டு வசீகரிக்கும் விளக்குகள்*

*நண்டுபோல் ஓரமாய் நகரும் நகரம்"*

என வருணிக்கும் இக்கவிதை "தோற்றுப்போக அஞ்சும் இந்நகரத்தில்" ஒருவிதத் தனிமை மனிதனைச் சூழ்ந்துள்ளதையும் படம்பிடிக்கிறது.

லின் ஃபாங் ( லிவீஸீ றிணீஸீ) என்பவர் எழுதிய 'கழிவுக்குவியல்' என்னும் கவிதை சீனர்களின் வழிபாட்டுமுறை, மதிப்பிழந்து வரும் முதியோர் நிலை, சிறுவர்களின் விளையாட்டு, பெண்களின் நிலை ஆகியவற்றைப் பின்னணியாய்க் கொண்ட தெருவைக் கழிவுக்குவியலாகக் காண்கிறது.இக்கவிதை,

*"சந்திரமுறை மாதத்தில் ஐந்தாம் நாளிலும்*

*பதினைந்தாம் நாளிலும்*

*மும்முறை குனிந்து வணங்கவேண்டும்*

*அந்தியிலும் சந்தியிலும் ஊதுவத்தி கொளுத்தவேண்டும்"*

எனச் சீனர்களின் பழக்கவழக்கங்களைக் குறிப்பிடுகிறது.

லியூ ஹன்ஷி (Liu Hanzhi) என்பவர் 'பன்சாய் பிலாக்கணம்"என்னும் கவிதையை எழுதியுள்ளார். இடப்பெயர்ச்சி ஒரு வாழ்க்கையை எப்படிப் பாதிக்கிறது என்பதை 'பன்சாய்'( Bonsai) ஒரு பிலாக்கணமாகப் பாடுகிறது. "வசந்தத்தில் நானொரு வசீகரமான சிவப்புக் 'குக்கூ' செடியாக இருந்தேன்" பன்சாயின் கூற்றாக வரும் இவ்வடிகள் பழைய வாழ்வை நினைவூட்டுவன.

*"இந்த மண்ணுக்கும் எனக்கும்*

*இந்த ஜென்மத்தில் விவாகரத்து"*

என வரும் அடிகள் வேதனையை எதிரொலிக்கின்றன. மேலும் இக்கவிதை பன்சாயின் மூலமாகச் சமுதாயத்துக்குச் செய்தி ஒன்றையும் தருகிறது.

*"இடப்பெயர்ச்சிக்காக*

*ஒரு வாழ்க்கையின் துடிப்புகள்*

*வேரோடு பறிக்கப்பட்டது*

*புதுவாழ்க்கையைப் பொறிக்கத்தான்"*

பன்சாய் பிலாக்கணம் குறியீட்டாலும் சொல்லும் நேர்த்தியாலும் சிறக்கிறது.

'மடல்' என்னும் கவிதை லோ சுவீ கிம் ( லிஷீஷ் ஷிஷ்மீமீ ரிவீனீ ) என்பவரால் எழுதப்பட்டது. இயற்கைக்கு மாறுபட்ட சூழலின் பின்னணியில் இயற்கையைப் பாடுகிறது. செத்துக்கிடக்கும் இரு மீன்கள் குறியீடுகளாய் அமைகின்றன. இக்கவிஞரின் கற்பனை வித்தியாசமானது. சூரியன் இல்லா வானம், ஓய்வெடுக்கும் பூமி, அலையற்ற மௌனமான கடல் என ஒவ்வொன்றையும் இல்பொருளாகக் கற்பனை செய்கிறார். இது கவிஞரின் கற்பனையில் சாத்தியமே!

முஷி என்பவர் எழுதிய 'இலைவிசிறி' என்னும் கவிதை சீனர்களின் மரபுச்சின்னத்தைப்பற்றியது.அது சிறிய இலை விசிறியாக இருந்தாலும் தூரத்துப் பழங்கதையை அதாவது முன்னோர்களின் பழங்கதையைக் கூறுவதாய்க் காட்டப்படுகிறது. வர்ணங்கள்போன அந்த விசிறி இறந்தகால முத்திரையாய் மட்டும் அமையவில்லை.

கவிதையின் உயிரோட்டமாக விளங்குகிறது கீழ்க்காணும் பகுதி.

*"இம்மரபுச் சின்னத்தை எடுத்தேன்*

*ஏதோ என் மூதாதையர்*

*எச்சமிட்ட மரபுரிமை போல*

*உள்ளங்கையில் கரை புரண்டோடின*

*ஜீவக்கோடுகளும் இரத்தக் கோடுகளும்"*

இக்கவிதை மரபுடைமைச்சின்னங்களை மதிக்கும் சீனர்களின் மனநிலையைத் தெளிவாகச் சித்திரிக்கிறது.

நான் ஷி (Nan Shi ) என்பவர் பாப்லோ நெரூடோ என்னும் கவிஞனின் கவிதை அடிகளை ஆதாரமாகக் கொண்டு 'கதறல்' என்னும் கவிதையைப் பாடியுள்ளார். இக்கவிதை புதிய உவமைகளின் மூலம் தனிமைத்துயரைப் பாடுவனவாயும் பாடவேண்டிய, அழவேண்டிய சந்தர்ப்பங்களில் அவ்வாறு செய்ய இயலாமையையும் பாடுகின்றன. சாம்பல்நிற அணிலை ஒத்த ஒரு பறவை; இதயம் முழுவதும் உதிரி அம்புகள் துளைக்கப்படுதல்; கவிழ்க்கப்பட்ட கிண்ணமாய்க் காரிருள், மழைக்கால நதி போன்ற உவமைகள் நயமான உவமைகளாகக் கவிதைக்குச் செறிவைக் சேர்க்கின்றன.

'பற்பசை' என்னும் கவிதை புதுக்கற்பனை. இக்கவிதை பாங் ச்செங் லூயி ( Pang Cheng Lui ) என்பவரால் எழுதப்பட்டுள்ளது. பற்பசை இவரது கண்ணுக்கு வெண்ணிறப்புழுவாகக் காட்சி தருகிறது. தனிமனித சுதந்திரத்தையும் அடக்குமுறையையும் பற்பசையையும் இணைத்துப் பார்க்கும் புதியபார்வை இக்கவிதையில் அகப்படுகிறது.'ஜூடோ அடி ' ' எம்பயர் சதுக்கம்' ஆகியவை குறியீடுகளாக அமைகின்றன. கவிதை முடியும்போது .

*"இருந்தும்*

*என் சிரசு*

*நள்ளிரவானால் போதும் நகர்ந்துவிடும்*

*நட்சத்திரங்களுடன் புதிதாய் உரச"*

என முத்தாய்ப்பு வைத்தாற்போல முடிவது சிறப்பு.

'நீளக்கூந்தல் சிறப்பு" என்னும் கவிதை குவெக் யோங் சியு (Quek Yong Siu) என்னும் கவிஞரால் பாடப்பட்டுள்ளது. கவிஞனின் பாடுபொருள் எதுவாகவும் அமையலாம் என்பதற்கு அழகிய நீளக்கூந்தலின் சிறப்பைப் பாடும் இக்கவிதையே சான்றாகும். இக்கவிதை படிமக்காட்சியாக அழகிய நீளக்கூந்தலையும் அதற்கு உரிமையுடைய பெண்ணையும் நம் மனக்கண்முன் நிறுத்துகிறது. கூந்தலின் மென்மை, நிறம், அலையலையாய்ப் புரளும் அதன் போக்கு எனத் தொடங்கும் வருணனை அழகிய உவமைகள், அபாரமான உருவகங்கள் மூலமாக நயமான கவிதையாகவும் அமைகிறது.

*"கருவட்டத்தின் அதிசயம் போல் ஆயிரம் வனம்போல்*

*ஆயிரம் சுகவுணர்வுகள் பத்தாயிரம் இனிய நோக்கங்கள்*

*அனைத்தும் இந்த*

*மூழ்கடிக்கும் கருஞ்சூழலில்*

*இன்பம் மீட்டும் முதுகில் பத்தாயிரம் இருட்டின் வேர்கள்*

*கோடை ராத்திரித் தாமரைக் குளமாய் மணம் வீசும்*

*ஓ! அழகின் குஞ்சங்கள்*

*கனவுகளின் நுண்ணிய இழை*

*அதிவேக மனத்துடிப்பின்*

*அமானுஷ்ய தரிசனம்"*

என அமைந்த அடிகள் கூந்தலில் தொடங்கி அது புரளும் முதுகு வரை வருணிப்பதாக உள்ளன. வருணனை இத்துடன் நில்லாது இன்னும் தொடருமாயின் கேசாதிபாத வருணனையாக அமைந்திருக்கும்.

பெண்களுக்கு அழகைத் தருவது நீளக்கூந்தல் என்று தமிழர்களைப் போலவே சீனர்களும் கருதுவதை இக்கவிதை வழி அறியமுடிகிறது. ஒரே கவிதையில் நீண்ட அழகிய கூந்தலை விரிவாக வருணிக்கும் கவிஞரின் வருணனைத்திறம் மிகச்சிறப்பாக உள்ளது. தமிழ்க்கவிதைகளுள்ளும் தலைவியுடைய

கூந்தலின் மணம்பற்றிப் பாடும் குறுந்தொகைப் பாடலை இக்கவிதையோடு ஒருபுடை ஒப்பிட்டுப் பார்க்கலாம். நீளக்கூந்தலின் சிறப்பை விவரிக்கும் இக்கவிதை சிறந்த கவிதை என்பதில் இருவேறு கருத்துகள் இருக்கமுடியாது.

தான் சுவி ஹியான் எழுதிய (ஜிணீஸீ ஷிஷ்மீமீ பிவீணீஸீ) 'காந்தியைப் போற்றி' என்னும் கவிதையும் சிறந்த கவிதையாக அமைந்துள்ளது. எத்தனை நூற்றாண்டு சென்றாலும் காந்தியின் புகழுக்கு அழிவில்லை. உலகம் போற்றும் சான்றோர்களுள் ஒருவராகிய காந்தியைப் போற்றும் இக்கவிதை கவிஞரின் பரந்தமனம், கூரியபார்வை, கவித்துவம் எனப் பல சிறப்புக்கூறுகளைப் பிரதிபலிப்பதாய் அமைகிறது. 'ஒரு சிறு வெள்ளைப் பூ' என்னும் தொடர் மீண்டும் மீண்டும் கவிதை முழுமையும் இடம்பெறும்போது கவிதை பொருளாழம் பெற்று மெருகேறுகிறது. ஒரு சிறு வெள்ளைப்பூ என்னும் தொடர் குறியீடாக அமைந்து எளிமை, தூய்மை, உயர்பண்புகள்,உயர்ந்த ஒழுக்கம் ,சுறுசுறுப்பு, சுதேசியுணர்வு , பொறுமை, பகைவனுக்கு அருளும் நல்லுள்ளம்,பொதுநலம் கனிந்த தியாகம் எனப் பல உயர்பண்புகளை விளக்குவதாய் அமைகிறது. காந்தி இன மத தேச எல்லைகளைக் கடந்த தலைவர் என்ற அடிப்படையில் பாடுபொருளைக் கையாண்டுள்ள கவிஞர் தான் சுவி ஹியானும் உலகளாவிய பொதுமை நோக்குடையவர் என்பதை

*"அவர் விட்டுச்சென்ற சொத்து*

*பார்வையை இன்னும் கொஞ்சம் விரிவாக்க*

*பொறுமை காக்க*

*பொறுமை காக்க இன்னும் பூத்துக்கொண்டிருக்க*

*வாடியே போகாது*

*ஒரு நேர்மையான மனத்தின் சிறு வெள்ளைப்பூ"*

என முடியும் அடிகள் தெளிவாக்குகின்றன.

'பேருந்தில்' என்னும் கவிதை தோ லாம் ஹுவாட் (Toh Lam Huat) என்பவரால் எழுதப்பட்டுள்ளது. மனிதவாழ்க்கை உலகம் என்னும் பேருந்தில் சென்றுகொண்டிருப்பதைப் பாடும் இக்கவிதை மனிதவாழ்க்கையைத் தத்துவப்பார்வையின் அடிப்படையில் முன்வைக்கிறது. அறிமுகமற்றவர்களோடு பயணம் செய்யும் இந்த யாத்திரையின் விளக்கங்கள் வீணானவை என முடியும் இக்கவிதை பயணச்சீட்டை,

*"காலையோ மாலையோ*

*இருப்பின் மதிப்பு*

*பயணச்சீட்டைப் போல*

*படாடோபம் இல்லாதது"*

என இருப்பின் மதிப்போடு புதியகோணத்தில் இணைத்துப் பார்க்கிறது. எளிய உவமையாக இருப்பினும் இஃது அழகிய, ஆழமான உவமையும் ஆகும்.

"காதலுக்காக உயர்ந்த கோபுரத்தில் காத்திருத்தல்"என்னும் கவிதை தோங் நூங் சின் (Tong Noong Chn) என்பவர் எழுதியதாகும். காதலைப்பற்றிப் பாடும் இக்கவிதை,

*"மதுபோதையில்*

*நீ நான் உயர்ந்த கோபுரம்*

*எழவோ பறக்கவோ முடியாத*

*வசந்த காலக் காட்டுவாத்து"*

என உருவகத்தின் மூலம் நிறைவேறாக் காதலையும் காதலை நிறைவேற்றிக் கொள்ளாத காதலர்களையும் காட்டுகிறது. கிரிசேந்திமப் பூக்கள் சீனக் கவிதைகளில் குறியீடாக அமைவதுபோல வில்லோமர இலைகளும் குறியீடாக அமைகின்றன. இக்கவிதையும்

*"இந்த ஈரமான உணர்வுகள்*

*கோபுரத்துக்கு வெளியே*

*ஆடும் வில்லோ மரங்களைச்*

*சந்தித்தாக வேண்டும்"*

எனக் குறிப்பாக, எதிர்ப்புகளை உணர்த்துவதற்கு வில்லோ மரங்களைக் குறியீடாக்கியிருக்க வேண்டுமோ என்று எண்ணத் தூண்டுகிறது.

சீனப்பண்பாட்டில் சீனவிழாக்களில் சீன நம்பிக்கைகளில் 'பேய்விழா' குறிப்பிட்டுச் சொல்ல வேண்டிய ஒரு விழாவாகும். மறுபிறவி,முற்பிறப்பு சார்ந்த நம்பிக்கைகள் இவ்விழாவின் அடிப்படைகளில்இழையோடும். இக்கவிதையில் இடம்பெறும் உவமைகள் கணவன், மனைவி ஆகிய இருவருக்கும் இடையே தொடர்பில்லாத நிலையையும் பூர்வஜென்மத்தொடர்பால் முற்பிறப்பில் பிணைக்கப்பட்டதையும்,மறுபிறப்பில் பிறந்ததையும் முறையே,

"ஒரு பரியோ பசுவோ மேய்ப்போமே

அல்லது ஒன்றுசேரா எதையாவது

ஒரு புதர் 'செர்ரி" செடியைப் போலவோ

ஒருதுணிமணி மாட்டும் சட்டம் போலவோ

அல்லது ஒரு திரையோ தட்டச்சுப் பொறியைப் போலவோ"

என அடுக்கு உவமைகளால் பேசுகிறது. இக்கவிதையை வெய் தோங் குயி ( Wei Tong Que) எழுதியுள்ளார்.

'உரு மாறும் கல்" என்னும் கவிதை வென் காய் ( கீமீஸீ ரிணீவீ) என்பவரின் படைப்பு. இக்கவிதை ஒரு பொருளைப் பார்க்கும் பார்வை மனிதருக்கு மனிதர் வேறுபடும் என்ற உண்மையை ஒரு சிற்பியின் பார்வையாக இக்கவிதை கூறுகிறது.

சீனமொழி இலக்கிய ஆளுமைகளில் ஒருவர் வோங் யூன் வா ( Wong Yoon Wah). இவர் பன்முகப் படைப்பாளி. "காலனித்துவ வாழ்க்கையில் சிறு பிராயத்து நினைவுகள்" என்னும் தலைப்பில் இவர் எழுதியுள்ள கவிதை கைதிகள் முகாம் சோதனைச்சாவடியில் நிகழ்ந்தவற்றை நினைவுகூரும் கவிதையாக அமைகிறது. இக்கவிதை வரலாற்றுச்சம்பவங்களின் பதிவாக உள்ளது. காலனித்துவ ஆதிக்கத்தின் கெடுபிடிகள் , சட்டதிட்டங்கள், பசி, பட்டினி ஆகியவற்றால் வாடிய மக்களின் நிலை, தொழிலாளிகள் கேவலமாக நடத்தப்பட்ட நிலை ஆகியவற்றை இக்கவிதை படம்பிடிக்கிறது. மேலும் காலனித்துவ ஆதிக்கம் பற்றிய வெவ்வேறு பார்வைகள் இக்கவிதையில் பதிவாகியுள்ளன.

இக்கவிதையில் 'நிழல்' பல்வேறு பொருளை உணர்த்தும் குறியீடாக அமைவது தனிச்சிறப்பு. தொடக்கப்பள்ளி மாணவனின் பார்வையில் படும் நிழல், அடையாள அட்டை இல்லாத பாட்டாளி நிழல், பட்டினி கிடந்து சாகும் நிழல், வெயிலுக்கு மாறான இயற்கை நிழல், இராணுவவீரர்களாகிய நிழல் எனப் பல பொருள்களை உணர்த்துகிறது இக்குறியீடு.

இளந்தலைமுறை எப்போதுமே மாற்றத்தை விரும்புவது. இது சூசகமாகக் கவிதை யில் கீழ்க்காணும் வகையில் ஒலிக்கிறது.

"உணவுக்காகத் தேடியலையும்

புதிய தலைமுறைப் பிள்ளைகளைக்

குழப்பத்தோடு பார்த்தன"

"கடைசிக்கணக்கிடும் மணிச்சட்டம்" என்னும் கவிதையை வு மு (Wu Mu ) என்பவர் எழுதியுள்ளார். கணக்கிடும் மணிச்சட்டம் பழமைக்கும் புதுமைக்கும் இடையே எழும் போராட்டத்தைச் சந்திப்பதை,

"போன சகாப்தத்தின் பொக்கிஷம்

நிகழ்கால விநோதம்

எதிர்காலத்தின் நிராகரிப்பு"

என உருவகங்களால் வருணிக்கிறார். கவிதை "முடிவிலே முடிவென்று ஒன்று இருந்தால் " என முடிகிறது. இம்முடிவு மரபுகள் அழிந்துவிடுமா? என்னும் கேள்வியை நம்முள் எழுப்புகிறது.

"தொடக்கப்பள்ளி" என்னும் கவிதையை வு யின் (Wu Yin) என்பவர் எழுதியுள்ளார். இக்கவிதையும் இளமை நினைவுகளை அசைபோடுதலின் விளைவாக எழுதப்பட்டதுதான். கவிஞரும் அவர் தந்தையும் படித்த பழைய தொடக்கப்பள்ளியில் சேர்வதற்கு இக்காலப்பிள்ளைகளுக்கு மனமில்லை போலும்! என ஒருவித ஏக்கத்தோடு தொடங்கும் கவிதை, பள்ளி வாழ்க்கையில் ஏற்பட்ட பலன்களை நினைவுபடுத்தி நிறைவோடு முடிகிறது.

சிங்கப்பூர்க் கிராமத்துச்சூழலில் இயங்கிய தொடக்கப்பள்ளி இக்காலப் பள்ளிகள்போலச் செங்கல் கொண்டு கட்டப்படவில்லை; மரத்தால் அமைக்கப்பட்டதே எனக் காட்டுவதன் மூலம் பழமையும் நவீனமும் முரண்படுவதைக் குறிப்பால் உணர்த்துகிறார்.

"மரம் வெட்டுதல்" என்னும் கவிதை சி குயிங் ( Xie Qing) என்னும் கவிஞரால் எழுதப்பட்டுள்ளது. மின்சார ரம்பத்தால் மரம் வெட்டப்படுவதால் பறவைகளின் கீதம் அழிதல், மலர்க்கொத்துகளின் தற்கொலை, காகங்கள் நிற்க இடமின்றித் தவித்தல்,நிலவுக்குத் தொங்க இடமில்லா நிலை என இயற்கை பாழ்படுவதைப் பேசுகிறது. ஒரு நூற்றாண்டைத் தாங்கிய மரத்தை வெட்டுவதனால் அந்த இடத்தில் எஞ்சியிருப்பவன் நரை விழுந்த தோட்டக்காரன் மட்டுமே எனவும் அவனும் எப்போது வெட்டப்படுவான் என யோசித்துக்கொண்டிருப்பதாகவும் கவிஞர் பாடியுள்ளது அங்கதம் நிறைந்தது.

"நூற்றாண்டுப் பிரதிபலிப்புகள்" என்னும் கவிதையை எழுதியவர் சி நியர் (ஙீவீமீ ழிவீமீகூ) என்னும் கவிஞர் ஆவார். சிங்கப்பூர் சிறந்த குடிநீர் வசதியைப்பெற அரும்பாடுபட்டவர் டான் கிம் செங். அவருடைய நினைவுச்சின்னமான டான் கிம் செங் நீரூற்று நின்றுபோயிருந்ததைக் கண்டு அதிர்ச்சி அடைந்த கவிஞர் இக்கவிதையை எழுதியுள்ளார். நீர் தந்தவர் பெயரால் அமைந்த நீரூற்று வறண்டுகிடக்கும் முரண்பாட்டைக் காட்டும் இக்கவிதை எழுதப்பட்ட நாள் அந்நீரூற்று கட்டிமுடிக்கப்பட்ட நூறாவது நாள் என்பது விசேஷமாகக் குறிப்பிடப்படவேண்டும். சிங்கப்பூர்ப் பின்னணியில் உண்மைச்சம்பவத்தைப் பதிவு செய்யும் இக்கவிதை மிக முக்கியமான கவிதை. கவிஞரின் ஆத்மார்த்தமான கோபம் கீழ்க்காணும் அடிகளில் வெளிப்படுகிறது.

*" கடற்காற்று காதலர்களின் தலைமுடியைக் கலைக்கிறது*

*மாற்றத்தின் சோகத்தைக் கடல்அலைகள் கலக்குகின்றன"*

"சேகரித்தல்" என்னும் கவிதை ஸோ கான் (Zhou Can) என்பவரால் எழுதப்பட்டுள்ளது. மண்ணில் காணும் அழகிய மலர், வித்தியாசமான கிளிஞ்சல் ஆகியவற்றைச் சேகரிக்கும் கவிஞர் விண்ணில் காணும் பிரகாசமான விண்மீன், வானவில்லின் உடைந்த பகுதி போன்ற கற்பனைப்பொருள்களையும் சேகரிக்கிறார். ஆனால் விரைந்தோடும் காலமோ மௌனமாகக் கவிஞனையே சேகரித்துவிட்டது என்று பாடுவதன் வழி காலத்தின் வரம்பற்ற ஆற்றலை உணர்த்தியுள்ளார்.

சீனமொழிக்கவிதைகள் கலாசாரக் குறியீடுகளைக் கொண்டவையாயும்,இயற்கை எழிலைப் போற்றுவனவாயும்,பழைய நினைவுகளை நினைவுகூர்வனவாயும், சீனதேசத்தின் மலை,ஆறு போன்றவற்றைப் பாடுவனவாயும், சிங்கபூரின் வரலாற்றுப் பின்னணியைக்காட்டுவனவாயும், கவித்துவம் கொண்டனவாயும் அமைகின்றன.

## மொழிபெயர்ப்பு இலக்கியத்தில் இதழ்களின் பங்கு:

சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழகம் வெளியிட்ட 'சிங்கா" என்னும் இருமொழி இதழும், தி ஆர்ட்ஸ் என்னும் சஞ் சிகையும் அவ்வப்போது மொழிபெயர்ப்புப் படைப்புகள் வெளியிடப்பட்டுள்ளன.

## தேசிய நூலகத்தின் 'வாசிப்போம் சிங்கப்பூர்'

தேசிய நூலக வாரியம் பத்தாண்டுகளாக "வாசிப்போம் சிங்கப்பூர்" என்னும் இயக்கத்தை நடத்தியது. இந்த இயக்கத்தை ஒட்டி முன்னர்க் கூறப்பட்ட Cross Language Translation என்னும் அடிப்படையில் எழுத்தளர்களின் படைப்புகளுள் தேர்ந்தெடுக்கப்பட்ட சிறுகதைகள் மொழிபெயர்க்கப்படுகின்றன. வாசிப்புப் பழக்கத்தை ஊக்குவிக்கும் வகையில் நடத்தப்படும் இந்த இயக்கத்தில் வெளியிடப்பட்ட சிறுகதைத் தொகுப்புகளும், கவிதைத் தொகுப்புகளும் கவனம் பெறத்தக்கன. 2013 ஆம் ஆண்டு வாசிப்பு இயக்கத்திற்காக இரண்டு மலாய்மொழிச் சிறுகதைகளை இக்கட்டுரையாளர் தமிழில் மொழிபெயர்த்துள்ளார்.

## மொழிபெயர்ப்பு இலக்கிய வளர்ச்சியில் தமிழ்முரசின் பங்கு:

தமிழ்முரசின் மொழிபெயர்ப்புக் கதைகளை இருவகையாகப் பகுத்துப் பார்க்கலாம். அவையாவன மொழியாக்கக் கதைகள், மொழிபெயர்ப்புக்கதைகள் என்னும் இரு பிரிவின. மொழியாக்கக் கதைகளில் மூலக்கதையின் கரு, கட்டமைப்பு தவிர எஞ்சிய அனைத்தும் தமிழ்ச்சூழலுக்கு ஏற்ப அமையும். இரண்டாம் பிரிவில் மொழியைத்தவிர எஞ்சியவை அனைத்தும் மூலக் கதையாகவே அமையும்.

மொழிபெயர்ப்பு இலக்கிய வரலாற்றைப் பின்னோக்கிப் பார்க்கும்போது 1940 களிலேயே தமிழ்முரசு மொழிபெயர்ப்புச் சிறுகதைகளுக்குக் கணிசமாக இடந்தந்து வெளியிட்டுள்ளது. தமிழக எழுத்தாளர்களின் சிறுகதைகளை வெளியிட்டுள்ளதோடு அக்காலத்தில் தமிழகத்தில் வெளியான மொழிபெயர்ப்புச் சிறுகதைகளையும் வெளியிட்டது. உதாரணத்துக்கு ஹரீந்திரநாத் சட்டோபாத்யாயரின் ‘அந்திவிளக்கு’ என்னும் கதையைக் கூறலாம். நாற்பதுகளில் மொழிபெயர்ப்புக் கதைகள் வெளியிடப்பட்டதைப் போன்று ஐம்பதுகளிலும் மொழிபெயர்ப்புக்கதைகளை வெளியிட்டது தமிழ்முரசின் பொதுவான போக்காக இருந்தது. சரஸ்ரீ என்பவர் ரவீந்திரநாத் தாகூர் எழுதிய ஒரு கதையினை ‘மனப்பொருத்தம்’ என்னும் தலைப்பில் மொழியாக்கம் செய்ததை 29.01.1950 அன்று தமிழ்முரசு வெளியிட்டது. தமிழ்முரசில் பணியாற்றத் தொடங்கிய சில மாதங்களுக்குள்ளேயே மாப்பசான் எழுதிய கதையின் தமிழாக்கம் வை.திருநாவுக்கரசின் கைவண்ணத்தில் ‘சாவின் தழுவல்” என்னும் பெயரில் 01.07.1951 பிரசுரமாகியது.

ஷேக்ஸ்பியரின் வெனிஸ் வணிகன் என்னும் நாடகத்தின் தழுவல் எம்.ராமன் என்பவரால் ‘பணம்’ என்னும் பெயரில் 23.03.1953 அன்று வெளியிடப்பட்டது. மொழியாக்கக்கதை என்னும் அடிப்படையில் மெ.சிதம்பரம் என்பவர் தாகூரின் கதையை மொழியாக்கம் செய்து ‘பிச்சைக்காரி’ என்னும் தலைப்பில் 19.02.1956 அன்று வெளியிட்டார். ஆங்கிலத்தில் டாக்டர் லின் யூ டாங் எழுதி அழியாப் புகழ்பெற்ற சீனச்சிறுகதையை பி.பி.காந்தம் தமிழில் மொழிபெயர்த்து வெளியிட்டார். இக்கதை பன்னிரண்டாம் நூற்றாண்டின் கதையாகும். பின்னர் இக்கதை ‘மரகதத்தெய்வம்’ என்னும் பெயரில் குறுநாவல் எனத் தலைப்பிட்டு 1991 இல் அலையோசை இதழுடன் இலவச இணைப்பாக வெளிவந்தது. இவர் மற்றொரு சீனச்சிறுகதையையும் மொழிபெயர்த்து ‘கற்பின்பரிசு’ என்னும் பெயரில் 03.01.1960 அன்று தமிழ்முரசில் வெளியிட்டார்.

## வானொலியின் பங்கு

‘சுவாரா சிங்கப்பூரா’ என்னும் பகுதி 1961 இல் தொடங்கப்பட்ட போது அதன் இந்தியப் பகுதிக்காக ஷேக்ஸ்பியரின் ‘ஒதெல்லோ’, ’மெக்பெத்’ என்னும் இரு நாடகங்களை பி.கிருஷ்ணன் என்னும் புதுமைதாசன் மொழியாக்கம் செய்தார். இவற்றுள் ‘மெக்பெத் ‘ 1996 இல் நூலாகவும் வெளிவந்துள்ளது. இவரே உலகத்துச் சிறந்த சிறுகதைகளைத் தேர்வுசெய்து தமிழில் நாடக வடிவமாக்கினார். இந்நாடகத் தொடர் ‘உலகப் பெருங்கதைகள்’ என்னும் நிகழ்ச்சியாக 03.03.1966 முதல் 26.08.1966 வரை 26 வாரங்கள் ஒலியேறியது. இந்நாடகத்தொடர் மீண்டும் 1977 இல் ஒலியேறியது. 52 வாரங்களுக்கு ஒலியேற்றப்பட்ட இந்நிகழ்ச்சிக்காக முப்பதுக்கும் மிகுதியான நாடகங்களைப் புதிதாக எழுதினார் புதுமைதாசன். உலகப் புகழ்பெற்ற இலக்கிய மேதைகள் படைத்த சிறுகதைகளின் நாடக வடிவமாகிய ‘சருகு’ என்னும் நூல் புதுமைதாசனின் மொழியாக்கப்பணியின் அருமைபெருமையை அறிவிப்பதாகும். இவரது ‘விலங்குப்பண்ணை’ அற்புதமான மொழிப்புலமையை வெளிக்காட்டுவதாகும். வானொலியில் பணியாற்றிய புதுமைதாசனின் ஆங்கிலப்புலமையும் தமிழ்ப்புலமையும் சிங்கப்பூர்த் தமிழ் இலக்கிய வரலாற்றில் படைப்பிலக்கியவாதியாக மட்டுமின்றி மொழியாக்கப் படைப்பாளியாகிய நிரந்தரமான இடத்தைப் பெற்றுத்தரும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

சிங்கப்பூர்த் துறைமுக ஆணையத்தில் பணியாற்றிய சே.வெ.சண்முகம் ஒரு சில மொழிபெயர்ப்பு நாடகங்களைப் படைத்துள்ளார். இவர் ஆங்கிலம் கற்றவர் அல்லர்.இருப்பினும்இவர்பிறர்மொழிபெயர்த்த நூல்களை நாடகவடிவமாக்கி வானொலியில் வழங்கியவர். செ.ப.பன்னீர்செல்வம் அவ்வப்போது ஆங்கிலச் சிறுகதைகளைத் தமிழில் மொழிபெயர்த்தவர். இவரது ஓரிரு மொழிபெயர்ப்புச் சிறுகதைகள் யுகமாயினி இதழில் வெளிவந்துள்ளன.

## தனிநபர் முயற்சிகள்

சிங்கப்பூரிலேயே பிறந்து வளர்ந்த இளங்கோவன் என்னும் பன்முகப் படைப்பாளி சிங்கப்பூர்த் தமிழ் இலக்கிய உலகின் தனிச்சொத்து (An Asset) என வருணிக்கத்தக்கவர். இவர் ஆங்கிலம், தமிழ் ,மலாய் என்னும் மும்மொழிப்புலமையர். செக்குமாட்டுப்போக்கில் படைக்கப்படும் தமிழ்ச் சிறுகதை,நாடகம்,கவிதை ஆகிய வடிவங்களுக்கு மத்தியில் உலகளாவிய சிந்தனையும், பன்முகப் பரிமாணமும், புதுமையும், அதிர்ச்சியும் விரவிய படைப்புகளை உருவாக்கும் திறமையர். மொழியாக்க நிபுணர் என்னும் அடிப்படையில் சாதாரணக் கவிதைகளுக்குக் கூட அபரிமிதமான கவித்துவப் பண்புகளைக் கொடுப்பவர்.

இவரது சொந்தப்படைப்புகளைத் தவிரப் பிறரது கவிதைகளை மொழியாக்கம் செய்தவர். தமிழ் எழுத்தாளர்கள் அஞ்சும் ‘சிம்மசொப்பனமாக ‘ விளங்கும் இவர் தமிழ்த்துறையைவிட்டு முற்றிலும் ஆங்கில இலக்கிய உலகில் இயங்குகிறார். இவரது மொழியாக்கத் திறமைக்குத் தேசியக் கலைகள் மன்ற வெளியீடுகளும், சிங்கப்பூர் தேசியப் பல்கலைக் கழகத்தின் சில வெளியீடுகளும் சான்று பகரும். இவரது தமிழ்க்கவிதைகள் பல Transcreations என்னும் பெயரில் நூலுருப்பெற்றுள்ளன. மலேசியாவின் வல்லினம் என்னும் இணைய இதழில் பன்னாட்டுக்கவிதைகளை மொழியாக்கம் செய்துள்ள இளங்கோவனின் படைப்புகள் தவறாமல் பிரசுரம் ஆகியுள்ளன.

க.து.மு.இக்பாலின் கவிதைத்தொகுப்பு வானம்பாடிக் கவிஞரான முனைவர் பாலசந்திரன் அவர்களின் ( அமரர்) மொழிபெயர்ப்பில் ணிஸ்மீஸீவீஸீ Number and other poems என்னும் பெயரில் நூலுருப்பெற்றுள்ளது.இவரைப்போல திருவேங்கடம் என்னும் கவிஞரும் தனது நூலை இளங்கோவன் மூலமாக மொழிபெயர்த்து வெளியிட்டுள்ளார்.

ஆங்கிலவழி மொழிபெயர்ப்புகள் ஒருபுறம் நிகழச் சீனமொழியிலிருந்து தமிழ்மொழிக்கு மொழிபெயர்க்கப்படும் போக்கும் இங்கு நிலவுகிறது. தமிழகத்தில் பாரதி, த.நா.குமாரசாமி, பன்மொழிப்புலவர் கா.அப்பாதுரையார் போன்றோர் சீனமொழிப் படைப்புகளைத் தமிழ்ப்படுத்தி உள்ளனர். சிங்கப்பூரில் சீனமொழிப் படைப்புகளை ஆங்கிலத்தில் மொழிபெயர்ப்பதில் காலந்தோறும் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. தமிழில் சீனமொழி இலக்கியங்களை ஆங்கிலமொழியின் ஊடாகத் தமிழுக்கு மொழிபெயர்த்தவர்களில் பி.பி.காந்தம் குறிப்பிடத்தக்கவர்.

ஜெயந்தி சங்கர் சீனமொழி இலக்கியங்களை ஆங்கிலமொழியின் மூலமாகத் தமிழுக்கு மொழிபெயர்த்து வருகிறார். இவர் சீன மக்களின் கலாசாரம் குறித்த கட்டுரை நூலகள் பலவற்றை மொழிபெயர்த்துள்ளார். சீனத்துச்சிறுகதைகள், கவிதைகள் ,சிறுவர் படைப்புகள் எனப்பல வகைகளிலும் மொழிபெயர்ப்புப் பணியைத் தொடர்கிறார். இவர் மொழிபெயர்ப்புப் பணிக்காகப் பல விருதுகளையும் வென்றுள்ளார். இவருடைய மொழிபெயர்ப்பு நூல்கள் விரிக்கின் பெருகும். சான்றுக்குச சில நூல்களை குறிப்பிடலாம். மிதந்திடும் சுய பிரதிமைகள்,என் தாத்தாவுக்கு ஒரு தூண்டில் கழி, இறந்தவளுக்குத் திருமணம் முதலியவற்றைக் குறிப்பிடலாம்.

## முடிவுரை

மலேசியாவின் தேவான் பஹாசா டான் புஸ்தாகா என்னும் அமைப்பு போன்றும் நேஷனல் புக் டிரஸ்ட் ஒப் இந்தியா என்னும் அமைப்பு போன்றும் சிங்கப்பூரிலும் மொழிபெயர்ப்புக்காக ஓர் அமைப்பு நிறுவப்படவேண்டும்; இலக்கியத்

தகுதி மிக்க மொழிபெயர்ப்பாளர்களை நியமித்து மொழிபெயர்ப்பு இலக்கியங்களை வளர்க்கவேண்டும் என்னும் பரிந்துரை 2009 இல் அனைத்துலக எழுத்தாளர் விழாவின்பொது முன்மொழியப்பட்டது. குறிப்பாக ஆசியான் அமைப்பு நாடுகளின் இலக்கியப் பரிமாற்றத்தைக் கருத்தில்கொண்டு அப்பரிந்துரை முன்மொழியப்பட்டது. ஆனால் சில நிறுவனங்கள் வணிகநோக்கில் செயல்படுவதால் இலக்கியத்தரம் மிக்க மொழிபெயர்ப்புகள் உருவாகுமா? என்னும் ஏக்கமும் எழுத்தாளர்கள் மத்தியில் உள்ளது. இருமொழிப்புலமை என்ற சொல்லுக்கே அவசியம் இல்லாமல் இருமொழிகளையும் சரிவரத் தெரியாதவர்கள் மொழிபெயர்ப்பில் இறங்கும் அவலநிலை மாறவேண்டும்.

## References


Anne Pakir, (Ed). (1990). Voices of Singapore- Multilingual Poetry and Prose, *Asian Survey*. (Vol.34). California: University of California Press.

Bharathiyar. (1986). *Bharathiyar Kavithaigal*. Chennai: Bharati Patippakam

Edwin Thumboo, (Ed). (1985). *Poetry of Singapore*. Singapore: ASEAN Committee on Culture and Information.

Edwin Thumboo, (Ed). (1990). *The Fiction of Singapore*. Singapore: UniPress, Centre for the Arts, National University of Singapore.

Edwin Thumboo, (Ed). (2009). *Fifty on 50*. Singapore: Ethos.

Edwin Thumboo, et.al. (1995). *Journeys: Words, Home and Nation*. Singapore: UniPress, Centre for the Arts, National University of Singapore.

Edwin Thumboo, et.al. (1985). The Poetry of Singapore. Singapore: ASEAN Committee on Culture and Information

George Fernandez, (Ed). (1983). *Stories from Singapore: Twenty-four Short Stories by Eighteen Authors*. Singapore: Society of Singapore Writers.

Kirpal Singh. (2000). *Rhythms: A Singaporean Millennial Anthology of Poetry*. Singapore: National Arts Council. (Trans: Hadijah Rahmat, Masuri SN, Chua Chee Lay, Peng Chen Lui, KTM Iqbql, M S Shri Lakshmi, Lee Tzu Peng,Alvin Pong).

Bolt, R. (2012). *The Art of Translation*. London: Oberon Books

Robbie, B.H Goh (1998). *Memories and Desires, A poetic history of Singapore*. Singapore: UniPress, Centre for the Arts, National University of Singapore. (Trans: Chitra Sankaran, Shurifah Muznah Syed Omar, Robin Loon).

Robert Yeo, (Ed). (1991). *Modern Asean Plays Singapore*. Singapore: Ministry of Information and the Arts.

*Rythms.* (2000). Singapore: Thesiya kalaigal Mandra Veliyidu.

Sri Laxmi, M.,S. (2009). *Singappuril Mozhipeyarpu Ilakiyam*. Article written for Semmozhi Maanadu (unpublished).

# இராமாயணமும் எதிர் கதையாடல்களும்
# Counter-Narrating Ramayan

முனைவர் வி.காயத்ரி பிரியதர்ஷினி / Dr. V.Gayathri Priyadarsini [1]

Date of submission: 2019-04-27
Date of acceptance: 2019-05-20
Date of Publication: 2019-07-30
Corresponding author's
Name: Dr. V.Gayathri Priyadarsini
Email: priyadarsini1983@gmail.com

## *Abstract*

The epic Ramayana can be considered as a significant literary work that has a general consensus of creating harmony within India. Though it is a literary work that has been underwent minor changes in its form, since its inception, it continues to be a work that aids wide readership and re-fictionalisation. It can be considered as a self-articulated contemporary literature as it has a practical approach towards society, tradition and politics. Ramayan has led to the discourse of recent ideologies like feminism, Opposition of the 'Varna' system, Social injustice and Aryan-Dravidian conflict. The act of taking the story of Ramayan to the general public should be attributed to the Dravidian movement. The basic ideology of the Dravidian movement is to deny the existence of god, which in turn , made the movement critic the 'Puranas' and 'Ithihas' , especially Ramayan, thus creating literary texts that are counter-narrations and criticisms to the epic. The ritualistic tradition of devotion towards Rama fell under staunch criticism. The movement through rationalization doctrines placed itself against Puranas that insisted on Theism. Also, the Dravidian movement exhibited itself to be against Nationalist politics by the use of Aryan-Dravidian conflict as the subject content in their literary works and Ramayan was often quoted as an example of the conflict. The ideology was put into practice, more often, by criticizing Ram and Ravana was praised on the contrary. It created an impact that the epic is anti-Tamil. Thus the research article intends to focus on Ramayan, as a literary work to be categorized among modern literature through the general acceptance and disapproval specifically by the dravidians, as a literary work that serves as a tool to elucidate Dravidian ideology, and finally as a literary work that exposes, by analysis, the ideology of Dravidian movement in retrospect through works that resulted out of the aforesaid conflicts.

**Key Words:** Ramayan, Counter-Narrating, Aryan-Dravidian conflict, rationalization, re-fictionalisation, Dravidian ideology.

### முன்னுரை

இராமாயணம் இந்திய மக்களின், பொதுச்செல்வமாக விளங்குகின்றது. இந்திய மொழிகள் அனைத்திலும் பலவகையான வடிவங்களில் ஏட்டிலக்கியமாகவும், வாய்மொழி இலக்கியமாகவும், காப்பிய வடிவிலும், கதை வடிவிலும், இசைப்பாடல் வடிவிலும் அமைந்துள்ள இவ்இராமாயணத் தொன்மம் பல எதிர்கதையாடல்களுக்கும் மீள்வாசிப்புக்கும் வழி வகுத்துள்ளது. இம்மாற்றுச் சிந்தனை இதுவரை புரிந்து கொள்ளப்பட்ட, நிறுவப்பட்ட, ஏற்றுக் கொள்ளப்பட்ட வாசிப்பைக் கடந்து அதன் பின்னால் உள்ள அரசியல், சமூகம், வர்க்க நலன், காப்பியம் முன்வைக்கும்

[1] The author is an Assistant Professor in G.T.N.Arts College, Dindigul, Tamil Nadu. Email: priyadarsini1983@gmail.com

சமூக மதிப்பீடுகள் ஆகியவற்றை எடுத்துரைக்கின்றது. இவ்எதிர் கதையாடலும் மீள்வாசிப்பும் தமிழ்ச்சூழலில் அதிகமாக நடைபெற்றுள்ளது அம்மாற்றங்களில் எதிர்கதையாடலாக இராமாயணம் கையாளப்பட்டுள்ள விதத்தைக் காண்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## இராமாயணத் தொன்மம்

இராமாயணம் என்ற தொன்மக்கதை முழுமையான காப்பிய வடிவம் பெறுவதற்கு முன்பு வாய்மொழிக் கதையாடலாகவே வழங்கி வந்தது. தொடக்க நிலையில் அக்கதையைப் பல்வேறு சமயத்தாரும் தம்தம் மதக் கருத்தியலை விளக்கப் பயன்படுத்திக் கொண்டனர் என்றால் மிகையாகாது 'இராமாயணம் தோற்ற நிலையில் சமயம் சாராததாக இருந்தபோதும் ஒவ்வொரு சமயத்தினரும் அதனைத் தமக்கேற்ப ஆக்கியும், மாற்றியும், சார்த்தியும் தருகின்றமை தனித்த நிலையினதாகக் கருதத்தக்கது. அறிந்த பரவலாக வழங்கிய கதையை வாயிலாகக் கொண்டு தம் சமயச்சாயலை ஏற்றுதல் என இதனைக் கொள்ளலாம். இதனால் பௌத்த ராமாயணமும் சமண ராமாயணமும் ஏற்பட வாய்ப்பமைகின்றன *(சுப்ரமணியம், 1998,* p.*140)*

இவ்வாறு சமயம் சாராக் காப்பியமாக இருந்த இராமாயணம் பிற்காலத்தில் மதம் சார்ந்ததாக மாற்றப்பட்டதோடு வைணவம் தன் வயமாக்கியும் கொண்டது. வடக்கில் ஆரம்பித்து தெற்கு வரை பரவி இது இந்தியா முழுமையும் இணைக்கும் காப்பியமாகவும் அமைந்தது. இந்தியப் பண்பாட்டின் ஒருமைப் பண்பு கொண்ட வளர்ச்சியை எடுத்துக்காட்ட இத்தொன்மக்கதை உதவியது. மேலும் ஒவ்வொரு மொழியிலும் இத்தொன்மக்கதை பெற்ற மாற்றங்கள் வாயிலாக அம்மொழியின் பண்பாட்டுக் கூறுகள் எவ்வாறு உள்ளன என்பதை அறிவதற்கும் உதவியது *(சுப்ரமணியம்,1983,*p.*139).*

## இராமாயணம் வழங்கும் நிலப்பகுதிகள்:

*300 ராமாயண வடிவங்கள் ஐந்து உதாரணங்கள் மூன்று எண்ணங்கள்* என்ற ஏ.கே.ராமானுஜத்தின் கட்டுரையே இராமாயணக் கதையின் பல்வேறு வடிவங்களையும் அவை வழங்கும் நிலப்பகுதிகளையும் எடுத்துக்காட்டுகின்றது.

> *'2500 ஆண்டுகளுக்கு மேலாக பல்வேறு விதமான இராமாயணக்கதைகள் மற்றும் அக்கதைகளின் தாக்கம் தெற்கு மற்றும் தெற்காசிய நாடுகளில் அதிகமாக பரவியிருப்பது ஆச்சரியப்படத்தக்க வகையில் உள்ளது. பட்டியலிடப்பட்ட இராமக் கதைகள் அனைத்தும் ஒரு குறிப்பிட்ட மூலத்திலிருந்தே தோன்றின. அன்னமேசி, பாலினேசி, பெங்காலி, கம்போடியன், சைனீஸ், குஜராத்தி, ஜாவனிஸ், கன்னடம், கோட்டனேசி,மலேசியன், கஷீமீரி, மராத்தி, ஒரியா, பிராகிருதம், சமஸ்கிருதம், சாந்தலி, சிங்களம், தமிழ் தெலுங்கு,தாய் திபெத்தியன் என இத்தனை மொழிகளில் முன்னூறு விதமாகவும் பேசவும் எழுதவும் பட்டிருக்கிறது. சமஸ்கிருதத்தில் மட்டும் 25க்கும் மேற்பட்ட வகைமைகளில் இராமகதை வழங்கப்படுகின்றன. என இராமயணங்களின் பரவலைப்பற்றிக் குறிப்பிடுகின்றார் காமில் பால்கே.'*
>
> (Ramanujam, 1999, pp.133-134).

*இராமாயணம் உலகத்தின் பல பகுதிகளில் பல வடிவங்களில் இருப்பினும் அந்நிலப்பகுதி மக்கள், அந்நிலப்பகுதிக்குரிய கலாச்சாரம், பாரம்பரியம் என அவற்றைப் பிரதிபலிக்கும் விதத்தில் அமைந்திருப்பதைக் காணலாம்.*

*இந்திய நிலப்பகுதியைப் பொறுத்தவரை இராமாயணம் வழங்கும் நிலப்பகுதியை இரண்டு பிரிவாகப் பிரித்து ஆய்வாளர்கள் ஆராய்கின்றனர்.*

> *'வான்மீகி இராமாயணத்தை வடபுல வழக்கு (*Northern Recension),*தென்புல வழக்கு (*Southern Recension*) என்று இருபெரும் பிரிவாகப் பாகுபாடு செய்து வெளியிட்டுள்ளனர். இவற்றுள் வடபுலவழக்கு என்பது வடமேற்கே பெசாவரிலிருந்து கிழக்கே வங்காளம் வரையிலும், தெற்கே விந்தியமலையின்*

*வடபகுதி வரையிலும் உள்ள இந்தியப் பகுதியில் வழங்கி வந்த ஏடுகளைக் குறிக்கும். இந்த இரு பிரிவுகளில் வடபுல வழக்கு மூல இதிகாசமாகவும் (Core epic) தென்புல வழக்கு சமஸ்கிருதமல்லாத பிற இந்திய மொழிகள் வழங்கும் மாநிலங்களில் வழங்கும் மொழி பெயர் வழக்கமாகவும் (Received epic) கருதப்பெறுகின்றன'*

*(மணவாளன்,2009, pp159160).*

தொன்மங்கள் இருவேறுவிதமான வழக்குகள் காணப்படினும் தென்புல வழக்குகளில் ஓர் ஒற்றுமைத் தன்மை இருப்பதையும் காணமுடிகின்றது.

## திராவிட மொழிகளில் இராமாயணம்

திராவிட மொழிகளில் கன்னடம், தெலுங்கு, மலையாளம், தமிழ் ஆகிய மொழிகளில் இராமாயணம் காப்பியமாகவும் நாட்டுப்புறக் கதைப்பாடல் வடிவிலும் வழங்கி வந்துள்ளன. குறிப்பாகத் 'தெலுங்கு மொழியில் இத்தொன்மக்கதையின் செல்வாக்கு மிகுந்திருப்பதை அறியமுடிகின்றது'. கன்னடத்தில் 13ஆம் நூற்றாண்டு எழுந்த அபிநவபம்பா எனும் நாகச்சந்திரன் எழுதிய இராமாயணம் முதல் இராமாயண நூலாக உள்ளது. 14ஆம் நூற்றாண்டு தெலுங்கில் எழுந்த ரங்கநாத ராமாயணமும் 12ஆம் நூற்றாண்டு மலையாளத்தில் எழுந்த இராமசரிதம் முதல் இராமாயண நூலாகும் (சுப்ரமணியம்,1983,p.140142).

தமிழ்ச்சூழலைப் பொறுத்தவரை இராமாயணம் என்ற தொன்மக்கதை சங்க இலக்கியம் தொடங்கி தற்கால இலக்கியங்கள் வரை பரவி இருந்ததைக் கொண்டு அது பெற்ற தாக்கத்தை அறிய இயலும். புதிய புதிய வாசிப்பிற்கு இடம் அளிக்கக் கூடிய காப்பியமாக இராமாயணம் திகழ்கின்றது. அதில் குறிப்பாகத் தமிழ்ச்சூழலில் இராமாயணத்தைப் பெண்ணியம் சார்ந்து அணுகும் முறையும் காணப்படுகின்றது.

சீதை, அகலிகை, மண்டோதரி, ஊர்மிளை எனப் பலக் காப்பியமாந்தர்களும் மீண்டும் மீண்டும் மறுவாசிப்புக்கு உட்படுகின்றனர். இம்மறுவாசிப்பு வர்ணதர்மமும், ஆணாதிக்கமும் பெண்ணைப் பற்றி ஏற்கெனவே நிலைநிறுத்தப்பட்டுள்ள அனைத்து பிம்பங்களையும் மறுதலித்து அவர்களின் உள்ளுணர்வுகளுக்கு மதிப்பளித்து உணர்வு ரீதியாக சிந்திப்பதைத் தாண்டி அறிவு ரீதியாகச் சிந்திப்பவர்களாகக் காட்ட முயல்கின்றது. (சாபவிமோசனம், அகலிகை, இராஜம் கிருஷ்ணனின் வனதேவியின் மைந்தர்கள், சத்திய வேள்வி அம்பையின் அடவி, எஸ்.எம்.ராம் தெலுங்கிலிருந்து மொழிபெயர்த்த ஊர்மிளை என்னும் சிறுகதை, எம்.ஏ.சுசிலாவின் ஊர்மிளை என்னும் சிறுகதை, கனகை). இராமாயணத் தாக்கம் என்பது வெறும் இலக்கியங்களோடு நின்றுவிடாமல் அரசியல் கட்சிகள் தன் கருத்தியலை விளக்கும் சாதனமாகப் பயன்படுத்தியதினின்று இத்தொன்மம் அரசியலாக்கப்பட்டதையும் உணர முடிகின்றது. இவ்இராமாயணத் தொன்மம் ஏற்பு, எதிர்ப்பு என்ற பல நிலைகளில் இன்று வரை நிலைத்திருக்கும் சமகால இலக்கியமாகத் திகழ்கின்றது. அதன் தாக்கம் பண்டைய இலக்கியங்கள், தற்கால இலக்கியங்கள், மீள்வாசிப்பு படைப்புகள் எனப் பலவகைகளில் பயன்படுத்தப்பட்டது என்பதை ஆராயவும் வாய்ப்பை ஏற்படுத்தித் தந்தது எனின் அது மிகையாகாது.

## பண்டைய இலக்கியங்களில் இராமாயணத் தொன்மம்:

அகநானூறு, புறநானூறு, பரிபாடல், கலித்தொகை போன்றவற்றில் இராமாயணத் தொன்மக்கதையைப் புலவர்கள் எடுத்தாண்டுள்ளனர். அகநானூற்றில் இலங்கையில் போர் நிகழ்ந்தபொழுது அந்தச் சப்தத்தினைக் கேட்க முனிவர்கள் ஆலமரத்தில் இருந்த பறவைகளை ஒலி எழுப்பாமல் செய்த நிகழ்ச்சி இடம்பெறுகிறது.

*'வென்வேற் கவுரியர் தொள்முது கோடி*

*முழங்கி வரும் பெளவம் இரங்கும் முன்னுறை*

*வெல்போர் இராமன் அருமறை அவித்த*

*பல்வீழ் ஆலம் போல*

*ஒலி அவிந்தன்று இவ் அழுங்கல் ஊரே'* (அகம்.70).

புறநானூற்றில் சீதை கீழே வீசிய அணிகலன்களைக் குரங்குகள் எவ்வாறு அணிவது எனத் தெரியாமல் மாற்றி மாற்றி அணிந்து கொண்டதைப் பின்வரும் பாடல் வாயிலாக அறியமுடிகிறது.

*'கருந்தெறல் இராமனுடன் புணர் சீதையை*

*வலித்தொகை அரக்கன் வௌவிய ஞான்றை*

*நிலஞ்சேர் மதரணி கண்ட குரங்கின்*

*செம்முகப் பெருங்கிளை இழைப் பொலிந்தாங்கு*

*அறாஅ அருநகை இனிது பெற்றிகுமே'* (புறம். 378).

பரிபாடலில் இராமாயணக் கிளைக் கதைகளில் ஒன்றான அகலிகைப் பெற்ற சாபம் பற்றிக் குறிப்பிடுகின்றது.

*'இந்திரன் பூசை இவள் அகலிகை இவன்*

*சென்ற கவுதமன் சின்னுறக் கல்லுரு*

*ஒன்றிய படியிது என்று உரை செல்வாரும்'* (பரி.19: 5052).

கலித்தொகையில் இராவணன் கையிலை மலையைப் பெயர்த்த செய்தி குறிப்பிடப்படுகின்றது.

*'ஐ இரு தலையின் அரக்கர் கோமான்*

*தொடிப்பொலி தடக்கையின் கீழ்ப்புகுத்து'* (கலி.38).

சிலப்பதிகாரத்தில் இராமன் பற்றியக் குறிப்பு காணப்படுகின்றது. கோவலனுக்கும் கண்ணகிக்கும் கவுந்தியடிகள் அறிவுரை வழங்குமிடத்து இக்கதை இடம்பெறுகின்றது.

*'தாதை ஏவலின் மாதுடன் போகிக்*

*காதலி நீங்கக் கடுந்துயருழந்தோன்*

*வேத முதல்வன் பயந்தோன் என்பது நீயறிந்திலையோ?'*

(சிலம்பு.ஊர்காண் காதை:4649).

இவ்வாறு வாய்மொழி மரபு தொடங்கி சங்க இலக்கியத்தில் குறிப்புகளாக, உவமைகளாக, எடுத்துக்காட்டுகளாக கையாளப் பெற்றமை பின்னர் பக்தி இயக்கக் காலத்தில் வைணவத்தில் திருமாலின் கல்யாண குணங்களில் ஆழ்ந்த ஆழ்வார்கள் பலர் இராம அவதாரத்தையும் குறிப்பிட்டுக் காட்டியுள்ளனர். நம்மாழ்வார் 'இராமபிரானை அல்லால் மற்றும் கற்பரோ' என்கிறார் (ஐந்தாந் திருவாய்மொழி 75 1). ஆண்டாள் தம் திருப்பாவையில் 'சினத்தினால் தென்னிலங்கைக் கோமானைச் செற்ற மனத்துக்கினியானைப் பாடவும் நீ வாய் திறவாய்' என்கிறார்(திருப்பாவை, 12).

இவ் இராமாயணக்குறிப்புகள் இராமனைக் கடவுளாகக் காட்டியுள்ளதிலிருந்து கம்பருக்கு முன்பே இராம வழிபாடு இருந்தது என்பது புலனாகும். இதற்குப் பின்னர் தோன்றிய கம்பராமாயணம் என்ற பெருங்காப்பியம் 10569 பாடல்களைக் கொண்ட மிகப்பெரிய காப்பியமாக விளங்கியதற்கும் கம்பர் தம் இராமாயணத்தில் கையாண்ட புதுநெறிக்கும் பண்டைய இலக்கிய மரபின் தாக்கமும் காரணமாகின்றன. பல மொழிகள் வான்மீகி இராமாயணத்தைப் பிரதிபலித்த அதேவேளையில் கம்பர் தமிழ் மரபிற்கு ஏற்ற வகையில் படைத்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

தமிழில் இராமாயணம் தொகுக்கப்பட்டபொழுது ஒவ்வொரு பகுதியிலும் கிடைக்கப்பெற்ற இராமாயண ஏடுகளில் பல்வேறு பாடபேதங்கள் நிலவின என்பதிலிருந்து தமிழகம் முழுவதும் இராமாயணம் பரவி இருந்தமையையும் அறியமுடிகின்றது. இவ்வாறு தமிழ்ப்பண்பாட்டை ஏற்று இலக்கியப்படுத்துங்கால் அவை மூலக்காப்பியத்தை விடச் சிறப்பிடம் பெற்ற காப்பியமாக விளங்கிய பெருமையும் இதற்குண்டு.

'கம்பர் காப்பியம் கதையால் தழுவலாயினும் மொழியாலும் நடையாலும் பண்பாலும் உணர்ச்சியாலும் அன்பாலும் தமிழ் மண்ணிற் பிறந்த நிலக்காப்பியம் ஆகும். மொழிபெயர்ப்புக் காப்பியத்தை மொழிபிறப்புக் காப்பியமாகவே உருவாக்கி

*அருளிய திறம் கம்பரிடத்ததுப் போல் பிறரிடம் காண முடியாது'*

*(மாணிக்கம்,2001 p.58.).*

என்ற மேற்கண்ட விளக்கமே தழுவல் காப்பியமாக அல்லாமல் தமிழ் மூலக்காப்பியங்கள் பெறுமிடத்தை கம்பராமாயணமும் பெற்றுவிட்டது என்பதை அறியமுடிகின்றது. இவ்வாறு தமிழ் கூறும் நல்லுலகத்தால் போற்றப்பட்ட இக்கதை தற்கால இலக்கியங்கள் வரை எடுத்தாளப்பட்டிருக்கிறதெனில் அதன் வளர்ச்சி காலங்கடந்து நிற்கும் அதன் நிலைப்புத்தன்மையும் காணமுடிகின்றது.

பின்னாளில் இராமாயணக்காப்பியத்தை இசை நாடக வடிவில் இராம நாடகக் கீர்த்தனை(1997) என்ற பெயரில் அருணாச்சலக் கவிராயர் மீட்ருவாக்கம் செய்தார் (இராஜகோபாலன், 2014. றி.165). தஞ்சை சுப்ரமணியர் இராமாயண வெண்பா என்ற பெயரில் மீளுருவாக்கம் செய்தார். நாட்டுப்புற இலக்கிய வடிவில் இராமாயணக்கும்மி, இராவணன் கும்மி, ஸ்ரீராமர் வனவாசம், மயில் ராவணன் கதை போன்ற படைப்புகள் குறிப்பிடத்தகுந்தவையாக வெளிவந்தன (ச.வே.சுப்ரமணியம்,1998, p.142).

தென்னிந்தியாவில் இராமாயணக்கதைகளின் தாக்கம் தற்காலம் வரை தொடர்ந்து வந்திருப்பதை பௌலா ரிச்மன் "தென்னிந்தியாவில் இன்றைய இராமயணக்கதைகள்" என்ற நூலில் தொகுத்திருக்கிறார். அதில் தமிழ் மொழியில் பெற்ற தாக்கம் பற்றி இவர் எடுத்துக்காட்டிருப்பவை கவனிக்கத்தக்கவை. நாவல் வடிவில் இராஜம் கிருஷ்ணனின் வனதேவியின் மைந்தர்கள், சத்திய வேள்வி, அம்பையின் அடவி போன்றவை குறிப்பிடத்தக்க படைப்புகள் ஆகும். சிறுகதை வடிவில் இராமயணக் காப்பியத்தில் இடம்பெறும் கிளைக்கதைகளே மீள்வாசிப்பிற்கு உட்படுத்தப்பட்டன. இவற்றில் முதலாக பாரதியாரின் குதிரைக் கொம்பு, அசோகமித்ரனின் உத்தர ராமாயணம், புதுமைப்பித்தனால் படைக்கப்பட்ட நாரதார் ராமாயணம், சாபவிமோசனம், அகலிகை போன்றவை குறிப்பிடத்தக்க படைப்புகள் ஆகும் (Paula Richman,2008,p.122).

புதுக்கவிதையைப் பொறுத்தவரை இராமாயணத் தொன்மங்கள் பல கவிஞர்களால் எடுத்தாளப்பட்டுள்ளன. அக்கவிதை சித்திரிப்பு முறையானது கேள்விக்குள்ளாக்குவது, தீர்வுகளைத் தருவது என்ற இருநிலைகளில் அமைகின்றன. "இராமயணத் தொன்மத்தில் அதிகம் கேள்விக்குள்ளாக்கப்படுபவர்கள் மறுவாசிப்புக்கு உட்படுபவர்கள் சீதையும் அகலிகையும்தான்"

*(கருமலைத்தமிழாழன்,1998, ப.15).*

திலகபாமாவின் சவப்பெட்டி என்னும் கவிதையில்

*'தீக்குளித்த சீதையாய்*

*மறித்த இடம் மறைத்து*

*வான் தொட நீளுகின்ற வேளையில்*

*காலடியில்*

*விறகு வெட்டி*

*நான் முறித்துப் போட்ட கிளைகளிலிருந்து*

*கோடாரிக் காம்பு செய்கிறான்'*

*(திலகபாமா,2009,p.9).*

*அப்துல் ரகுமான் தனது கவிதையில்*

*'என் கவித்துவமே*

*உன் பாதத் தூளி*

*இந்த அகலிகைகள் மீது*

*படாமல் பார்த்துக்கொள்*

*ஏனெனில் அது ஒரு சாபமாகி விடலாம்'*

*(அப்துல் ரகுமான் ,1974,p.37).*

இவ்வாறு பல வடிவங்களில் இராமாயணத்தொன்மம் தற்காலம் வரை தொடர் வாசிப்பிற்கும் புதிய கண்ணோட்டங்களுக்கும் வழிவகுத்தது. வெறும் இலக்கியங்களில் மட்டும் இத்தொன்மக்கதை நின்றுவிடவில்லை. கம்பராமாயணத்தைப் புதிய நோக்கில்

ஆராய்ந்து கம்பராமாயணத்தை ஓர் அரச எதிர்ப்புக் காப்பியமாகவும் சித்தரித்து, தன் காலத்தின் அரசு, அரசன், சமூகச்சூழல், வர்ணாசிரம தர்மம், நிலவுடைமை என்ற சமூகத்தின் ஆதிக்கம் இவற்றிற்கு எதிராக கம்பன் காண விரும்பிய சமூகத்தைக் காப்பியமாக படைத்துள்ளார் என சி.மௌன குரு தன் ‘கம்பராமாயணம் ஓர் அரச எதிர்ப்புக் காப்பியம்’ என்ற கட்டுரையில் எடுத்துக்காட்டுகின்றார்.

‘ஏற்றத்தாழ்வுகள்மிகுந்து, அடக்குமுறைகள் நிறைந்து, சமூகப்பிரிவுகள் மலிந்து கிடந்த சமூகத்தில் வாழ்ந்த கம்பன் இவைகள் எதுவும் இல்லாத மனிதனை, மனிதன் மதிக்கும் உலகைக் கற்பனை செய்யும் மனிதனை மனிதனாகக் கண்டான். மனிதன் தெய்வநிலையில் வாழவேண்டும் என்று விரும்பினான்.மானிடத்தின் இலட்சிய வடிவமாக இராமனைக் கண்டான்’

(மௌன குரு .2006 p.111).

இவ்வாறு புதிய கண்ணோட்டத்தில் கம்பராமாயணத்தை அணுகிய விதமும் குறிப்பிடத்தக்கது.எனப் பல விவாதங்களுக்கும் வழிவகுத்த கம்பராமாயணம் தமிழ்ச்சூழலில் அரசியல் கருத்தியல் விளக்கத்திற்கும் பயன்பட்டது. அத்தாக்கம் பற்றி இங்கு விரிவாக விவாதிக்கப்படுகின்றன.

### இராமாயண எதிர்கதையாடல்கள்

புதுமைப்பித்தன் தன் நாரத ராமாயணம் பற்றிய முன்னுரையில் ராமாயணம் மீண்டும் பல வாசிப்புகளுக்கு ஆட்பட்டதைப் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

‘காலத்தின் தேவை, கதை பரப்புதலின் நோக்கம், இடச்சார்பு கேட்போர் அல்லது காண்போர் நிலை சூழல் போன்ற பலவற்றின் காரணமாகப் பலவகையாக மீண்டும் மீண்டும் உருவாகும் நிலை இராமாயணத்திற்கு அமைவது இவற்றை நோக்கத்தெரிகின்றது. பொழுதுபோக்காகவும் அறிவுறுத்தலாகவும் அரசியல் வாழ்க்கைக்கு இணைமை அல்லது எதிர்மையாகவும் இன்றும் பிறநிலைகளிலும் பல வடிவில் நடிக்கப்பட்டும் கூறப்பட்டும் எழுதப்பட்டும் அமைகின்றது எனலாம். இதனால் கதை சுருங்குதல், ஒரு பகுதி பேரளவாகி விரிதல், ஒரு குறிப்பிட்ட பாத்திரம் அல்லது நிகழ்ச்சி மட்டும் முக்கியத்துவம் பெறல், கதையில் ஆழமும் அழுத்தமும் குன்றி நகை நையாண்டிக்கு இடனாதல்’

( புதுமைப்பித்தன்,2002, pp.35).

எதிர்கதையாடல் வடிவில் மீள்வாசிப்புக்கு உட்பட்ட படைப்புகளில் இராமாயணம் முதலிடம் பெறுகின்றது. இவ்வெதிர்கதையாடல் வடிவம் அங்கத வடிவில், மறைக்குறிப்பு முறையில் அமைத்தல், எதிர்த்தல் எனப் பல நிலைகளில் கையாளப்பெற்றுள்ளது. இராமாயணத்திற்கும் கம்பனுக்கும் எதிர்ப்புத் தெரிவிக்கும் முறையில் தமிழில் பல படைப்புகள் எழுந்துள்ளன. அவ்வகையில் இவ்வெதிர்கதையாடலை வளர்த்தவர்களில் முக்கியமானவர்களாய் திராவிட இயக்கத்தினர் கருதப்படுகின்றனர் (காயத்ரி பிரியதர்ஷினி, 2017, p.212). இவர்களின் படைப்புகளில் தொன்மக்கதையில் எவ்வித மாற்றத்தையும் செய்யாமல் படைப்பைத் திறனாய்வுக் கண்ணோட்டத்தோடு அணுகியிருப்பதோடு தம் கருத்தியல் சார்ந்து எதிர்த்தனர் என்பது ஆய்வாளர்களின் கருத்து (காயத்ரி பிரியதர்ஷினி, 2017, p.215). இவ்வாறு பனுவலிடை உறவு (Meta fiction) எனும் முறையில் அமைந்த படைப்புகள் உருவானதன் வரலாற்றுப் பின்னணியும் உற்றுநோக்கவேண்டியுள்ளது.

### புராண இதிகாசங்கள் பற்றித் திராவிட இயக்கத்தினர்

‘இந்து மதத்தின் பெயரால் நிலைநிறுத்தப் பெற்றுள்ள பார்ப்பனர், சூத்திரர், பஞ்சமர் என்ற உயர்வு தாழ்வுப் பிரிவுகளைக் காப்பதும், வேத, ஆகம இதிகாச புராணங்களின் பெயரால் மூடப்பழக்கவழக்கங்களையும், விழாக்களையும், பண்டிகைகள், சடங்குகள், விரதங்கள் ஆகிய அனைத்தையும் தொடர்ந்து இருக்கச் செய்யும் வகையில் பக்திப் பிரச்சாரம் செய்வதும் இச்சங்கங்களின் நோக்கமாக இருந்து வந்துள்ளதை இவரின் நூலின் சாராம்சம் புலப்படுத்துகிறது’

(முத்துக்குமார் ,2010,p.48).

ரங்கசாமி பார்த்தசாரதி A Hundred Years of the Hindu என்ற நூலில் குறிப்பிடுகிறார். அதற்கென வலுவான காரணங்களையும் முன்வைத்தனர். திராவிட இயக்கம் பார்ப்பன எதிர்ப்பிற்கு அடுத்தபடியாகப் புராண, இதிகாசங்களை எதிர்ப்பதைத் தங்களின் சீர்திருத்தத்திற்கான புதிய வழிமுறையாகக் கண்டனர். புராண, இதிகாசங்களைக் கூறிப் பார்ப்பனர்கள் தங்கள் ஆதிக்கத்தைச் செலுத்துகின்றனர். கடவுள் என்ற பெயரால் மக்களை அடிமையாக்க முனைகின்றனர். அதற்குத் துணையாக வேதங்களை வகுத்தனர்.

புராண இதிகாசங்களைப் படைத்தனர் என்பதை வலியுறுத்தினர். பகுத்தறிவுக் கொள்கையின் வளர்ச்சியால் புராண இதிகாசங்களை விமர்சிக்கும் புதிய சிந்தனையை உருவாக்கித் தந்தனர். பழங்கதைகள் பலவற்றிற்கும் புதிய விளக்கமளித்தனர். இவ்வாறு புது விளக்கமளிக்க இவர்கள் எடுத்துக்கொண்டவை மக்களிடம் அதிகம் செல்வாக்குப் பெற்ற இலக்கியங்களாக இருந்தன. காலத்திற்கும் தேவைக்கும் ஏற்ப புதிய சிந்தனைகளை அளித்தனர். அதில் குறிப்பாக இராமாயணத்தை ஆரிய திராவிட மோதலாகக் கண்டனர். ஆரிய எதிர்ப்பு என்பதன் முதல்படியாக கம்பராமாயணத்தை விமர்சனம் செய்ய முற்பட்டனர்.(காயத்ரி பிரியதர்ஷினி, 2017, p.213).

திராவிட இயக்கத்தாரின் இயக்கச் சார்பு விமர்சனங்களுக்கு முன்பாகவே பழைய வைதிக சமயக் கருத்துக்களைக் கட்டுடைக்கும் வேலையினைத் தத்துவவிவேசினி என்ற இதழ் செய்துவந்திருக்கிறது. அவ்விதழ் தொன்மங்களை மறுவாசிப்புச் செய்ததைச் சுந்தர் காளியின் மேற்கோள் வாயிலாக அறியமுடிகிறது:

‘இராவணன் கதையும் அகலிகை கதையும்கூட இத்தகையதொரு மறுவாசிப்புக்கு உட்படுவதைக் காணலாம்... இத்தகைய எதிர்க்கதைகூறலே பிற்காலத்தில் பாரதிதாசனின் இரணியன் அல்லது இணையற்ற வீரன், புலவர் குழந்தையின் இராவண காவியம் முதலிய திராவிட இயக்கப் படைப்புகளுக்கு வழிகோலியது எனலாம்‘

(காளி, 2014,p.14).

இதை அடுத்து 1908இல் வெ.ப.சுப்ரமணிய முதலியார் ‘இராமயண உள்ளுறைப் பொருளும் தென்னிந்தியச் சாதி வரலாறும்‘ (1908,Ramayana or an Account of South Indian castes) என்ற கட்டுரை ஒன்றை The Tamilian Antiquary என்ற இதழில் எழுதினார். இதில் இராவணனைத் திராவிடனாகச் சித்திரித்தார். 1928இல் எம்.எஸ்.பூரணலிங்கம் பிள்ளை Ravana: The Great King of Lanka என்ற நூலை வெளியிட்டார் (வீரபாண்டியன்,2012,p.56).

இந்நூலே பின்னால் இராவணன் புகழ்பாடும் எல்லா நூல்களுக்கும் முன்னோடியாய் விளங்கியது. இதன் பின்னரே இராவணனைப் புகழ்ந்தும் கம்பராமாயணத்தையும் வால்மீகி இராமாயணத்தையும் விமர்சித்தும் திராவிட இயக்கத்தார் நூல்களைப் படைக்கலாயினர். இராமயணத்தை எதிர்க்கும் அவர்கள் முன்வைக்கும் அடிப்படையானக் கருத்து இராவணன் ஒரு தமிழன் என்பது. மேலும் இராவணன் சிறந்த தமிழ் வீரன். அவன் வீரம் போற்றுதலுக்குரியது என்றும் வரலாற்றின் திரிபால் கொடுங்கோலனாக சித்தரிக்கப்பட்டுள்ளான் என்றும் விமர்சனம் செய்தனர். மேலும் இவர்களின் இராமாயண விமர்சனம் என்பது மூன்று வகையாக அடக்கிவிடலாம்.

1. மூலக்காப்பியத்தில் புதியவற்றைப் புகுத்தி விமர்சனம் செய்தல்
2. மூலக்காப்பியத்தின் மீதான நேரடி விமர்சனம்
3. மூலக்காப்பியத்தினை முற்றிலுமாக மாற்றியமைத்தல்.

பகுத்தறிவுவாதத்தோடு இணைத்த விமர்சனமாக அவை அமைந்திருந்தன என்றால் மிகையாகாது. திராவிட இயக்கத்தினரிடையே புராண இதிகாச எதிர்ப்பு என்பது அவர்களின் அரசியல் கலகக் குறியீடாக அமைந்தது என்பதை

*அவர்களின் படைப்புகள், விமர்சனங்கள் வாயிலாக அறியமுடிகின்றது (காயத்ரி பிரியதர்ஷினி,2017,p.222).*

## பெரியார் பார்வையில் கம்பராமாயணம்

*திராவிட இயக்கம் ஒரு வெகுஜன இயக்கமாக உருவெடுக்க காரணமாக இருந்தவர்களில் ஒருவர் பெரியார். இவர் வால்மீகி ராமாயணம், மகாபாரதம், கம்பராமாயணம் போன்றவற்றைத் தொடர்ந்து தாக்கி வந்தார். அதன் உச்சமே கீழ்வரும் அவரின் கூற்று:*

*'முதலாவதாக நான் கடவுள் தத்துவத்தையே எதிர்த்துப் பேசுகிறேன். இரண்டாவதாக நான் உலகிலுள்ள மதங்களைச் சிறுமைப்படுத்துகிறேன். மூன்றாவதாக நான் சாத்திரங்களையும், புராணங்களையும், கடவுள்களையும் கண்டனம் செய்கிறேன். அவற்றைக் கொளுத்தி அழியுங்கள் என்கிறேன்'*

*(முத்துக்குமார், 2011,p.72).*

*ராமாயணப் போரை ஆரியர் மற்றும் திராவிடர்களுக்கு இடையிலான போராகக் கண்டார். 'தொடர்ந்து இனியும் இந்தப் புராணத்தை மதித்து மரியாதை செய்வது தமிழர்களின் சுயமரியாதைக்கு இழுக்கு' (முத்துக்குமார், 2011, p.34) என்றார். இந்த எதிர்ப்பின் உச்சமாகவே 1944 சேலம் மாநாட்டில் கம்பராமாயண, பெரியபுராண எதிர்ப்பு முன்வைக்கப்பட்டது (முத்துக்குமார், 2011, p.45). இது புதிய பார்வைக்கும் கண்ணோட்டத்திற்கும் வழிவகுத்தது என்றால் மிகையாகாது.*

## அண்ணாவின் பார்வையில் கம்பராமாயணம்

*அண்ணா பெரியாரின் கம்பராமாயணத்தை எதிர்த்தல் என்ற கொள்கையை முழுமையாக அப்படியே ஏற்றுச் செயல்பட்டார் என்று கூறிவிட இயலாது. அண்ணா ராமாயணத்தை எதிர்த்துக் கம்பரசம்; என்ற நூலையும், தீ பரவுட்டும் என்ற நூலையும், நீதி தேவன் மயக்கம் என்ற நாடகத்தையும் எழுதினார் (கண்ணன்,2011,p72). அண்ணாவின் எதிர்ப்பில் பெரியாரின் கண்ணோட்டம் சிறிய அளவில் தொனித்தது என்றே கூற வேண்டும். இதை அவரின் கம்பரசம் என்ற நூலே வெளிப்படையாக உணர்த்தும். கம்பரசம் என்பதில் முழுமையாகக் கம்பரைத் தவறாகச் சித்திரிக்கும் மனோபாவமே வெளிப்படுகிறது. கம்பர் ராமாயணத்தில் கூறிய வருணனைகளை எடுத்துக்காட்டித் தமிழரின் கலையையும் நிலையையும் குலைத்து ஆரியத்தைப் புகுத்தும் இது ஒரு காமரசம் என்கிறார்.*

*'அயோத்தி மக்களைப் போன்ற அயோக்கியர்கள், அநாகரிகப் புத்தியும் போக்கும் கொண்டவர்கள், காமாந்தகாரனானக் காட்டுமிராண்டிகள் வேறு எங்கும் இல்லை என்று நான் கூறுகிறேன். தம்முடன் வரும் அணங்குகள் ஆடை அணிந்திருப்பதால் அவர்தம் அல்குல் வெளியே தெரியவில்லையே என ஏங்கிக் கிடந்து பின்னர் தெரிந்ததும் கண்டேன், கண்டேன், களி கொண்டேன் என்று கருதிடும் மக்களை என்னவென்று கூறுவீர்கள்'*

*(அண்ணா, 1996,p.7).*

*கம்பர் தன் கவித்திறனைப் பெண்களை வருணிப்பதிலேயே செலவிடுகிறார். வருணனை என்ற பெயரில் பெண்ணை மிகவும் கீழ்த்தரமாகச் சித்திரிக்கிறார். பரதன், இராமன், சீதை, தசரதன், அயோத்தி மக்கள் என அனைவரையும் விமர்சிக்கிறார். காம எண்ணம் கொண்டவர்களாகவும் தீயவர்களாகவும் காட்டுகிறார்.*

*இராமாயணத்திற்கு எதிராகப் பெரியார் தலைமையில் பெரிய எதிர்ப்புகள் வந்த நிலையில் 1943இல் சென்னை சட்டக் கல்லூரி மண்டபத்தில் இராமாயணம், பெரிய புராணம் பற்றிய ஓர் உரையாடல் நடைபெற்றது, இதில் அண்ணாத்துரை, ஈழத்தடிகள், ரா.பி.சேதுப்பிள்ளை போன்றோர் பங்கேற்றனர் (அண்ணா, 1996, p.11). இதில் அண்ணா பெரியாரின் கருத்தை ஒட்டி ஆரியதிராவிட மோதலாகக் கம்பராமாயணத்தை விமர்சித்தார். ஆரியரைப் பெருமைப்படுத்தும் முயற்சியின் விளைவே கம்பராமாயணம் என்று சாடினார்.*

*'ராமனைக் குற்றங்குறையற்ற சற்புத்திரனாக வழிபாட்டுக்கு தெய்வமாக்கிவிட்டார்.*

ராவணன் மிக்க பலசாலி, திறமை உடையவன், வேதம் பயின்றவன், சிவபக்தன், இலங்கை சகல சுகமும் நிரம்பிய இடம் என்று வருணித்துவிட்டு இவ்வளவு குணாளனும் திறமைசாலியுமான ராவணன் ஓர் ஆரிய மங்கையைக் கண்டு காமுற்றுக் கருத்தழிந்தான் என்ற கதையைப் படிப்பது திராவிடருக்கும் ஆபத்து, ஆரியருக்கும் ஆபத்து'.

(அண்ணா, 1996, p.11).

இதில் அண்ணாவின் கருத்துக்களுக்கு ரா.பி.சேதுப்பிள்ளை மறுப்புத் தெரிவித்துத் தன் கருத்துக்களை எடுத்து வைத்தார். பின்னர் இடையிலே அவர் சபையை விட்டு வெளியேறினார். இவ்வுரையாடலின் முடிவில் அண்ணா வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது.

இராமாயணக் கதையை மீட்டுருவாக்கம் செய்யும் முறையில் நீதி தேவன் மயக்கம் என்ற நாடகத்தை அண்ணா எழுதினார் (காயத்ரி பிரியதர்ஷினி,2017,p.215). இதில் இராவணன் தன் தரப்பு நியாயங்களை எடுத்துக்காட்டி திராவிடர்கள் படும் துயரைத் தெளிவாக எடுத்துக்கூறி நியாயம் கேட்கிறான்.

'என் தங்கைக்கு பங்கம் செய்தவர்களைப் பழி வாங்க வேண்டுமென்ற எண்ணம் என் கண்முன் நிற்கிறது. சீதை கதறியபோதிலும் இரக்கப்படக் கூடாது இரக்கத்துக்காக வேண்டி, அரக்கர் குல அரசமங்கையின் அங்கத்தைத் துண்டித்த ஆரியர்களை வதைக்காது விட்டோமானால் எமது குலத்தையே ஆரிய குலத்தின் அடிமையாக்கி வைக்கும் இழிசொல் புரிந்தவனாவோம்'.

(அண்ணா, 2008, p.24).

இறுதியில் இராவணனின் வாதத்தில் இருக்கும் நியாயத்தைக் கேட்டு நீதிதேவன் மயங்கி விழுவதாகக் காட்டுகிறார்.

**இயக்கத்தாரின் இராமாயண விமர்சனங்கள்;**

மு.அண்ணாமலை திராவிட இயக்கம் சார்ந்த படைப்பாளர்களில் குறிப்பிடத்தகுந்தவர். பேராசிரியராகப் பணியாற்றியவர். இவரின் கம்பன் கெடுத்த காவியத்தில் (1951) கம்பராமாயணத்தில் குறிப்பிட்ட சில பாத்திர வார்ப்பை எடுத்துக்காட்டி அதை விமர்சனம் செய்கிறார். இது இலக்கியத்தோடு ஒத்து அமைந்துள்ளது. மேலும் உளவியல் ரீதியிலும் படைப்பாளர் எவ்வாறு சார்பற்றவராய் இருத்தல் வேண்டும் என்பதும் இங்கே எடுத்துக்காட்டுகிறார். இது இலக்கியக் கண்ணோட்டத்தோடு அமைந்த விமர்சனம் ஆகும். அனுமனை ராமதூதனாக அல்லாமல் ஓர் ஒற்றனாகக் காட்டுகிறார். தூதுவனுக்கு உரிய முறைமையினின்று தவறி இலங்கையை அழித்தது மிகவும் தவறான செயல் அவன் ஒற்றறியவே வந்தானன்றி இராமனின் தூதுவனாக அல்ல என்கிறார். கணவனை இழந்த மண்டோதரியின் புலம்பலை எடுத்துக்காட்டி இராமனைப் புகழ மண்டோதரியை ஒரு வாய்ப்பாகப் பயன்படுத்துகின்றார். மண்டோதரியின் உண்மையான மனோநிலையினைக் காட்டாமல் மறைக்கிறார்.

'அழியாத அமுது போன்றவனை, பாற்கடலிலே கண்வளரும் நாராயணனை, நான் எப்போதும் இராமன் என்று சொல்லிக் கொண்டிருப்பவன் இதையெல்லாம் நினையாமல் உத்தமனின் மனைவியைக் கொண்டு வந்தாய். அதன் பயன் மார்பில் காயம்பட்டுக் கிடக்கிறாய்'

(அண்ணாமலை,1951, p.8).

மந்தரை, கைகேயி போன்றவர்களைத் தானே அவர்களை மகாபாவம் செய்தவர்கள் தீயவர்கள் என படிப்பவர்களின் சிந்தனைக்கு இடங்கொடுக்காமல் நன்மை, தீமை என்பதை அவரே முடிவு செய்யும் விதத்தில் படைத்துள்ளதாக விமர்சிக்கிறார்.

எம்.ஆர்.ராதாவின் தடைசெய் ராமாயணத்தை என்ற நூல் (ராதா, 1998). ராமாயணத்தைத் தடை செய்ய முற்பட்டதால் திராவிட இயக்கத்தாருக்கு எதிராக அரசு செயல்பட்டவிதம், இராஜாஜி போன்றோரின் விமர்சனம் மேலும் அன்றைய அரசின் செயல்பாட்டோடு கம்பராமாயணத்தையும் இணைத்து விமர்சிக்கின்றது. சூத்திரன் தவம் செய்ததற்காக இராமன் கொன்றது. திராவிட மக்களை குரங்குகளாகவும், அரக்க அரக்கியராகவும் சித்தரித்தது.

வர்ணாஸ்ரமத்தை வலியுறுத்துவது. மேலும் ராமனை மாமிசம் சாப்பிடுபவராகவும் மது அருந்துபவராகவும் காட்டுகிறார்.

'ராமா என்ன அற்பத்தனமான வார்த்தை பேசுகிறாய் நீ வேஷத்தில் ஆணே ஒழிய உம்மிடம் ஆண்மையில்லை வீரம் இல்லை. தேஜஸ்தும் இல்லை. எந்தவித சக்தியுமில்லை. லோகமாதா கூறியிருக்கிறாள் அப்படியிருக்க நாம் எப்படி அவனை வீரன் என்று நம்புவது? சாதாரண வாலியை மறைந்து நின்று கொன்றிருக்கிறான். ராமன் இறுதியில் ஆற்றில் விழுந்து செத்திருக்கிறான் வீரனடைய முடிவா இது?

(ராதா,1998,p19)

இராமாயணத்தை எதிர்ப்பதற்கான காரணங்களை இவர் ஒவ்வொன்றாக எடுத்துக்கூறுகிறார்.

ஈ.வெ.ரா. மணியம்மையின் கந்தபுராணமும் இராமாயணமும் ஒன்றே என்பது சைவத்தால் உருவாக்கப்பட்டக் கட்டுக்கதையான காட்டுமிராண்டிக் கதையைப் போல் வைணவர்கள் உருவாக்கிய பழங்கதையே இராமாயணம் என்கிறார். இருபுராணக்கதைகளிலும் உள்ள ஒற்றுமைக் கூறுகளை எடுத்துக்காட்டி ஆரியர்கள் செய்த சூழ்ச்சிகளாக இதைச் சித்திரிக்கிறார். திராவிடர்களை இழித்துக் கூற இவர்கள் ஏற்படுத்திக் கொண்ட வாய்ப்பு என விமர்சிக்கிறார்.

'கந்தபுராணமும் இராமாயணமும் வடமொழியில் உள்ள மூலக் கதைகளைக் கொண்டவையாகும். இரண்டு மூலமும் ஆரியர்களால் உண்டாக்கப்பட்டவையாகும். இரண்டு கதைகளும் ஆரிய சமயக் கொள்கைகளை வலியுறுத்துவதைக் கருத்தாய்க் கொண்டு ஆரியக் கடவுள்களைப் பெருமைப்படுத்த ஏற்படுத்தியவையாகும்'

(மணியம்மை,1960,p.1).

இதில் ஒப்பீட்டு முறையில் அமைந்ததோடு ஆரிய நோக்கத்தை எடுத்துக்காட்டுவதை முதன்மை நோக்கமாகக் காட்டுகிறார்.

பாரதிதாசனின் திருந்திய ராமாயணம் என்னும் சிறுகதையில் டெலிபோன் படலம் என்னும் பகுதி இடம்பெறுகின்றது. இதில் ஆரியனான இராமன் பட்டாபிஷேகத்தைத் தமிழ்ப்பெண்களான கைகேயியும் மந்தரையும் எதிர்ப்பதோடு இராமனின் செயல்களை விமர்சனம் செய்வதாகவும் படைத்துள்ளார். 'எதிர்காலத்தில் தமிழரின் இந்தியாவை ஆரியர் ஆட்சிக்கு உட்படுத்துவதில் உங்கட்கு விருப்பம் இருந்தால் ராமனுக்கே பட்டம் சூட்டுங்கள்' (பாரதிதாசன், 2007, p.44).

தசரதன் மந்திரியின் கூற்று வாயிலாக இராமன் ஆரியன் திராவிட நிலப்பகுதியைத் தன் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரும் எண்ணம் கொண்டவன் என்பதாகக் காட்டுகின்றார்.

புலவர் குழந்தையால் எழுதப்பட்ட இராவணகாவியம் காப்பிய நெறியைப் பின்பற்றி எழுதப்பட்டது. இராவணனை காப்பியத் தலைவனாகவும் இராமனை எதிர்நிலையாகவும் வைத்துப் படைக்கின்றார். இராவணனின் சிறப்பு, இலங்கை நகரச் சிறப்பு என அதன் அடிநாதமாக திராவிடப் பெருமையும் ஆரியரை எதிர்த்தலையும் இங்கே புலப்படுத்துகிறார். தம் நூலின் முன்னுரையில் தம் நூல் உருவாக்கத்திற்கான காரணத்தை முன்மொழிகின்றார் ஆசிரியர்

'இராமன் தெய்வமாகத் திகழ்வதற்காக இராவணன் அரக்கனாக்கப்பட்டான்.............. கவி தம் நோக்கத்துக்காக, இராவணன் மீது ஏற்றிய இழி குணங்களையும், கொடுஞ்செயல்களையும் களைந்தெறியும் இராவணனுடைய தூய்மைக்கு ஆதாரமான பல புகலவும், அஃதே போல இராமனுடைய குணம், செயல் ஆகியவற்றிலே காணக் கிடைக்கும் தவறுகளைத் தெளிவுபடுத்தவும் தோன்றிய நூலாகும்'

(புலவர் குழந்தை, 2001, p.18).

இராமனுடைய வீரம் அறம் வளர்க்கும் வீரம் இராவணனுடைய வீரம் மறம் வளர்க்கும் என்று கூறுவதோடு

'கம்பர் கொள்கைப்படியே கூற்றுப்படியே தனக்கு யாதொரு தீங்குஞ்செய்யாத ஒரு தமிழ் மூதாட்டியைத் துடிக்க வன்கொலை

செய்வதும், வழியில் தென்படும் தமிழர்களையெல்லாம் வம்பில் கொல்வதும், எதிர்ப்படும் பெண்களை எல்லாம் மூக்கு முலையறுத்துக் கொல்வதும் எத்தகைய தீங்கும் செய்யாதவனும், பகையில்லாதவனாய் தன்னுடன் எதிர் பொர வராதவனுமான வீர வாலியை மற்றொருவனோடு பொருது கொண்டிருக்கும்போது மறைந்து நின்று அம்பெய்து கொல்வதும் இலக்குவனனோடு எதிர்த்துப் பொருது கொண்டிருக்கும்போது குறுக்கே வந்து இராவணன் உயிரைக் குடிப்பதும் அறம் வளர்க்கும் வீரச்செயல்கள் தான்'

*(புலவர் குழந்தை, 2001,* p.*62).*

இக்காவியத்தைத் தொடர்ந்து துரை கே.மூர்த்தி இலங்கேஸ்வரன் என்ற பெயரிலும் அ.கு.வேலன் இராவணன் என்ற பெயரிலும் இராவணனைக் கதைத் தலைவனாக்கித் தம் படைப்புகளை அளித்தனர்.

இதனை அடுத்து திராவிட இயக்கச் சார்பாளரின் படைப்பாக பயணம் என்னும் நாவல் 2007இல் வெளிவந்தது (வேள்நம்பி, 2007). திராவிட இயக்கம் தொடங்கி அண்ணாவின் மரணம் வரை ஓர் இருபது ஆண்டுகால வரலாற்றை இப்படைப்பு கூறுகின்றது. வரலாற்றின் தொகுப்பாக அமைவதோடு திராவிட இயக்கத்தினரின் கருத்தியலை விளக்கும் நாவலாகவும் திகழ்கின்றது. இதில் திராவிட இயக்கத்தினர் இராமாயணத்தை எதிர்ப்பதற்கு என்ன காரணங்களை முன்வைத்தார்களோ அதே காரணங்களையே நாவலாசிரியர் வேள்நம்பி முன்வைக்கின்றார். தம் நாவலில் பிரதிவாதி பயங்கரம் அண்ணங்கராச்சாரியாரின் இராமாயண மொழிபெயர்ப்பையும் சி.ஆர்.சீனிவாச அய்யங்காரின் மொழிபெயர்ப்பையும் எடுத்துக்காட்டி தனது விமர்சனத்தைக் கூறுகிறார்.

வடமொழியினின்று தமிழ்மொழியில் வந்துவிட்டதால் மட்டுமே இது தமிழ் மொழிக்கும், பண்பாட்டுக்கும் உரிய காப்பியமாக மாறிவிடாது. தமிழர்களின் நெறிக்கு மாறாக உருவாக்கப்பட்ட கதைமாந்தர்கள்தான் கம்பராமாயணப் பாத்திரங்கள் என்கிறார். புராண இதிகாசத்தில் வரும் பெண்கள் குறிப்பாக சீதை என்ற பெண் கற்புக்கரசி. உலகத்திற்கெல்லாம் அன்னை என்பதெல்லாம் மறுதலித்து சீதையை அவளின் பண்பை விமர்சனத்துள்ளாக்குகிறார். அதற்கு இராமாயண மொழிபெயர்ப்புகள் வாயிலாகவே சான்றுகளையும் காட்டுகின்றார்.

குக்குவாவதி இராமன் உரையாடலை எடுத்துக்காட்டி சீதை பண்புள்ள பெண்மணியின் செயலா எனக் கூறுகிறார்.

'அண்ணா! உன் மேல் உனக்குள்ள ஆசையை விட அதிகமான ஆசை சீதையின் மேல் வைத்திருக்கிறாயே! இதோ வந்து பாருங்கள்! உங்கள் மனைவியின் உண்மை சொரூபத்தை! இராவணன் உருவத்தைக் கை விசிறியில் எழுதி, அந்த விசிறியைத் தன் மார்பின் மீது வைத்துக் கொண்டு படுத்திருக்கிறாள். இராவணின் சிறப்புகளை தன் மனதில் கற்பனை செய்து கொண்டு சந்தோஷித்துக் கொண்டிருக்கிறாள்'

*(வேள்நம்பி,2007,*p.*1068).*

என்ற சி.ஆர்.சீனிவாசய்யங்காரின் உரையை மேற்கோளாகக் காட்டி

'இப்படி எல்லா நிலைகளிலும் ஒழுக்கமற்ற ஒரு பெண்ணாக விளங்குபவளாகத் தான் சீதை காட்டப்படுகிறாள். வாழ்க்கைக்குத் தக்க எடுத்துக்காட்டும் அல்லள், வழிபாட்டுக்குரியவளும் அல்லள், வணங்கத்தக்கவளுமல்லள்

*(வேள்நம்பி,2007,*p.*1069).*

திராவிட இயக்கத்தார் கம்பராமாயணத்தை ஆரிய திராவிட மோதலாகவும், காப்பியத் தலைவனையும், தலைவியையும் தவறாகச் சித்திரிக்கும் மனோபாவத்தின் வெளிப்பாட்டின் தொடர்ச்சியே இவரது இராமாயணக் கண்ணோட்டம்.

திராவிட இயக்கச் சார்பாளராகத் தம்மை இனங்காட்டிக் கொள்ளாத பலரும் கம்பராமாயணத்தை விமர்சனக் கண்ணோட்டத்தோடு அணுகினர். அதில் அ.ச.ஞானசம்பந்தத்தின் இராவணன்

மாட்சியும் வீழ்ச்சியும். *(1965)*, சோமசுந்தர பாரதியின் தசரதன் குறையும் கைகேயி நிறையும் *(1926)*, பா.வே. மாணிக்க நாயக்கரின் கம்பன் புளுகும் வால்மீகி வாய்மையும் *(1916)* இ.மு.பாலசுப்பிரமணிய பிள்ளையின் இராமாயணத்தில் ஆபாசம் *(1929)*, ப.கண்ணனின் வீரவாலி *(1968)* போன்றவை குறிப்பிடத்தகுந்த படைப்புகளாகும். (பூர்ணசந்திரன், *2013*, p.*4*)

இவை மட்டுமின்றி கம்பராமாயண எதிர்ப்பு நூல்களுக்கு எதிர்ப்பு அமைந்த சிறப்பும் கம்பராமாயணத்திற்கு மட்டுமே உண்டு. சங்கர்லால் அண்ணாத்துரையின் தீ பரவட்டும் என்ற நூலிற்கு எதிர்ப்பாக செந்தீ பரவட்டும் என்ற நூலையும். (சங்கர்லால், *1974*) கு.பாலசுப்ரமணிய முதலியார் அண்ணாவின் கம்பரசத்தை எதிர்த்து கம்பரச மறுப்பு என்ற நூலையும் *(1949)* திராவிடர்களை அரக்கர்களாக இராமாயணம் சித்திரித்துள்ளது என்ற திராவிட இயக்கத்தினரின் வாதத்திற்கு மறுப்பு தெரிவிக்கும் வகையில் இரா.பி.சேதுப்பிள்ளை அரக்கர் தமிழரா என்ற நூலையும் எழுதியுள்ளனர் (பூர்ணசந்திரன், *2013*, p.*5*).

## தொகுப்புரை

இராமாயணம் என்ற தொன்மக் காப்பியம் இந்தியா முழுவதிலும் பல வடிவங்களில் வழங்கப்படுகின்றது. இக்காப்பியம் முற்காலத்தில் எல்லாச் சமயத்தினருக்கும் பொதுவான காப்பியமாக இருந்தது. தத்தமது மதக் கருத்துக்களைப் பரப்ப இவற்றைப் பயன்படுத்திக்கொண்ட பொதுமைத்தன்மை நிறைந்த காப்பியமாகத் திகழ்ந்தது. ஏற்பு, எதிர்ப்பு என்ற இரு நிலைகளில் மீண்டும் மீண்டும் வாசிப்புக்கு உட்படுத்தப்பட்டது. தற்காலம் வரை தொடர் வாசிப்பிற்கும் மீளுருவாக்கத்திற்கும் வழிவகைசெய்கின்ற காப்பியமாகத் திகழ்கின்ற இக்காப்பியம் அரசியலாக்கப்பட்டது தமிழ்ச்சூழலில் மட்டுமே. அப்புதிய கண்ணோட்டத்தோடு இராமாயணத்தை அணுகும்முறைக்கு அடிகோலியவர்கள் திராவிட இயக்கத்தினரே. தங்களின் அடிப்படைக் கருத்தியலான கடவுள் மறுப்பு. அக்கருத்தியலை மீட்டுருவாக்கம் என்ற முறையில் கடவுள் தொடர்பான பழங்கதைகளைக் கேள்விக்குள்ளாக்குதல், பகுத்தறிவு வாதத்தோடு எதையும் அணுகுதல் என்ற கொள்கை முன்னெடுப்பில் இராமாயணத்தை அணுகி அதற்கான விவாதங்களையும் காரணகாரியத்தோடு அணுகி வெற்றிக்கொண்டனர்.

## References


Annamalai, Mu. (1951). *Kampan̲ kedutta kāviyam* (3ām patippu). Chennai: Dravidar Kal̲aga Veḷiyīdu.

Annaturai, C. N. (1996). *Ē, Tal̲nta Tamil̲akamē!: kaṭṭuraikaḷ*. Chennai: Seethai Patippagam.

Annaturai, C. N. (1996). *Kamparacam*. Chennai: Dravidar Kal̲aga Veḷiyīdu.

Annaturai, C. N. (2008). *Nītitēvan̲ mayakkam*. Cennai: Dravidar Kal̲aga Veḷiyīdu.

Apdul Rahman. (1974). *Pālvīti*. Chennai: Kavikkō Patippagam.

Barathithasan. (2015). *Paavēntam*. Chennai: Tamil Virtual Academy.

Karumalaittamil̲aal̲an̲. (1998). *Putukkavitaiyil ton̲maviyalāyvu*. Oshur: Vasantā Patippagam.

Maaṇikkam, Va. Supa. (2001). *Kampar*. Chennai: Meyyappan̲ Patippagam.

Maniyammai, E. Ve. Raa. (1960). *Kamparamayaṇamum kanta puraaṇamum on̲r̲ē*. Chennai: Aintām Patippagam.

Maunaguru, C. (2006). *Paṇdai Tamiḻar varalaaṟum paṇpaadum*. Chennai: Alaigaḷ Veḷiyīṭṭagam.

Muttukkumar, Ar. (2010). *Diravida Iyakka Varalaaṟu* (paakam 1). Chennai: Kiḻakku Patippagam.

Pulavar Kuḻanthai. (1946). *Raavaṇa kaaviyam*. Chennai: Jōti Press.

Putumaippittan. (2002). *Naarata Raamaayaṇam*. Chennai: Santiya Patippagam.

Ramanujam, A. K. (1999). Three Hundred Rāmāyaṇas: Five Examples and Three Thoughts on Translation. In Vinay Dharwadker (Ed.), *The collected essays of A.K. Ramanujam* (pp. 130-160). Delhi: Oxford University Press. Retrieved from http://www.sacw.net/IMG/pdf/AKRamanujan_ThreeHundredRamayanas.pdf

Ratha, Em. Ār. (1998). *Tadaicey Ramayaṇattai*. Chennai: Dravidar Kaḻaga Veḷiyīdu.

Richman, P. (Ed.). (2008). *Ramayana Stories in Modern South India: An Anthology*. Bloomington and Indianapolis: Indian University Press.

Subramaniayan, Sa. Vē. (1998). *Diravida moḻi ilakkiyaṅgaḷ*. Chennai: Maṇivaasagar Patippagam.

Suntar Kaḷi. (2014). *Tirumukamum cuyamukamum*. Maturai: Kārōṉ–Nīrōṉ Patippagam.

Vel Nampi. (2007). *Payanam*. Chennai: Seethai Patippagam.

# மலாய்மொழியில் மகாபாரதம்
# Mahabharata in Malay Language

இணைப்பேராசிரியர் முனைவர் சாமிக்கண்ணு ஜெபமணி ஈசாக்கு சாமுவேல் /
Assoc. Prof. Dr. Samikkanu Jabamoney Ishak Samuel [1]
பேராசிரியர் முனைவர் ராஜேந்திரன் முனியாண்டி / Prof. Dr. Rajantheran Muniandy [2]

***Abstract***

Even from the first centuries before Christ, it could be seen that the Indian arts, culture and literature had spread to the Malay islands. Initially, the coming of Indians to the Malay Islands was centered on business. Eventually, in the course of time, trade connections turned into cultural connections. With cultural connections, Indian arts and literature began to be rooted in the Malay islands. Due to that, the famous epics of the *Mahabharata* and *Ramayana* were translated into the ancient Javanese language and were used. Mahabharata stories from ancient Javanese language had been translated into Malay language. After the conversion of the Malays into Islam, the Mahabharata stories had been translated into Malay language followed by translations from the Arabic and Persian languages as well. Mahabharata stories In Malay literature are more prominent in their puppet shows.

Date of submission: 2019-05-01
Date of acceptance: 2019-06-20
Date of Publication: 2019-07-30
Corresponding author's
Name: Dr. Samikkanu Jabamoney
Email: samjabarose@yahoo.com.my

**Key Words:** Malay language, Malay literature, Malay culture, *Mahabharata* and pappet shows

### அறிமுகம்

இந்தியாவிற்கும் மலாயாத் தீவுகளுக்கும் இடையிலான தொடக்கக் கால வர்த்தக, பண்பாட்டு உறவுகள் கிறித்துப் பிறப்புக்கு முன்னே இருந்து வந்துள்ளன (Coedes, 1968). இந்த உறவுகள் இந்தியக் கதைகள் குறிப்பாக மகாபாரதமும் இராமாயணமும் மலாயாத் தீவுகளுக்குள் பரப்புவதற்கு வழிவகுத்துள்ளது (Ismail Hamid, 1987). மலாய் இலக்கியத்தில் மகாபாரதக் கதைகளைத் தழுவி எழுதப்பட்ட அநேக கதைகள் உள்ளன. அவை பெரும்பாலும், ஜாவா, அரபு, பரசீகம் ஆகிய மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்ட மகாபாரதக் கதைகளைத் தழுவி எழுதப்பட்டவையாகும் (Khalid Hussain, 1990).

### ஆய்வு முன்னோடிகள்

மலாய்மொழியில் மகாபாரதம் குறித்த தகவல்கள் பல்வேறு புத்தகங்களும் ஆய்வேடுகளும் ஆய்வுக் கட்டுரைகளும் இந்தோனேசிய, மலாய், ஆங்கிலம், டச்சு ஆகிய மொழிகளில் வந்துள்ளன. ஆனால், தமிழ்மொழியில் அதிகமான ஆய்வுகள் இதுவரையில் வரவில்லை. Traces of the Ramayana and Mahabharata in Javanese and Malay Literature என்ற புத்தகத்தை Choo Ming Ding, Willem Van Der Molen (1918) ஆகிய இருவர் தொகுத்து வழங்கியுள்ளனர். இப்புத்தகத்தில் பண்டைய ஜாவா, மலாய் ஆகிய மொழியில் எழுதப்பட்ட மகாபாரதக் கதை குறித்த தகவல்கள் விளக்கப்பட்டுள்ளன.

[1] The author is an Associate Professor in Tamil Language Programme, Sultan Idris Education University, Malaysia. samjabarose@yahoo.com.my

[2] The co-author is a Professor in the Department of Indian Studies, University of Malaya, Kuala Lumpur, Malaysia. rajanmun@ um.edu.my / rajantheran@gmail.com

Coedes *(1968,)* என்பவர் *The Indianized States of Southeast Asia* என்ற நூலை டச்சு மொழியில் எழுதியுள்ளார். இந்நூலை Susan Brown Cowing என்பவர் ஆங்கில மொழியில் மொழி பெயர்த்து மலாயாப் பல்கலைக்கழகப் பதிப்பகத்தின் வழி வெளியிட்டுள்ளார். இப்புத்தகத்தில் தென்கிழக்கு ஆசியாவில் இந்தியப் பண்பாட்டுத் தாக்கம் குறித்து விரிவாக விளக்கியுள்ளார்.

H.B. Sarkar (1970*)*, என்பவர் *Some Contribution of India to the Ancient Civilization of Indonesia and Malaysia* என்ற நூலை எழுதியுள்ளார். இந்நூலில், இந்தோனேசியா, மலேசியா ஆகிய நாடுகளின் பண்டைய நாகரீக வளர்ச்சிக்கு இந்தியா ஆற்றியுள்ள பங்களிப்பை விளக்கியுள்ளார். இந்நூலில் பண்டைய ஜாவா, மலாய் ஆகிய மொழிகளில் இடம்பெற்றுள்ள மகாபாரதக் கதைகள் குறித்துத் தெளிவாக விளக்கியுள்ளார்.

Ismail Hamid (1987), என்பவர் *Perkembangan Kesusasteraan Melayu Lama* என்ற நூலை மலாய்மொழியில் இயற்றியுள்ளார். இந்நூலில் பண்டைய மலாய் இலக்கிய வளர்ச்சியை எடுத்து இயம்பியுள்ளார். இந்நூலில் பண்டைய மலாய் இலக்கிய வளர்ச்சிக்குப் பண்டைய ஜாவா இலக்கியம் எவ்வாறு பங்காற்றியுள்ளது என்று விளக்கியுள்ளார்.

மேலும், Ismail Hamid (1985)*, Pengaruh epos Mahābhārata dalam kesusasteraan Melayu lama* என்ற ஆய்வுக் கட்டுரையை *Dewan Sastera* என்ற மலாய் இலக்கிய மாத இதழில் எழுதியுள்ளார். அவ்வாய்வுக் கட்டுரையில் பண்டைய மலாய் இலக்கிய வளர்ச்சியில் மகாபாரதம் ஏற்படுத்தியுள்ள தாக்கத்தை விளக்கியுள்ளார்.

இவரைப் போன்றே, Khalid Hussain *(1990)*, என்பவரும் Hikayat Pandawa Lima என்ற தலைப்பில் தொடர் ஆய்வுக் கட்டுரைகளை *Dewan Sastera* என்ற மலாய் இலக்கிய மாத இதழில் எழுதியுள்ளார். மலாய்மொழியில் பஞ்ச பாண்டவர்களின் கதை உருவாக்கத்திற்கு ஜாவா மொழி மகாபாரதம் ஏற்படுத்திய தாக்கத்தை இவ்வாய்வுக் கட்டுரையில் விளக்கியுள்ளார்.

இவர்களைத் தவிர்த்து, மலாயாப் பல்கலைக்கழக விரிவுரையாளர்களான பேராசிரியர் சிங்காரவேல் சச்சிதானம், பேராசிரியர் இராசேந்திரன் முனியாண்டி ஆகிய இருவரும் தென்கிழக்கு ஆசிய நாடுகளின் பண்டைய நாகரீக வளர்ச்சிக்கு இந்தியர்கள் ஆற்றியுள்ள பங்களிப்பை ஆய்வு செய்துள்ளனர். பேராசிரியர் சிங்காரவேல் சச்சிதானம் அவரகள் *A Brief Survay of Hinduisme in South-East Asia Prior to 1500 A.D* என்ற ஆய்வுக் கட்டுரையை *1970*இலும் The Ramayana Tradition in South-East Asia எனும் ஆய்வுக் கட்டுரையை *2004*இலும் படைத்துள்ளார். பேராசிரியர் இராஜேந்திரன் முனியாண்டி அவர்கள் இந்திய தென்கிழக்காசியத் தொன்மைத் தொடர்புகள்: ஒரு பார்வை என்ற தலைப்பில் *2017*இல் ஆய்வுக் கட்டுரை படைத்துள்ளார். இவர்கள் இருவரும் தென்கிழக்கு ஆசியாவில் இந்தியப் பண்பாட்டுத் தாக்கம் குறித்து விரிவாக விளக்கியுள்ளார்கள்.

சாமிக்கண்ணு ஜெபமணி ஈசாக்கு சாமுவேல் *(2002), Hikayat Pandawa Lima: Perbandingan Versi Melayu, Sanskrit dan Tamil* என்ற தலைப்பில் முதுகலை ஆய்வை மேற்கொண்டுள்ளார். இவ்வாய்வில் மலாய், சமசுகிருதம், தமிழ் ஆகிய மொழிகளில் இடம்பெற்றுள்ள மகாபாரதக் கதைகளில் காணப்படும் ஒற்றுமை, வேற்றுமைகளை ஆய்வு செய்துள்ளார்.

## ஆய்வு நெறி முறைகள்

இவ்வாய்வு, பண்புசார் அணுகுமுறையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இவ்வாய்வில் நூலாய்வு அணுகுமுறை கையாளப்பட்டுள்ளது. நூலாய்வில் ஆய்வுக்குத் தொடர்புடைய ஆய்வேடுகள், புத்தகங்கள், ஆய்வுக் கட்டுரைகள் ஆகியவை தேர்ந்தெடுக்கப்பட்டு விளக்கமுறை அணுகுமுறையில் தரவுகள் சேகரிக்கப்பட்டன.

## ஆய்வுத் தரவுகள் பகுப்பாய்வு

ஆய்வுத் தரவுகள் பண்டைய மலாய் மொழியும் இலக்கியமும், மலாய்மொழியில்

மகாபாரதம் ஆகிய இரண்டு தலைப்பில் ஆய்வுத் தரவுகள் பகுப்பாயப்பட்டுள்ளன.

## பண்டைய மலாய் மொழியும் இலக்கியமும்

மலாய்மொழி ஆயிரத்து ஐந்நூறு ஆண்டுகள் பழமை வாய்ந்த ஒரு மொழி. Kedukan Bukit, Palembangஇல் கி.பி. 683ஆம் ஆண்டு தேதியிட்ட கல்வெட்டில், பண்டைய மலாய்மொழியின் பயன்பாட்டைக் காணமுடிகிறது (Teuku Iskandar, 1995). இந்தக் கல்வெட்டு மலாய்க்காரர்களுக்குச் சொந்த மொழியாக மலாய்மொழி இருந்ததாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. பண்டைய மலாய்மொழி, காவி, ரென்சோங், லம்புங் ஆகிய எழுத்துகளைக் கொண்டு எழுதப்பட்டதாகவும் இக்கல்வெட்டு மூலம் அறிய முடிகின்றது (Samad Ahmad, 1973).

கி.பி. 671ஆம் ஆண்டு, I Ching என்ற சீனத் துறவி கன்டோனிலிருந்து இந்தியாவிற்குச் செல்லும் வழியில் றிணீறீமீனீதீணீஸீரீஇல் புத்த மத போதனை மையம் இருந்ததாகவும் அம்மையம் இந்து புத்த சமய இலக்கியங்களை மலாய்மொழியில் மொழிபெயர்த்துள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார் (Teuku Iskandar, 1995). ஆனாலும், இக்காலக் கட்டத்தில் மலாய்மொழியில் இயற்றப்பட்ட பண்டைய இந்து இலக்கியங்கள் தற்பொழுது கிடைக்கவில்லை. மலாய்மொழியில் இயற்றப்பட்ட பண்டைய இந்து இலக்கியங்கள் பனை ஓலையில் இயற்றப்பட்டதுவும் மலாய்க்காரர்கள் இசுலாம் சமயத்தைத் தழுவிக்கொண்டதுமே இதற்குக் காரணமாகும். மலாய்மொழியில் இயற்றப்பட்ட பண்டைய இந்து இலக்கியங்களின் செய்திகள் கல்வெட்டுகளில் மட்டுமே காணப்படுகின்றன (Wojowasito, 1957).

இசுலாமிய சமயம் தென்கிழக்கு ஆசியாவில் பரவிய பிறகு, அரபு எழுத்துக்களை இரவல் பெற்றதால் மலாய்மொழி வேகமாக வளர்ச்சியடைந்தது. பழைய மலாய் இலக்கியத்தில் இடம்பெற்றுள்ள இந்திய இலக்கியங்களின் செல்வாக்குச் சமசுகிருத இலக்கியத்திலிருந்து நேரடியாக நிகழும் ஒன்றல்ல, ஆனால் ஜாவா, அரபு, பாரசீக இலக்கியங்கள் வாயிலாக நிகழ்ந்த ஒன்றாகும் (Wojowasito, 1957). 1500ஆம் ஆண்டுக்குப் பிறகு மலாய்மொழியில் படைக்கப்பட்ட இந்திய இலக்கியங்கள் ஜாவா, அரபு, பாரசீக மொழியிலிருந்து தழுவி எழுதப்பட்டவையாகும். இவ்வாறு தழுவி எழுதும் போது, இசுலாமிய கருத்துகள் இவ்விலக்கியங்களில் புகுத்தப்பட்டுள்ளன. இசுலாமியர்கள் பஞ்சதந்திரம் போன்ற இந்திய இலக்கியங்களை அரபு, பாரசீக மொழிகளில் மொழிபெயர்க்கும் போது, இசுலாமியக் கருத்துகளைப் புகுத்தியுள்ளனர். இசுலாம் எனும் சமயம் மலாய்க்காரர்கள் மத்தியில் பரவியபோது, இசுலாம் சாயம் பூசப்பட்டு அரபு, பாரசீக மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்ட இந்திய இலக்கியங்களும் மலாய் இலக்கியத்தில் புகுந்துவிட்டன (Santosa, ஷி. 1971).

## மலாய்மொழியில் மகாபாரதம்

மலேசிய மகாபாரத ஆராய்ச்சியாளரான Khalid Hussain (1992), என்பவர் *Hikayat Pandawa Lima* (பஞ்ச பாண்டவர்கள் கதைகள்) என்ற நூல் பதினைந்தாம் நூற்றாண்டில் மலாக்கா மன்னர் ஆட்சி காலத்தில் இசுலாமிய சமயம் வலுவாக இருந்த காலக்கட்டத்தில் மலாய்மொழியில் மொழி பெயர்க்கப்பட்டதாகக் கூறியுள்ளார். *Hikayat Pandawa Lima* நூலில் இசுலாமிய செல்வாக்கு அதிகமாகக் காணப்பட்டதால் இவ்வாறு கூறியுள்ளார். எனினும், Winstedt (1965) என்பவர் பன்னிரண்டாம் அல்லது பதின்மூன்றாம் நூற்றாண்டுகளில் மகாபாரதக் கதைகள் மலாய்மொழியில் மொழிபெயர்க்கப்பட்டுவிட்டதாகக் கூறுகிறார். மேலும், H. Griffith (1976) என்பவரும் Brakel (1980) என்பவரும் மகாபாரதக் கதைகள் மலாய்மொழியில் பதின்மூன்றாம் அல்லது பதினான்காம் நூற்றாண்டுகளில் மலாய்மொழியில் மொழிபெயர்க்கப்பட்டுவிட்டதாகக் கூறுகிறார்கள். Teuku Iskandar (1995), மகாபாரதக் கதைகள் மலாய்மொழியில் பதினைந்தாம் நூற்றாண்டிற்கும் முன்பாகவே மொழிபெயர்க்கப்பட்டிருக்கலாம் என்று

கூறியுள்ளார். இதற்குச் சான்றாக 1281ஆம் ஆண்டில் ஜம்பி அரசாங்கம் இசுலாம் சமயத்தைத் தழுவிக்கொண்டதாகவும், அதே ஆண்டில் Sulaiman, Syamsudin என்ற இரண்டு தூதர்களைச் சீனாவுக்கு அனுப்பியுள்ளதாகவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

மலாய் இலக்கியத்தில் மகாபாரதக் கதைகளைத் தழுவி எழுதப்பட்ட அநேக கதைகள் உள்ளன. இவற்றில், ஜகார்த்தா அருங்காட்சியகத்தில் இடம்பெற்றுள்ள எட்டுப் பதிப்புகளும் அடங்கும். இக்கதைகள் ஒரே தலைப்பில் அமைந்திருந்தாலும் வெவ்வேறான கதைப் பின்னலை உடையவனாகக் காணப்படுகின்றன. இக்கதைகளை எழுதியவர்கள் தங்கள் விருப்பத்திற்கு ஏற்ப கதைகளை மாற்றி எழுதியுள்ளனர். சிலர் மகாபாரதக் கதைகளை மையமாக வைத்துக்கொண்டு புதிய கதைகளை இயற்றியுள்ளனர். *Hikayat Pandawa Lima, Hikayat Panca Kelima, Hikayat Pandawa Jaya, Hikayat Pandawa, Hikayat Darmawangsa, Hikayat Pandawa Lebur, Hikayat Giliran Pandu Turunan, Hikayat Angkawijaya, Hikayat Sang Boma* போன்ற கதைகள் இவற்றில் அடங்கும் (Ismail Hamid, *1985*).

மலாய்மொழியில் எழுதப்பட்டுள்ள மகாபாரதக் கதைகள் சமசுகிருதம் அல்லது ஜாவா மொழிகளில் காணப்படும் மகாபாரதக் கதைகளைவிட வேறுபட்டுக் காணப்படுகின்றன. இதற்குக் காரணம் மலாய்மொழியில் மொழிபெயர்க்கப்பட்டுள்ள மகாபாரதம் கதைகள் அரபு, பரசீக மொழிகளிலிருந்து மொழிபெயர்க்கப்பட்டதாகும். ஆனாலும், பெரும்பாலான மகாபாரதக் கதைகள் *Kakawin Bharatayuddha* என்ற கதையைத் தழுவி எழுதப்பட்டவையாகும். *Hikayat Pandawa Jaya* என்ற கதை *Kakawin Bharatayuddha* என்ற கதையைத் தழுவி எழுதப்பட்டதாகும். *Hikayat Pandawa Lima* என்ற கதை *Jawa Kakawin Gatotkacharaya* என்ற கதையைத் தழுவி எழுதப்பட்டதாகும். *Hikayat Sang Boma* என்ற கதை *Kakawin Bhomakavya* என்ற கதையைத் தழுவி எழுதப்பட்டதாகும். *Hikayat Panca Kelima* என்ற கதை *Kakawin Arjunawiwaha* என்ற கதையைத் தழுவி எழுதப்பட்டதாகும் (Ismail Hamid, *1985*).

மலாய் இலக்கியத்தில் மகாபாரதக் கதைகள் தோற்பாவைகூத்து வடிவத்தில் சிறப்புப் பெற்று விளங்குகின்றன, நவீன காலத்திற்கு முன்பு மலாய் சமூகத்தில் மகாபாரதக் கதைகள் நல்ல பொழுதுபோக்குச் சாதனமாகத் திகழ்ந்து வந்தன. மகாபாரதக் கதைகள் இந்து சமயம் சார்ந்த கதைகளாக இருந்ததால் மலாய் மண் வாசனைக்கு ஏற்ப மாற்றி அமைக்கப்பட்டுள்ளன, தற்பொழுது, ஜகார்த்தா அருங்காட்சியகத்தில் பத்தொன்பது மகாபாரதத் தோற்பாவைக்கூத்துக் கதைகளும் லேய்டன் (Leiden) அருங்காட்சியகத்தில் ஒரு மகாபாரதத் தோற்பாவைக்கூத்துக் கதையும் உள்ளன.

மலாய் இலக்கியத்தில் நான்கு வகையான தோற்பாவைகூத்துகள் இடம்பெற்றுள்ளன. அவை *wayang kulit Kelantan, wayang kulit Melayu, wayang kulit Gedek, wayang kulit Purwa* ஆகியவையாகும். இந்நான்கு வகையான தோற்பாவைகூத்துகள் மலேசியாவில் வெவ்வேறு மாநிலங்களில் வெவ்வேறான முறைகளில் நடத்தப்படுகின்றன.

*Wayang kulit Kelantan* எனும் தோற்பாவைக்கூத்துக் கம்போடியாவிலிருந்து கிளந்தான் மாநிலத்திற்குக் கொண்டு வரப்பட்ட தோற்பாவைகூத்தாகும். இத்தோற்பாவைக்கூத்து, கிளந்தான் மாநிலத்தில் சிறப்புப்பெற்று விளங்குகின்றது. இத்தோற்பாவைக்கூத்தில் ராமாயணக் கதைகள் மட்டுமே பயன்படுத்தப்படுகின்றன. இங்குப் பயன்படுத்தப்படும் ராமாயணக் கதைகள் மலாய்மொழியில் தழுவி எழுதப்பட்ட *Hikayat Seri Rama* என்ற கதையில் இருந்து எடுக்கப்பட்ட கதைகளாகும். (Ainu Sham Ramli & Mohd. Azmi Ibrahim, *1996*).

தொடர்ந்து, *wayang kulit Melayu* எனும் தோற்பாவைக்கூத்து கிளந்தான், திரங்கானு மாநிலங்களில் காணப்படுகின்றன. இத்தோற்பாவைக்கூத்து மகாபாரதக் கதைகளைக் கொண்டு நடத்தப்படுகின்றன. குறிப்பாகப் பஞ்சபாண்டவர்கள் கதைகளே

இத்தோற்பாவைக்கூத்தில் நடத்தப்படும் (Mohamed Ghouse Nasaruddin, 1997).

மேலும், *wayang kulit Gedek* எனும் தோற்பாவைக்கூத்து பெர்லிஸ், கெடா, பேரா போன்ற மாநிலங்களில் நடத்தப்படுகின்றன. இத்தோற்பாவைக்கூத்திலும் ராமாயணக் கதைகள் மட்டுமே பயன்படுத்தப்படுகின்றன. ஆனால், இங்குப் பயன்படுத்தப்படும் ராமாயணக் கதைகள் மூல ராமாயணத்திலிருந்து எடுக்கப்பட்ட கதைகளாகும். இத்தோற்பாவைக்கூத்து மூன்றிலிருந்து நான்கு இரவுகள் தொடர்ந்து நடத்தப்படுகின்றது (Hassan Othman, 2004).

இறுதியாக, *wayang kulit Purwa* ஜொகூர் மாநிலத்தில் நடத்தப்படுகின்றது. இத்தோற்பாவைக்கூத்து மகாபாரதக் கதையை அடிப்படையாகக் கொண்டு நடத்தப்படுகிறது. இத்தோற்பாவைக்கூத்து ஜாவாவில் நடத்தப்படும் தோற்பாவைக்கூத்துடன் ஒத்து அமைந்துள்ளது (Fieda, 2003).

## முடிவுரை

ஜாவா, அரபு, பாரசீக மொழிகளிலிருந்து மகாபாரதக் கதைகள் மலாய்மொழியில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. தொடக்கக் காலங்களில் மலாய்க்காரர்களிடையே மகாபாரதக் கதைகள் பிரசித்திப் பெற்று விளங்கின. மலாய்க்காரர்கள் இஸ்லாம் சமயத்தைப் பின்பற்றிய பின், மலாய்மொழி மகாபாரதக் கதைகள் முக்கியத்துவம் இழந்து காணப்படுகின்றன. ஆனாலும், மலாய் தோற்பாவைக்கூத்துகளில் மகாபாரதக் கதைகள் இன்னமும் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. ஆய்வாளர்கள் தொடர்ந்து மலேசிய மகாபாரதக் கதைகளை ஆய்வு செய்து வருகின்றனர்.

## References


Ainu Sham Ramli & Mohd. Azmi Ibrahim. (1996). *Wayang Kulit Warisan Teater Melayu*. Malaysia: Perbadanan Kemajuan Kraftangan. Bahasa dan Pustaka.

Brakel, L.F. (1980). The Indian Epics in Malay, *Archipel* 20.

Coedes. (1968). *The Indianized States of Southeast Asia*, Terj. Susan Brown Cowing. Kuala Lumpur: University of Malaya Press.

Fieda (2003). *Permainan Wayang Kulit*. Selangor: Oak Enterprise.

Griffith, H. (1976). *Salyawada the death of Salya Mpu Panuluh and the Bharatayuddha*, Master thesis. Canberra: Australian National University.

Hassan Othman. *(2004) Wayang Gedek, KL: Kementerian Kebudayaan, Kesenian dan Warisan Malaysia*

Ismail Hamid. (1985). *Pengaruh epos Mahābhārata dalam kesusasteraan Melayu lama*. Kuala Lumpur: *Dewan Sastera* 6.

Ismail Hamid. (1987). *Perkembangan Kesusasteraan Melayu Lama*. Petaling Jaya: Logman Malaysia Sdn. Bhd

Khalid Hussain (pngr.). (1992). *Hikayat Pandawa Lima*. Kuala Lumpur: Dewan Bahasa dan Pustaka.

Khalid Hussain. (1970). *Hikayat Pandawa Lima*. Kuala Lumpur: Dewan Sastera 11.

Mohamed Ghouse Nasaruddin(1997). *Wayang Kulit Dalam Era Globalisasi*. Kuala Lumpur: Kementerian Kebudayaan, Belia dan Sukan Malaysia.

Rajantheran, M. (2017). *India Thenkilakaasia Thonmai Thodarpukal: oru paarvai*. Kuala Lumpur: University of Malaya Press.

Samad Ahmad, (1973). *Sejarah Kesusasteraan Melayu I.* Kuala Lumpur: Dewan Bahasa dan Pustaka.

Samikkanu Jabamoney Ishak Samuel. (2002). *Hikayat Pandawa Lima: Perbandingan Versi Melayu, Sanskrit dan Tamil*. (Unpublished master's thesis). Kuala Lumpur, Universiti Malaya.

Santosa, S. (1971). The Islamization of Indonesian Malay Literature in Its Early Period, *JOSO8*.

Sarkar, H. B. (1970). *Some Contribution of India to the Ancient Civilization of Indonesia and Malaysia*. Culcutta: Puthi Putak.

Singkaravelu, S. (1970). A Brief Survay of Hinduisme in South-East Asia Prior to 1500 A.D. Kuala Lumpur: University of Malaya Press.

Singkaravelu, S. (2004). *The Ramayana Tradition in South-East Asia*. Kuala Lumpur: University of Malaya Press.

Soekmono. (1973). *Penghantar Sejarah Kebudayaan Indonesia II*. Jakarta: Yayasan Kanissas.

Teuku Iskandar. (1995). *Kesusasteraan Klasik Melayu Sepanjang Abad*. Brunei: Universiti Brunei Darussalam.

Winstedt, R.O. (1965). *The Malays: A Cultural History*. London.

Wojowasito. (1957). *Sejarah Kebudayaan Indonesia 1*. Djogjakarta: Kalimosodo.

# பண்டைய ரோமானிய அரசுடனான தமிழக வணிகத் தொடர்புகள் பற்றிய ரோமானிய ஆவணங்கள் கூறும் செய்திகள்
# Roman Trade Links with the Ancient Tamil Countries-Roman Documents

முனைவர்.க.சுபாஷிணி / Dr.K.Subashini [1]


### *Abstract*

This paper deals with the ancient Roman Manuscripts and documents referencing Ancient Tamil countries' trade networks. This paper examines recorded information in The Peutinger Map, Muziris Papyrus, The Periplus of the Erythraean Sea, Bernardus Sylvanus Map as well as related sources in Plini the Elder and Strabo. It discusses the harbors, cities and infrastructure that were instrumental in trade exchanges between the Tamil countries of that time with the Roman entities, concomitantly with the commercial activities in the Indian Ocean. Research on selected ancient Roman Manuscripts and maps are included in this paper with the focus on trade route, goods and traders with special emphasis on cities like Muziris and Alexandria. This paper suggests for an extensive study that includes wide range of further Roman period Manuscripts and emphasizes on the importance and the need for further archaeological excavation projects at the ancient South Indian Malabar coastal cities and Coromandel coast.



Date of submission: 2019-05-12
Date of acceptance: 2019-06-19
Date of Publication: 2019-07-30


Corresponding author/s
Name: Dr.K.Subashini
Email: ksubashini@gmail.com


**Key Words:** Muziris, Thondi, Pandion, Korkai, Muziris Papyrus, Red Sea, Egypt.

### முன்னுரை

தமிழகத்தின் பண்டைய துறைமுக நகரங்கள் சிலவற்றிலும், அவற்றைச் சுற்றியும் நிகழ்த்தப்பட்ட தொல்லியல் அகழ்வாய்வுகள் தமிழகத்தின் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட வணிகச் சூழலை விவரிக்கும் சான்றுகளை வழங்குகின்றன. பண்டைய தமிழகத்தோடு உலகின் வெவ்வேறு நாடுகள் கொண்டிருந்த வணிகத் தொடர்புகள் பற்றிய ஆதாரங்களை இவ்வகை அகழ்வாய்வுச் சான்றுகள் நிரூபிக்கின்றன (செல்வராஜ், 2010, pp.5559). கடல் சூழ அமைந்த இயற்கையான தீபகற்ப நில அமைப்பு என்பதால் தென்னிந்தியாவின் தென் பகுதி மற்றும் அதனைச் சுற்றி அமைந்துள்ள கடற்கரை நகரங்கள், பல நாட்டு வணிகர்கள் இப்பகுதிகளுக்கு வியாபார நோக்கமாக வந்து செல்ல காரணமாக அமைந்தன.

அதே போல இந்தத் தென்பகுதியிலிருந்து உலகின் பல்வேறு பகுதிகளுக்குப் பயணித்த வணிகக்கப்பல்கள், பண்டைய தமிழகத்தின் விளை பொருட்களையும், தயாரிக்கப்பட்ட பொருட்களையும் அயல்நாடுகளில் சந்தைபடுத்திப் பொருளீட்டும் நோக்கத்துடன் கடல் வழியாகப் பயணித்தன. இத்தகைய பண்டைய வணிகத் தொடர்புகளில் ரோமானியர்களுடன் பண்டைய தமிழகத்திற்கு இருந்த தொடர்பு என்பது சிறப்பு கவனத்தைப் பெறுவதாக அமைகின்றது (பூங்குன்றன், 2010) pp.48 50). இவ்வாய்வுக்கட்டுரை ரோமானியப் பேரரசு தமிழக துறைமுக நகரங்களில்

[1] The author is a Lead IT Architect, DXC Technology & President of Tamil Heritage Foundation International (International Organization for Preserving Tamil Heritage). ksubashini@gmail.com

ஏற்படுத்திய வணிகத் தொடர்புகளையும், வணிகச் செயல்பாடுகளையும் ஐரோப்பிய ஆவணங்களின் அடிப்படையில் ஆராய்கின்றது.

## ஆய்வுப் பின்புலம்

தமிழகத்திற்கும் ரோமானியப் பேரரசின் வணிகர்களுக்குமிடையிலான வர்த்தகத் தொடர்புகளை விவரிக்கும் சான்றுகளாக நமக்கு இன்று கிடைக்கும் சான்றாதாரங்களை நான்கு பிரிவுகளாகப் பிரிக்கலாம். முதலாவதாக, தமிழகத்தின் அரிக்கமேடு, கொடுமணல், கொற்கை, ஆதிச்சநல்லூர், அழகன்குளம் போன்ற அகழ்வாய்வுகள் மற்றும் இன்றைய கேரளத்தின் பண்டைய தமிழ்ச் சேர மன்னர்களின் ஆட்சியின் கீழிருந்த தொண்டி, முசிறி ஆகிய துறைமுக நகரங்களில் நிகழ்த்தப்பட்ட அகழ்வாராய்ச்சிகள் வழி கிடைத்த தொல்லியல் சான்றுகள் (செல்வகுமார், 2010, pp.3338). இரண்டாவதாக, பண்டைய ரோமானியப் பேரரசிலிருந்து வர்த்தகம் செய்ய வந்த வணிகர்கள் எழுதி வைத்த பயணக் குறிப்புக்களும் கையேடுகளும்.

மூன்றாவதாக, தென்னிந்தியா தவிர்த்து இன்றைய எகிப்து, மற்றும் சக்கோத்ரா தீவுகளில் அறியப்பட்ட வரலாற்று ஆதாரங்கள் (Warmington, 1928), p.6). இந்த மூன்று பிரிவுகளிலும் கிடைக்கின்ற சான்றாதாரங்களை விவரிக்கக் கூடிய ஆவணங்களையும் நூல்களையும் தொல்லியல் அறிக்கைகளையும் ஆராய்வதன் அடிப்படையில் பண்டைய தமிழகத்திற்கும் பண்டைய ரோமானியப் பேரரசிற்கும் இடையிலான வணிக உறவையும் அதன் தன்மைகளையும் அறிய கூடுதல் வாய்ப்பு உள்ளது. நான்காவதாக, இந்த மூன்று பிரிவுகளுள் அடங்கிய சான்றுகளைத் தவிர்த்து, இரு பண்டையப் பேரரசுகளுக்கும் இடையிலான வணிகத்தொடர்புகள் சார்ந்த கருத்தாக்கங்களுக்கு வலு சேர்ப்பது நமக்கு இது காறும் கிடைத்திருக்கும் சங்கத்தமிழ் நூல்களின் செய்யுட்கள். சங்கத்தமிழ் நூல்களின் விரிவான தமிழ்ச் சமூகம் தொடர்பான பார்வையும், சமகால நிகழ்வுகளின் ஆவணக்குறிப்புக்களும், ரோமானியப் பேரரசுடன் தமிழகம் கொண்டிருந்த வணிகம் பற்றிய சில செய்யுட்களும் மிக முக்கிய ஆதாரங்களாக அமைகின்றன (பூங்குன்றன், 2010, pp.4854).

சங்கத்தமிழ் செய்யுட்கள் தருகின்ற ஆதாரங்களின் அடிப்படையில் அமைகின்ற ஆய்வுகள் குறிப்பிடத்தக்க எண்ணிக்கையில் தமிழக ஆய்வாளர்களால் முன்னெடுக்கப்படுவதைக் கருத்தில் கொண்டும், தமிழ் ஆய்வுச் சூழலில் ரோமானியப் பேரரசின் ஆட்சிகாலத்தில் உருவாக்கப்பட்ட ஆய்வுகள் பெரும்பாலும் பேசப்படாத குறைபாட்டைக் கருத்தில் கொண்டும், இந்தக் கட்டுரை, மேற்கத்திய ஆய்வாளர்களின் ஆய்வுக்குறிப்புக்கள் நமக்கு வழங்கும் சான்றுகளை ஆராய்வதாக அமைகின்றது.

## ஆய்வுமுறை

மேற்குறிப்பிட்ட இச்சான்றுகளை ஆராயும் நோக்கத்தில் ரோமானியப் பேரரசின் ஆளுமை பதிக்கப்பட்ட ஐரோப்பிய நாடுகளின் அருங்காட்சியகங்களில் கட்டுரை ஆசிரியர் நேரடியாக மெற்கொண்ட ஆய்வுப் பயணங்களில் பதிந்த குறிப்புக்கள் ஆய்வுக்குட்படுத்தப்பட்டுள்ளன. மேற்கத்திய ஆய்வாளர்களின் ஆய்வறிக்கைகளும், நூல்களும், ஆவணங்களும், ஆய்வுக் கட்டுரைகளும் இவ்வாய்விற்காகப் பயன்படுத்தப்பட்டுள்ளன.

## ரோமானியப் பேரரசின் தொடக்கம்

கி.மு.735 ரோமானியப் பேரரசின் தொடக்கம் எனப் பரவலாக குறிப்பிடப்படுகின்றது. ரோமானியப் பேரரசின் தொடக்கம் பற்றிய இன்று நமக்குக் கிடைக்கின்ற புராணக் கதை கலந்த செய்தியின் அடிப்படையில், நரி ஒன்று பாலூட்டி வளர்த்த இரட்டையர்களான ரோமுலுஸ்(Romulus) ரெமுஸ் (Remus) ஆகிய இருவருமே ரோம் பேரரசின் தொடக்கத்திற்கு காரணமானவர்களாக அறியப்படுகின்றனர் (Jacob Abbott, 2007, p.2) பனிரெண்டு நூற்றாண்டுகால பலமிக்க பேரரசாகத் திகழ்ந்த ரோமானியப் பேரரசு மன்னராட்சியுடன் தொடங்கி, பின்னர் பெரும் பேரரசாக விரிவடைந்தது.

ரோமானியப் பேரரசின் தொடக்க காலக் கட்டமைப்பில் மிக முக்கிய இடம் பெறுபவர் ஜூலியஸ் சீசர் (12 அல்லது 13 ஜூலை கி.மு.100 15 மார்ச் கி.மு.44 ). இவர் ஒரு பேரரசர் என்று அழைக்கப்படாவிட்டாலும் கூட ரோமானியப் பேரரசின் ஆரம்பகால உருவாக்கத்தின் மிக முக்கியமான தலைவனாக அறியப்படுபவர் (Philip Freeman, 2008, p.2).

ஆரம்பகால ரோமானியப் பேரரசு இனக் குழுக்களிடையே எழுந்த ஏராளமான போர்களைச் சமாளித்து பேரரசை விரிவாக்கம் செய்வதை முதன்மை நோக்கமாகக் கொண்ட வகையில் அமைந்தது. ஜூலியஸ் சீசருக்குப் பிறகு முதலாம் பேரரசனாக அறியப்படும் பேரரசன் அகஸ்டஸ் (கிமு. 63 BC கி.பி 14) காலத்தில், ரோமானியப் பேரரசின் வணிகர்கள் மத்திய கிழக்கு நாடுகளுக்கும், இந்திய தீபகற்ப பகுதிகளுக்கும் வணிகத்திற்காகக் கடல்வழிப் பயணம் வருவது விரிவடைந்தது (Warmington, 1928, p.6, 32).

பண்டைய கிரேக்க மாசிடோனியப் பேரரசர் அலெக்சாந்தரின் போர்ப்படைத்தலைவர்களில் ஒருவரான தாலமி முதலாம் சோத்தரின் (Ptolemy I Soter) (கி.மு.367283/282) வரலாற்று ஆவணக் குறிப்புகள் (Warmington, 1928, p.7). செங்கடல் கையேடு (Schoff Wilfred Harvey, 1912) போன்றவை இத்தகைய வணிகம் தொடர்பான செய்திகளை வழங்கும் குறிப்பிடத்தக்க மேற்கத்திய ஆவணங்களாக அமைகின்றன. ரோமானியப் பேரரசின் வர்த்தக வளர்ச்சி என்பது குறிப்பிடத்தக்க வகையில் கி.பி. 1ஆம் நூற்றாண்டில் மாமன்னன் அகஸ்டஸ் ஆட்சி காலத்திலும், அதன் தொடர்ச்சியாகக் கி.பி. 2ஆம் நூற்றாண்டிலும் செழிப்புற்று இருந்தது. இக்காலகட்டத்தில் ரோமானியப் பேரரசின் துறைமுகப் பகுதிகளில் இருந்து வர்த்தக நடவடிக்கைகள் மத்திய கிழக்கு நாடுகளுக்கும் இந்தியா வரையிலும் பரவியிருந்தது (Warmington, 1928, p.6). அக்காலச் சூழலில் உறுதி பெற்றிருந்த ரோமானியப் பேரரசின் அரசியல் நிலைத்தன்மை ரோமானிய வர்த்தகர்களுக்கு நிலையான வர்த்தக வாய்ப்பு வசதிகளை அமைத்துத் தந்தது.

முதலில் விவசாயத்தை நம்பி டோனாவ் நதி, நைல் நதி, ரைன் நதி போன்ற முக்கிய ஐரோப்பிய நதிக்கரைகளில் தங்கள் குடியிருப்புக்களை அமைத்துக் கொண்டு படிப்படியாக வளர்ந்த ஐரோப்பிய நகரங்கள், கிரேக்கப் பேரரசின் ஆட்சியின் கீழ் விரிவாக்கம் கண்டன. கிரேக்கப் பேரரசு தன் ஆளுமையைப் படிப்படியாக இழந்த காலகட்டத்தில் ரோமானியப் பேரரசின் அபரித வளர்ச்சி நிகழ்ந்தது. விவசாய பொருளாதாரத்திலிருந்து ரோமானியப் பேரரசு படிப்படியாக வர்த்தகப் பொருளாதாரத்திலும் கவனத்தைச் செலுத்தியது (Warmington, 1928, p.6).

ரோமானிய பேரரசின் கடற்கரை துறைமுகப் பகுதிகளில் இருந்து புறப்பட்ட கப்பல்களில் சென்ற வணிகர்கள் இந்தியாவில் இருந்து கப்பல்களில் வருகின்ற வணிகப் பொருட்களைப் பெறுவதற்கு இடைத்தரகர்களைத் தொடர்பில் வைத்திருந்தனர். இத்தகைய இடைத்தரகர்களாக அலெக்சாந்திரியாவில் (இன்றைய எகிப்து பண்டைய ரோமானியப் பேரரசின் மிக முக்கிய வர்த்தக மையம்) இருந்த கிரேக்கர்கள் இருந்தனர். இவர்களைப் போல சிரியா நாட்டைச் சேர்ந்த வணிகர்கள், யூதர்கள், மத்திய கிழக்காசிய நாடுகளை சேர்ந்த அரேபிய வணிகர்கள் ஆகியோரும் இடைத்தரகர்களாக இருந்தனர். இவர்கள் இந்தியாவிலிருந்து வருகின்ற வர்த்தகப் பொருட்களை வாங்கி ரோமானியப் பேரரசுக்கு விற்கும் பணியினைச் செய்தனர். இவர்களைப் போல ஆர்மேனியர்களும் இத்தகைய இடைத்தரகர்களாக இருந்தனர் (Warmington, 1928), p.2 - 68). இதன் அடிப்படையில் அலெக்சாந்திரியா பல நாட்டு வணிகர்கள் ஒன்று கூடும் பெறும் வர்த்தக மையமாக கிபி.1, கிபி 2ம் நூற்றாண்டு காலகட்டத்தில் புகழ்பெற்று விளங்கிய நகரமாக அமைந்திருந்தது.

### வணிகப் பாதைகள்

பாரசீக வளைகுடாவும் செங்கடலும் இந்தியப் பெருங்கடலில் கடல்வழி

வணிகத்திற்கான முக்கியப் பாதைகளாக அமைந்தன. ரோமானியப் பேரரசின் ஆளுமைக்குள் அடங்கும் பகுதிகளுக்கான வணிகத்தை இணைக்கும் பாலமாக இந்த நீர்வழிப்பாதைகள் அமைந்தன. வணிகம் விரிவாக வளர்ந்த அக்காலகட்டத்தில் குறிப்பிடத்தக்க வணிக வழிகள் இயங்கின. அவற்றுள் முக்கிய நீர்வழிப்பாதையாக நைல் நதி இருந்தது. ரோமானிய பேரரசின் வர்த்தக பொருட்கள் நைல் நதி வழியாக கொண்டுவரப்பட்டு, பிறகு துறைமுகத்திலிருந்து செங்கடல் வழியாக அன்றைய சிந்து நதி துறைமுக நகரமான பார்பரிக்கும் (Barbaricum அதாவது இன்றைய பாகிஸ்தானின் ஒரு நகரம்) மற்றும் அங்கிருந்து பண்டைய இந்தியாவின் துறைமுக நகரங்களுக்கு வந்து சேர்ந்தன. அதேபோல இந்திய வர்த்தக பொருட்கள் இது போன்ற கடல் வழிப் பாதையில் செங்கடல் வழியாக அலெக்சாந்திரியா வரை கப்பல்களில் கொண்டு செல்லப்பட்டன (Warmington, 1928, p.15).

ரோமானியப் பேரரசின் இந்தியாவுடனான வர்த்தகமானது மையம் கொண்டிருந்த பெரும் நகரங்கள் அமைந்த பகுதிகளைப் பொதுவாக நான்காக வகைப்படுத்தலாம். அவை:

1. சிந்து நதிக்கரை வணிக நகரமாக பண்டைய காலத்தில் விளங்கிய பார்பரிக்கும்,
2. இன்றைய ஆந்திரா பகுதி,
3. கங்கை நதி அமைந்துள்ள இன்றைய வங்கப் பகுதி,
4. தென்னிந்தியாவை ஆட்சி செய்த மூன்று தமிழ் மன்னர்களின் ஆட்சிக்குட்பட்ட பகுதி (Warmington, (1928), p.7).

தமிழ் மன்னர்களின் பகுதி என குறிப்பிடப்படுவது, சேர சோழ பாண்டிய மன்னர்கள் ஆட்சி செய்த பண்டைய தென்னிந்திய பகுதியாகும். இந்த வணிகக்குறிப்புக்களில் இடம்பெறும் முக்கிய துறைமுக நகரங்களாக முசிறி, தொண்டி, தென்குமரி, கொற்கை, அரிக்கமேடு, புகார், மரக்காணம் ஆகிய பகுதிகள் குறிப்பிடப்படுகின்றன (Warmington, 1928, p.62).

## பெர்னாடுஸ் சில்வானூஸ் நிலவரைப்படம்

இந்தியாவைப்பற்றிய பண்டைய ஐரோப்பாவின் புவியல் நில அமைப்பு பற்றிய தகவல்களை வழங்கும் ஒரு ஆவணம் இது. இத்தாலியரான பெர்னாடுஸ் சில்வானூஸ் (Bernardus Sylvanus 1490 - 1511) கி.பி 1511ல் தயாரித்த இந்திய நில வரைப்படம் (காண்க பின்னிணைப்பு 1). இது தாலமி (Claudius Ptolemy - A.H 90 - 168) ஆராய்ந்து எழுதி பதிந்து வைத்த ஆவணக்குறிப்புகளின் அடிப்படையில் நில வரைப்பட ஓவியர் பெர்னாடுஸ் சில்வானூஸ் மிகத் துல்லியமாக வரைந்த ஒரு ஆவணமாகும். இது 40.8 ஜ் 54.5 செ.மீ அளவில் அமைந்துள்ளது. இது இத்தாலியின் வெனிஸ் நகரில் 1511ம் ஆண்டு அச்சிட்டு வெளியிடப்பட்டது (https://artsandculture.google.com/asset/ptolemaic-india/SQF8lvV0tJA8yg). குறிப்பாக வாஸ்கோ டகாமா இந்தியாவிற்கு வருவதற்கு முன்னர் ஐரோப்பாவினர் கீழை நாடுகளில் வர்த்தக ரீதியாகக் கொண்டிருந்த தொடர்பில் சேகரிக்கப்பட்ட செய்திகளின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட தகவல்களைக் கொண்டு தயாரிக்கப்பட்ட வரைப்படமாகும்.

க்ளவ்டியஸ் தாலமி கி.பி.2ம் நூற்றாண்டில் ரோமானியப் பேரரசின் ஆளுமைக்குட்பட்டிருந்த கிரேக்களகிப்து நிலப்பகுதியான அலெக்சாந்திரியாவில் பிறந்தவர். ரோமானியப் பேரரசின் புவியியல் அறிஞராகவும், கணித வானியல் ஆய்வாளராகவும் அறியப்படுபவர். இந்த வரைப்படம் அன்னாளைய இந்தியாவின் கடற்கரை நகரங்களை குறிப்பிடும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது. அதில் மிக முக்கியமாக தமிழ் சேரமன்னர்கள் ஆட்சிக்குட்பட்டிருந்த முசிறி ( 'muziris em' அதாவது 'Muziris Emporium', குறிப்பிடப் பட்டிருப்பதையும் காணலாம் (https://artsandculture.google.com/asset/ptolemaic-india/SQF8lvV0tJA8yg).

முசிறி அன்றைய வளம் மிக்க துறைமுகப்பட்டினமாக ரோமானிய வர்த்தகர்களால் அறியப்பட்ட ஒரு நகரம். இது இன்றைய கேரளத்தில் 'பட்டணம்' நகரம் என்று ஆய்வறிஞர்களால் குறிப்பிடப்படும் நகரமாகும். வரைப்படத்தில் இது பெரியார் நதிக்கு அருகில் இருப்பது போல குறிப்பிடப்பட்டுள்ளது. பெரியார் நதி தாலமியால்'Pseudostomus f' அதாவது, லத்தின் மொழியில் 'போலி வாய் போன்ற அமைப்பு' என தாலமியால் பெயரிடப்பட்டது. கி.பி.1341ம் ஆண்டில் மிக மோசமான வெள்ளத்தால் பாதிக்கப்படும் வரை பண்டைய முசிறி கடல் வணிகத்தில் மிக முக்கியத்துவம் பெறும் ஒரு நகரமாக விளங்கியது (<https://artsandculture.google.com/asset/ptolemaic-india/SQF8lvV0tJA8yg>).

## நில வழி வணிகப்பாதைகள்

கடல்வழி பயணங்கள் போலவே நில வழி வர்த்தகமும் ரோமானியப் பேரரசின் ஆட்சிகாலத்தில் வணிகப் பெருவழிகளாக இருந்தன. அரேபிய பாலைவனத்தின் ஒட்டகங்களில் வணிகப் பொருட்களை ஏற்றிக் கொண்டும், வண்டிகளைக் கட்டிக் கொண்டும் (caravan) வணிகர்கள் பயணித்தனர். ரோமானியப் பேரரசின் ஆட்சியில் இருந்த பகுதிகளில் நில வழி வணிகங்கள் தடைகளின்று நடைபெறுவதற்கு ஏற்பாடாக ஆங்காங்கே பாதுகாப்பு மையங்களை ஏற்படுத்தியிருந்தனர். அத்தகைய பாதுகாப்பு மையங்களில் ஆயுதங்கள் தாங்கிய காவலர்கள் பணியில் இருந்தனர். வர்த்தகப் பொருட்களை வணிகர்கள் பெரும்பாலும் இரவில் ஏற்றிச் சென்றனர். இச்செய்திகள் பற்றி பண்டைய கிரேக்க வரலாற்றாசிரியர்கள் அகதார்ச்சிடெஸ் (Agatharchides கி.மு 2 நூ.) (Warmington, 1928, p.7), ஸ்ட்ராபோ (Strabo கி.மு 1) (Warmington, 1928, p.7), ப்ளினி (Warmington, 1928, p.7) ஆகியோரின் ஆவணக் குறிப்புக்கள் வெவ்வேறு வகையான செய்திகளை வழங்குகின்றன என்றாலும், ரோமானியப் பேரரசுக்கும் இந்திய நிலப்பகுதிக்கும் இருந்த வணிகத் தொடர்புகளை இவை குறிப்பிடுகின்றன என்பதில் ஒற்றுமையைக் காணமுடிகின்றது.

அதில் குறிப்பாக மன்னன் ஆறாம் தாலமி பிலோமீட்டர் (Ptolemy VI Philometor, கி.மு. 181-145) காலத்தில் வாழ்ந்த அகதார்ச்சிடெஸ் (Agatharchides கி.மு. 2) குறிப்புக்கள் சில நகரங்களையும் குறிப்பிட்டு கூடுதலாக எகிப்தின் மியோஸ் ஹார்மோஸ் (Myos Hormos இன்றைய Al-Qusayr நகருக்கு ஏறக்குறைய எட்டு கிலோமீட்டர் தூரத்தில் உள்ள செங்கடல் கரையோர பண்டைய துறைமுக நகரம்) மிக முக்கிய பொருள் கொள்முதல் இறக்குமதி ஏற்றுமதி செய்த பகுதியாகவும், இந்தியாவிலிருந்து வருகின்ற வணிகக் கப்பல்கள் இங்கு வந்தமையையும் குறிப்பிடுகின்றன. இதே எகிப்தின் மியோஸ் ஹார்மோஸ் நகரம் பற்றி ஸ்ட்ராபோ குறிப்பிடுகையில், இந்த நகரம் மட்டுமே முக்கிய வணிகத் துறைமுகமாக இருந்தது என்றும் இதற்குக் கீழே அமைந்துள்ள பெரெனிஸ் (Berenice) வளர்ந்து வரும் ஒரு துறைமுகமாக இருந்தது என்றும் குறிப்பிடுகின்றார்.

இதற்கு பின்னர் ரோமானியப் பேரரசர்களான நீரோ மற்றும் வெஸ்பாச்சியன் காலத்தில் வாழ்ந்த வரலாற்றசிரியரான ப்ளினி (Pliny - A.H 61-113) குறிப்பிடுகையில் இந்தியாவிலிருந்து செங்கடலுக்கு வருகின்ற வணிகக் கப்பல்கள் பெரெனிஸ் துறைமுகத்தில் வணிகப் பொருட்களை இறக்கிவிட்டு மியோஸ் ஹோர்மோஸ் துறைமுகத்தில் வந்து ஓய்வுக்கு நிறுத்தப்பட்டன என்று குறிப்பிடுகின்றார் (Warmington, 1928, p.7). ஆக, இந்திய கடல் வணிகர்கள் எகிப்தின் இந்த இரண்டு முக்கிய துறைமுக நகரங்களான மியோஸ் ஹோர்மோஸ், பெரெனிஸ் ஆகிய இரு நகரங்களுக்கும் வந்து சென்றனர் என்பதை இதன் அடிப்படையில் உறுதி செய்ய முடிகின்றது.

## கடல்வழி வணிகப் பாதைகள்

ப்ளினியின் (Pliny The Elder கி.பி. 23-79) ஆவணங்கள் ஹிப்பலூஸ் என்றழைக்கடும் தென்மேற்கு பருவக்காற்று வீசும் போது அலெக்சாந்திரியாவிலிருந்து

கப்பல் பயணத்தைத் தொடங்கினால் தென்னிந்தியாவின் முசிறியை நாற்பது நாட்களில் வந்தடையலாம் என்றும், அங்கு ஆட்சி செய்த மன்னனின் பெயர் சேரன் (Caelobothras) என்றும் கூறுகிறது. தென்னிந்தியாவின் மற்றுமொரு முக்கிய நகரம் என ப்ளினியின் குறிப்புக்கள் இன்றைய கோட்டயம் மற்றும் வக்கறை (Neacyndi, Barace) ஆகிய பகுதிகளைக் குறிப்பிடுகின்றது. இங்கே வணிகப்பகுதியிலிருந்து சற்று தூரத்தில் மதுரை (Modiera) என்ற நகர் இருப்பதாகவும், அங்கே பாண்டிய மன்னன் (king Pandion) ஆட்சி செய்வதாகவும் கூறுகிறது. வணிகத்திற்காக இந்தியா சென்ற ரோமானிய வணிகர்கள் ஐரோப்பா திரும்புவதற்கு டிசம்பரில் (எகிப்திய மாதமான Tybia) அல்லது அதற்கு அடுத்த மாதமான ஜனவரி (எகிப்திய மாதமான Mechir) தொடங்கி ஆறு நாட்களுக்குள் திரும்பும் பயணத்தைத் தொடங்கினால் வணிகர்கள் ஒரே ஆண்டில் இந்தியா சென்று மீண்டும் திரும்பிவிடலாம் என்றும் குறிப்பிடுகிறது (Warmington, 1928, p.44).

மேலும், எகிப்திலிருந்து நைல் நதி வழியாக கலங்களில் பயணித்து, அரேபியக் கடல் வழியாக இந்தியா வரை வணிகம் செய்யச் சென்ற ரோமானிய வணிகர்கள் மிகக் குறைவானவர்களே கங்கை நதிவரை சென்றார்கள் எனக் குறிப்பிடும் ஸ்ட்ராபோ, அப்படிச் சென்றவர்கள் பெரும்பாலும் தனியார் வர்த்தக முயற்சியாக வணிகம் மேற்கொண்டவர்கள் என்று குறிப்பிடுகின்றார். அதே வேளை, இந்தியாவிலிருந்து, அதிலும் குறிப்பாக தென்னிந்தியாவிலிருந்து பாண்டிய மன்னன் அரசவையிலிருந்து அரச பிரதிநிதி அல்லது தூதர் வந்து ரோமானியப் பேரரசர் அகஸ்டஸை மரியாதை நிமித்தம் வந்து சந்தித்ததாகவும், அச்சந்திப்பில் இந்தியாவிலிருந்து பரிசுப் பொருட்களைக் கொண்டு வந்ததாகவும் குறிப்பிடுகின்றார் (Warmington, 1928, p.35). இத்தகைய பண்டைய தமிழகத்திலிருந்து தூதர்கள் ' அடிக்கடி' பல முறை வந்து சென்றனர் என்று பேரரசர் அகஸ்டஸ் தமது லத்தின் மொழியில் அமைந்த கல்வெட்டில் செதுக்கினார் (Warmington, 1928, p.35).

ரோமானியப் பேரரசர் அகஸ்டஸ் ஆட்சி காலத்திலும் அதற்கு அடுத்த நூற்றாண்டிலும் இந்தியாவிற்கான வணிகப் பயணங்களின் பாதைகளாக, எகிப்தின் நைல் நதியிலிருந்து காப்டோஸ், அதன் பின்னர் பெரென்னிஸிலிருந்து மியோஸ் ஹார்மோஸ் முக்கிய வணிகப் பாதையாக இருந்தது. ரோமானியப் பேரரசு விரிவாகி இன்றைய யேமன் (அன்றைய Arabia Eudaemon) பகுதியை ரோமானியப் படைகள் கி.மு.25ல் கைப்பற்றிய பின்னர் இப்பகுதியில் நிகழ்ந்த வணிக நடவடிக்கைகள் மேலும் அதிகரித்தன. ஒவ்வொரு ஆண்டும் அலெக்சாந்திரியாவிலிருந்து ஏறக்குறைய நூற்றைம்பது எகிப்திய வணிகக் கப்பல்கள் இப்பகுதியிலிருந்து கிழக்கு நோக்கி அதாவது இந்தியா நோக்கி பயணித்தன. இந்தியாவிலிருந்து வருகின்ற கப்பல்கள் இங்கே பொருட்களை இறக்கின என்றும், அலெக்சாந்திரியாவின் தரகர்கள் வணிகப்பொருட்களை வாங்கி இங்கே சிறு வணிகர்களிடம் விற்றனர் என்றும், இது நல்ல லாபத்தைக் கொடுத்தது என்றும் ஸ்ட்ராபோவின் குறிப்புக்களில் காண்கிறோம் (Warmington, 1928, p.8).

## ரோமானிய பேரரசின் காசுகள்

இந்தியாவின் மத்திய பகுதியில் ஆந்திர மன்னர்களின் ஆளுமைக்குட்பட்ட பகுதிகளில் ரோமானியர்கள் வணிக நோக்கத்திற்காக வந்தனர் என்றாலும் கூட, ரோமானிய வரலாற்றாசிரியர்களின் குறிப்புகள் அதிகமாக தமிழ் மூவேந்தர்களின் வணிக நகரங்களை மையமாக வைத்து வணிக முயற்சிகள் மேற்கொண்டதைக் குறிப்பிடுவதைக் காண்கின்றோம் (Warmington, 1928, p.40). சேர மன்னர்களின் ஆட்சிக்குட்பட்டிருந்த கள்ளிக்கட்டிலிருந்து, முசிறி உட்பட, தென்குமரிமுனை வரை மிளகுக்கான வணிகம் முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாக அமைந்திருந்தது.

அடுத்து, பாண்டிய மன்னர்களின் ஆளுமைக்குட்பட்ட பகுதியான கோட்டையம், மதுரை, திருநெல்வேலி, மன்னார் குடா பகுதி நகரங்கள் ஆகியவை ரோமானிய வணிகர்கள் வந்து சென்ற

முக்கிய வணிக நகரங்களாக அமைந்தன. முத்துக்குளித்தலுக்குப் பெயர்பெற்ற கொற்கை பகுதி முத்து வணிகத்திற்கான மிக முக்கிய துறைமுக நகரமாக இக்காலகட்டத்தில் இருந்தது என்பதை கி.மு 3லிருந்து கி.பி 4 வரையிலான ரோமானிய வரலாற்றாசிரியர்களது குறிப்புக்களில் கொற்கையின் பெயர் இடம்பெறுவதிலிருந்து அறிகின்றோம். வைகை நதிக்கரையில் இடம்பெற்ற சோழ மன்னர்களது ஆட்சிக்குட்பட்ட பகுதிகள் மற்றும் பென்னார் நதிக்கரைப் பகுதி, நெல்லூர் ஆகிய பகுதிகளில் குறிப்பாக மஸ்லின் துணிகள், பருத்தித் துணிகள் ஆகிவயவற்றிற்கான வணிகம் மேலோங்கியிருந்தது. (Periplus of Erythrean Sea - 38-39, 41, 43-6, 54-60)

பாண்டியர்களின் துறைமுகங்களிலிருந்து பயணித்த வணிகக்கப்பல்கள் தமிழகத்திலிருந்து தயாரிக்கப்பட்ட வணிகப்பொருட்களான விலையுயர்ந்த கற்கள், அணிகலண்கள், முத்துக்கள், யானைகள் ஆகியவற்றை ஏற்றிக் கொண்டு அலெக்சாந்திரியா சென்றன. ஆக, மிக அதிக அளவில் வணிகக்கப்பல்கள் பயணித்த கடல்வழிப்பாதைகளாக இந்தியப் பெருங்கடல், செங்கடல் மற்றும் பாரசீகக் கடல் பகுதிகள் கிமு 1ம் நூற்றாண்டு முதல் கி.பி 4ம் நூற்றாண்டு வரை இருந்ததற்கு உறுதியான சான்றுகள் கிடைக்கின்றன (William Heinemann, (Book XV), p.37). தமிழக ஆற்றங்கரையோரப் பகுதிகளில் நிகழ்த்தப்பட்ட அகழாய்வுகளில் குறிப்பாக கரூர், கொடுமணல், முசிறி, கொற்கை, அரிக்கமேடு போன்ற பகுதிகளில் தங்க மற்றும் வெள்ளியில் உருவாக்கப்பட்ட ரோமானியக் காசுகள் பெருமளவில் கிடைத்துள்ளன. இவற்றுள் பேரரசர் அகஸ்டஸ், டிபேரியஸ் ஆகியோர் காலத்துக் காசுகள் மிக அதிகமாகக் கிடைத்துள்ளன. கரூரில் நிகழ்த்தப்பட்ட அகழ்வாய்வுகளில் பெருமளவில் அந்தோனியூஸ் பீயூஸ் (கி.பி. 138 - 161) மற்றும் ஹாட்ரியன் (கி.பி 117 - 138) ஆட்சி கால காசுகள் மிக அதிகமாகக் கிடைத்துள்ளன (Nagaswamy &, Roman Karur, 1995, P.25).

இந்தியாவுடனான வர்த்தகப் போக்குவரத்து அதிகரித்த காலகட்டத்தில் மிக ஆடம்பரமான வாழ்க்கை நிலையை ரோமானிய மக்கள் விரும்பியதாகவும் அதனால் இந்திய அணிகலன்களுக்கும், விலையுயர்ந்த கற்களை வாங்கி அணிவதிலும் அதிகம் ஈடுபாடு காட்டினர் என்றும், அதனால் ஏராளமான தங்கக் காசுகளும் வெள்ளிக் காசுகளும் இந்தியாவிற்குக் கொண்டு செல்லப்பட்டன என்றும், அதனால் ரோமானியப் பேரரசின் பொருளாதாரம் பாதிக்கப்பட்டதால் பேரரசர் திபேரியுஸ் பொருளாதார சீர்திருத்ததை அறிமுகப்படுத்தவேண்டிய சூழல் ஏற்பட்டது என்றும் காண்கிறோம் (Warmington, 1928, p.41).

அதிகரித்துக் கொண்டே செல்லும் இந்தியாவுடனான வர்த்தகத்தினால் பொருளாதாரம் பாதிக்கக்கப்படும் என்பதால் விலையுயர்ந்த அணிகலன்களைகளையும் ஆடைகளையும் இந்தியாவிலிருந்து வாங்கி அணியும் ஆண்கள், பெண்கள் இருபாலரது பெயர்களையும் கண்டறிய நடவடிக்கை எடுத்ததோடு இத்தகைய பொருட்களில் செலவு செய்வதற்குத் தடையும் விதித்தார் பேரரசர் திபேரியுஸ் (Warmington, 1928, p.41). தமிழகத்தின் பொள்ளாச்சி, கரூர் ஆகிய இன்றைய கோயம்புத்தூர் மாவட்டப் பகுதிகளில் நிகழ்த்தப்பட்ட அகழ்வாய்வுகளில் கண்டெடுக்கப்பட்ட ரோமானியக் காசுகள் இதற்கு மேலும் சான்று தருகின்றன. 453 அகஸ்டஸ் ஆட்சி கால காசுகளும், இது அதிகரித்ததைக் காட்டும் 1007 திபேரியுஸ் ஆட்சி கால காசுகளும் ஆய்வுகளில் கண்டெடுக்கப்பட்டுள்ளன (Warmington, 1928, p.41).

### போயிட்டிங்கர் வரைப்படம்

பண்டையத் துறைமுகப்பட்டணமான முசிறியில் வணிகம் மிகச் சிறப்பாக செழித்து வளர்ந்திருந்த காலகட்டத்தில் பல ரோமானிய வணிகர்கள் அங்கே வந்து தங்கினர் என்றும், பேரரசர் அகஸ்டஸ் காலகட்டத்தில் அவருக்கு ஒரு கோயிலை முசிறியில் எழுப்பினர் (Muziris) என்றும் சில குறிப்புக்கள் சொல்கின்றன (Warmington, 1928,

Cambridge p.37). சேர மன்னர்கள் ரோமானியப் பேரரசுடன் நல்ல வணிக நட்புடன் இருந்தார்கள். ரோமானிய வணிகர்கள் சேர நாட்டுத் துறைமுகப்பகுதிகளில் வந்து வர்த்தகம் செய்ய அனுமதி அளித்திருந்தனர். போயிட்டிங்கர் நில வழிப்பாதை வரைப்படம் (The Peutinger Map - Tabula Peutingeriana) காண்க (பின்னிணைப்பு 2: போயிட்டிங்கர் வரைப்படம்) முசிறியில் அகஸ்டசுக்கு எழுப்பப்பட்ட கோயிலைப் பற்றிய தகவலைக் குறிப்பிடும் ஆவணமாகும்.

இந்த நில சாலை வரைப்படம் இக் கோயிலை 'Templum Augusti' (Augustan Temple) எனக் குறிப்பிடுகின்றது. கிறிஸ்துவுக்கு முற்பட்ட கிரேக்க மற்றும் ரோமானிய பண்பாடுகளில் மன்னர்களுக்குக் கோயில் எழுப்பும் வழக்கம் இருந்தது என்பதை இங்கே கருத்தில் கொள்ளவேண்டும். முசிறி நகரில் துறைமுகத்திற்கு முற்பகுதியில் இந்தக் கோயில் எழுப்பப்பட்டது. அப்பகுதில் இருந்த ஏனைய கோயில்களுக்குப் போட்டியாகக் காணும் வகையில் வெள்ளியிலும் தங்கத்திலும் இக்கோயில் அலங்கரிக்கப்பட்டதிருந்தது. அலெக்சாந்திரியாவிலிருந்து வருகின்ற வணிகர்கள் வணிகம் செய்ய வந்த இடத்தில் தங்கள் வழிபாட்டினைச் செய்வதற்காக இது கட்டப்பட்டது. (Raoul McLaughlin, 2014, p.174).

போயிட்டிங்கர் வரைப்படம் என்பது கி.பி.1508ல் கோன்ராட் போயிட்டிங்கர் என்னும் ஜெர்மானிய நூலகர் ஒருவரது சேமிப்பில் இருந்த ஆவணமாகும். போயிட்டிங்கர் என்ற அவரது பெயரால் அறியப்படும் ஒரு வரைப்படம். இது பேப்பிரசால் உருவாக்கப்பட்ட தாளில் இன்றைய பிரான்சின் கோல்மார் நகரில் கி.பி.1265ல் படியெடுக்கப்பட்டது. கி.பி 328ல் உருவாக்கப்பட்ட இதன் மூல படிவத்திலிருந்து படியெடுக்கப்பட்ட ஒரு ஆவணம் இது. இன்று இது வியன்னாவின் தேசிய நூலகத்தில் பாதுகாக்கப்படுகிறது (Library Reference: Codex 324, Oesterreichische Nationalbibliothek, Hofburg, Vienna). இதனை உருவாக்கியவர் கி.பி 1ம் நூற்றாண்டு தகவல்களை இந்த ஆவணத்தில் பதிந்திருக்கின்றார்.

இந்த நில வரைப்படம் முழுமையான ரோமானியப் பேரரசின் எல்லை, மத்திய கிழக்கு நாடுகள் ஆகியவற்றோடு இந்தியாவின் கங்கை நதிப்பகுதியிலிருந்து இலங்கை வரைக்குமான பகுதிகளைப் பதிந்து வைக்கப்பட்ட ஆவணம். இதில் 555 பெரு நகரங்களும் 3500 ஊர்களும் சிறு படங்களாக வரையப்பட்டுள்ளன. இதில் கடற்கரையோரத்தில் முசிறி நகரம் காட்டப்படுவதோடு அகஸ்டசுக்கான கோயிலையும் இந்த வரைப்படம் காட்டுகின்றது. அகஸ்டசுக்கானக் கோயிலைப்பற்றிய ரோமானிய வரலாற்றாசிரியர்களின் குறிப்புக்கள் நமக்குக் கிடைத்தாலும் இன்றைய கேரள பட்டணம் (முசிறி) பகுதிகளில் நிகழ்த்தப்பட்ட அகழ்வாய்வுகளில் இதுவரை இக்கோயில் தொடர்பான சான்றுகள் கிடைக்கவில்லை என்றாலும், மேலும் விரிவான ஆய்வுகள் இங்கு தொடர்ப்பட வேண்டும் என்ற தொல்லியல் அகழ்வாய்வாளர்களின் கோரிக்கைகள் உள்ளன என்பதும் கருத்தில் கொல்ளப்பட வேண்டியுள்ளது.

### செங்கடல் பயண வழிகாட்டி
### (The Periplus of the Erythraean Sea)

The Periplus of the Erythraean Sea என்பது செங்கடலிலிருந்து இந்திய பெருங்கடல் வழியாக வர்த்தகக் கடல்வழிப் பயணத்திற்கான ஒரு ரோமானிக் கால வழிகாட்டிக் கையேடு. ஆரம்பகால இந்தியப் பெருங்கடலின் துறைமுக நகரங்களில் நிகழ்ந்த வர்த்தக மற்றும் சமகால மற்றும் விரிவான தகவல்களை வழங்கும் ஒரு ஆவணம் இது. இந்த ஆவணம் குறிப்பிடும் தகவல்கள் ஆய்வுக்குட்படுத்தப்பட வேண்டியவை என்றாலும் கூட இதில் உள்ள செய்திகள் அன்றைய வர்த்தக நிகழ்வுகளை, வணிகர்கள் பற்றிய செய்திகளை, வணிக நடைமுறைகளை, துறைமுகங்களில் கடைபிடிக்கப்பட்ட சட்டங்களை, வர்த்தகத்தில் முக்கியத்துவம் பெற்ற வணிகப்பொருட்களைப் பற்றிய தகவல்களை வழங்குகின்றன. இதில் உள்ள தகவல்கள் செங்கடலிலிருந்து பயணிக்கும் ஒரு வணிகக்கப்பல் ஆப்பிரிக்க நிலப்பகுதியைக் கடந்து பின்னர் இன்றைய

பாக்கிஸ்தான் பகுதியான சிந்து நதிப் பகுதி மற்றும் தென்னிந்திய கரையோர நகரங்கள் வரை பயணிக்கத் தேவைப்படும் பல்வேறு தகவல்களைப் பயணிகளுக்கு வழங்குகின்றன (Schoff Wilfred Harvey, 1912, pp.6 & 7).

இதன் கி.பி.14 அல்லது 15 காலகட்டபடி ஒன்று பிரித்தானிய அருங்காட்சியகத்தில் உள்ளது. இன்றைய செக் நாட்டின் ப்ராக் நகரைச் சார்ந்த சிக்மண்ட் கெலென் என்பவர் கி.பி 1533ம் ஆண்டு இந்த நூலைப் புதிய பதிப்பாக வெளியிட்டார். அது பல பிழைகளைக் கொண்ட பதிப்பாக வெளிவந்தது. கி.பி 10ம் நூற்றாண்டில் படியெடுக்கப்பட்ட இந்தச் செங்கடல் பயண வழிகாட்டி பதிப்பு ஒன்று ஜெர்மனியின் ஹைடெல்பெர்க் பல்கலைக்கழக நூலகத்தில் கண்டறியப்பட்டது. கி.பி 10ம் நூற்றாண்டில் படியெடுக்கப்பட்ட ஹைடெல்பெர்க் பல்கலைக்கழக நூலக பதிப்பு, இந்தப் பிழைகளை நீக்கி செந்தரமாக்கப்பட்ட இந்த நூலின் கையேடு உருவாக வழி அமைத்துக் கொடுத்தது (Narasiah, 2014, pp.4-5).

இதனை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்த ஷோஃப் (Wilfred Harvey Schoff, 1874-1932) இது உருவாக்கப்பட்ட காலம் கி.பி.59 62 எனக் குறிப்பிடுகின்றார். இதனை எழுதியவர் எகிப்தில் வாழ்ந்த கிரேக்கர் என்றும், ரோமானியப் பேரரசின் ஆட்சி காலத்தில் உருவாக்கப்பட்ட ஆவணம் என்பதும் அவரது கருத்து. இது இன்று பொதுவாக ஆய்வுலகினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட கருத்தாகவே அமைகின்றது. இந்தக் கையேடு கிரேக்க மொழியிலும் லத்தினிலும் கலந்து எழுதப்பட்டிருக்கின்றது என்பதோடு இதனை எழுதியவர் அலெக்சாந்திரியாவில் வாழ்ந்திருக்ககூடும் என்றும் குறிப்பிடுகின்றார் (Schoff, Wilfred Harvey, 1912, p.13).

இந்தச் செங்கடல் பயண வழிகாட்டி 66 பாகங்களாக அமைந்துள்ளது (காண்க பின்னிணைப்பு 3 : செங்கடல் பயண வழிகாட்டி துறைமுக முக்கிய நகரங்கள்). ஒவ்வொரு பாகமும் சிறிய பத்திகளாக அமைக்கப்பட்டுள்ளன. பண்டையத் தமிழ்ச்சேர மன்னர்கள் ஆட்சியில் முக்கிய நகரமாக விளங்கிய இன்றைய மறைந்த நகரமான முசிறி, மற்றும் பண்டைய பாண்டிய மன்னர்களின் ஆட்சிக்குட்பட்ட துறைமுக நகரங்கள் இந்த நூலில் இந்த ஆவணத்தின் மிக முக்கிய ரோமானியர்களின் வணிக ஆர்வம் நிலைத்திருந்த நகரங்களாகக் குறிப்பிடப்படுகின்றன.

இந்தச் செங்கடல் பயண வழிகாட்டியில் உள்ள சில குறிப்புக்களைக் காண்போம் .

- தென்னிந்திய துறைமுக வணிகப்பகுதிகளுக்கு வருகின்ற ரோமானிய வணிகக்கப்பல்கள் ரோமானிய நகர்களிலிருந்து இத்தாலிய வைன், தாமிரம், தகரம் ஆகியவற்றையும், மன்னர்களுக்காக விலையுயர்ந்த வெள்ளியினால் செய்யப்பட்ட பொருட்கள், அழகிய பெண்கள் மற்றும் உயர்தரமான மதுவகைகளையும் கொண்டுவந்தன. (Narasiah, 2014, p.27).
- தொண்டி (Tyndis) சேரன் (Cerobothra) ஆட்சியின் கீழ் உள்ளது; அது கடல் பகுதிக்குச் சற்று தள்ளி நிலப்பகுதியில் அமைந்துள்ளது. அதே அரசாட்சியின் கீழ் உள்ளது முசிறி. இங்கு அரேபியர்களும் கிரேக்கர்களும் கொண்டு வரும் பொருட்கள் நிறைந்த கப்பல்கள் வருகின்றன. இது ஒரு நதிக்கரையில் அமைந்திருக்கும் நகரம். இது தொண்டியிலிருந்தும் கடல்பகுதியிலிருந்தும் ஏறக்குறைய 20 ஸ்டாடியா (3.7 கிமீ) தூரத்தில் உள்ள நகரம். கோட்டையம் (Nelcynda) முசிறியிலிருந்து ஆற்றின் வழி பயணித்து செல்லும் வழியில் உள்ளது. இது முசிறியிலிருந்து 500 ஸ்டாடியா (92.5 கிமீ) தூரத்தில் உள்ளது. இது மற்றொரு மன்னரின் ஆட்சியின் கீழ் உள்ள நகரம்,. இதனை ஆட்சி செய்பவர் பாண்டிய மன்னன். இதுவும் ஒரு ஆற்றுப்பகுதியில் அமைந்திருக்கும் ஒரு நகரம். இது கடற்பகுதியிலிருந்து 120 ஸ்டாடியா (22.2 கிமீ) தூரத்தில் உள்ளது (Narasiah, 2014, p.42).
- மற்றுமொரு பகுதி ஆற்றின் முகத்துவாரப்

பகுதியில் அமைந்திருக்கின்றது. இந்தக் கிராமத்தின் பெயர் Bacare. ரோமாணியக் கப்பல்கள் இந்தப் பகுதிக்குச் சற்று தள்ளி நங்கூரமிட்டு நிற்கும். கப்பலில் உள்ள பொருட்கள் இங்கு இறக்கப்பட்டு பின்னர் நகருக்குள் கொண்டு செல்லப்படும். இது கோட்டையம் (Nelcynda) நகருக்கு அருகில் உள்ள மற்றொரு நகரம். இந்த இரண்டு ஊர்களும் அமைந்துள்ள பகுதியை ஆட்சி செய்யும் மன்னர்கள் நகரங்களில் வாழ்கின்றனர். (Narasiah, 2014, p.45).

- குமரியிலிருந்து (Comari) மேலும் தெற்கில் பயணித்தால் கொற்கை (Colchi) என்ற நகர் உள்ளது. இது முத்துக்குளித்தல் சார்ந்த வணிகம் நடக்கும் பகுதி. இதனைக் கடந்து மேலும் சென்றால் கடற்கரையோரத்தில் மேலும் ஒரு ஊர் உள்ளது. இதற்கு சற்று உள்ளே முக்கியச் சந்தை உள்ளது. இதன் பெயர் உறையூர் (Argaru). வேறு எங்கும் கிடைக்காத அளவிற்கு இந்த ஊரில் தரமான உயர் ரக முத்துக்கள் கிடைக்கின்றன. இங்கிருந்து மிக மெல்லிய துணி வகைகளும் கிடைக்கின்றன (Narasiah, 2014, p.47).
- இங்கு சந்தைகள் உள்ள நகரங்களில் அருகில் உள்ள துறைமுக நகரங்களில் கப்பல்கள் நிறுத்தப்பட்டிருக்கும். தமிழகத்துக்கும் (Damirica) வடக்குப் பகுதிக்கும் இடையில் உள்ள முக்கிய நகரங்கள் புகார் அல்லது காவிரிப்பூம்பட்டினம் (Camara), அரிக்கமேடு (Poduca), சோப்பட்டினம் என்று முன்னர் அழைக்கப்பட்ட இன்றைய மரக்காணம் (Sopatma) ஆகியவையாகும். இங்கு தமிழக வணிகர்களின் ஏராளமான வணிகக்கப்பல்கள் நிறுத்தப்பட்டிருக்கும். இங்கு அயல்நாட்டு வணிகர்களின் பெரிய கப்பல்களும் நிறுத்தப்பட்டிருக்கும். (Narasiah, 2014, p.60).

செங்கடல் பயண வழிகாட்டி கிபி 1ம் நூற்றாண்டு கால தமிழக கடற்கரை நகரங்களையும் அங்கு வாணிகம் நிகழ்ந்த செய்திகளையும் பதிந்து வைத்துள்ள முக்கிய ரோமானிய ஆவணம். இதைபோல பண்டைய தமிழக வணிகச்சூழலை விளக்கும் நூல்கள் கிடைக்க வாய்ப்பு கிட்டினால் பண்டை தமிழக வணிகச் சூழலை விவரிக்கும் மேலும் பல தகவல்கள் கிட்ட வாய்ப்புள்ளது.

## முசிறி பாப்பிரஸ்

தமிழக துறைமுக நகரங்களுக்கும் ரோமானிய பேரரசின் வணிக நகரங்களுக்குமிடையே நீடித்த வணிகப்போக்குவரத்து செய்திகளைப் பதிந்த முக்கிய ஆவணங்களுள் முசிறி பாப்பிரஸ் சிறப்பிடம் பெருகின்றது (பின்னிணைப்பு 4: முசிறி பாப்பிரஸ்). பண்டைய ரோமானிய எகிப்திய வணிகர்களின் இந்தியாவுடனான வணிகச் செய்திகள் இதில் இடம்பெறுகின்றன என்பதே இதன் தனிச்சிறப்பு. 1980ம் ஆண்டு ஆஸ்திரிய தேசிய நூலகத்தால் இது வாங்கப்பட்டது. அதனை அடுத்து இது 1985ம் ஆண்டு அச்சுவடிவில் வெளியிடப்பட்டது. ஒரு பாப்பிரஸ் தாளின் முன்பக்கமும் பின் பக்கமுமாக இரண்டு பக்கங்களிலும் இதில் எழுத்துக்கள் எழுதப்பட்டுள்ளன. இது அனேகமாக எகிப்தில் கி.பி 2ம் நூற்றாண்டு காலகட்டத்தில் (பண்டைய ரோமானியப் பேரரசு காலத்தில்) உருவாக்கப்பட்ட ஆவணம் என்பதே ஆய்வறிஞர்களின் கருத்தாகும் (Dominic Rathbone Muziris Papyrus, 2019, p.1).

அலெக்சாந்திரியாவில் உள்ள ஒரு வணிகருக்கும் தென்னிந்திய முசிறியிலிருந்து கொண்டுவரும் பொருட்களை ஏற்றிவரும் கப்பல்களுக்குப் பணம் கடன் கொடுப்பவருக்கும் இடையில் எழுதப்பட்ட ஒப்பந்த ஆவணம் இது. இதில் கடன் கொடுப்பவர், அலெக்சாந்திரியாவிலிருந்து முசிறி வரை அந்த வணிகரின் கப்பல் சென்று வருவதற்கான செலவுத் தொகையைக் கடனாகக் கொடுப்பதற்காக எழுதப்பட்ட ஒப்பந்த வரைமுறைகள் எழுதப்பட்டுள்ளன. இதில் பொருளின் முழுமையான விலை, சென்று திரும்பும் பயணச் செலவு ஆகிய அனைத்தும் முழுமையாக முதலீட்டாளரால்

கொடுக்கப்பட்டது என்று இந்த ஒப்பந்தம் கூறுகிறது. ஒரு வகையில் இந்த ஆவணம், கி.பி 1ம் நூற்றாண்டு வாக்கில் அலெக்சாந்திரியாவில் வாழ்ந்த வணிகர்கள், ஒரு வணிகக்குழு வணிகப்பொருட்களை ஏற்றிக் கொண்டு இந்தியாவரை சென்று வரும் முழு செலவையும் ஏற்றுக் கொள்ளும் வகையில் பொருளாதார பலம் பொருந்தியவர்களாக இருந்தார்கள் என்பதையும் காட்டுகின்றது (Dominic Rathbone Muziris Papyrus, 2019, p.1).

முசிறி பாப்பிரஸ், அந்த ஒப்பந்தத்தில் குறிப்பிடப்படும் பயணத்தில் இந்தியாவிலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்ட பொருட்களைப் பற்றிய தகவல்களைத் துல்லியமாக விவரிக்கின்றது. உதாரணமாக, 140 டன் மிளகு, 80 பெட்டிகளில் மூலிகை (Nard), 3.3. டன் எடை கொண்ட 167 யானை தந்தங்கள், 0.5 டன் எடை கொண்ட செம்மையாக்கப்பட்ட யானை தந்தங்கள், மற்றும் 50 டன் எடை கொண்ட ஏனைய பல பொருட்கள் இந்தக் கப்பலில் கொண்டு வரப்பட்டன. ஹெர்மாபோலன் (Hermapollon) எனப் பெயர் கொண்ட அந்தக் கப்பல் 250 டன் எடையை ஏற்றிச் செலும் தரம் படைத்த பெரிய கப்பல். ஏற்றி வரப்பட்ட பொருட்களின் எடையுடன் அவற்றிற்கான விலையையும் இந்த ஆவணம் விவரிக்கின்றது (Dominic Rathbone Muziris Papyrus, 2019, p.1).

## மதிப்பீடு

கடல் வணிகம் தொடர்பான ஆய்வுகளில் ஈடுபடுவோருக்குத் தமிழகத்திலிருந்து உலகின் ஏனைய பல நாடுகளுக்கு வணிகம் தொடர்பாக பயணித்த வணிகர்களைப் பற்றிய, மற்றும் பயணங்களைப் பற்றிய செய்திகள், தமிழர்களின் கடல் வாணிகம், கடல்வழி பயணங்கள் பற்றிய செய்திகள் ஆகியவை மிகக் குறைவாகவே இன்று கிடைக்கின்றன. தமிழகத்தின் கடற்கரையோர மற்றும் பெருநகரங்களில் மேற்கொள்ளப்பட்ட தொல்லியல் அகழ்வாய்வுகளில் ஏனைய பல நாடுகளுடன் தமிழக வணிகர்கள் மேற்கொண்ட வணிகத்திற்கான சான்றுகள் கிடைக்கின்றன. சங்க இலக்கியங்களும் காப்பியங்களும் தமிழகத்திற்கும் ரோமானிய பேரரசின் வணிகர்களுக்கும் இடையே நிகழ்ந்த வணிகச் செய்திகள், எத்தகைய பொருட்கள் தமிழகத்திலிருந்து ரோமானிய நாடுகளுக்குச் சென்றன என்பதையும், ரோமானிய பேரரசின் நாடுகளிலிருந்து எத்தகைய பொருட்கள் தமிழகத்திற்கு வந்தன என்பதை பற்றியும் சில செய்திகளைத் தருகின்றன.

ஆயினும், இதுவரை கிடைத்துள்ள இந்த ஆதாரங்களை ஆராய்வதின் வழி மட்டுமே ரோமானிய பேரரசுக்கும் பண்டைய தமிழகத்திற்கும் இடையேயான வணிக நடவடிக்கைகளைப் பற்றிய விரிவான செய்திகளை முழுமையாகப் பெற முடியாது. பண்டைய கடல் வழிப்பயண ஆய்வுகளுக்குத் தமிழ் இலக்கியங்கள் தருகின்ற செய்திகளுடன் மேலும் ரோமானிய பேரரசின் துறைமுக நகரங்கள் அமைந்திருந்த ஏனைய பகுதிகளில் நடைபெற்றுள்ள தொல்லியல் அகழ்வாய்வுகளையும், ஐரோப்பிய மற்றும் உலகின் ஏனைய ஆவணப்பாதுகாப்பகங்களில் உள்ள அரிய ஆவணங்களையும் ஆராய வேண்டியது அவசியமாகின்றது.

## முடிவுரை

இதுகாறும் தமிழகத்தின் சில நகரங்களில் நிகழ்த்தப்பட்ட தொல்லியல் அகழ்வாய்வுகள் தமிழகத்தின் நீண்ட கால வணிக செயல்பாடுகளை உறுதிப்படுத்துகின்றன. ‘திரைகடல் ஓடியும் திரவியம் தேடு’ எனும் சொல்லாடல் தமிழர் வாழ்வியலில் ‘கடல் கடந்து வணிகம் செய்தல்’ என்பது மிக முக்கிய அங்கம் வகித்தமையை வலியுறுத்துகிறது. பண்டைய தமிழ் வணிகர்கள் காற்றின் திசை அறிந்து தங்கள் வணிக பயணங்களை மேற் கொண்டனர். ரோமானியப் பேரரசுக்குத் தமிழக அரசவையில் இருந்து தூதுவர்களும் பரிசு பொருட்களும் அனுப்பி வைக்கப்பட்டன. தமிழக வணிகர்கள் இன்றைய எகிப்து, ஏமன், இத்தாலி, கிரேக்கம், ஸ்பெயின் ஆகிய நாடுகளுக்குப் பயணம் செய்து வணிகம் செய்திருக்கின்றார்கள். தமிழ் வணிகர்களின் கடல் பயணங்கள் தொடர்பான வரைபடங்களை தேடுவதும், தமிழ் வணிகர்கள் தொடர்பான கடல்

பயணங்கள் பற்றிய ஆவண குறிப்புகளைத் தேடுவதும், தமிழகத்திற்கு ஏனைய நாட்டினரின் வணிகம் தொடர்பான செய்திகளை ஆராய்வதற்கும் ஐரோப்பியரின் ஆவணக் குறிப்புகள் மிக முக்கியமானவையாக அமைகின்றன அவற்றை மிக விரிவாகத் தேடவேண்டியது அவசியம் என்பதோடு தென்னிந்தியாவின் பண்டைய துறைமுகப் பகுதிகளிலும் அதன் சுற்றுப்புரத்தில் அமைந்துள்ள ஊர்களிலும் அகழ்வாய்வுப் பணிகள் தீவிரப்படுத்தப்பட வேண்டும் என்பதை இக்கட்டுரை வலியுறுத்துகின்றது.

**References**


Abbott, J. (2007). *Romulus*. Chapel Hill, North Carolina: Yesterday's Classics.

Baldaeus, P., & Churchill, A. (1703). *A true and exact description of the most celebrated East-India coasts of Malabar and Coromandel : as also of the isle of Ceylon; with all the adjacent kingdoms, principalities, provinces, cities, chief harbours, structures, pagan temples, products, and living creatures ... with the draughts of their idols, done after their originals*. London: Printed for A. and J. Churchill.

Freeman, P. (2008). *Julius Caeser*. Riverside: Simon & Schuster.

Lord, J. K., & Sanborn, B. H. (1902). *Atlas of the geography and History of the Ancient World*. Boston : Benj. H. Sanborn & Co.

McLaughlin, R. (2014). *The Roman Empire and the Indian Ocean : the Ancient World Economy and the Kingdoms of Africa, Arabia and India.* Havertown : Pen and Sword.

Nagaswamy, R. (1995). *Roman Karur : a peep into Tamils' past*. Madras : Brahad Prakashan.

Narasiah, K. R. A. (2014). *THE PERIPLUS OF THE ERYTHRAEAN SEA*. Retrieved from http://www.tamilheritage.org.

Rathbone, D. W. (2019). *Muziris Papyrus*. New York: Oxford Research Encyclopedia of Classics.

Schoff, W. H. (trans.). (1912). *The Periplus of the Erythraean Sea: Travel and Trade in the Indian Ocean by a Merchant of the First Century*. New York: Longmans, Green, & Co.


Strabo. (*1932*). *The Geography of Strabo: Book XV* (H. L. Jones, trans.). London: William HeinemannLTD. Retrieved from https://archive.org/details/geographyofstrab07strauoft/page/n13

Subhashini, K. (2019). *German Thmizhiyal*. Chennai: Kalachuvadu Pathipakam.


Sylvanus, B. (1511). *Ptolemaic India*. Retrieved from https://artsandculture.google.com/asset/ptolemaic-india/SQF8lvV0tJA8yg

Warmington, E. H. (1928). *The Commerce Between the Roman Empire and India*. Great Britain: Cambridge university press. Retrieved from https://archive.org/details/in.ernet.dli.2015.125123/page/n7


*பின்னிணைப்பு 1 :* பெர்னாடுஸ் சில்வானூஸ் நிலவரைப்படம்





*பின்னிணைப்பு 2 :* போயிட்டிங்கர் வரைப்படத்தின் ஒரு பகுதி முசிறி



*பின்னிணைப்பு 3 : செங்கடல் பயண வழிகாட்டி துறைமுக முக்கிய நகரங்கள்*




*பின்னிணைப்பு 4 : முசிறி பாப்பிரஸ்*



# சீனி நைனா முகம்மது கவிதைகளில் திருக்குறளின் தாக்கம்
# The influence of Thirukkural in Seeni Naina Muhammad's Poems

மனோன்மணி தேவி அண்ணாமலை / Manonmani Devi D/O M.A.R Annamalai [1]


## *Abstract*

The poet Seeni Naina Mohammed is a renowned and respectable poet in Malaysia. In the world of classical poems, he established a name for himself and he is a literary legend who observed the society in which he lived. The anthology of poetry *Thenkudu* was published in the year 2011, which comprises more than 200 classical poems that have been written by him from 1958 to 2011.The influence of *Thirukkural* has been found in many poems which are included in the anthology of poetry. A literature which has key concept, principle, grammar, structure, etc. akin to another literature that appeared at an earlier time period, in any one of the above mentioned aspects. The comparative literature studies have found that, the literature which doesn't have any semblance with the previous literature and having entirely newly created literature has been ignored by the literary principles of that particular language. This study is based on 'The Concept of Influence' which is the part of comparative studies and the aim of this article is to study the influence of Thirukkural, written in post-sangam age, in key concept found in the anthology of poetry Thenkudu, written in the modern age.



Date of submission: 2019-01-25
Date of acceptance: 2019-03-10
Date of Publication: 2019-07-30


Corresponding author's Name:
Dr. Manonmani Devi D/O M.A.R Annamalai
Email: manonmanidevi@fbk.upsi.edu.my


**Key Words:** Theory Influence, *Thirukkural*, poetry *Thenkudu*, grammar, literary principles

### முன்னுரை

சிறந்த எண்ணங்களைச் சிறந்த மொழியில் கூறுவது அல்லது எழுதுவதுதான் இலக்கியம். சிறந்த இலக்கியம் என்பது இலக்கை நோக்கி நம்மைக் கொண்டு செல்லும் ஆற்றல் கொண்டது. இலக்கண வழுவில்லாமல் எழுதப்படுவன எல்லாம் இலக்கியம் என்பது இலக்கண நூலார் கொள்கை. சிறந்த இலக்கியங்கள் காலம் கடந்தும் நிலைபெற்று நீடுவாழும்; பிறநாட்டார் வணக்கம் செய்யும் வகையிலே போற்றும் வகையிலே வளர்ச்சி அடையும் என்பதில் ஐயம் இல்லை. தமிழர்கள் தாங்கள் புலம்பெயர்ந்து சென்ற நாடுகளில் எல்லாம் தமிழிலக்கியத்தை வளர்த்தனர். புலம்பெயர்ந்த தமிழர்களின் இலக்கிய முயற்சி என்பது கவிதை, சிறுகதை, நாவல், நாடகம், கட்டுரை, ஓவியம் என பல்வகையில் பரவி நிற்கிறது.

அவ்வகையில், புலம்பெயர்ந்த தமிழரான இறையருட்கவிஞர் செ. சீனி நைனா முகம்மது அவர்கள் பல்வேறு வகையில் தமிழ் இலக்கியத்தை மலேசிய மண்ணில் வாழவும் வளரவும் வழிவகுத்துள்ளார். இவர் மரபுவழி வந்த இலக்கிய இலக்கண அறிவுடையவர். மலேசியத் திருநாட்டின் மதிப்புறு கவிஞர். மரபு கவிதை உலகில் தனக்கென ஓரிடத்தை நிலை நிறுத்திக்கொண்ட இவர், தான்வாழும் சமூகத்தை உற்று நோக்கிய ஒரு படைப்பாளியாவார். 1958 முதல் 2011ஆம் ஆண்டு வரை இவர் எழுதிய 200க்கும் மேற்பட்ட மரபு கவிதைகள் அடங்கிய 'தேன்கூடு' எனும் கவிதைத் தொகுப்பு நூல் 2011ஆம் ஆண்டு வெளியீடு கண்டது. இக்கவிதைத் தொகுப்பில் இடம்பெற்றுள்ள பல கவிதைகளில் திருக்குறளின் தாக்கம் காணப்படுகின்றது.

[1] The author is a lecturer in Tamil Language Programme, Sultan Idris Education University,Malaysia. manonmanidevi@fbk.upsi.edu.my

ஓர் இலக்கியம் அதன் அடிக்கருத்து, உத்தி, யாப்பமைப்பு, புனைவுநிலை ஆகியவற்றில் அதற்கு முன்பு தோன்றிய மற்றொரு இலக்கியத்துடன் ஏதேனும் ஒரு வகையில் நெருங்கிய தொடர்பு கொண்டிருக்கும். இவ்வாறாகத் தனக்கு முந்தைய இலக்கியங்களில் தொடர்பில்லாமல் முற்றிலும் புதிதாகப் படைக்கப்படுகின்ற ஓர் இலக்கியத்தை அம்மொழியின் இலக்கிய மரபுகள் ஏற்றுக்கொள்ளாமல் புறக்கணித்துவிடுகின்றன என்பது ஒப்பிலக்கிய ஆய்வுகளின் மூலம் கண்டறியப்பட்டுள்ளது(Balasupramanyan, 1972). ஒப்பிலக்கிய ஆய்வில் ஒரு பகுதியாக விளங்கும் 'தாக்கக்கோட்பாடு'(Influence Theory) எனும் அணுகுமுறையின் அடிப்படையில், தற்காலத் தமிழிலக்கியமான தேன்கூடு கவிதைத்தொகுப்பில் சங்கம் மருவிய காலத்தில் தோன்றிய திருக்குறளின் தாக்கம் அடிக்கருத்துச் சார்ந்தும் புனைவுநிலை சார்ந்தும் எவ்வகையில் ஒற்றுமை கொண்டுள்ளது என்பதை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும். மேலும், இக்கட்டுரையின் வழி ஓர் இலக்கியம் மற்றொரு இலக்கியத்தின் மீது செலுத்துகின்ற தாக்கத்தினால் இலக்கிய மரபின் புதிய இலக்கிய வகைகள் உருவாவதைத் தெரிந்துகொள்ள வாய்ப்புக் கிடைக்கின்றது.

## தாக்கக் கோட்பாடு

செல்வாக்குக் கொள்கை அல்லது தாக்கம் கொள்ளுதல் (Influence Theory) என்பதே தாக்கக்கோட்பாட்டின் விரிவாக்கம் ஆகும் (Panjangam, 2011). தாக்கம் என்பது 'Influence' என்ற ஆங்கிலச்சொல்லின் பெயர்ப்பாக ஆளப்படுகிறது. பிரெஞ்சு நாட்டு ஒப்பீட்டறிஞர் 'ஜோசப் டெக்ஸ்டு' என்பவர் இக்கோட்பாட்டின் தந்தை என்று போற்றப்படுகிறார்(Jeyaboss, 2009). ஓர் இலக்கியம் பிறமொழி இலக்கியங்களிலிருந்து கொண்டது எது, அவற்றுக்குக் கொடுத்தது எவ்வளவு என ஆராயும் 'கொள்வினை, கொடுப்பினை பற்றிய ஆய்வே தாக்கக்கோட்பாடு எனப்படுகிறது (Bhagavathi, 2007). இக்கோட்பாடு பல துறைகளிலும் அதன் பரிமாணத்தை வெளிப்படுத்தினாலும் இலக்கியத் துறையில்தான் இக்கோட்பாட்டின் தாக்கத்தை நன்கு அறிய முடியும். காலங்காலமாய்ப் படைப்பாளர்களின் சிந்தனையில் உதித்த உலக இலக்கியங்கள் அனைத்தும் இந்தத் தாக்கக் கோட்பாட்டின் அடிப்படையில் அமைந்து வருகின்றன (Panjangam, 2011).

T.S. Eliot (1962) என்பார், பாரம்பரியமும் தனித்தன்மையும் (Tradition and individual Talent) என்ற கட்டுரையில், "ஒரு படைப்பாளியின் மனத்தில் அவன் அதுகாறும் அறிந்துள்ள இலக்கியங்களின் கூறுகள் சொற்றொடர்கள் அடைந்துள்ள உணர்வுகள், உணர்ச்சிகள் என்பன அவனை அறியாமலேயே ஒரு புதிய படிவம் பெற்று இலக்கியமாகி விடுகிறது. இத்தகைய படைப்பின் போது படைப்பாளி வேதனைப்படுவதாகவும் அவன் மனம் படைப்பில் ஈடுபடுவதாகவும் சுட்டுவார். மேலும் ஒருவன் முழுமையான படைப்பாளியாக வேண்டுமெனில் வேதனைப்படும் அவனுக்கும் படைக்கும் மனத்திற்கும் அதிக இடைவெளி வேண்டும்" என்று கூறுவது நோக்கத்தக்கது.

## உலக இலக்கிய நோக்கும் தாக்கக் கோட்பாடும்

ஓர் இலக்கியம் மக்கள் மத்தியில் தன் செல்வாக்கைப் பெற வேண்டுமாயின் அதற்கென்று தனி 'தகுதி' இருப்பது அவசியம். அந்த இலக்கியம் பெற்ற அந்தத் தகுதியே உலக இலக்கிய நோக்கு என்று அறிஞர்கள் குறிப்பிடுகின்றனர் (ஞிணீஸ்வீபீ, 1969). ஆக, படைப்பாளர்களின் படைப்புகள் உலக இலக்கிய நோக்கினைப் பெற, இலக்கியங்கள் ஒன்றின் மீது ஒன்று தத்தம் ஆதிக்கத்தைச் செலுத்தும் ஆரோக்கியமான நிலை உருவாகி இருக்கும் என்பது திண்ணம்.

தாக்கக் கோட்பாட்டின் வழி இலக்கியங்கள் உருவாக ஏழு வழிகள் உள்ளன என்று ஒப்பிலக்கிய அறிஞர்கள் கருதுகின்றனர்(Panjangam, 2011). அவை, 1. எடுத்தாளல் 2. மனத்தாக்கம் 3. மனத்தெழுச்சி 4. பிறமொழித்தாக்கம் 5. மறைமுகத்தாக்கம் 6. எதிர்நிலை என்பவையே ஆகும். இவற்றுள், எடுத்தாளல், மனத்தாக்கம், மனத்தெழுச்சி

எனும் மூன்று வழிகளில் திருக்குறளின் தாக்கம் தேன்கூடு கவிதைத்தொகுப்பில் கையாளப்பட்டுள்ள வகைமையில் இவ்வாய்வு விரிகிறது.

### வள்ளுவர் வழியில் இறையருட்கவிஞர் சீனி நைனா முகம்மது

வள்ளுவரின் வழிநின்று அரிய சாதனைகளை வடித்த புலவர் பலராவர். தெய்வத் திருக்குறள் பால் புலவர்களுக்கு உள்ள ஈடுபாடே அதற்குக் காரணம். 'சிலம்பின் திறமுரைத்த இளங்கோவடிகள் முதலாக வீர சுதந்திரம் வேண்டிப் பாடிய பாரதியார் ஈறாகத் தமிழகத்தில் தோன்றிய பெருங்கவிஞர் அனைவரும் திருக்குறளின் கருத்துகளைத் தமது கவிதைகளில் அமைத்து அழகுக்கு அழகு செய்துள்ளனர்' என்று சேதுப்பிள்ளை கூறியுள்ளார்கள் (1968, பக்.58). அவ்வகையில், இறையருட்கவிஞர் சீனி நைனா முகம்மது அவர்களும் தமது தேன்கூடு கவிதைத்தொகுப்பில் பல இடங்களில் திருவள்ளுவரைப் புகழ்வதோடு அவரது கருத்துக்களையும் குறள்வரிகளையும் எடுத்தாண்டுள்ளார்.

### தேன்கூடு கவிதைத் தொகுப்பில் திருவள்ளுவரின் புகழ் (மனத்தாக்கம்)

'யாமறிந்த புலவரிலே கம்பனைப்போல் வள்ளுவர்போல் இளங்கோவைப்போல் பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை' என்று வள்ளுவரை நடுநயமாக வைத்து வாழ்த்துகிறார் பாரதியார் (1995). இந்த வரிகளால் தூண்டடப்பெற்ற சீனி அவர்களோ,

*காப்பியனைத் தமிழுலகம் ஆளவைத்தாய் இங்குக்*

*காலமெல்லாம் வள்ளுவனை வாழவைத்தாய்*

*காப்பியத்துக் கோர்இளங்கோ கண்டெடுத்தாய் அந்தக்*

*கான்முனையில் நானும்வந்தேன் கைகொடுத்தாய்!*

*(அமுதான தமிழே, தேன்கூடு, 2011: பக்.39)*

என்றும், 'தெள்ளமுதம் நல்குகின்ற தேன்சிலம்புக் காவியத்தில், உள்ளமதில் தீஞ்சுவையை ஊறவைத்தே, இன்பத்தால் துள்ளவைக்கும் ஆற்றலதாய் தோன்றுகிறாள்; பேரறிஞர் வள்ளுவனார் பாடிவைத்த வாழ்வியலில் (என் காதலி, தேன்கூடு, 2011: பக்.29) என்றும் தமிழை வாழ்த்தும்போது, அங்குத் தொல்காப்பியனுக்கு அடுத்து வள்ளுவனை நிறுத்தி, தமிழ்மொழியே நீ காலமெல்லாம் எங்கள் வள்ளுவனை வாழவைத்தாய் என்று நெஞ்சார வாழ்த்தி மகிழ்வதொடு வள்ளுவனைப் பேரறிஞர் எனப்புகழ்ந்து, திருக்குறளில் தமிழ்மொழி வாழ்வதாகக் கவிதை வடித்துள்ள பாங்கு, தேன்கூடு கவிதைத்தொகுப்பில் வள்ளுவனின் தாக்கத்தை நன்கு பறைசாற்றுகிறது.

*குணமென்னும் குன்றேறி நின்றார் வெகுளி*

*கணமேயும் காத்தல் அரிது. (குறள்: 29)*

குணக்குன்றுகளான பெரியவர்கள் கோபம் கொண்டால் அந்தக் கோபம் அவர்கள் உள்ளத்தில் ஒரு கணம் கூட நிலைத்து நிற்காது என்று நீத்தார்பெருமை எனும் அதிகாரத்தில் வள்ளுவன் பகர்ந்தான். கீழ்க்காணும் கவிதையில் இளைஞர்களைக் குணம் எனும் குன்றின் மீது ஏறுமாறு கவிஞர் அழைக்கிறார். இவ்வாறு அழைப்பதற்குத் திருக்குறள் எனும் இலக்கியத்தின் தூண்டடல் நிலையே காரணமாகின்றது.

ஏறப்பா **குணமென்னும் குன்றின் மேலே**

இலக்கியத்தின் இலக்கதுதான் எழுந்திடப்பா!

(பா!பா!பா அப்பப்பா!, தேன்கூடு: 2011, பக். 43)

### தேன்கூடு கவிதைத்தொகுப்பில் திருக்குறளின் சிறப்பு (மனத்தெழுச்சி)

தமது கவிதை வரிகளில் திருவள்ளுவனின் புகழ் பாடிய சீனி அவர்கள் தொடர்ந்து திருக்குறளின் சிறப்பை ஆங்காங்கே கூறிச் சென்றுள்ளதைக் காணமுடிகின்றது.

*'வாழும் நெறியை ஏழு சீரில்*

*வழங்கும் குறள்கள் தமிழிலே இடர்*

*சூழும் போதும் சுடரும் கற்பைப்*

*பாடும் சிலம்பு தமிழிலே'*

*(எல்லாம் தமிழிலே!, தேன்கூடு, 2011: பக்.34)*

மேற்காணும் கவிதையில் திருக்குறள், ஏழே சீர்களில் மனித வாழ்வின் நெறிகள் அத்துணையும் கூறியுள்ள அழகை வியந்துபார்க்கிறார். தொடர்ந்து, 'பெருநாட்சா, சேக்சுப்பியர், புளுட்டோ, உரூசோபோன் றோரை உலகறியும் ஆனால், திருக்குறளும் தேன்சிலம்பும் செய்தோரை மட்டும், அருந்தமிழர் நாமே அறிந்திலமே இன்னும்!'(அத்திருநாள் என்று வரும்?, தேன்கூடு, 2011: பக்.30) என்ற கவிதை வரிகளில் சிறப்புமிக்க திருக்குறளை அறியாது வாழும் தமிழர்களைக் கண்டு மனம் நொந்து பாடும்வேளையில் குறளின்பால் கவிஞருக்கு இருக்கும் மனத்தாக்கம் நன்கு புலனாகிறது.

## தேன்கூடு கவிதைத் தொகுப்பில் திருக்குறளின் தாக்கம் (மனத்தெழுச்சி)

திருக்குறளின் அமைப்பு முறையையும் புனைவு நிலையையும் உள்வாங்கிய கவிஞர் தமது கவிதையில் அவ்வமைப்பு முறையை விளக்கியதொடு வள்ளுவனை நமது பாட்டன் எனக் குறிப்பிட்டு வள்ளுவனுக்கும் தமிழனுக்கும் இருக்கும் உறவையும் வள்ளுவன் சுட்டிய தமிழனின் வாழ்வியலையும் மிக நயமாகக் காட்டியுள்ள பாங்கானது நம்மை வியக்கவைக்கிறது. இங்குக் குறளின் மீது கவிஞருக்கு இருக்கும் ஈடுபாடு வெளிப்படுகிறது.

*அறம்பொருள் இன்பம் அன்றே பகுத்து*

*அகமும் புறமும் அதனுள் வகுத்துக்*

*களவும் கற்பும் காதலும் ஊடலும்*

*பாடித் தந்த பாட்டனின் ஞானம்*

*(நாங்கள் வேறு நீங்கள் வேறுதான்!, தேன்கூடு, 2011: பக். 40)*

திருவள்ளுவர் துறவறவியலில் 'கொல்லாமை' எனும் அதிகாரத்தையும் இல்லறவியலில் 'புறங்கூறாமை' எனும் அதிகாரத்தையும் அமைப்பு நிலையில் எடுத்தாண்டு உள்ளார். இவ்வமைப்பு முறையைக் கவிஞர் தம் கவிதைகளில் சுட்டிக் காட்டியுள்ளார்.

*கொல்லாமை யோடுபுறம்*

*கூறாமை என்றெல்லாம்*

*பல்லாமை சொல்லிஅறப்*

*பாதையினை நீவகுத்தாய்*

*(நீத்த நிலைவிடுத்து வாராயோ!, தேன்கூடு, 2011: பக். 140)*

## தேன்கூடு கவிதைத் தொகுப்பில் காணப்படும் திருக்குறளடிகள் (எடுத்தாளல்)

தேன்கூடு கவிதைத்தொகுப்பில் காணப்படும் கவிதைகளில் சில திருக்குறளிலிருந்து எடுத்தாளப்பட்டிருக்கின்றன. மற்றுச் சில ஒத்த கருத்துகளாகவும் இருக்கின்றன. சான்றுகளாகச் சில கவிதை வரிகள்:

*1. குறள் 314: இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர்நாண*

*நன்னயம் செய்து விடல்*

நமக்குத் தீமை செய்தவரைத் தண்டித்தல் அவரே நாணும்படியாக அவருக்கு நல்லுதவி செய்து அவருடைய தீமையையும் நன்மையையும் மறந்துவிடுதலாகும் என்றான் வள்ளுவன். தவறு செய்பவனை அறம்மீறாது தண்டிக்கும் புதிய வழியைக் கூறிய வள்ளுவனைப் போன்ற உயர்ந்த சான்றோனைத் தமிழனைத் தவிர வேறு யாருமே அறிந்திருக்க மாட்டார்கள் என்று தமது கவிதையில் கூறியதன் வழி வள்ளுவனைப் போன்றதொரு புலவன் வேறு எந்த இனத்திலும் தோன்றியதில்லை என்ற கருத்தைக் கீழ்க்காணும் கவிதைவரிகளில் மறைமுகமாகக் கூறி, திருவள்ளுவனின் புகழைச் சிகரத்திற்குக் கொண்டு சென்றுள்ளார் கவிஞர் சீனி நைனா முகம்மது.

*இன்னா புரிந்தோரை*

*எவ்வா றொறுப்பதென்று*

*சொன்னவரை நம்மையன்றிச்*

*சொல்லுங்கள் யாரறிவார்?*

*(அத் திருநாள் என்று வரும்?, தேன்கூடு, 2011, பக்.30)*

*2. குறள் 318: தன்னுயிர்க்கு இன்னாமை*

*தானறிவான் என்கொலோ*

*மன்னுயிர்க்கு இன்னா செயல்*

தன் உயிருக்குத் துன்பமானவை இவை என்று உணர்ந்தவன், அத்துன்பத்தை மற்ற உயிருக்குச் செய்தல் என்ன காரணத்தாலோ என்ற வள்ளுவனின் குறளடியைக் கீழ்க்காணும் வெண்டளைக் கொச்சகக் கலிப்பா வகையில் அமைந்த தமது கவிதையில் கவிஞர் கையாண்டுள்ளதோடு இது போன்ற அரிய கருத்துகளை இவ்வுலகிற்குக் கூற நாம் தவறிவிட்டோம் என்றும் கவிஞர் கீழ்க்காணும் வரிகளில் மனம் நொந்து கூறியுள்ளமை திருக்குறள் மீது அவருக்கு ஏற்பட்டுள்ள ஆழ்ந்த பற்றையும் தாக்கத்தையும் பறைசாற்றுகின்றது.

*இன்னும் அழகாய்*

*இதனையே வள்ளுவனார்*

*தன்னுயிருக் கின்னாமை*

*தானறிவான் என்கொல்லோ*

*மன்னுயிருக் கின்னா*

*மனமுவந்து செய்தலென்று*

*சொன்னார்! உலகறியச்*

*சொன்னோமா நாமிதனை?*

*(அத்திருநாள் என்று வரும்?, தேன்கூடு, 2011: பக்.31)*

*3. குறள் 1330: ஊடுதல் காமத்திற்கு இன்பம் அதற்கின்பம்*

*கூடி முயங்கப் பெறின்*

இன்பத்துப்பாலில் ஊடலுவகை எனும் அதிகாரத்தில், காமத்திற்கு இன்பம் தருவது ஊடுதல் ஆகும், ஊடல் முடிந்த பின் கூடித் தழுவப் பெற்றால் அந்த ஊடலுக்கு இன்பமாகும் என்ற கருத்தினை வள்ளுவன் கூறவிழைந்துள்ளான். இக்குறளை அப்படியே தமது கவிதையில் கையாண்டுள்ளார் கவிஞர் சீனி அவர்கள். இதனையே இலக்கியக் கடன் என்று ஒப்பிலக்கிய அறிஞர்கள் கூறுகின்றனர். ஊடலுவகை எனும் தலைப்பிட்ட கலிவெண்பா வகையில் புனையப்பட்ட கவிதையில் 'மலரிலே வந்தமரும் வண்டாய்நான் மாறி மலரென என்னருகில் மஞ்சத்தில் சாய்ந்திருந்த என்னவளின் வண்ண எழில்முகத்தைப் பார்த்திருந்தேன்' எனத்தொடங்கும் கவிதையின் இருபத்து நான்காவது அடியில்,

*இதற்குமேல் தாளாதே என்னுள்ளம் இன்னும்*

*குதர்க்கமாய்ப் பேசாதே! கோபம் வரு' மென்றேன்.*

*'ஊடுதல் காமத்திற் கின்பம், அதற்கின்பம்*

*கூடி முயங்கப் பெறினென்று வள்ளுவனார்*

*கூறியதாய் அன்றொருநாள் கூறியதேன்?*

*(ஊடலுவகை, தேன்கூடு , 2011,பக்.110)*

1330வது குறளின் பொருளை நன்குணர்ந்து இடமறிந்து பயன்படுத்தியுள்ளமை சீனி நைனா முகம்மது திருக்குறளின் மீது கொண்ட காதலை வெளிப்படுத்துகிறது.

*குறள் 1: அகர முதல எழுத்தெல்லாம் ஆதி*

*பகவன் முதற்றே உலகு*

திருவள்ளுவர் பாயிரவியலில் தமது முதலாவது குறளில், நெடுங்கணக்கில் உள்ள எழுத்துகள் எல்லாம் அகரத்தை முதலாக உடையன; அது போல உலகம் இறைவனை முதலாக உடையது என்று கூறியுள்ள கருத்தினை உள்வாங்கி புனைவுநிலையில் சிறு மாற்றத்தை மேற்கொண்டு கவிஞர் தேன்கூடு கவிதைத் தொகுப்பில் காட்சிப்படுத்தியுள்ளார்.

*ஆதியந்தம் இல்லான்*

*அவன்முதற்றே ஞாலமென்றாய்*

*பீதியுற்ற வேளையிலும்*

*பேரின்பப் போதினிலும்*

*(நீத்த நிலைவிடுத்து வாராயோ!, தேன்கூடு, 2011: பக். 140)*

எனும் வரிகளில் உலகம் ஆதியந்தம் இல்லா இறைவனை முதலாகக்கொண்டது என்று நீ கூறியுள்ளாய் வள்ளுவனே! ஆனால் இன்றைய நிலையில் செல்வம்தான்

உலகத்தில் முதலானது என்ற மக்களின் குரல்கேட்டால் நீ சிரிப்பாயோ! அல்லது நொந்துபோவாயோ தெரியவில்லை என்று விரக்தியுடன் கூறியுள்ள பாங்கினைக் காணமுடிகிறது. மேலும்,

*குறள் 927: உள்ளொற்றி உள்ளூர் நகப்படுவர் எஞ்ஞான்றும்*

*கள்ளொற்றிக் கண்சாய் பவர்*

எனும் கள்ளுண்ணாமை அதிகாரத்தில் மறைந்திருந்து மதுவருந்தினாலும் மறைக்க முடியாமல் அவர்களது கண்கள் சுழன்று மயங்குவதைக் கண்டு ஊரார் எள்ளி நகையாடத்தான் செய்வார்கள் என்று கூறியுள்ள கருத்தினைத் தேன்கூடு கவிதைத் தொகுப்பின் புனைவுநிலையில் கீழ்க்காணும் கவிதை வரிகளில் காணமுடிகின்றது.

*கள்ளருந்திப் போதையுற்றுக்*

*கண்சாய்தல் பாவமென்றாய்*

*கள்ளிலிவர் நீந்துகின்றார்:*

*கண்டுதினம் வேற்றினத்தார்*

*எள்ளுகிறார் இவர்க்கதிலே*

*எள்ளளவும் நாணமில்லை*

*(நீத்த நிலைவிடுத்து வாராயோ!, தேன்கூடு, 2011, பக். 140)*

கள்ளருந்தும் பழக்கம் தவறு என்று வள்ளுவன் குறிப்பிட்டிருந்தும் மலேசியத் தமிழர்களில் சிலர் போதையில் தள்ளாடுவதைக் கண்டு பிற இனத்தவர் எள்ளி நகையாடுகிறார்கள் இருப்பினும் இவர்களுக்கு எள்ளளவும் நாணமில்லை என்று கவிஞர் வள்ளுவனின் குறளைச் சுட்டிக்காட்டி மிக நாசுக்காகக் கள்ளருந்தும் சமூகத்தைச் சாடுகிறார்.

*குறள் 596: உள்ளுவது எல்லாம் உயர்வுள்ளல் மற்றது*

*தள்ளினுந் தள்ளாமை நீர்த்து*

எண்ணுவது எல்லாம் உயர்வைப்பற்றியே எண்ணவேண்டும், அவ்வுயர்வுக் கைகூடாவிட்டாலும் அவ்வாறு எண்ணுவதை விடக்கூடாது என்றான் வள்ளுவன். இக்குறளினை இசைப்பாடல் வழி கவிஞர் மிக அழகாகக் கையாண்டுள்ளார்.

*வள்ளுவப் பாட்டனைத் தெரியுமா? தம்பி*

*வள்ளுவப் பாட்டனைத் தெரியுமா?*

*உள்ளுவ தெல்லாமே உயர்வுள்ளச் சொல்லிய*

*வள்ளுவப் பாட்டனைத் தெரியுமா?*

*(பாட்டனைத் தெரியுமா, தேன்கூடு, 2011:பக்.169)*

‘பொன்னான குறளினை மண்வாழப் பாடிய கண்ணான பாட்டனைத் தெரியுமா?’ என்றும் சாவாத குறளினைப் பார்வாழ பாடியே பேர்வாழும் பாட்டனைத் தெரியுமா? என்றும்

இக்கவிதை முழுதும் வள்ளுவனைக் கவிஞர் புகழ்ந்துரைத்துள்ள பாங்கு கவிஞர் திருவள்ளுவன் மீது கொண்டுள்ள பற்றினைப் பறைசாற்றுகின்றது.

*குறள் 595: வெள்ளத்து அனைய மலர்நீட்டம் மாந்தர்தம்*

*உள்ளத்து அனையது உயர்வு*

ஊக்கமுடைமை எனும் அதிகாரத்தில் நீர்ப்பூக்களின் அடிக்காம்பின் நீளம் நீரின் அளவே ஆகும். அதுபோல மக்களின் உயர்வும் அவர்களின் மன ஊக்கத்தின் அளவே ஆகும் என்று வள்ளுவன் கூறியுள்ள கருத்தினை உள்வாங்கி கவிஞர் கீழ்க்காணும் தம் கவிதையில் வடித்துள்ளார்.

*வெள்ளத்தின் அளவே தாமரை உயரும்*

*வெறுங்குள மானால் அழியும் புது*

*வெள்ளத்தில் மீண்டும் தழையும்*

*உள்ளத்தில் உயர்ந்தால் உயர்ந்திடும் வாழ்க்கை*

*உன்வச மாகிடும் உலகம் இதை*

*உணரத் திருக்குறள் உதவும்*

*(நீ உயர..., தேன்கூடு, 2011: பக்.188)*

மேற்கண்ட கவிதையில் உயரத்துடிக்கும்

இளைஞர்களுக்கு அறிவுரை கூறும் நிலையில் வள்ளுவனின் குறளைத் துணைக்கழைத்துள்ளார் கவிஞர்.

*குறள் 56: தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற*

*சொற்காத்துச் சோர்விலாள் பெண்*

கற்புநெறியில் தன்னையும் தன் கணவனையும் காத்துக்கொண்டு, தமக்குப் பெருமை சேர்க்கும் புகழையும் காப்பாற்றிக் கொள்வதில் உறுதி குலையாமல் இருப்பவள் பெண் என்றான் வள்ளுவன். இதனையே கவிஞரும் கலிவெண்பாவில் அமைந்த தமது கவிதையில் கையாண்டுள்ளமை திருக்குறளின் தாக்கத்தைக் காட்டிநிற்கின்றது.

*தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற*

*சொற்காத்துச் சோர்விலாள் பெண்ணென்று சொன்னகுறள்*

*ஒன்றே அதன்பயனை உன்னறிவுக் கெட்டவைக்கும்*

*இன்றே குறள்பயில்வாய் இல்லத் தொளிநிறைப்பாய்*

*பெண்போல் உலகில் பெரிதில்லை தன்மைகெடின்*

*மண்மேல் அதுபோன்ற மாசுமில்லை ஆதலின்நீ*

*பெண்ணாக உன்கைப் பிடித்தோன் புகழ்காக்கும்*

*கண்ணாக அன்புக் கனியாக வாழ்ந்திடுவாய்*

*(ஏற்றமுடன் வாழ்க, தேன்கூடு, 2011: பக்.202)*

*குறள் 34: மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்*

*ஆகுல நீர பிற*

மனம் தூய்மையாக இருப்பதே அறம்; மற்றவை ஆரவாரத்தைத் தவிர வேறொன்றுமில்லை என்ற வள்ளுவர் கூற்றுக் கீழ்க்காணும் தேன்கூடு கவிதைத் தொகுப்பில் எடுத்தாளப்பட்டுள்ளமை திருக்குறளின் தாக்கத்தை எடுத்தியம்புகின்றது.

*எனக்குள்ளே உண்மையொளி வேண்டு மாயின்*

*என்னவழி எனவெண்ணி மயங்கும் வேளை,*

*மனத்துக்கண் மாசிலனாய் ஆதல் என்ற*

*வள்ளுவனின் குறளோசை காதில் கேட்க,*

*வினைத்தூய்மை வெளிச்சமெலாம், மனத்தின் தூய்மை*

*விளைந்தால்தான் விளையுமென்று தெளிவு பெற்றேன்.*

*(இதற்குமுன் அது வேண்டும், தேன்கூடு, 2011: பக்.259)*

## தேன்கூடு கவிதைத்தொகுப்பில் காணப்படும் திருக்குறளின் அடிக்கருத்துகள்(வழிகாட்டி)

திருவள்ளுவர் இயம்பிய அறக்கருத்துகளைக் கவிஞர்கள் தமது கவிதைகளில் வேறு புனைவு நிலையில் கையாண்டுள்ளமை காலந்தோறும் காணக்கிடக்கின்றது. அவ்வகையில் தேன்கூடு கவிதைத் தொகுப்பில் பல இடங்களில் அறிவுரையாகவும் காதலை வெளிப்படுத்தும் நிலையிலும் திருக்குறளின் அடிக்கருத்துகள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

இன்பத்துப்பாலில், குறிப்பறிதல், தகையணங்குறுத்தல் எனும் அதிகாரங்களில் வள்ளுவன் கையாண்ட குறள்கள் கீழ்க்காணுமாறு அமைந்துள்ளன.

*நோக்கினாள் நோக்கி இறைஞ்சினாள் அஃதவள்*

*யாப்பினுள் அட்டிய நீர் (குறள்: 1093)*

*நோக்கினாள் நோக்கெதிர் நோக்குதல் தாக்கணங்கு*

*தானைக் கொண்டன்ன துடைத்து (குறள்: 1082)*

*யான்நோக்கும் காலை நிலன்நோக்கும் நோக்காக்கால்*

*தான்நோக்கி மெல்ல நகும் (குறள்: 1094)*

தலைவன் நோக்காதபோது தலைவி நோக்குவதாகவும் அவ்வாறு நோக்கியவள் நாணங்கொண்டு தலைகுனிந்த செயலைக் காதற்பயிர் வளர தலைவி விதைத்த நீராகத் தலைவன் கருதுகிறான் என்கிறார் வள்ளுவர். தலைவி வீசிடும் பார்வையானது வேலைப்போல தலைவனைத் தாக்கியதாக வள்ளுவன் உவமை கூறுகிறான். தலைவன் நோக்கும்போது தலைவி நிலம்பார்ப்பதும் பாராத போது தம்மைப் பார்த்து நகைப்பதும் தலைவியின் செயலாக இருக்கிறது என்கிறான் வள்ளுவன். வள்ளுவன் கூறிய தலைவியின் இச்செயல்கள் எல்லாம் இறையருட்கவிஞருக்கு மனத்தாக்கத்தை ஏற்படுத்தியிருகின்றன. ஆகையினால்தான் தம் கவிதைகளில் இவ்வடிக்கருத்துகளைப் பதிவு செய்துள்ளார்.

*அம்பாக ஒருபார்வை வீசினாள் அதை*

*அன்பான பார்வையால் பூசினாள்!*

*என்பார்வை விழும்போது கூசினாள் பின்*

*ஏதேதோ வாய்க்குள்ளே பேசினாள்!*

*விண்பார்த்து விழியாலே தேடினாள் கால்*

*விரலாலே மண்ணையும் கீறினாள்!*

*முன்தானை நழுவாமல் மூடினாள் பெரு*

*மூச்சாலே ஒருசெய்தி கூறினாள்!*

(சொல்லத் தெரியவில்லை!, தேன்கூடு, 2011:பக்.129)

இப்பெண்ணின் கண்கள் உயிர்பறிக்கும் கூற்றமோ? என்ற வள்ளுவனின் கேள்விக்குக் கவிஞர் தம் கவிதையில் பதிலளிக்கிறார். வள்ளுவன் பெண்ணின் கண்களைக் கூற்றம் என்றான். கவிஞர் சீனியோ காலனைப் பெண்ணின் கண்களில் தாம் பார்த்துவிட்டதாக ஆணித்தரமாகக் கூறுகிறார்.

*கூற்றமோ கண்ணோ பிணையோ மடவரல்*

*நோக்கம் இம்மூன்றும் உடைத்து* (குறள்: 1085)

*வேலெனும் கூர்மையெல்லாம் விழி*

*வீச்சில் மிகைத்துவிட்டாள்!*

*காலனை யாரறிவார் அவள்*

*கண்களில் நானறிந்தேன்!*

(கண்ணல்ல காலன்!, தேன்கூடு, 2011:பக்.128)

*பிணிக்கு மருந்து பிறமன் அணியிழை*

*தன்நோய்க்கு தானே மருந்து* (குறள்: 1102)

மேற்கண்ட குறளில் காதல் நோயைக் கொடுத்தவளான பெண்ணே அந்நோய்க்கு மருந்தும் ஆகிறாள் என்றான் வள்ளுவன். கவிஞரோ இவ்வடிக்கருத்தினை உள்வாங்கி நோயில் கிடத்திவிட்டாள்.... அவள் கண்ணே மருந்திடுமோ என்கிறார்.

*நூலெனும் நுண்ணிடையாள் எனை*

*நோயில் கிடத்திவிட்டாள்*

*காலம் கனிந்திடுமோ அவள்*

*கண்ணே மருந்திடுமோ!*

(கண்ணல்ல காலன்!, தேன்கூடு, 2011: பக்.128)

## திருக்குறளின் வழியில் நடக்காத தமிழச் சமூகம் சாடப்படுதல்(காலச்சூழல்)

திருக்குறள் வழி நடக்காத தமிழர் இருத்தலை விட சாதல் நன்று என்று கவிஞர் சீனி அவர்கள் சாடியுள்ளமை தேன்கூடு கவிதைத் தொகுப்பின் வழி அறியப்படுகின்றது. திருக்குறள் போன்ற அரிய நூல்கள் இல்லாத பிற இனத்தவர்கள் எல்லாம் சிறப்பான நல்வாழ்க்கை வாழும்போது அரிய புதையலான திருக்குறளைப் பெற்றிருக்கும் தமிழர்கள் திருவள்ளுவனின் கருத்துகளை வாழ்வில் கடைபிடிக்காமல் நடந்துகொள்கிறார்கள். ஆனால், திருக்குறள் எனும் நூல் தங்களுக்கு உரியது என பெருமை பேசுகிறார்கள். இந்நிலை மாறவேண்டும் என்று கவிஞர் குமுறுகிறார். கவிஞரின் மனத்தெழுச்சி கீழ்க்காணும் கவிதையில் தெள்ளத் தெளிவாகத் தெரிகிறது.

*திருக்குறள்போல் நூலொன்றும் இல்லா ரெல்லாம்*

*திருநிறைந்து நல்வாழ்க்கை வாழும் போது,*

*திருக்குறளைத் தமதென்று பெருமை*

*பேசும்*

*தீந்தமிழர் தேய்ந்துவிட்ட விந்தை என்னே!*

*திருக்குறளை நமதென்றால் தமிழரெல்லாம்*

*திரும்பிடவே குறள்வழியில் உறுதி கொள்வீர்*

*திருக்குறளின் வழிநடத்தல் இயலா தென்றால்*

*திருக்குறளை நமதென்று பீற்றல் வேண்டா!*

*வள்ளுவரே வந்தாலும் அவரே சொன்ன*

*வழியினிலே வாழ்வதிங்கே இயலா தென்றே*

*எள்ளுகின்ற தமிழரிங்கே இருந்தா லென்ன!*

*இல்லாமல் தாம்மடிந்து போனா லென்ன*

*உள்ளமதில் தமிழனெனும் உணர்வுண் டானால்*

*ஒருமுகமாய்க் குறள்வழியில் நடப்பீர் இன்றேல்*

*வள்ளுவனின் பரம்பரைக்குக் களங்கம் வேண்டாம்*

*வாழ்வினையே முடித்தொன்றாய்ச் சாதல் நன்றே!*

*(தெருவிலே தமிழனென்றால், தேன்கூடு, 2011: பக்.137)*

**நிறைவுரை**

தாக்கத்திற்கு உட்படுதல் ஒவ்வொரு எழுத்தாளரிடமும் வெவ்வேறு விதமாக வெளிப்படுகின்றது. சிலர் போலச் செய்கின்றனர்; சிலர் தழுவுகின்றனர்; சிலர் மொழிபெயர்க்கின்றனர்; சிலர் ஒட்டுச்சேர்க்கை முறையைக் கையாளுகின்றனர்; சிலர் திருடவும் செய்வது செய்கின்றனர்; சிலர் கடன் வாங்குகின்றனர்; சிலர் மறு உருவாக்கம் செய்கின்றனர்; சிலர் தாக்கத்திற்கு உள்ளாகி இருப்பதே தெரியாமல் நையாண்டி செய்வது போலச் செயல்படுகின்றனர். கவிஞர் சீனி நைனா முகம்மது சிந்தனையில் திருக்குறளின் தாக்கம் வேரூன்றி உள்ள நிலையை அவரது தேன்கூடு கவிதைத் தொகுப்பு நமக்கு நன்கு பறைசாற்றியுள்ளது.

ஆண்டுகள் பல கடந்தாலும் சிறந்த கருத்துகள் என்றும் அழிவதில்லை, உயர்ந்த எண்ணங்கள் என்றும் மறைவதில்லை. இந்த அழியாத உண்மையைத் தேன்கூடு கவிதைத்தொகுப்பில் திருக்குறளின் செல்வாக்கும் தாக்கமும் மிகுந்திருப்பதைக் கொண்டே தெள்ளிதின் உணர முடிகிறது. சிறந்த கருத்துகளுக்கு என்றும் நிலைபெற்று நீடு வாழும் நிலைத்த தன்மை உண்டு. வள்ளுவரின் காலங்கடந்து நிற்கும் அருங்கருத்துகள் இப்புவி உள்ளளவும் நிலைத்து வாழும் என்பது திண்ணம். வள்ளுவரின் அடிச்சுவட்டில் வெற்றி நடைபோட்ட இறையருட்கவிஞர் சீனி நைனா முகம்மது அவர்கள் இம்மண்ணுலகைவிட்டு மறைந்தாலும் வள்ளுவனின் உயர்கருத்துக்களைத் தம் கவிதைகளில் எடுத்தாண்ட இவரது பாட்டுத்திறன் இவ்வையத்தைப் பாலித்திடும் என்பதில் ஐயமில்லை.

**References**


Abbott, J. (2007). *Romulus*. Chapel Hill, North Carolina: Yesterday's Classics.

Baldaeus, P., & Churchill, A. (1703). *A true and exact description of the most celebrated East-India coasts of Malabar and Coromandel : as also of the isle of Ceylon; with all the adjacent kingdoms, principalities, provinces, cities, chief harbours, structures, pagan temples, products, and living creatures ... with the draughts of their idols, done after their originals*. London: Printed for A. and J. Churchill.

Freeman, P. (2008). *Julius Caeser*. Riverside: Simon & Schuster.

Lord, J. K., & Sanborn, B. H. (1902). *Atlas of the geography and History of the Ancient World*. Boston : Benj. H. Sanborn & Co.

McLaughlin, R. (2014). *The Roman Empire and the Indian Ocean : the Ancient World Economy and the Kingdoms of Africa, Arabia and India.* Havertown : Pen and Sword.

Nagaswamy, R. (1995). *Roman Karur : a peep into Tamils' past*. Madras : Brahad Prakashan.

Narasiah, K. R. A. (2014). *THE PERIPLUS OF THE ERYTHRAEAN SEA*. Retrieved from http://www.tamilheritage.org.

Rathbone, D. W. (2019). *Muziris Papyrus*. New York: Oxford Research Encyclopedia of Classics.

Schoff, W. H. (trans.). (1912). *The Periplus of the Erythraean Sea: Travel and Trade in the Indian Ocean by a Merchant of the First Century*. New York: Longmans, Green, & Co.

Strabo. (*1932*). *The Geography of Strabo: Book XV* (H. L. Jones, trans.). London: William HeinemannLTD. Retrieved from https://archive.org/details/geographyofstrab07strauoft/page/n13

Subhashini, K. (2019). *German Thmizhiyal*. Chennai: Kalachuvadu Pathipakam.

Sylvanus, B. (1511). *Ptolemaic India*. Retrieved from https://artsandculture.google.com/asset/ptolemaic-india/SQF8lvV0tJA8yg

Warmington, E. H. (1928). *The Commerce Between the Roman Empire and India*. Great Britain: Cambridge university press. Retrieved from https://archive.org/details/in.ernet.dli.2015.125123/page/n7

# திருக்குறளில் ‘தீ’ந்திறம்
# Thirukuralil ‘Thi’ Thiram

முனைவர் ப.சு. மூவேந்தன் / Dr. Pa.Su. Mooventhan[1]

Date of submission: 2019-05-01
Date of acceptance: 2019-06-09
Date of Publication: 2019-07-30
Corresponding author/s
Name: Dr. Pa.Su. Mooventhan
Email:psmnthn757@gmail.com

## Abstract

Thirukkural is a unique literature in the literary world. It expounds the Tamil legacy and is heritage. It is not premised on any religion, or it stands in the way of Tamil as a religion. It epitomizes wisdom and insights that can absorbed and interrnalised by all living in the world. It considers the world's humanity as one. Innovation in word, uniqueness in poetic sense, unprecedented in format are the hallmarks of the great literary work. The world, the worldly things and the movement (beliefs and practices) of the world are the words that are prevalent in this Tamil literature. The thoughts of the world and its people were always in the thinking-gamut of Tamils. These are handled deftly by the poets for visual representation, commentary and philosophical content in a reflective or retrospective manner. The concept of the "first" is the resultant of a contemplative approach to the world and its state of affairs. Living with nature has been the top priority of the Tamil people. They greatly believed living life blended with nature such as Land, water, fire, air and sky. They strongly believed that the world's existence is based on these. Consequently, the Sangam poets gave a lot of prominence to nature and its elements in their creations. Thirivalluvar not only highlighted the nature of the worldly things but also provided powerful insights of wisdom through them. His social experience and observation and the accent on the enormous strength of the nature's five forces have been demonstrated in the Thirukkural on many instances. The discovery of the fire in the stone-age brought about a lot of changes in the way of life of the people who had lived then. The utility of fire was considered to be the basis for social and cultural development of humanity. The Tamils understood the nature of the fire's heat and luminosity. Their religion perceived fire as God and God as fire. They venerated it. They fear fire and worshipped it. They had the faith that fire is the rectifier for human- misgivings. They believed that they could attain salvation by burning the dead. There are a lot of words in Tamil that originates from the Tamil word for Fire.. Thiruvalluvar not only used Fire as a physical form in his work he also used fire and its characteristics in a metaphorical way. He provided virtuous insights using the description of the various characteristics of Fire. This article aims to elicit the deftness in which he has show-cased various virtues and ideals of a man in the social, personal worldly aspects of man various divisions of Thirukkural.

**Key Words:** World, five nature, Azhal, Eri, Sudar, Thanal, Fire, Heat

## கருதுகோள் (Hypothesis)

தமிழ் இலக்கிய மரபில் அறம் சிறப்பிடம் பெற்றது. மானுட சமூகத்தை வளப்படுத்துவன அறங்கள் ஆகும். திருக்குறள் எக்காலத்திற்கும் ஏற்றதும் ஏற்றுக் கொள்வதுமான அறங்களைக் கூறுவது. அவ்வாறு அமைந்திருப்பதற்கு அதன் கருத்தியல் வளமும் அறமுரைக்கும் புலப்பாட்டு முறைகளும் அடிப்படையாக அமைந்திருக்கின்றன. திருவள்ளுவரின் உலகியல் நோக்கும், இயற்கையியல் அறிவும்

[1] The author is an Assistant Professor in the Department of Tamil Studies & Research, Annamalai University, Annamalai Nagar, Tamil Nadu, India. psmnthn757@gmail.com

அறக்கருத்துக்களை எடுத்துரைப்பதற்குத் துணைநின்றுள்ளன. திருவள்ளுவர் அறமுரைத்தலோடு அறிவியல் விளக்கங்களையும், இயற்கையின் ஆற்றல்களையும் இயற்கையின் தன்மைகளையும் இயல்பாகவும் அறத்திற்குப் பொருந்தவருவதாகவும் இலக்கிய நயம்படவும் ஆண்டுள்ளார் என்பதனைக் கருதுகோளாகக் கொண்டு இக்கட்டுரை அமைகிறது.

### அறிமுகம் (Introduction)

திருவள்ளுவர் உலகின் இயக்கத்திற்கு முதன்மைப் பொருளாக விளங்கும் நிலம், நீர், தீ, வான், வளி ஆகியவற்றின் இயல்புகளை அறிவியல் அடிப்படையில் எடுத்துரைத்ததோடு, அவற்றின் தன்மைகள், தேவை, பயன்பாடு ஆகியன பற்றி இந்நூலில் எடுத்துரைத்துள்ளார். நிலத்தின் வன்மையும், நீரின் தன்மையும், தீயின் வெம்மையும், காற்றின் மென்மையும், வானின் வெறுமையும் திருக்குறளில் கருத்துவிளக்கப் பொருள்களாகக் காட்டப்பட்டு அதன்வழியாக அறக்கருத்துக்கள் எடுத்துரைக்கப்பட்டுள்ளன.

ஐந்தன் ஆற்றலை வலியுறுத்தும் போக்கில் அமைந்த திருக்குறளில் தீ, தீயின் இயக்கம், ஆற்றல், தீயின் இயல்புகள், தீ தரும் இன்பம் ஆகியன அறம், பொருள், இன்பம் ஆகியனவற்றுக்கு இலக்கிய நயநோக்கில் ஆளப்பட்டுள்ள திறத்தினை இக்கட்டுரை எடுத்துரைக்கிறது.

### ஆய்வு விரிவாக்கம் (Research Elaboration)

## திருக்குறட் சிறப்பு

திருக்குறளின் அறக்கூறுகள் இன்றைக்கும் நமக்குத் தேவைப்படுகின்றன. மனித வாழ்க்கையைச் செம்மைப்படுத்துவதற்காக மட்டுமன்றி, மானுட வாழ்வில் அறத்தைப் பின்பற்ற வேண்டியதன் தேவையை எடுத்துரைப்பதாக அமைந்த நூலாகத் திகழ்கிறது.

திருக்குறளின் தேவையினை "மானுடம் தழைக்க எழுந்த நூல் திருக்குறள் ஒன்றே. அது தமிழ் மண்ணுக்கும் மக்களுக்கும் மட்டுமன்றி, உலக மக்கள் யாவர்க்கும் அறங்களை வகுத்துரைக்கிறது. திருக்குறள் கருத்துக்கள் இன்றைக்கும் நமக்குத் தேவைப்படுகின்றன" என்று பேராசிரியர் பொற்கோ *(2010: 9)* குறிப்பிடுவதால் திருக்குறள் எக்காலத்திற்கும் தேவைப்படும் நூலாக விளங்குவது தெளிவாகிறது.

தமிழின் பெருமைக்குச் சான்றாக விளங்கும் நூல் திருக்குறள் ஆகும். இலக்கிய நூல்களின் இயல்புகள் யாவற்றையும் ஒருங்கே பெற்ற நூலாகவும் திகழ்கிறது. "எல்லா இலக்கியங்களின் இயல்புகளையும் ஒருசேரப் பெற்று விளங்கும் நூலாகத் திகழ்கிறது" என்று இதன் சிறப்பினை வசுப. மாணிக்கனார் *(1990: 12)* கூறுவர்.

### ஐந்தன் ஆற்றலும் தீயும்

நிலம், நீர், தீ, வான், காற்று என்னும் ஐந்தன் கலவையால் உருவானது நாம் வாழும் உலகம் என்பதனைத் தொல்தமிழர்கள் நன்கறிந்திருந்தனர். இவை உலக இயக்கத்திற்கு முதலாவதாக நிற்பதோடு மட்டுமல்லாது, உடலை இயக்குவதற்கும் துணைசெய்கின்றன. ஐந்தன் ஆற்றலும் இணைந்து செயலாற்றும்போது மட்டுமே உலகமும், உடலும் சரியாக இயங்கும். இவற்றின் செயல்பாட்டுக் கலவையால் உண்டானதே உலகம் என்ற கருத்தினைத் தொல்காப்பியர்,

*"நிலம்தீ நீர்வளி விசும்போடு ஐந்தும்*

*கலந்த மயக்கம் உலகம் ஆதலின்"*
*(தொல், பொருள், சூ: 635)*

என்பதன்வழி எடுத்துரைக்கிறார். இப்பொருள்கள் உலகின் இயக்கத்திற்கு மட்டும்அன்றி, உயிரின் இயக்கத்திற்கும் அடிப்படையாக அமைந்தவை. இத்தகு அறிவியல் நுட்பத்திறன் திருவள்ளுவரால்,

*"மிகினும் குறையினும் நோய்செய்யும் நூலோர்*

*வளிமுதலா எண்ணிய மூன்று"*
*(குறள்: 941)*

என்னும் குறள்வழி காட்டப்பட்டுள்ளது. இப்பொருள்கள் தத்தம் ஆற்றலில் செயல்பாடுகளில் மிகினும், குறையினும் அது

உடலுக்கும் உலகத்திற்கும் நோயாக அமையும் என்பது இதன்வழி காட்டப்படுகிறது.

வஞ்சம் பொருந்திய மனத்தையுடையவனின் மறைவான தீய ஒழுக்கத்தை அவனது உடலை இயக்கும் ஐம்பெரும்பூதங்கள் அனைத்தும் தமக்குள் சிரிக்கும் என்பதனை,

“வஞ்ச மனத்தான் படிற்றொழுக்கம் பூதங்கள்

ஐந்தும் அகத்தே நகும்.” (குறள்: 271)

என்று காட்டுகிறார். இதனால் உடலின் இயக்கத்தை ஐம்பெரும்பூதங்களே ஆள்கின்றன என்பது தெளிவாகும்.

## திருக்குறளில் ‘தீ’ந்திறம்

தீயின் திறமும் ஆற்றலும் தொல்தமிழர்களால் நன்குணரப்பட்டிருந்தன. தீயின் கண்டுபிடிப்பால் தமிழர் வாழ்வியல் நிகழ்ந்த பண்பாட்டு, நாகரிக மாற்றங்கள் குறிப்பிடத்தக்கவையாகும். ஆதலால் தீ என்னும் சொல் தமிழர்களிடையே பெருவழக்காக இருந்துள்ளமை தெளிவுறுகிறது. தீ என்னும் சொல்லை வேர்ச்சொல்லாகக் கொண்டு பெருமளவிலான சொற்கள் உருவாக்கப்பெற்றுள்ளன. இவை யாவும் அதன் இனிமை, தீமை, தீந்திறம், மிகுதி, வெறுப்பு, உயர்வு போன்ற பொருள்களைத் தருவதாக அமைந்துள்ளன.

திருவள்ளுவரும் தீ என்பதனை அடிச்சொல்லாகக் கொண்ட சொற்களை ஆண்டுள்ளார். திருக்குறளில் தீயின் இயல்புகளைக் காட்டக்கூடிய சொற்கள் அதன் தன்மைகளோடு பொருந்தவரும் விதத்தில் அழல் (கு. 1128), எரி (கு.ள். 308, 1148), கொல்லி (கு. 306), சுடர் (கு. 267), தீ (கு.ள். 129, 674, 671, 929, 1104, 1159, 1260) என்ற சொற்களால் காட்டப்பட்டுள்ளன. இவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு பொருள் குறித்தனவாகத் திருவள்ளுவரால் ஆளப்பட்டுள்ளன.

‘தீ’ என்னும் சொல் ஓரெழுத்து ஒருமொழியாக நின்று, அறிவு, இனிமை, உபாயவழி, ஓர் எழுத்துமொழி, கொடுமை, தீமை, தீயென்னேவல், நரகம், நெருப்பு, சினம், நஞ்சு, ஞானம் என்ற பொருள்களைத் தருவதாகத் தமிழகராதி (2010: 420) காட்டுகிறது. இங்கு தீ என்னும் சொல்தரும் பொருள்களில் நெருப்பு என்னும் பொருளில் ஆளப்பட்ட செய்திகள் மட்டும் காட்டப்படுகின்றன.

## அறத்துப்பாலில் தீ

திருக்குறளின் முப்பால் பகுப்பிலும் தீ என்னும் சொல் தரும் பொருளின்வழியாக அறக்கருத்துக்களை எடுத்துரைத்துள்ளார் திருவள்ளுவர். திருக்குறளின் அறத்துப்பால் தனிமனிதன் தன்னைத் தூய்மையாளனாகவும், ஒழுக்கப்பண்பினனாகவும் மாற்றம் பெறுவதற்குரிய அறங்கள் வகுத்துரைக்கப்படுகின்றன. தீ எவ்வாறு ஒளிவிடுதல், தூய்மை, சுத்தம், அழித்தல் ஆகியனவற்றை இயல்பாகக் கொண்டுள்ளதோ, அது போன்றே தம்மை ஒளிவீசித்திகழ்பவனாகவும், தூய்மை செய்துகொள்பவனாகவும், மன மாசுக்கள் நீங்கி சுத்தமாகுபவனாகவும், ஒழுக்கக்கேடானவற்றை அழித்து வாழ்பவனாகவும் விளங்கவேண்டிய தேவையை வலியுறுத்துகிறார்.

## தீயின் ஒள்ளிய தன்மை

சுடராக ஒளிர்வது தீ. அது தீபமாக நிற்கையில் அறிவையும் ஞானத்தையும் காட்டுகிறது. அது உலகின் அக இருளையும், புறஇருளையும் போக்க வல்லது. தன்னைச் சார்ந்த யாவற்றையும் தனக்குள் இணைத்துக் கொள்வது. தூய்மைசெய்வது. செப்பமிடுவது. அவ்வகையில் தீ மானுட வாழ்க்கைக்கு எல்லாநிலைகளிலும் தேவையான ஒன்றாக விளங்குகிறது.

இத்தகு தீயின் ஆற்றல், தூய்மைப்படுத்துவதற்குத் துணையாகும் பாங்கினை ஒரு குறள்வழி காட்டுகிறார் திருவள்ளுவர். தங்கமானது நெருப்பிலிட்டுச் சுடச்சுட பொன்போல் ஒளிரும். தன்னுள்ளே மறைந்திருக்கும் மாசு நீங்கும்போது சுத்தமாகவும் தூய்மையாகவும் ஒளிரும். தான் தூய்மையாகிவிட்டதை ஒளியாக நின்று காட்சிப்படுத்தும். வாழ்வில் ஏற்படும் தொடர்ச்சியான துன்பங்கள் வாழ்வில் சலிப்பை ஏற்படுத்தினாலும், அவ்வாறு பெறும் துன்பநிலைப்பாடு மனிதனைச் செப்பம் செய்வதற்கே என்று அதனை ஏற்றுக்

கொண்டால், துன்பங்களைக் கண்டு அஞ்ச வேண்டுவதில்லை என்கிறார் திருவள்ளுவர்.

*"சுடச்சுடரும் பொன்போல் ஒளிவிடும் துன்பம்*

*சுடச்சுட நோற்கிற் பவர்க்கு."* (குறள்: 267)

தவ வாழ்க்கை மேற்கொள்வோர்க்கு ஏற்படும் தொடர்ச்சியான துன்பங்கள் அவர்தம் வாழ்வில் தூய்மையை நிலைபெறச் செய்வதோடு, ஒளியாக நின்று நிலைக்கச் செய்யும் என்பதனை விளக்கும் இடத்தில் மாசடைந்த தங்கம் தீயிலிட்டுச் சுடுவதன் மூலமாகப் புறத்தூய்மையும் அகத்தூய்மையும் பெறும் என்ற அறிவியல் உண்மையைக் காட்டுகிறார்.

## தீ மருந்தாகும் தன்மை

வாளால் அறுத்தும், அறுபட்ட இடத்தைச் சுட்டும் ஆற்றுவது தொல்தமிழரின் அறுவை மருத்துவ முறையாகும். அறுத்துச் சுட்டபுண் ஆறிவிடும். என்றாலும், அந்த வடு நீங்காது நிலைத்துவிடும். இது தீயினால் ஏற்பட்ட புண்ணின் இயல்பாகும். வாள்கொண்டு அறுத்துப் பின்னர் சுட்டு ஆற்றுவிக்கும் மருத்துவ முறையினை,

*"வாளால் அறுத்துச் சுடினும் மருத்துவன்பால்*

*மாளாத காதல் நோயாளன் போல்."* (பெருமாள் திருமொழி. 690: 12)

என்னும் குலசேகர ஆழ்வார் பாடலடிகள்வழியும் உணரலாம்.

தீயினால் ஏற்படும் புண் தீப்புண் ஆகும். அது வடுவாக நிற்கக் கூடியது. தீயினால் ஏற்பட்ட புண் புறத்தே தன்னைக் காட்டிக்கொண்டிருந்தாலும் உள்ளே ஆறி இருக்கும். ஒருவன் நாவினின்று வெளிப்படும் கடுஞ்சொல் உள்ளும்புறமும் வடுவாக நிலைத்துவிடும் என்ற அறவுரைக்கு ஆண்டுள்ளார் திருவள்ளுவர்.

*"தீயினால் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே*

*நாவினால் சுட்ட வடு"* (குறள்: 129)

தீயினும் தீச்சொல் கொடியதாக விளங்கும் தன்மையை தீயினாற் சுட்ட புண்ணையும் நாவினால் சுட்ட வடுவையும் கொண்டு காட்டுகிறார். "ஒருவரது உடம்பில் தீயினால் சுட்ட புண் வெளியில் ஆறாது கிடப்பினும் உள்ளத்துள் ஆறிவிடும். நாவினால் கடுஞ் சொற்கூறிச் சுட்ட வடு மனத்தினுள் எப்பொழுதும் ஆறாது கிடக்கும்" என்று தமிழண்ணல் *(1999: 76)* இதற்குப் பொருள்விளக்கம் தந்துள்ளமை குறளின் பொருள்நயத்தைக் கூட்டுவிக்கிறது.

## பேரெரியாகும் இயல்பு

தீ தன்னைச் சேர்ந்த யாவற்றையும் அழித்தொழிக்கும் இயல்புடையது. மிகச்சிறிய அளவிலான தீ பெருமளவிலான அழிவுக்கு வழிவகுக்கும். இவை தீயின் இயல்பு. அத்தீயின் இயல்பினை ஒருவன் தன் உள்ளத்தில் கொள்ளும் சினத்திற்கு ஒப்பானதாக்கிக் காட்டுகிறார் திருவள்ளுவர்.

சினம் கொள்பவர் பிறரை வருத்துவதுடன் தானும் கெடுவர். கோபமாகிய கொடிய நெருப்பு, சினமுற்றோரையே அழிப்பதோடு, அவர் அடையத்தக்க எல்லா நன்மைகளையும் அடைத்துவிடும்.

*"சினம்என்னும் சேர்ந்தாரைக் கொல்லி இனமென்னும்*

*ஏமப் புனையைச் சுடும்"* (குறள்: 306)

தீ தன்னைச் சேர்ந்தாரைக் கொன்றொழிக்கும். ஒருவன் தன் உள்ளத்தில் ஏற்படுத்திக் கொள்ளும் சினம், அவனையும் அல்லாது அவனைச் சார்ந்தவர்களையும் அழிவுக்கு இட்டுச் செல்லும். தீயைவிடக் கொடியது சினம் என்பதனை விளக்கும் இடத்தில் தீயின் இயல்பினைக்கூறி, சினத்தை அடக்கவேண்டியதன் தேவையை உணர்த்துகிறார்.

## சினமும் தீயும்

தீ, எரியும் காலத்து மிகப்பலவாகிய சுடரினைத் தரவல்லது. நெருப்பில் இடப்படும் பொருள் தன் புறத்தன்மையை இழக்கிறது. பழைமைப் பொருளாக மாறுகிறது. பெருநெருப்பில் தோய்வது போன்ற துன்பத்தை ஒருவன் செய்தபோதிலும் அவன்பால் கோபப்படாமல் இருப்பதே

நன்மை தருவதாக அமையும் என்ற அறக்கருத்தினை விளக்குவதற்கு நெருப்பின் சுட்டெரிக்கும் தன்மையைக் காட்டுகிறார்.

*“இணர்எரி தோய்வன்ன இன்னா செயினும்*

*புணரின் வெகுளாமை நன்று”* (குறள்: 308)

தமக்கு நெருங்கிய நண்பன், சுடர் பலவாக எரிகின்ற நெருப்பில் தோய்ந்தாற்போன்ற துன்பத்தைத் தந்தாலும் அவன்மீது சினம்கொள்ளாது இருத்தலே சிறந்த நட்புக்குத் தரும் பண்பாடாகும் என்பதனை இதன்வழி காட்டுகிறார்.

**வருமுன்னர்க் காக்க**

துன்பம் வருவதற்கு முன்னரே காத்துக் கொள்ளுதல் அறிவுடைமையாகும். அது நலவாழ்வுக்கு அடிப்படை. அவ்வாறு காத்துக் கொள்ளாதவனுடைய வாழ்க்கை இடரில் வீழும். இக்கருத்தை விளக்குவதற்குத் திருவள்ளுவர் கொழுந்துவிட்டு எரியும் தீயின் முன்னர் வைக்கப்பட்ட வைக்கோல் எவ்வாறு எளிதாகக் கருகிச் சாம்பாலாகி விடுகிறதோ அவ்வாறு நீயும் அழிந்துபோவாய் என்று எடுத்துரைக்கிறார். அடர்த்தி குறைந்த, மெலிய பொருள்கள் தீயை எளிமையாகப் பற்றிக்கொள்ளும். அவை அழிவுக்கு வழிவகுக்கும் என்ற அறிவியல் உண்மை இங்கு எடுத்துரைக்கப்படுகிறது.

தம்மீது குற்றம் வருவதற்கு முன்னதாகவே, அதிலிருந்து தம்மைத் தூய்மை செய்து காத்துக் கொள்ளுதல் வேண்டும். அவ்வாறு இல்லையாயின் அவர்செய்யும் குற்றத்தின் அளவு நாளும் வளர்ந்து அவரை அழிவில் தள்ளிவிடும். அது நெருப்பின் அருகே வைக்கப்பெற்ற வைக்கோல்நிலை போல் ஆகிவிடும்.

*“வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை எரிமுன்னர்*

*வைத்தூறு போலக் கெடும்”* (குறள்: 435)

தன்மீது குற்றம் ஒன்று வருவதற்கு முன்னதாகவே அதிலிருந்து தம்மைக் காத்துக் கொள்வதற்கான வழியைத் தேடுவதே அறிவுடைமை என்பது இதன்வழி உணர்த்தப்படுகிறது.

தனிமனிதன் தன்னை மேன்மைப்படுத்திக் கொள்ளும் வழிமுறைகளை அறங்களாக அறத்துப்பாலில் காட்டுகிறார் திருவள்ளுவர். இங்கு தீயின் தன்மைகளைக் காட்டியுள்ளதோடு, அவை தனிமனித அறக்கருத்து விளக்கத்திற்குத் துணையாக்கியுள்ள திறம் தெளிவாகிறது.

**பொருட்பாலில் தீ**

தனிமனிதன் தன்னைப் போன்ற சகமனிதர்களுடன் கூடிவாழும் வாழ்க்கையே சமுதாய வாழ்க்கை ஆகும். நல்லதோர் சமுதாய அமைப்பின் வழியாகவே நாடும், அரசும், மக்களும் வளம்பெறுவர். அவ்வகையில் சமுதாயம் மேன்மை பெறுவதற்குரிய அறங்களைப் பொருட்பாலில் எடுத்துரைக்கிறார் திருவள்ளுவர்.

**தீஎச்சம்**

காற்றின் தன்மையைப் பொறுத்தே தீயின் ஆற்றலும் அமைந்திருக்கும். மிகச்சிறிய அளவினதான தீயும் காற்றின் மூலம் பேரழிவுகளை ஏற்படுத்திவிடும். புகைந்துகொண்டிருக்கும் தீயை முழுமையாக அணைக்காது விட்டுவிட்டால் அது மீண்டும் பெருந்தீயாக மாறும். தீ மிகச்சிறிய அளவினதாக இருந்தாலும் அது அச்சந்தரத்தக்க ஒன்றாக உள்ளது என்பது இங்குக் காட்டடப்படுகிறது.

தீயைப் போன்றது வினையும் பகையும். நல்வினை, தீவினை, பகை இவற்றை இடையில் கைவிட்டாலும், முழுமையாக நிறைவேற்றாதுவிட்டாலும் விளைவது தீமையே. ஆதலால் இவற்றைத் தீயை முழுமையாக அணைப்பதனைப் போன்று அணைத்துவிடுதல் வேண்டும். இல்லையேல் அவை மீண்டும் வளரவும், தீமை பரவவும் வாய்ப்பாக அமைந்துவிடும் என்கிறார் திருவள்ளுவர்.

*“வினைபகை யென்றிரண்டின் எச்சம் நினையுங்கால்*

*தீஎச்சம் போலத் தெறும்”* (குறள்: 674)

என்பதில், “தீயினை முழுவதும் அழிக்காமல், சிறிது எஞ்சிக் கிடந்தால் என்ன செய்யப்போகிறது என விட்டுவிட்டால்

அது பிறகு பெரிதாகி அழிவைத் தர நேரும். அதுபோல, ஒரு வினையை முழுவதும் செய்து முடிக்காமலும், பகையை முழுவதும் அடியோடு ஒழிக்காமலும் எஞ்சி நிற்குமாறு இடையில் விட்டுவிடின் அங்ஙனம் எஞ்சி நின்றவை தீயினது எச்சம்போலப் பிறகு வளர்ந்து அழிவைத் தரும். ஒரு செயலைத் தொடங்கி இடையில் கைவிடுவதும், பகையை ஒழிக்கத் தொடங்கி இடையில் கைவிடுவதும் தீயை அணைக்கத் தொடங்கி, முற்றிலும் அணைக்காமல் விடுவதற்கு ஒப்பாகும்" என்று இக்குறட்பாவிற்குப் பொருளுரை தருவார் தமிழண்ணல். *(1999: 279)*

### தீக்காய்தல்

மானுட வளர்ச்சிக்கும் அழிவுக்கும் ஐந்தன் கூறுபாடுகளே அடிப்படையாக அமைந்துள்ளன. இவற்றின் ஆற்றல்களை நுண்ணிதின் உணர்ந்து தேவைக்கேற்றவாறு ஆளத்தொடங்கினால் நன்மைகள் விளையும். இல்லையேல் அழிவுகள் ஏற்படும். தீயின் ஆற்றலை நன்குணர்ந்து அதனைத் தேவைக்கு ஏற்றவாறு ஆள்பவனே அறிவுடையவனாகிறான்.

தீ தன்னைச் சேர்ந்த யாவற்றையும் அழித்தொழிக்கும். ஆனால் தீயின் துணையின்றி உயிரின வாழ்க்கை இல்லை. ஆதலால் தீயை விட்டு அகலாமலும் அணுகாமலும் வாழப் பழகிக் கொள்வதே சிறந்தது.

*"அகலாது அணுகாது தீக்காய்வர் போல்க*

*இகல்வேந்தர் சேர்ந்தொழுகு வார்"*
*(குறள்: 691)*

தீயின் தன்மைப் போன்றவர்கள் ஆட்சியாளர்கள். அவர்களிடம் பழகுங்கால் மிகநெருங்கிப் பழகாமலும், மிகவிலகி நிற்காமலும் வாழ்வதே சிறப்பினைத் தரும் என்ற அறக்கருத்து தீக்காய்தலைக் கொண்டு விளக்கப்படுகிறது.

தமிழண்ணல், *(1999: 279)* "குளிர்காயும் போது நெருப்புக்குப் பக்கத்தில் போனாலும் சுடும். மிக விலகிப் போனாலும் குளிர்காய முடியாது. அதுபோல் மேலதிகாரிகளுடன் மிக விலகியும் போகாது. மிக நெருங்கவும் செய்யாது அளவாகப் பழக வேண்டும்" என்று இக்குறளுக்குத் தற்கால வாழ்வியலோடு பொருந்தவருமாறு விளக்கம் தருகிறார்.

### நீருள் நெருப்பு

நீரின் தன்மையும் நெருப்பின் இயல்பும் முற்றிலும் வெவ்வேறானவை. நெருப்பை அழிக்கும் ஆற்றல் நீருக்கு உண்டு. ஆனால், நீரை நெருப்பைக் கொண்டு அழிக்கவும் தடுக்கவும் இயலாது. இத்தகு முரண்கொண்ட இயற்கையின் ஆற்றல்களைக் கொண்டு அறக்கருத்தினை எடுத்துரைக்கிறார். நீரில் மூழ்கியவனை நெருப்பைக் கொண்டு காத்திட முடியாது. அதுபோல கள்ளுண்டு மயங்கியவனைக் காரணம் காட்டித் தெளிவித்தல் முடியாது.

*"களித்தானைக் காரணம் காட்டுதல் கீழ்நீர்க்*

*குளித்தானைத் தீத்துரீஇ யாற்று"*

*குறள்: 929)*

நீருக்குள் நெருப்பினைக் கொண்டு தேடுதலும் கள்ளுண்டு களித்தவனைத் தெளிவித்தலும் இயலாத ஒன்று. இரண்டின் செயலும் பயனற்றதே என்பது கருத்து.

### காமத்துப்பாலில் தீ

தனிமனிதன், சமுதாயம், இல்லறம் ஆகியன சிறப்பாக அமைதல் வேண்டும். ஆணும் பெண்ணும் இணைந்து களவுக்காதலர்களாகி, கற்புவாழ்க்கையில் நின்று, மனையறம்பேணி வாழும் இன்பவாழ்வுக்கான அறங்கள் இப்பாலில் காட்டப் பட்டுள்ளன. இல்லறத்தில் இனிதுவாழ்ந்து, துறவறம் பேணி வாழும் எல்லோர்க்கும் பயன்தரும் வகையில் வாழும் வாழ்க்கையினையே திருவள்ளுவர் போற்றுகிறார்.

தீயின் இயல்புகளை அறத்துப்பாலிலும், பொருட்பாலிலும் அறிவியல் நோக்கில் எடுத்துரைத்த திருவள்ளுவர், காமத்துப்பாலில் தீயினை இலக்கிய நயம்பட எடுத்துரைத்துப் புதுமைசெய்துள்ளார். உடலியல் வேட்கையிலும் உளவியல் ஆக்கத்திலும் தீ பெறும் இடத்தினைக் காட்டும் திறம் போற்றத்தக்கது.

*“நீங்கின் தெறூஉம் குறுகுங்கால் தண்ணென்னும்*

*தீயாண்டுப் பெற்றாள் இவள்”* (குறள்: 1104)

விலகிச் சென்றால் சுடுகிறாள். நெருங்கிச் சென்றால் குளிர்கிறாள். இத்தகைய புதுமையான நெருப்பை இவள் எங்கிருந்து பெற்றாள்? என்று தலைவியின் பண்பினைக் கண்டு தலைவன் வியக்கிறான். இங்கு குளிர்ந்த தன்மைகொண்ட தீயாகத் தலைவியின் இயல்பு காட்டப்படுகிறது.

“நெருங்கினறாற் சுடும்; நீங்கினால் யாதும் செய்யாது; இது யாருங் காணும் புறத்தீயின் இயல்பு. யான் கண்ட இவள் காமத்தீயோ நெருங்குதொறும் குளிரும்; நீங்குதொறும் சுடும். இப்புதிய அகத்தீ இவளொருத்திக்கு மட்டும் யாண்டுப் பிறந்தது? எனத் தலைவன் வியப்பதாக” இக்குறட்பாவுக்கு வ.சுப.மாணிக்கனார் *(1990:98)* விளக்கம் தருகிறார். காதலில் வெம்மையும் குளிர்மையாக விளங்கும் பாங்கினையும், இலக்கியச்சுவைபட காட்டியுள்ள திறம் நினையத்தக்கது.

### காமத்தீ

*“நெய்யால் எரிநுதுப்பேம் என்றற்றால் கௌவையால்*

*காமம் நுதுப்பேம் எனல்”* (குறள்: 1148)

காமத்தீ அடக்க அடக்க, மேலும் மேலும் வளர்ந்துகொண்டே இருக்கும். இங்கு தீயின் பண்பினைக் காமத்தீக்கு ஒப்பானதாகக் காட்டுகிறார். நீர் கொண்டு தீயை அணைக்கலாம். நெய்கொண்டு அணைத்தலும் கூடுமோ? என்ற வினாவினையும் இவ்விடத்தில் எழுப்புகிறார்.

அலரும் அம்பலும் அடக்கவொண்ணாதது. அது தீயைப் போன்று அடக்க அடக்க வளர்ந்துகொண்டே இருக்கும். புகைந்துகொண்டிருக்கும் தீ, திடீரென்று நெருப்பாக மாறி, தன் இயல்பினைக் காட்டிவிடும். களவுவாழ்வில் அலர் காதலைக் காட்டிவிடும். தீயும் காமமும் அடக்கவொண்ணாதது என்ற கருத்து இதன்வழி காட்டப்படுகிறது.

“பழிச்சொற்களாம் அலரால் காமத்தை அடக்கிவிடலாம் என நினைப்பது, எரிகின்ற நெருப்பை நெய்யூற்றி அணைத்துவிடலாம் என எண்ணுவதற்கு ஒப்பாகும். அலர் காம உணர்வை வளர்க்குமே தவிர, அடக்காது, அடக்க அடக்கக் கூடுதலாகப் பெருகும் என்ற கருத்தும் உளது” என்று தமிழண்ணல் *(1990:449)* இக்குறட்பாவுக்கு விளக்கம் தந்து சிறப்பிக்கிறார்.

### அழல்போலும் மாலை

மாலைப்பொழுது இணைந்த காதலர்களுக்கு இன்பத்தையும், பிரிந்த காதலர்களுக்குத் துன்பத்தையும் தரும். தலைவனைப் பிரிந்து தவிக்கும் தலைவிக்கு மாலைப்பொழுது அழலாக நிற்பதாகக் காட்டுகிறார் திருவள்ளுவர். தலைவனுடன் இணைந்திருந்த மாலைக்காலத்தில் இனிதாக ஒலித்த ஆயனின் புல்லாங்குழல், பிரிவுக் காலத்தில் நெருப்பைப்போலச் சுடுகின்றது. அது மாலைப்பொழுதின் வரவைக் காட்டும் தூதாகி என்னைக் கொல்லும் படைக்கருவியாகத் திகழ்கிறது என்ற தலைவியின் மனஉணர்வினை,

*“அழல்போலும் மாலைக்குத் தூதாகி ஆயன்*

*குழல்போலும் கொல்லும் படை”*

(குறள்: 1228)

என்னும் குறள்வழி காட்டுகிறார் திருவள்ளுவர். இதில் உள்ளத்தில் எழும் வெம்மை, புற உலகச்சூழலையும் வெம்மையாக்கிவிட்ட உளவியல் திறம் காட்டப்பட்டுள்ளது.

### காதல் தீ

‘காதல்நோயைத் தீ என்றுரைப்பர். என்னைப் பொறுத்தவரை அது தீயன்று; தீயினும் கொடியதாக உள்ளது. தொட்டால் தானே தீ சுடும்; அதைத் தொடாமல் விலகியிருந்தால் சுடுவதில்லை. ஆனால் இந்தப் பொல்லாத காதல்போல, விலகினாரைச் சுடுகின்ற ஆற்றல் தீயினுக்கில்லை. அப்படியிருக்கக் காமநோயை எப்படித் தீ என்று கூறமுடியும்? தீயினும் கொடிதன்றோ இந்தக் காமநோய்’ என்று தலைவி வியப்பதாக,

*"தொடிற்சுடின் அல்லது காமநோய் போல*

*விடிற்சுடல் ஆற்றுமோ தீ"* (குறள்: 1159)

என்னும் குறள் படைத்துள்ளார். தீ தரும் கொடுமையைவிடக் கொடுமை தரக்கூடியது காதலர்ப்பிரிவு. தீ தொட்டால்தான் சுடும். காதலர் படும் துன்பம் தீயைவிடக் கொடுமையானது. தீயின் செயல்பாட்டினையும், காதல் நிலைப்பாட்டினையும் பொருந்தவருமாறு காட்டும் திறம் இலக்கிய இன்பம் நல்குகிறது.

### தீயும் காதலும்

தீயில் கொழுப்பை இட்டால் உருகும். தீ கொழுந்துவிட்டு எரியும். தீயின் ஆற்றலை மிகுவிக்கும் இயல்பு கொழுப்பிற்கும் நெய்க்கும் உண்டு. காதலர்க் கூடிப் பெறும் இன்ப உணர்வினை வெளிப்படுத்துவதற்குத் தீயைக் காட்சிப் பொருளாக்கிக் காட்டுகிறார் திருவள்ளுவர்.

*"நிணம்தீயில் இட்டன்ன நெஞ்சினார்க்கு உண்டோ*

*புணர்ந்தூடி நிற்பே மெனல்"* (குறள்: 1260)

தீயில் கொழுப்பை இட்டாற்போல உருகும் நெஞ்சை உடையவரான மகளிர்க்கு இசைந்து ஊடி நிற்போம் என்று ஊடும் தன்மை உண்டோ? என்பதால், மகளிர் உள்ளம் கொழுப்பினைப் போன்று கரைந்துபோகும் இயல்பினைப் பெற்றதாகவும், காதலர் உள்ளம் தீயினைப் போன்று அழித்துவிடக் கூடியதாகவும் விளங்குவதாகக் காட்டுகிறார். காதலனைத் தீயாகவும், காதலியை அத்தீயிடையிட்ட கொழுப்பாகவும் கற்பனை செய்து பாலியல் உளவியலை நுண்மையாகக் காட்டியுள்ள திறம் போற்றத்தக்கது.

### முடிவுகள் (Results of Findings)

பண்டைத்தமிழர் இயற்கை அறிவினை நுண்மையாகப் பெற்றிருந்தனர். அவர்தம் வாழ்வியல் இயற்கையே முதலிடம் பெற்றுச் சிறந்துள்ளது. உலகம், உலகப் பொருள், உலகின் இயக்கம் ஆகியனவற்றை முன்னிறுத்தியதாக அவர்தம் கருத்தியல்கள் அமைந்தன. அவ்வாறு உலகின் இயக்கப்பொருள்களாக அமைந்துள்ள நிலம், நீர், தீ, வளி, வான் ஆகியன பற்றிய செய்திகள் சங்க இலக்கியங்களில் முதல், கரு, உரி என அமைந்தன. திருவள்ளுவர் இவற்றின் தன்மைகளை நுண்ணோக்கி உணர்ந்து, அறவியற்கருத்து விளக்கத்திற்காகவும் இலக்கிய நயமுரைத்தற்காகவும் ஆண்டுள்ள திறம் இதன்வழி காட்டப்பட்டது.

பண்டைத்தமிழர் வாழ்வில் தீ குறித்த சிந்தனையாக்கம் மிகப்பரவலாக இருந்துள்ளது என்பதனை இச்செய்திகள் நமக்கு உணர்த்துகின்றன. தீயின் ஆற்றலை அவர்கள் கடவுளாகக் கருதினர். நன்மை செய்யுங்காலத்து துணைநிற்பதாகவும், தீமை செய்யுங்கால் தண்டிக்கும் என்றும் நம்பினர். தீயினைக் கடவுளாகவும், கடவுளே தீயாக நிற்பதாகவும் கருதினர். தீயின்வழி தூய்மையும், மனமாசும் நீங்கப்பெற்று, நற்பேற்றுடன் விண்ணுலகம் எய்தலாம் என்ற சமயவழிப்பட்ட நம்பிக்கையினையும் கொண்டிருந்தனர். தமிழர் வாழ்வில் தீ பற்றிய கருத்துருவாக்கங்கள் பெருமளவிலான ஆய்வுக்கு இட்டுச் செல்லும் பாங்கு இதன்வழி தெளிவாகிறது.

ஐம்பூதங்களில் தீ பற்றிய திருவள்ளுவரின் சிந்தனைகள் இங்கு ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டன. தீயின் இயல்புகளை ஒளிவிடுதல், சுடராதல், சுடுதல், எரிதல், காய்தல், உருகுதல் என்ற நிலைகளில் விளங்குவதாகக் காட்டுகின்றார். இவற்றைக் காட்டுவதோடு நில்லாமல் இவற்றின் தன்மைகளைக் கொண்டு அறக்கருத்துக்களையும் எடுத்துரைத்துள்ளார்.

அறம், பொருள், இன்பம் என்னும் முப்பால்களிலும் தீயின் ஆற்றலை, அதன் அழிவைக் கருத்துவிளக்கத்திற்குப் பொருந்தவருமாறு காட்டியுள்ள திறம் திருக்குறள் புலப்பாட்டிற்குச் சான்றாக அமைந்துள்ளது.

அறத்துப்பாலில் தனிமனித அறத்தையும், பொருட்பாலில் சமுதாய அறத்தையும், காமத்துப்பாலில் இல்லற அறத்தையும் எடுத்துரைப்பதற்கு ஓர் உபாயக் கருவியாகத் தீயின் இயல்பும் தன்மையும், தீந்திறமும் திருவள்ளுவரால் ஆளப்பட்டுள்ளன.

- ❖ தீயினால் சுட்டபுண் ஆறும் ஆயின் அது வடுவாக நிலைத்திருக்கும். ஆனால் நாவினின்று எழும் சொல் ஆறாத வடுவாக நிலைத்திருக்கும்.
- ❖ வருமுன்னரே தன்னைக் காத்துக் கொள்ளுதல் வேண்டும்.
- ❖ சினம் என்பது தம்மைச் சேர்ந்தவரைக் கொல்லும் தீயினைப் போன்றது.
- ❖ தீ அளவில் சிறியதாக இருக்கும்போதே அணைத்துவிட வேண்டும்.
- ❖ அகலாது அணுகாது தீக்காய்தல் வேண்டும்.
- ❖ நீருக்குள் மூழ்கியவனை நெருப்பினைக் கொண்டு காப்பாற்ற இயலாது.
- ❖ நெருப்பு, தம்மைச் சேர்ந்தாரைச் சுட்டெரிக்கும். காதலர் வாழ்வில் தீ குளிர்மை தரும் ஒன்றாக அமைந்துள்ளது.
- ❖ அலையையும், பெருந்தீயையும் அணைப்பது இயலாது. அது மேன்மேலும் பெருகும் தன்மை கொண்டது.
- ❖ பிரிந்த காதலர்க்கு மாலைக்காலம் அழல்போன்றது.
- ❖ தொட்டால் சுடுவது தீ. தீண்டினால் இன்பம் தருவது காமத்தீ.
- ❖ தீயில் நிணத்தைப் பெய்வது போன்றது ஊடல். ஊடலும் கூடலும் காதலர் பெறும் பயனாவது.

என்பன தீயினைக் கருத்துப்பொருளாகக் கொண்டு திருவள்ளுவர் உரைத்துள்ள அறக்கருத்தியல்களாக விளங்குகிறது.

## இறுதி முடிவுகள் (Conclusions)

திருக்குறளின் வளமை அதில் ஆளப்பட்டுள்ள சொல், தொடர், பொருள் ஆகியவற்றால் தெளிவாகிறது. திருவள்ளுவர் மானுட மேம்பாட்டினை மையப்படுத்தியே அறங்களை வகுத்துரைத்துள்ளார். அவ்வாறு அறமுரைத்தலில் உலகப்பொருள்களின் ஆற்றல்களைக் கொண்டு விளக்கியுள்ள பாங்கு இக்கட்டுரையால் உணர்த்தப்பட்டது. திருக்குறள் விளக்க நிலைப்பாடுகளில் ஐம்பெரும்பூதங்களில் ஒன்றான தீயின் ஆற்றலையும், தன்மையினையும் அறவியல் நோக்கில் எடுத்துரைத்து, அதன்வழி அறமுரைத்துள்ள திறம் போற்றத்தக்கது. தீயின் இயல்புகளை அறத்துப்பாலிலும், பொருட்பாலிலும் அறிவியல் நோக்கில் எடுத்துரைத்த திருவள்ளுவர், காமத்துப்பாலில் தீயினை இலக்கிய நயம்பட முரண்பட்ட பொருள்நிலையில் எடுத்துரைத்துள்ளார்.

## References

Ilampuranar, U. A. (1987). *Tholkappiyam, Porulathikaram*. Chennai: Kalaga Veliyidu.

Manikkam, Va. Suba. (1990). *Tamilkaathal*. Chennai: Manivasagar Pathipakam.

Manikkam, Va. Suba. (1990). *Valluvam*. Chennai: Manivasagar Pathipakam.

*Nalayira Duvya Pirabantham, Perumal Thirumozhi*. (1998). Chennai: Lipco.

Porko. (2010). *Thirukural Uraivilakam* (Vol 1-4). Chennai: Pumbozhil Veliyidu.

*Tamil Agarathi*. (2010). Chennai: Saratha Pathipagam.

Thamilannal, U. A. (1999). *Thirukural Nunporulurai*. Madurai: Menatchi Puthaga Nilayam.

# திருவள்ளுவம் கூறும் கற்புநெறி வாழ்வும், தமிழ்த் திரைப்படங்கள் மலேசிய ஆண் மற்றும் பெண்களிடையே ஏற்படுத்தவல்ல கற்புநெறி மாற்றங்களும்

# Virtuous Life Mentioned by Thiruvalluvar, and Changes That Can Be Made by Tamil Cinema in Malaysian Men and Women

ரதிதேவி சண்முகம் / Rathidevi[1]

முனைவர் மோகனதாஸ் ராமசாமி / Dr. Mohanadass Ramasamy[2]

Date of submission: 2018-04-07
Date of acceptance: 2019-04-05
Date of Publication: 2019-07-30
Corresponding author's
Name: Rathidevi
Email: rathidevishanmugam@yahoo.com

***Abstract***

Today, though studies have been done in several angles on this rare couplet work by many researchers, this study evidentially presents spouse-wellness, illegitimate lust, fidelity in married life and the non-conformity of the above amongst men and women in Malaysia because of the influence of Cinema. The virtue of chastity is as commendable in men as in women. No other book has precisely mentioned the philosophy of householders' life than that is done in this book in an incomparable, unique and an unprecedented manner. The study of values mentioned in Thirukkural in comparison with the realities in today's social lives in the Malaysian society and at the same time understand the variance between the two is the main aim of the study. The ill effects of cinema on Malaysian society in the form of marital conflicts and its adverse effects such as familial attrition should be construed as a precedence. Sharing of which can help societies in other countries to be cautious in order to safeguard themselves from such maladies and live peacefully is the general aim of the research.

**Key Words:** Thiruvalluvam, Arathupaal, Tamil Cinemas, Tirukkural, Problems.

## முன்னுரை

உலகில் ஒவ்வொரு நாடுகளும் தமது கலாச்சாரங்களையும், பண்பாட்டு தொன்மையையும், தனித்துவத்தையும் சீரழியாமல் நிலைநாட்டுவதில் முனைப்புடன் செயல்படுகின்றன. பதினெண் கீழ்கணக்கு நூல்களில் ஒன்றான திருக்குறள், மத போதனை நூல்களுக்கு அப்பாற்பட்டு, ஒரு மனிதரால் மனிதர்களுக்காக எழுதப்பட்ட வாழ்வியல் நூலாகும். மலேசியத் திருநாடு இத்திருக்குறளை இன்றும் கல்வியின் பயன்பாட்டில் கொண்டுள்ளது (Balaraman, 2003). 133 அதிகாரமும், அதிகாரத்துக்கு 10 குறளும் மொத்தம் 1330 குறள்களும் திருக்குறளில் உள்ளன.

மனித வாழ்க்கையைச் செம்மையுறச் செய்திடும் அறநெறிகள் அனைத்தும் திருக்குறளில் காணப்படுகின்றன (Munusamy, 2013). குறிப்பாக அறத்துப்பாலில் வாழ்க்கைத் துணைநலம் மற்றும் பிறனில் விழையாமை ஆகியவற்றில் கூறப்படும் ஆண் மற்றும் பெண்ணுக்கான கற்புநெறி, இக்காலக் கட்ட மக்கள் போற்றிப் பின்பற்ற வேண்டிய

[1] The author is a PhD candidate at The Department of Indian Studies, University of Malaya. rathidevishanmugam@yahoo.com

[2] The author is a Senior Lecturer in the Department of Indian Studies, University of Malaya, Kuala Lumpur, Malaysia. rmohana_dass@um.edu.my

ஒன்றாகும். ஆயினும், இத்திருக்குறளின் நெறிகளைக் கல்வியின் தேவைக்கு மட்டுமே பயன்படுத்துவதால், மக்கள் அதனை வாழ்க்கைப் பயன்பாட்டில் செயல்படுத்தத் தவறியுள்ளனர். இதற்குச் சான்றாக, மலேசிய நாட்டினைக் கூறலாம்.

கால மாற்றத்திற்கு ஏற்ப மாறுபடும் மனிதர்களின் வாழ்க்கை முறை மாற்றத்திற்குப் பல காரணங்கள் உள்ளன.அம்மாற்றங்களுக்கு தமிழ்த் திரைப்படங்களும் முக்கியப் பங்கு வகிப்பதை மறுக்க இயலாது. கற்பு நெறியினை வலியுறுத்தும் திருக்குறளுக்கு எதிர்மறைக்கருத்துகளைக் கொண்டுள்ள பல தமிழ்த் திரைபடங்கள் முன்வைக்கும் நெறியற்ற வாழ்க்கை முறையினையும், அவை மலேசிய ஆண் மற்றும் பெண்களிடையே ஏற்படுத்தவல்ல பாதிப்புகளையும், அப்பாதிப்புகளின் விளைவுகளையும் ஆய்வதாக இவ்வாய்வு அமைகின்றது.

## ஆய்வு அணுகுமுறை

இலக்கண இலக்கியங்களை ஆய்வு செய்யப் பல்வேறு அணுகுமுறைகளை ஆய்வாளர்கள் பயன்படுத்துவதுண்டு (Sahaktileela, 2013). அவ்வகையில், விளக்கவியல் அணுகுமுறையும் (Descriptive Approach), கல்வி சார்ந்த சிந்தனைகளைச் சமுதாயத்தோடு சேர்த்துக் கூறும் போது சமுதாயவியல் அணுகுமுறையும் (Sociological approach) இவ்வாய்வில் பயன்படுத்தப்பட்டுள்ளன. விளக்கவியல் அணுகுமுறை அதன் உள்ளார்ந்த பண்புகளில் பொதிந்துக் கிடக்கிறது. அதனைக் காரணகாரிய அடிப்படையில் விளக்கிக் கூறுவதே முறையாகும். புதியனவற்றைத் தோற்றுவித்தல், குறிப்பிட்ட இலக்கியத்தின் தன்மைகளையும் தகுதிகளையும் வெளிப்படுத்தும் திறன் ஆகியன விளக்கவியல் அணுகுமுறைக்கு உண்டு.

சமுதாயவியல் அணுகுமுறை எனப்படுவது, இலக்கியத்திற்கும், சமுதாயத்திற்கும் உள்ள உறவினையும் அதன் மாற்றங்களையும் கண்டறிவது. மேலும்,சமுதாயத்தின் நிலைப்பாடுகளையும், அதன் பல்வேறு அங்கங்களையும், அதன் மரபுகளையும் சித்திரிப்பதும் விமரிசனம் செய்வதும் இதன் அணுகுமுறையாகும்.

## வாழ்க்கைத் துணைநலம்

இல்லறவியல் இயலில் திருவள்ளுவர் வாழ்க்கைத் துணைநலம் அதிகாரத்திற்கு 10 குறள்கள் எழுதியுள்ளார். அவை யாவும் கற்பு நெறிக்குக்கு முக்கியத்துவம் அளிப்பவையாக அமைந்துள்ளன. அவற்றுள் இவ்வாய்வுக்கும் மிக முக்கியமானவை எனத் தெரிவு செய்யப்பட்டுள்ள திருக்குறள்களுள் சில பின்வருமாறு:

*பெண்ணின்பெருந்தக்க யாவுள கற்பென்னும்*

*திண்மைஉண் டாகப் பெறின். (குறள் 54)*

இக்குறளின் பொருள், இல்வாழ்க்கையில் கற்பு என்னும் உறுதிநிலை இருக்கப் பெற்றால், பெண்ணைவிட பெருமையுடையவள் வேறு என்ன இருக்கின்றது? என்பதாகும் (Munisamy, 1992). ஆகவே, இக்குறள் திருமண பந்தத்தில் இணைந்தப் பெண், கற்பு கலங்காமையாகிய மனத்திண்மையுடன் இருந்துவிட்டால் பெண்மையைவிட உயர்வான ஒன்று இவ்வுலகில் ஏதுமில்லை என்று குறளில் தெளிவாக விளக்கப்படுத்துகிறது (Sellamal, 1999). கற்புக்கு முக்கியத்துவம் அளித்து வந்த நம் திருமணமான பெண்கள், மலேசியாவில் சமகாலத்தில் பல வகையான மாற்றங்களை எதிர் நோக்கி உள்ளதற்கு, தமிழ் சினிமா முக்கிய காரணமாகும். எடுத்துக்காட்டாக, ‘நான் சிகப்பு மனிதன்’, ‘திருட்டுப்பயலே’, ‘உயிர்’,‘கவரிமான்’, ‘சிவப்புரோஜாக்கள்’, ‘விஸ்வரூபம்’, ‘சிந்துசமவெளி’ போன்ற இன்னும் பல திரைப்படங்களில் திருமணமான பெண்கள் தன் கணவனின் நண்பர்களிடமும், உறவுகளிடமும், தான் வேலைப் பார்க்கும் இடங்களிலும் கள்ளத் தொடர்பு ஏற்படுத்திக் கொண்டு (Imthiyas, 2013) தனித்தும், தன் கணவனுடன் இணைந்தும் பல தீயச் செயல்களில் ஈடுபடுவது போன்ற திரைக்கதைகள் சமூக வாழ்க்கையில் சாதாரணமான ஒன்றாகிப் போனதாகக் காட்டப்பட்டதன் விளைவாகத்தான் இத்தகைய மலேசிய மக்களிடையே இத்தகைய இம்மாற்றங்கள்

ஏற்பட்டன எனலாம் (Thevaganthan, 2007).

இது போன்ற கற்பு நெறி தவறிய வழியிலும் பணம், சௌகர்யம் போன்றவற்றை ஈட்ட முடியும் என்ற கருத்தை பெண்களிடம் திணிப்பதன் வழி, பெண்களின் செயல்பாடுகளில் மாற்றம் ஏற்படுகின்றன. இவை தவறான பாதை என்பதை பெண்களிடம் விளக்கப்படுத்த தவறிய தமிழ்ச் சினிமா, அவர்களின் கற்புநெறி சீர்கேடுக்கும், குடும்பச் சீரழிவுக்கும் பெரும் பங்கை வகிக்கின்றது (Phyllis, 2013). இத்திரைப்படங்களின் வழி, எந்த ஒரு மேதையும் சீர்திருத்தவாதியும் உருவாகிவிடுவதில்லை. இதன் விளைவாகப் பல, விவாகரத்துகள், கொலைகள், சிறைவாசம் போன்ற பல இன்னல்களை அந்தக் குடும்ப உறுப்பினர்கள் எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

### ஆணின் கற்புநெறி

கற்பு என்பது ஆண் பெண் இருபாலருக்கும் பொதுவானது. இக்குறள் பெண்ணிற்கு மட்டும் கூறப்பட்டதாக நாம் கொள்ளுதல் கூடாது. ஆண்களும் பெண்களும் பயிலுகின்ற கல்விநிலையத்தில் ஆசிரியர் மாணவர்களே நீங்கள் நன்கு படிக்க வேண்டும் என்று கூறினால் அது ஆண் மாணவர்களுக்குக் கூறப்பட்ட அறிவுரையாகக் கொள்ளாது ஆண் பெண் இருபாலருக்கும் பொதுவாகக் கூறப்பட்ட அறிவுரையாக எடுத்துக் கொள்ளுதல் வேண்டும். அதுபோன்றே வள்ளுவரும் கற்பைப் பற்றிபெண்களுக்கு மட்டுமல்லாது ஆண்களுக்கும் சேர்த்தே குறிப்பிட்டுள்ளார் (Sethuraman, 2006). பெண் கற்புள்ளவளாக இருப்பின் ஆணுக்குச் செல்வம்; ஆண் கற்பொழுக்கம் உள்ளவனாக இருப்பின் பெண்ணிற்கும் குடும்பத்திற்கும் அது செல்வம் என்றே இல்லறவியல் இயலில் பொருள் கொள்ளுதல் வேண்டும்.

உதாரணத்திற்கு, ‘மறுபடியும்’, ‘நடிகையர்திலகம்’, ‘ரெட்டை வால் குருவி’, ‘சின்னவீடு’, ‘உத்தமவில்லன்’, ‘கோபுரங்கள் சாய்வதில்லை’, ‘சிந்துபைரவி’, ‘தப்புதாளங்கள்’, ‘எங்கேயொகேட்டகுரல்’, ‘பச்சைக்கிளி முத்துச்சரம்’ போன்ற இன்னும் என்னில் அடங்கா திரைப்படங்கள் உள்ளன. இவை திருமணமான ஆண்களின் நெறிதவறிய வாழ்க்கை முறைக்கு வித்திடுகிறது. இதனால், துரோகம், வீண் சச்சரவு, குடும்பப் பிரிவு, குழந்தைகளின் எதிகாலம் கேள்விக்குறியாவது என பல சிக்கல்களை அக்குடும்பம் எதிர்நோக்குகிறது. மலேசியாவில், குடும்பப் பிரிவினால் அனாதையாக்கப் பட்ட குழந்தைகளின் எண்ணிக்கை அதிகமாகி வருகிறது (Yusliza, 2016). மேலும், துரோகத்தினால் குடும்பச் சச்சரவு, குடும்பப் பிரிவு அதிகரித்து உள்ளதாக மலேசிய மகளிர், குடும்பமற்றும் சமுதாய மேம்பாட்டு துணை அமைச்சர் ஹண்ணா ஹியோ தெரிவித்துள்ளார் (Kosmo, 2018).

### பிறனில் விழையாமை

அறத்துப்பால், இல்லறவியல் இயலில் திருவள்ளுவர் பிறனில் விழையாமை அதிகாரத்திற்கு 10 குறள்கள் எழுதியுள்ளார். இவ்வாய்வுக்கு முக்கியமான குறள் 148,

“பிறன்மனை நோக்காத பேராண்மை சான்றோர்க்கு

அறனொன்றோ ஆன்ற வொழுக்கு”

இக்குறளின் பொருள், வேறொருவன் மனைவியைக் காம எண்ணத்துடன் நோக்காதப் பெருங்குணம் அறநெறி மட்டுமன்று; அது ஒழுக்கத்தின் சிகரமும் ஆகும். திருமணமான, பெண்ணை கவர்வது ஒழுக்கமற்றச் செயல் என்பதனைத் தெள்ளத் தெளிவாக விளக்கியிருக்கிறார் திருவள்ளுவர் (யிமீஹ்ணீக்ஷீ□தீஹ், 2014). ஆகவே, அக்காலக் கட்டங்களில் திருமணமான பெண்களைப் பிற ஆண்கள் தங்களது சகோதரிகளாகவே எண்ணி வாழ்ந்து வந்துள்ளனர். இக்கலாச்சாரமானது காலப்போக்கில் பெறும் மாற்றங்களை எதிர்நோக்கியதன் முக்கியக் காரணம் தமிழ்த் திரைப்படங்களே என்றால் அது மிகையாகாது.

உதாரணத்திற்கு, ‘டார்ச்லைட்’, ‘ராவணன்’, ‘சபாஷ்’, ‘மயக்கம்என்ன?’, ‘மந்திரப்புன்னகை’, ஆகியப் படங்களில் மற்றொருவன் மனைவியை வலுக்கட்டாயமாகவோ,

விருபத்துடனோ ஓர் ஆண் கவர்வதைப் போன்று சித்தரிக்கப் பட்டுள்ளது, இதைப் போன்ற கதை அம்சம், இன்றையத் தலைமுறையினரைத் தவறானப் பாதைக்குச் இட்டுச் செல்ல ஒரு தூண்டுகோலாக அமைகிறது (Shiyani, 1996). இவ்விளைவினை சில நேரங்களில் அறிந்தும், பல நேரங்களில் அறியாமலும் பல ஆண்களும், பெண்களும் இச்சீர்கேடான வாழ்க்கை முறையினை பின்பற்றுவதால் பல விதமான சிக்கல்களை எதிர் நோக்கி உள்ளனர்.

### மலேசிய நாட்டில் சமகால விளைவுகள்

உறவு என்பது இரண்டு மனிதர்களிடையேயான பல்வேறு விதமான தொடர்புகளைக் குறிக்கிறது. மனித உறவுகளின் இனிமை, வாழ்வில் மகிழ்ச்சியைத் தருகிறது. உறவு மனிதர்களின் வாழ்வை அர்த்தமுள்ளதாக்குகிறது. ஓர் ஆணும் ஒரு பெண்ணும் உணர்வு என்னும் அடிப்படையில் இணைந்து ஆழமான உறவோடு குடும்பம் என்கின்ற அமைப்பை உருவாக்குகின்றனர். ஒருவரையொருவர் சார்ந்து, விட்டுக் கொடுத்து வாழக் கூடிய குடும்ப உறவில், ஒருவர் மற்றவர் மீது காட்டக் கூடிய அன்பு, ஒருவர் மற்றவரைப் பிரியும் போது, அல்லது அவர்களை இழந்து தவிக்கும் போது ஏற்படுகின்ற துன்பத்தின் வெளிப்பாடு அவர்களுடைய உறவுகளிடையேயான நம்பிக்கையை வெளிப்படுத்துகிறது. இந்த நம்பிக்கையைச் சீர்குழைய வைப்பது உறவுகளுக்கிடையேயான துரோகம். கணவன் மற்றும் மனைவிக்கிடையேயான துரோகம், நம்பிக்கையை தகர்க்கும் தகாத உறவினால் ஏற்படுகிறது.

தகாத உறவினால் மலேசியாவில் பல மோசடிகள் நடந்துள்ளன. தகாத உறவின் வழி பணம் பிடுங்கியதால் கணவன் மனைவி இருவருக்கும் 14 ஆண்டுகள் சிறைத் தண்டனையை மலேசிய நீதிமன்றம் வழங்கியது இங்கு குறிப்பிடத்தக்கது (Nor Azura, 2018). மேலும்,பெற்றோர்கள் இருந்தும் அனாதையாக்கப்பட்ட குழந்தைகளின் எண்ணிக்கையும் அதிகமாகவே உள்ளது (Yusliza, 2016). தகாத உறவினால் அனாதையாக்கப்பட்ட குழந்தைகள் பல இன்னல்களையும், துயரங்களையும் எதிர்நோக்கி வருகின்றனர். குடுப்பப்பிரிவு அதிக பாதிப்பினை குழந்தைகளுக்கும் மற்ற உறவுகளுக்கும் ஏற்படுத்துகிறது. பல விவாகரத்து வழக்குகள் மலேசிய நாட்டில் நடந்துள்ளன. இதன் காலம் மற்றும் காரணங்கள் பின்வருமாறு:

**அட்டவணை 1: திருமணப் பந்தம் நீடிக்கும் காலம் (%)**

| காலம் | பெண் | ஆண் |
|---|---|---|
| 5 ஆண்டு கீழ் | 37.2 | 35.4 |
| 59 ஆண்டு | 27.2 | 23.4 |
| 1014 ஆண்டு | 17 | 24.7 |
| 1519 | 10.2 | |
| 20 ஆண்டுக்கு மேல் | 8.4 | 7.3 |

Sumber: Jabatan Perangkaan Malaysia, 2018 (Kementerian Jabatan Perangkaan Malaysia, 2018)

மேலே உள்ள அட்டவணையில் உள்ள தகவலின் அடிப்படையில் திருமணம் நீடிக்கும் காலத்தை ஆராய்ந்தோமானால், அதில், ஐந்து ஆண்டுகளுக்குள் பிரிந்துச் செல்லும் ஜோடிகளே அதிகம் உள்ளனர் என்பது அறியப்படுகிறது. பெண்கள் 37.2% பிரிவை வேண்டுகின்றனர். மேலும் ஆண்கள் 35.4% பிரிவை விருப்பத்துடன் ஏற்பதாக அட்டவணைக் குறிப்பிடுகிறது. ஆகவே, திருமணப்பந்தம் நீண்ட நாள் நிலைக்காதச் சூழல் இம்மலேசிய மண்ணில் ஏற்பட்டுள்ளது என்பது இதன் வழி அறியப்படுகிறது.

இப்பிரிவுக்குப் பல காரணங்கள் இருப்பினும், கீழே கொடுக்கப்பட்டக் காரணங்களை மலேசிய அரசாங்கம் கண்டறிந்துள்ளது.

மலேசியாவில் விவாகரத்துக்கான காரணங்கள் (%)

| காரணங்கள் | பெண் | ஆண் |
|---|---|---|
| புரிதல் இல்லை | 41.8 | 56.2 |
| **துரோகம் (கள்ளத் தொடர்பு)** | ***18.2*** | ***11.8*** |
| பொறுப்பு இன்மை | *13.7* | *4.1* |
| மூன்றாம் மனிதரின் தலையீடு | *5.9* | *10* |
| பொருளாதார சிக்கல் | *2.6* | *6.8* |

Sumber: Jabatan Perangkaan Malaysia, 2018

அவற்றுள், புரிதல் இல்லை என்பது முதல் காரணம்மாகவும், துரோகம் இரண்டாவது காரணமாகவும் இருக்கிறது. பெண்களின் துரோகம் 18.2% மற்றும் ஆணிகளின் துரோகம் 11.8% ஆகவும் உள்ளது. இத்துரோகத்துக்கு பல காரணங்கள் கண்டறியப்பட்ட்டுள்ள. அவற்றுள், தமிழ் திரைப்படங்களும் ஒன்று என்பதை நாம் மறுக்க இயலாது.

## முடிவுரை

மலேசியாவில் ஆரோக்கியமான சமுதாயத்தை உருவாக்கத் தமிழ்த் திரைப்படங்கள் தடைக்கற்களாக உள்ளன என்பதனை ஆண்களும் பெண்களும் உணர்ந்துக் கொள்ள வேண்டும். பெற்றோர், சிறு வயது முதலே குழந்தைகளிடம் வேற்றுமைக் காட்டாமல் கல்வியில் மட்டும் கவனம் செலுத்த உந்துதல் கொடுக்க வேண்டும். மேலும், திருக்குறளைப் பாடமாக மட்டும் போதிக்காமல் வாழ்க்கைப் பயன்பாட்டிற்கும் பொருந்தி, ஏற்று நடக்க பயிற்றுவிக்க வேண்டும். என்று தனி மனிதன் ஒருவன் தன் வாழ்க்கையில், திருக்குறளைப் பாடமாக மட்டும் அல்லாது அதனைப் பயன்பாட்டிலும் கொண்டு செல்கிறானோ, அப்போதுதான் தலைச் சிறந்த குடி மகனை இச்சமுதாயத்தில் காண முடியும் என்பதில் கிஞ்சிற்றும் ஐயமில்லை.

## References


Balaraman, K. (2003). *Iyakkavazhi Thirukkural Ayvu*. (Unpublished Doctoral Dissertation), Patchaiyappan Collage, Chennai, India.

Imthiyas Yusuf. (2013). *Cinema Yerpaduthum Seerkedugal*. Chennai : Islam House.

Jeyaruby, A. (2014). *Valakolinthu Varum Yalpanathin Panpathamsangal*. paper presented in Proceedings of Jaffna University International Research Conference (JUICE 2014) (Social Sciences).

Munisamy, V. (1992). *Thirukuralar Telivurai*. Chennai, India: Thirukuralar Pathipagam.

Munusamy, N. (2013). *Thirukkural Kaddum Thani Manitha Aramum Samuthaya Aramum*. (Unpublished Doctoral Dissertation). National Collage, Thiruchirapalli, Thiruchi, India.

Nor Azura Abdul Jalil. (2018, Ogos 28). Suami isteri dipenjara 14 bulan tipu pekerja kontrak. *Berita Harian Online*. Retrieved from https://www.bharian.com.my/berita/kes/2018/08/466918/suami-isteri-dipenjara-14-bulan-tipu-pekerja-kontrak

Parlimen: Tiada Persefahaman, Curang Jadi Punca Utama Penceraian. (2018, November 13). *Kosmo*. Retrieved from http://www.kosmo.com.my/terkini/parlimen-tiada-persefahaman-curang-jadi-punca-utama-penceraian-1.786405

Phyllis, B. G. (2013). *Hate Crimes-Causes, Controls and Controversies* (Vol. 3). Los Angeles: SAGE.

Sahaktileela. (2013). *Sanga Aga Ilakkiyangal - Thirukural Kamathupaal Opideedu*. (Unpublished Doctoral Dissertation). Madurai Kamarajar Universiti, Sivakasi, Madurai, India.

Sellamal, T. (1999). *Pira Thurai Nokkil Thirukkural*. (Unpublished Doctoral Dissertation). Barathidasan University, Thiruchi, India, Thiruchi, India.

Sethuraman. (2006). Thirukkural Kurum Pennin Perumaigal. *Muthukamalam*, 14(3). Retrieved from http://www.muthukamalam.com/essay/literature/p76.html

Yusliza Yakimir Abd Talib. (2016, Disember 7). Sinar Kasih Anak Angkat. *My Metro*. Retrieved from https://www.hmetro.com.my/node/187492

Punca Penceraian Di Malaysia (2018).

Shiyani. (1996). Cinemavin Inraiya Pokku

Thevaganthan. (2007). Samugamum Kalaiyum.

# தொல்காப்பிய மரபியல்முறைவைப்பும் செய்திகளும்
# The Metre Order and Messages of Marabiyal- A Part Of Tamil Grammar Tholkaappiyam

முனைவர் ச.இரமேஷ் / Dr. S. Ramesh[1]


***Abstract***

"Marabiyal" the last part of ancient grammar book Tholkaappiyam which deals with the convention of words. The whole book was written for elucidating how to compose poems in Tamil. Tholkaappiyam allowed to use the spoken language of people and poetic words in Tamil poems in a conventional manner without contravention. Marabiyal speaks about class of nouns comprising of humans and celestial beings, a class of nouns for inanimate things and for beings other than humans and celestials, masculine gender names, feminine gender names, classes of human beings (varnas) and their rights. However, some Tamil researchers have claimed that this part of Varnams stratified as Brahmins, Kshatriya Kings, Mercantile "Vaishyas" and "Vellalas" are pretentious. The aim of this article is to prove evidentially that those Varnams are not indeed ostentatious. It is done by presenting supporting evidences through the metre order of "Marabiyal" and other pertinent messages found in "Tholkaapiyam".



Date of submission: 2018-05-09
Date of acceptance: 2019-01-02
Date of Publication: 2019-07-30


Corresponding author/s
Name: Dr. S.Ramesh S.Ramesh
Email:


**Key Words:** Tholkapiyam, marabiyal, muraivaipu, poem, Tamil language

## முன்னுரை

தொல்காப்பியம் என்ற இலக்கணநூல் தமிழின் மிகத்தொன்மையான நூல். அதற்கு முந்தைய இலக்கிய இலக்கண மரபுகளையும் உள்வாங்கி எழுதப்பட்டது என்பதனைத் தொல்காப்பியர் பல இடங்களில் அவருடைய சொல்லாட்சிகளின் மூலம் உணர்த்துகிறார். இதனை 'என்ப' என்ற சொல் 141 இடங்களிலும் 'மொழிப' என்ற சொல் 87 இடங்களிலும் ''என்மனார் புலவர்'' என்ற தொடர் 74 இடங்களிலும் உயர்மொழிப்புலவர், உணர்ந்திசினோரே, அறிந்திசினோரே, புலமையோரே, நல்லிசைப்புலவர், வாய்மொழிப்புலவர், யாப்பறிபுலவர், குறியறிந்தோரே, தெளியுமோரே, நூல்நவில்புலவர், தொன்னெறிப்புலவர், நுணங்குமொழிப்புலவர், நேரிதின் உணர்ந்தோர், புலன் உணர்ந்தோரே என்று பல இடங்களில் நேர்மையாகக் குறிப்பிட்டுள்ளார் (சுப்பிரமணியன், 2009, p.15).

தொல்காப்பியம்; எழுத்ததிகாரம், சொல்லதிகாரம், பொருளதிகாரம் என்ற மூன்று அதிகாரங்களையும் ஒரு அதிகாரத்திற்கு ஒன்பது இயல்கள் என 27 இயல்களையும் 1610 நூற்பாக்களையும் (கருத்து வேறுபாடுகள் உண்டு) 5630 சொல்வடிவங்களும் 3999 வரிகளும் 2000த்திற்கு மேற்பட்ட பாடபேதங்களையும் கொண்டது. மேலும், இளம்பூரணர், சேனாவரையர், நச்சினார்க்கினியர், பேராசிரியர் போன்ற சிறந்த உரையாசிரியர்கள் இதற்கு உரை எழுதியுள்ளனர். இவை அனைத்தும் நூலின் பழமையையும் சிறப்பையும் உணர்த்துகின்றன.

[1] The author is an Assistant Professor in the Sri Sankara College, Kanchipuram, Tamilnadu, India

மேற்கூறிய உரையாசிரியர்கள் ஒருவர்கூட தொல்காப்பியத்தில் இடைச்செருகல் என்று கூறாத நிலையில், இந்நூல் பிற்கால எழுத்தாளர்களாலும் ஆய்வாளர்களாலும் பலவாறு திரித்துக் கூறப்பட்டுள்ளது. குறிப்பாகத் தொல்காப்பிய மரபியலில் உள்ள நால்வருணம் குறித்த செய்தியாகும். பாரதிதாசன்,

*'படுப்பினும் படாது,தீயர்*

*பன்னாளும் முன்னேற்றத்தைத்*

*தடுப்பினும்,தமிழர் தங்கள்*

*தலைமுறை தலைமுறை வந்*

*தடுக்கின்ற தமிழே! பின்னர்*

*அகத்தியர்,காப்பியர்கள்*

*கெடுப்பினும் கெடாமல் நெஞ்சக்*

*கிளைதொத்தும் கிளியே வாழி!',*

*'பன்னூறு நூற்றாண்டாகப்*

*பழந்தமிழ் மலையின் ஊற்றாய்*

*மன்னரின் காப்பினாலே*

*வழிவழி வழாது வந்த*

*அன்னவை காணுகின்றேன்*

*ஆயினும் அவற்றைத்தந்த*

*முன்னூலை அயலான் நஞ்சால்*

*முறித்ததும் காணுகின்றேன்'*
(பாரதிதாசன், அழகின்சிரிப்பு, பாடல்:16)

எனத் தமிழை வாழ்த்தி தொல்காப்பியரைத் தாழ்த்தியது இதைக்கருதியே ஆகும். பண்டைத்தமிழ்ச்சமூகத்தில் சாதிமுறை இல்லை என்ற கருத்து முடிவினால்தான் பாரதிதாசன் இவ்வாறு எழுதினார். இதே கருத்தின்காரணமாகத்தான் பிற்கால ஆய்வாளர்கள் தொல்காப்பியத்தில் இடைச்செருகல்கள் உள்ளன என்று கூறியுள்ளனர் (http://www.tamilvu.org/library/l0100/html/l0100013.htm). எனவே அதற்கான தடை விடைகளை விளக்குவதற்காக தொல்காப்பிய மரபியலின் சூத்திரமுறைவைப்பையும் அவை கூறும் செய்திகளையும் இக்கட்டுரை ஆராய்கிறது.

## தடைகளும் அவற்றிற்கான விடைகளும்

தொல்காப்பியர் காலத்தில் தமிழ்நாட்டில் சாதிமுறை அமைப்பு இல்லை. எனவே தொல்காப்பியத்தில் சாதி குறித்த எவ்வகைக் குறிப்பும் காணப்படவில்லை. வடஇந்திய நாகரிகத்தையும் பண்பாட்டையும் பின்பற்றிய காரணத்தினால் தமிழ்நாட்டில் படிப்படியாகச் சாதி அமைப்பு ஏற்பட்டது. முனிவர்களும் அறிஞர்களும் சாதி முறையை எதிர்த்தனர். தொல்காப்பியர் காலத்திற்குப் பிற்பட்ட புலவரும், மெய்யியல் அறிஞருமான திருவள்ளுவர், சாதி அமைப்பை:

*"பிறப்பொக்கும் எல்லாம் உயிர்க்கும் சிறப்பொவ்வா*

*செய்தொழில் வேற்றுமையான்" (குறள்: 972)*

*"அந்தணர் என்போர் அறவோர் மற்றுஎவ்உயிர்க்கும்*

*செந்தண்மை பூண்டு ஒழுகலான்"*
*(குறள்: 30)*

எனக் கண்டிக்கிறார். சாதி அமைப்பிற்கான எதிர்ப்பைத் தொல்காப்பியத்தின் துணைகொண்டு நலிவுப்படுத்துவதற்காகச் சாதி அமைப்பை வலுப்படுத்த விரும்பிய சில அறிஞர்கள் இதற்குச் சார்பான சில நூற்பாக்களை இயற்றி, தொல்காப்பிய நூற்பாக்களின் இடையே புகுத்தி விட்டனர். இவ்வாறு புகுத்தப்பட்ட நூற்பாக்கள் மிகவும் கட்டமைப்புக் கூடிய தொல்காப்பிய மூலத்துடன் ஒட்டவில்லை. பொருளதிகாரம் 95ஆம் நூற்பா (களவியல் நூற்பா 4) இடைச்செருகலாகத் தோன்றுகிறது. இது தெய்வத்தையும் மனிதனையும் வேறுபடுத்துவதற்கு உதவக்கூடிய பொருள்களின் பட்டியலை தருகின்றது.

*"வண்டே, இழையே, வள்ளி, பூவே,*

*கண்ணே, அலமரல், இமைப்பே, அச்சம், என்று*

*அன்னவை பிறவும் ஆங்கண் நிகழ*

*நின்றவை களையும் கருவி என்ப”*

என அது குறிப்பிடுகின்றது. இந்நூற்பாவின் வடிவமும், பொருண்மையும், தமிழ்நாட்டில் தெய்வீகக் கருத்து ஆதாயம் பெறப்பட்ட தொன்மைஇயல் பரவிய பின்பு உருவாக்கப்பட்டு இடையிலே சேர்க்கப்பட்டது என உறுதியாக வெளிப்படுகிறது. நூற்பா 140 (கற்பியல் நூற்பா 3) உம் இடைச் செருகலே ஆகும். அது:

*“மேலோர் மூவர்க்கும் புணர்ந்த கரணம்*

*கீழோர்க்கு ஆகிய காலமும் உண்டே”*

மேலோட்டமாகப் படிக்கும் எவரும் இந்நூற்பா பொருண்மைக்கு அப்பாற்பட்டது எனக் கண்டறிவர். நூற்பாக்கள் முறைவைப்பில் பிழைகள் உள்ளன, எனவே அவை இடைச்செருகல்களே என்று சி.இலக்குவனார் கூறுகின்றார் (Thokappiyam, pp. 15-20).

**விடை**

“தொல்காப்பியர் காலத்தில் தமிழ்நாட்டில் சாதிமுறை அமைப்பு இல்லை. எனவே தொல்காப்பியத்தில் சாதி குறித்த எவ்வகைக் குறிப்பும் காணப்படவில்லை” என்று எந்தச் சான்றின் மூலம் ஆய்வாளர் கூறுகிறார்? சாதிக்குறிப்பு இல்லாத பண்டைத் தொல்காப்பியச்சுவடி ஏதேனும் அவரிடம் உள்ளதா எனத்தெரியவில்லை.

*“பிறப்பொக்கும் எல்லாம் உயிர்க்கும் சிறப்பொவ்வா*

*செய்தொழில் வேற்றுமையான்”* (குறள்: 972)

என்று திருவள்ளுவரை மேற்கோள்காட்டும் ஆய்வாளர், பிறப்பொக்கும் என்ற கருத்திற்காக எடுத்துக்காட்டினாலும் எல்லா உயிர்க்கும் என்று கூறினாரே தவிர எல்லா மனிதர்க்கும் என்று கூறவில்லை.பிற உயிர்களின் பிறப்பும் மனிதரின் பிறப்பும் ஒன்றுதான். இருப்பினும் அடுத்துத் திருவள்ளுவர் கூறுவது பற்றி எந்த ஆய்வாளரும் கூறுவதாகத்தெரியவில்லை.”சிறப்பொவ்வா செய்தொழில் வேற்றுமையான்” என்பதன் பொருள் என்ன? செய்கின்ற தொழில் அல்லது பதவிக்கு ஏற்ப சிறப்பு வேறுபடும் என்பதாகவே பொருள்கொள்ளவேண்டும். ஆக உயிர்களிடையே வேறுபாடு உள்ளது என்ற கருத்து பெறப்படுகின்றது.

*“அந்தணர் என்போர் அறவோர் மற்றுஎவ்உயிர்க்கும்*

*செந்தண்மை பூண்டு ஒழுகலான்”* (குறள்: 30)

என்றகுறள்மூலம் அந்தணர் என்ற சாதிப்பிரிவு இருந்தது என்பதும் அவர்கள் எவ்வுயர்க்கும் தீங்கு செய்யாமையால் அறவோர் ஆவர் என்பதும் அறியவருகின்றது.பண்டைத்தமிழகத்தில் சாதிப்பிரிவே இல்லை என்று கூறும் அறிஞர், ‘அந்தணர்’ என்ற சாதிப்பிரிவைக் காட்டும் குறளை மேற்கோள் காட்டலாமா?அடுத்து, மனிதரையும் தெய்வத்தையும் வேறுபடுத்தும் ‘வண்டே இழையே’ எனத்துவங்கும் “பொருளதிகாரம் 95ஆம் நூற்பா (களவியல் நூற்பா 4) இடைச்செருகலாகத் தோன்றுகிறது.” என்கிறார்.

மேலும் இது தெய்வத்தையும் மனிதனையும் வேறுபடுத்துவதற்கு உதவக்கூடிய பொருள்களின் பட்டியலை தருகின்றது. எனவே‘இந்நூற்பாவின் வடிவமும், பொருண்மையும், தமிழ்நாட்டில் தெய்வீகக் கருத்து ஆதாயம் பெறப்பட்ட தொன்மைஇயல் பரவிய பின்பு உருவாக்கப்பட்டு இடையிலே சேர்க்கப்பட்டது’ என்று கூறுகிறார். இதன்மூலம் தெய்வீகநம்பிக்கை பொருளீட்ட உதவும்காலத்தில்தான் இந்த நூற்பா இடைச்செருகப்பட்டது என்றும் மனிதரையும் தெய்வத்தையும் வேறுபடுத்தும் பொருண்மை தொல்காப்பியர்காலத்தில் இல்லை என்றும் கூறுகிறார். அதே தொல்காப்பியத்தில் ஐயம் நிகழும் இடம் குறிக்கும் நூற்பாவையும் இடைச்செருகல் என்று கூறிவிட்டால் தொல்லை இல்லை.

*சிறந்துழி ஐயம் சிறந்த தென்ப*

*இழிந்துழி இழிபே சுட்டலான* (தொல்காப்பியம்,களவியல்,நூற்பா3)

*மனிதப்பெண்ணா? தெய்வப்பெண்ணா?*

என்ற ஐயம் தோன்றுகின்ற,

'அணங்குகொல் ஆய்மயில்கொல்லோ கனங்குழை

மாதர்கொல் மாலுமென் நெஞ்சு' (குறள்: 1081)

என்ற திருக்குறளையும் இடைச்செருகல் என்று கூறிவிடலாமா?

''மேலோர் மூவர்க்கும் புணர்ந்த கரணம்

கீழோர்க்கு ஆகிய காலமும் உண்டே.'

(தொல்காப்பியம்,களவியல்,நூற்பா3)

என்ற நூற்பாவையும் இடைச்செருகல் என்கிறார். இவ்வாறு சாதிக்குறிப்பு ஏதும் இல்லாத பண்டைத்தொல்காப்பியச்சுவடியை வைத்திருப்பவர் போலச் சான்றுகள் ஏதுமின்றி 'பண்டைத்தமிழ்ச்சமூகத்தில் சாதிமுறை இல்லை' என்ற முன்முடிவின் அடிப்படையில் தீர்ப்பை எழுதிவிட்டு ஆய்வு செய்கிறார்.சாதி அமைப்பை விரிவாகக்கூறும் மரபியலின் நூற்பா முறைவைப்பை ஆராய்ந்தால் சில உண்மைகள் வெளிப்படும்.

**மரபியலின் சூத்திரமுறைவைப்பு**

இளம்பூரணர் உரைப்படி மரபியல் 112 சூத்திரங்களை உடையது. சூத்திர எண்களையும் அவற்றின் கருத்துக்களையும் வரிசை முறையையும் உத்திகளையும் பின்வருமாறு காணலாம்.

நூற்பா 1, 2, 3 இளமைப்பெயர்கள்,

ஆண்பாற்பெயர்கள்,பெண்பாற் பெயர்கள்: தொகுத்துச்சுட்டடல்

422 விலங்குகளின் இளமைப் பெயர்கள்: வகுத்துக்காட்டடல்

23 மனித இளமைப் பெயர்கள்: வகுத்துக்காட்டடல்

2425தாவரங்களின் இளமைப்பெயர்கள் : வகுத்துக்காட்டடல்

26புறநடை

2734 ஓரறிவு முதல் ஆறறிவு வரையான உயிர்கள்.

3550 இரண்டாம் சூத்திரத்தில் தொகுத்துச் சுட்டிய ஆண்பாற்பெயர்கள்: வகுத்துக்காட்டடல்.

51புறனடைபோல ஆண்பால்,பெண்பால் பிரிவுகள் காரணம் கூறப்பட்டது,

5268 மூன்றாம் சூத்திரத்தில் தொகுத்துக்கூறப்பட்ட பெண்பாற்பெயர்கள் இங்கு வகுத்துக்காட்டடல்.

69கூறப்பட்ட இலக்கணத்தை மீறி மக்கள் வழக்கில் இருப்பின் வழுவாகாது எனக்கூறி மேலும் முன்பு ஆண்பாற் பெயர்களில் எடுத்துக்காட்டு கூறாது விடப்பட்ட கடுவன்,கண்டி என்பவற்றிற்கு முறையே ஆண்குரங்கு, ஆண் எருமை என இங்குக் காட்டுகிறார்.

70 மேற்கூறிய 69 ஆம் நூற்பா அஃறிணைக்கும் இந்நூற்பா உயர்திணைக்குமாக அமைத்துள்ளார். பெண்,ஆண்,பிள்ளை(இளமை)பெயர்கள் என்பனவற்றிற்கு மக்கள் வழக்கை ஏற்கக்கூறுகிறார்.

7185 இதுவரை 69 சூத்திரங்களில் அஃறிணை உயிர்கள் பற்றிக் கூறி 23ஆம் நூற்பாவில் தனித்தும் 27 ஆம் நூற்பாவில் இருதிணைகளை இணைத்தும் உயர்திணையாகிய மனிதர் பற்றித் தேவைகருதி இருநூற்பாக்களில் மட்டும் கூறிய தொல்காப்பியர், மனிதர்களிடையே உள்ள பிரிவுப் பெயர்களை இந்நூற்பாக்களில் (7185) விரிவாகக் கூறுகிறார். அக்காலத்திய நால்வருணச்சமூகம், அவற்றின் தனியுரிமைகள், தொழில்கள், வேறுபாடுகள் போன்ற மனிதனின் தன்மைகளைக் கூறுகிறார். இப்பகுதியே ஆய்வாளர்களால் பெரிதும் இடைச்செருகல் எனப்பட்டது. விலங்குகள்,பறவைகள் ஆகிய அஃறிணைப் பெயர்களையும் தன்மைகளையும் மட்டும் கூறிவிட்டு உயர்திணைப்பெயர்களையும் அதன் தன்மைகளையும் கூறாதுவிடின் பிழையாகாதா?

8690 தாவரங்களின் உறுப்புப் பெயர்கள் மற்றும் தன்மைகள் பற்றிக் கூறப்படுகிறது.

91112 இலக்கிய இலக்கண மரபுகள்; நிலம்,நீர்,தீ,வளி,விசும்பு ஆகிய ஐம்பூதப்

பெயர்களைத் திணை,பால் குற்றம் ஏற்படாது வேறுபடாத பெயர்ச்சொல்லுடன் தழுவிச்சொல்லவேண்டும் என்ற இலக்கியமரபை வலியுறுத்துகிறார். தொடர்ச்சியாக செய்யுள் மரபு, உலக வழக்கு, நூல் இலக்கணம், நூல்வகைப் பெயர்கள், சூத்திர இலக்கணம், உரையிலக்கணம், உரைவகைப்பெயர்கள் போன்றவற்றைக்கூறி மரபைப்பின்பற்றாது அமைந்த நூல் குற்றமுடையது என மரபை வலியுறுத்துகிறார் *(சண்முகம்பிள்ளை,1998, ஜீஜீ.170195).*

தொன்மையான நூல் பல ஓலைச்சுவடிகளில் மாற்றி மாற்றி எழுதப்பட்டபோது சில நூற்பாக்கள் முறைவைப்பில் இடம் மாறியிருக்கவும் சில நூற்பாக்கள் விடுபட்டிருக்கவும் வாய்ப்புண்டு.ஆனால் தொல்காப்பிய மரபியலில் முறைவைப்புப் பிழைகள் ஏதுமில்லை என்பதை மேலே விளக்கப்பட்ட சூத்திரங்களின் வரிசை முறையையும் அவற்றின் கருத்துக்களையும் ஆய்ந்தால் அறியலாம்.உரையாசிரியர்கள் எவரும் கூறாத குற்றச்சாட்டை இலக்குவனார் கூறுகிறார்.அதற்காக உச்சிமேல் புலவர்கொள் நச்சினார்க்கினியரையே குழம்பினார் என்று அவரையும் குறை கூறுகிறார் ய்வாளர். முரண்பாடாகக் கூறியிருந்தால் அதனைக்குற்றம் எனலாம். ஆனால் முறைவைப்பைக் காரணம் காட்டி இடைச்செருகல் என்று இலக்குவனார் கூறுவது முறையன்று.

நால்வருணச் செய்திகள் (மரபியல் 7185) இடைச்செருகல் என செ.ரெ. இராமசாமிப்பிள்ளையும் கருதுகின்றார் (http://www.tamilvu.org/library/l0100/html/l0100013.htm.) இவரும் எவ்விதச்சான்றுகளும் இன்றியே ஆரியர்களின் கருத்து திணிக்கப்பட்டதாகவே கருதுகின்றார்.

இந்தியச் சமூகம் மிகப் பழங்காலத்திலேயே வளர்ச்சியடைந்து இருந்தது என்பதை அதன் வேத, வேதாந்த, இலக்கிய, இலக்கண மரபுகளே காட்டும். தமிழ்ச்சமூக வளர்ச்சிப்போக்கில் (மரபியல் 7185) வலிமையான வீரர்களிடமிருந்து உருவான நாட்டைக்காக்கும் அரசனும் அவனுக்கே புத்தி சொல்லும் அந்தணனும் பொருளாதாரத்தில் மேம்பட்ட வணிகனாகிய வைசியனும் உடல் உழைப்பைக் கொண்டு பொருள்களை உருவாக்குகிற சூத்திரதாரியாகிய சூத்திரனும் ஆகிய நால்வருணம் தோன்றிவிட்டது. இது ஆரியர்களிடமிருந்து புகுத்தப்பட்டது, தொல்காப்பியத்தில் நால்வருணம் இல்லை, அவை இடைச்செருகல் என்பவர்கள் தொல்காப்பியத்திற்கு முந்தைய இலக்கியத்தையோ இலக்கணத்தையோ காட்டவேண்டும். உலகின் பழைய நாகரிகங்களாகிய கிரேக்க, மாயன் நாகரிகங்களிலும் இதே வேறுபாடுகளைக்காணலாம் (https://www.hierarchystructure.com/ancient-greek-social-hierarchy/)

ஒரு சமுதாயம் வளர்கிறது என்றால் இன்னொரு சமுதாயம் வீழ்கிறது என்பது இயற்கை. சங்க இலக்கியத்தில்,

*'வேற்றுமை தெரிந்த நாற்பாலுள்ளும்*

*கீழ்ப்பால் ஒருவன் கற்பின்*

*மேற்பால் ஒருவனும் அவன்கட்படுமே"*
*(புறநானூறு183)*

என்ற பாடல்வரிகள் நால்வருணத்தைச் சுட்டுகிறதே அதுவும் இடைச்செருகலா? மேலும்,தொல்காப்பிய நூற்பாக்களுக்கான சங்க இலக்கியப் பயில்வுகளைக் கீழே காணலாம்.

*நூற்பா; அந்தணர்க்கு*

*"நூலே கரகம் முக்கோல் மணையே*

*ஆயுங்காலை அந்தணர்க்கு உரிய"*
*(தொல்காப்பியம், மரபியல் , நூற்பா71)*

பயின்றமை;

*"எறிதரு கதிர்தாங்கி ஏந்திய குடைநீழல்*

*உறித்தாழ்ந்த கரகமும், உரைசான்ற முக்கோலும்*

*நெறிபடச் சுவல்அசைஇ வேறுஒரா நெஞ் சத்துக்*

*குறிப்புஏவல் செயல்மாலைக்*

*கொளைநடை அந்தணீர்" (கலித்தொகை: 9)*

நூற்பா; *அரசர்க்கு, அரசர்க்குரிய மரபுகளாக தொல்காப்பியம்*

*"படையுங் கொடியுங் குடையும் முரசும்*

*நடைநவில் புரவியும் களிறும் தேரும்*

*தாரும் முடியும் நேர்வன பிறவும்*

*தெரிவு கொள் செங்கோல் அ;ரசர்க்கு உரிய"*

*(தொல்காப்பியம், மரபியல் , நூற்பா72)*

பயின்றமை;

*"வாழ்க அவன் கண்ணி, வலம் படு முரசம் துவைப்ப வாள் உயர்ந்து இலங்கும்*

*பூணன்பொலங்கொடி உழிஞையன், மடம்பெருமையின் உடன்று மேலவந்த*

*வேந்து மெய்மறந்த வாழ்ச்சி" 17.*

*(தொல்காப்பியம், மரபியல் , நூற்பா72)*

வைசியன்; நூற்பா;

"வைசியன் பெறுமே வாணிக வாழ்க்கை" *(தொல்காப்பியம், மரபியல் , நூற்பா78)*

*"மெய்தெரி வகையின் எண்வகை உணவின்*

*செய்தியும் வரையார் அப்பாலான" (தொல்காப்பியம், மரபியல் , நூற்பா79)*

பயின்றமை;

*"நெடுநுகத்துப் பகல்போல்*

*நடுவுநின்ற நல்நெஞ்சினோர்*

*வடு அஞ்சிவ வாய்மொழிந்து*

*தமவும் பிறவும் ஒப்பநாடிக்*

*கொள்வதூஉம் மிகைகொளாது, கொடுப்பதூஉம் குறைகொடாது*

*பல்பண்டம் பகர்ந்து வீசும்*

*தொல் கொண்டித் துவன்று இருக்கை" (பட்டினப்பாலை: 206 213)*

நூற்பா;வேளாளர்

*"வேளாண் மாந்தர்க்கு உழுதூணல்லது*

*இல்லென மொழிப பிறவகை நிகழ்ச்சி" (தொல்காப்பியம், மரபியல் , நூற்பா81)*

வேளாண் வாகை ஆறு,அவை; உழவு, உழவொழிந்ததொழில், விருந்தோம்பல், பகடு புறந்தருதல், வழிபாடு, வேதமொழிந்த கல்வி, (தொல்காப்பியம், மரபியல் , நூற்பா*79:* இளம்பூரணர் உரை)

பயின்றமை;

*"அள்ளல் தங்கிய பகடுஊறு விழுமம்*

*கள் ஆர் களமர் பெயர்க்கும் ஆர்ப்பே*

*ஒலித்த பகன்றை விளைந்த கழனி*

*வன்கை வினைஞர் அரிபறை" (மதுரைக்காஞ்சி: 259263)*

*வாகைத்திணையின் பாகுபாடுகளாக*

*அறுவகைப்பட்ட பார்ப்பனப் பக்கமும்*

*ஐவகை மரபின் அரசர் பக்கமும்*

*இருமூன்று மரபின் ஏனோர் பக்கமும்ஞ்.'*

*(தொல்காப்பியம்,பொருளதிகாரம், நூற்பா 74).*

**இவையும் இடைசெருகல்களா?**

கி.பி. முதலாம் நூற்றாண்டாகக் கருதப்படும் திருக்குறளில் கூட

'குடிப்பிறந்து' *(குறள்: 502),* 'குடிப்பிறந்தார்' *(குறள்: 952, 954, 957),* 'வாய்மைக்குடி' *(குறள்: 953),* 'பழங்குடி' *(குறள்: 955),* 'ஆன்ற குடி' *(குறள்: 992),* ஆகிய இடங்களில் 'குடி' என்ற சொல்லாட்சி பயின்று வருகின்றது.

'மாசற்றகுலம்' *(குறள்: 956),* 'குலத்தின்கண்' *(குறள்: 958),* 'குலத்தில்பிறந்தார்' *(குறள்: 959),* 'குலம்வேண்டின்' *(குறள்: 959),* ஆகிய இடங்களில் 'குலம்' என்ற சொல் பயின்று வருகின்றது.

உயர்குடிப்பிறப்பை 'இல்பிறந்தார்' *(குறள்: 951),* என்ற சொல்லால் திருவள்ளுவர் கையாள்கிறார். மேலும் 'அந்தணர்' *(குறள்: 30, 543),* 'பார்ப்பான்' *(குறள்: 134)* போன்ற சாதிப்பெயர்களையும் கையாண்டுள்ளார். இது போன்ற சொல்லாட்சிகள் நால்வருணம்

இருந்தமையைக் காட்டுகின்றன. எனவே இது ஆரியர்களின் சரக்கு, தமிழ்மரபு இல்லை என்பதற்குச் சான்றெதுவும் இல்லை.

நால்வருணத்தில் நான்காம் நிலையில் வைக்கப்பட்டதால் வேளாளராகிய தமிழக வரலாற்று ஆசிரியர் திரு.கனகசபைப்பிள்ளை தொல்காப்பியர் தோற்றார் என்று பழிக்கிறார் (இராமச்சந்திரன், ஆகஸ்ட் 2010, இதழ்16). மேலும், சி.இலக்குவனார் நால்வருணம் இடைச்செருகல் என்கிறார் (http://www.akaramuthala.in/author/thiru2050).

வடமொழியோடு தமிழை வேறுபடுத்திக்காட்டும் தொல்காப்பியர், (தொல்காப்பியம், எழுத்ததிகாரம், பிறப்பியல் 20,21). நால்வருணம் தமிழ் மரபில்லை எனக் கூறியிருக்க மாட்டாரா? ஏன் அவ்வாறு கூறவில்லை எனில் சமூகத்தில் இருந்ததை இலக்கியம் காட்டும் இலக்கியம் காட்டியதை இலக்கணம் காட்டும் அவ்வளவுதான்.மரபியலில் கூறப்பட்ட சாதிசார் சொல்லாட்சிகள் தேவையற்றவையா? அல்லது பழங்காலத்தில் இல்லாதவையா?

அடியோர், வினைவலர் (தொல்காப்பியம், பொருளதிகாரம், அகத்திணையியல்25,

அறங்கூறவை (மதுரைக்காஞ்சி492),

காவிதிமாக்கள் (மதுரைக்காஞ்சி499),

இழிபிறப்பாளன் (புறநானூறு170),

இழிசினன் (புறநானூறு82,287,289),

புலையன் (புறநானூறு, 287,360),

பார்ப்பனப்பாங்கன், பாங்கன் (தொல்,செய்யுளியல்181),

பாணன், பறையன், துடியன், கடம்பன் (புறநானூறு 335), போன்ற சொல்லாட்சிகளை வெறும் ஐந்திணைகளில் கூறப்பட்ட தலைமக்களோடு மட்டும் மரபியலின் வருணம்சார் நூற்பாக்களின் துணையின்றி விளங்கிக்கொள்ள இயலுமா? நமக்குப்பிடிக்காத எல்லாவற்றையும் இடைச்செருகல் என்றால் எதுவும் எஞ்சாது. இதனைப் பின்வரும் கூற்று மெய்ப்பிக்கிறது.

“மரபியல் தவிர வேறுபல இடங்களிலும் நால்வருணம் தொடர்பான, பிராமணரின் மறை தொடர்பான சுட்டுகள் உண்டு. இவற்றுக்கெல்லாம் இளம்பூரணர் தொடங்கி பழைய உரையாசிரியர்கள் அனைவரும் சரியான முறையில் விளக்கம் அளித்துள்ளனர். அவர்களெல்லாம் நம் காலத்திற்குச் சற்றொப்ப 700 ஆண்டுகள் முன்னதாக வாழ்ந்தவர்கள் இப்போது இருப்பதைவிட தமிழ்ச் சமூகம் அப்போது பழைய இலக்கியங்களுக்கு நெருக்கமாக இருந்துள்ளது. எனவே நம் தற்கால சமூகநிலைமையைக் கருத்தில் கொண்டு இவற்றை இடைச்செருகல் என்பது அவ்வுரையாசிரியர்களின் புலமையைக் கேள்விக்குள்ளாக்குகிற செயலாகும்” என்ற கருத்து ஏற்கத்தக்கதே ஆகும் (இராமச்சந்திரன், சொல்வனம், மின்னிதழ்168.1.2010)

தொல்காப்பியர் முழுத்தொல்காப்பிய நூலிற்கும் இறுதிப்பகுதியாகிய மரபியலில் கூறவேண்டியவற்றை எஞ்சாது கூறிமுடித்தார் எனக்கருத இடமுள்ளது (தொல்காப்பியம், சொல்லதிகாரம், கிளவியாக்கம், நூற்பா57,58).

இளமை, ஆண்மை, பெண்மை, குடிமை, அடிமை, அரசு, மகவு, குழவி, உறுப்பின்கிளவி, உலகம், உயிர் ஆகியன உயர்திணை ஆயினும் அஃறிணை முடிவு கொள்ளும் என்கின்றார். இவற்றை விரிவாக மரபியலில் தருகிறார் என இக்கட்டுரையின் ஆய்வாளர் கருதுகிறார். எச்சவியலில் கூறாது மரபியலில் ஏன் கூறவேண்டும் எனில் அவை மரபுசார் தகவல்களாகும். இந்த ஒப்புமையைக் கீழே காண்க

| கிளவியாக்கம் | மரபியல் |
|---|---|
| இளமை | - இளமைப்பெயர்கள், |
| ஆண்மை | - ஆண்மைப்பெயர்கள், |
| பெண்மை | - பெண்மைப்பெயர்கள், |

குடிமை,அடிமை,அரசு - .என்ற தொடருக்கு விளக்கமாக நால்வருணச்சமூகப் பிரிவுகளை விளக்குகிறார் எனலாம்

மகவு,குழவி - உயர்திணைப் பெயர்கள்,

உறுப்பின்கிளவிதாவர உறுப்புப் பெயர்கள் - (உயர்திணை) (அஃறிணை),

உலகம் - பஞ்சபூதம்,

உயிர் - ஓரறிவு முதல் ஆற்றிவு வரையான உயிர்கள்.

செய்யுளியலில் எஞ்சிய நூல்,உரை மரபுகளையும் மரபியலில் கூறியுள்ளார். எனவே மரபியலில் இடைச்செருகல் என்பது ஏற்கத்தக்கதல்ல.

### முடிவுரை

மனிதன் உயிர்களுள் ஒரு இனம் என்றாலும் உலகில் மனிதரிடையே பலவிதமான வேறுபாடுகள் உள்ளன. வண்ணவேறுபாடுகள், அளவுவேறுபாடுகள், பண்பு வேறுபாடுகள் ,அறிவு வேறுபாடுகள் இருக்கத்தானே செய்கின்றன. மேட்டு நிலம் குறிஞ்சி என்றும் பள்ளநிலம் நெய்தல் என்றும் காட்டு நிலம் முல்லை என்றும் நீர்வயல்கள் மருதமென்றும் நீரற்ற பாழ்நிலம் பாலை என்றும் தமிழர்கள் ஏன் பிரித்தார்கள்? ஒதுக்கி வைத்து ஒழிக்கவேண்டும் என்றா? இல்லை.இயற்கையை இயற்கையாகக் காட்டுவதே இலக்கியம்.அதன் இயற்கையை, அமைப்பை,அழகியலை வெளிப்படுத்துவதே இலக்கணம். அக்காலச் சமூகத்தைக் காட்டியது இலக்கியம்.

அவற்றிலிருந்து இலக்கியத்தை இப்படித்தான் எழுதவேண்டும் இதுதான் முறை,வழக்கம்,மரபு என்று எடுத்து இயம்பியது தொல்காப்பியம். அகத்தியரையும் தொல்காப்பியரையும் பழிப்பதும் இடைச்செருகல் என்று ஏசுவதும் முறையா? சாதியம் இல்லாத பண்டைத்தமிழ் இலக்கியம் ஒன்றைக்காட்ட முடியுமா? இவ்வாறு எழுதுவதால் மனிதரை மனிதர் அடிமைப்படுத்தவேண்டும் தாழ்த்தவேண்டும்,ஒடுக்கவேண்டும் என்பது இந்த ஆய்வாளரின் கருத்தல்ல.தொல்காப்பியர்காலத்தில் சாதிமுறைஇருந்தது என்பதை சான்றுகளின் அடிப்படையில் ஆய்வதே நோக்கம் ஆகும். நேற்றைய வரலாறு இன்றைக்கு வழிகாட்டுகிறது. வரலாற்றைச்சரியாகப்புரிந்து கொள்ளா விட்டால் வழிமாறிப்போய்விடுவோம். ஆய்வுகளில் விருப்பு வெறுப்புகளுக்கு இடமில்லை.மேலும் மேலும் சமூக ஆய்வுகள் பெருகினால் புரிந்துணர்வு ஏற்பட்டு வேற்றுமை ஒழிந்து மானுடம் செழிக்கும்.

### References

Bharathidasan. (2004). *Azhakin Sirippu*. Madurai: Madurai Pathippu Thiddam.

Ilakuvanar, S. (1963). *Tholkāppiyam in English with critical studies.* Madurai*:* "Kuṛaḷ Neṛi" Publishing House.

Madurai Tamil Ilakkiya Minthokuppu Thiddam. (2015). *Kalithokai*. Retrieved from https://www.projectmadurai.org/pm_etexts/pdf/pm0221.pdf

Madurai Tamil Ilakkiya Minthokuppu Thiddam. (2015). *Madurai Kanji*. Retrieved from https://www.projectmadurai.org/pm_etexts/pdf/pm0496.pdf

Madurai Tamil Ilakkiya Minthokuppu Thiddam. (2015). *Paddinapalai*. Retrieved from https://www.projectmadurai.org/pm_etexts/pdf/pm0077.pdf

Madurai Tamil Ilakkiya Minthokuppu Thiddam. (2015). *Pathitrupattu*. Retrieved from https://www.projectmadurai.org/pm_etexts/pdf/pm0038.pdf

Madurai Tamil Ilakkiya Minthokuppu Thiddam. (2015). *Purananuru*. Retrieved from https:// www.projectmadurai.org/pm_etexts/pdf/pm0057.pdf

Ramachandran, S. (2010, January 8). Thokapiyathil Idaiserugala?. *Solvanam Minnithazh*. Retrieved from https://solvanam.com/author/srchandran

Ramasamy Pillai, http://www.tamilvu.org/library/l0100/html/l0100013.htm

Shanmugam Pillai. (1998). *Tholkapiyam Porulathikaram, Ilampuranar Urai*. Chennai: Mullai Nilayam.

Subramaniam Sa., Ve. (2009). *Tamil Ilakana Nuulgal*. Chennai: Manivasagar Pathipagam.

Varatharasan, Mu. (2008). *Thirukural Thelivurai*. Chennai: Kazhaga Veliyidu.

# உபநிடத உரையாடலில் கருத்துமுதல்வாதத்தின் வகிபங்கு

# The concept of idealism in the Upanishad dialogue

திரு. கு. தவசீலன் / Mr. K. Thavaseelan[1]

கலாநிதி (திருமதி). வி.பவநேசன் / Dr. (Mrs). V. Pavanesan[2]

Date of submission: 2019-05-01
Date of acceptance: 2019-07-02
Date of Publication: 2019-07-30
Corresponding author's
Name: K. Thavaseelan
Email: kumarasamythavaseelan@gmail.com

***Abstract***

The Upanishad forms the fountainhead of all philosophies in Indian philosophy. The term of the word 'Upanishad' literally means "To sit closer". The Upanishads are privileged and a closed discussion that happened between a Guru of a higher spiritual plane and his closely seated deserving disciple. These are considered to be the epilogue for Vedas. There are evidences found from articles authored by various researchers that they belong to the period between 8th and 5th Century BC. The notion-driven discourses, contemplations on the aspects of Brahmam, Soul, Mundanity found in various relationships such as Guru- Disciple in Gurukula Fashion, Husband-Wife, God-Devotee, Ascetic-Student found in Upanishads have formed the basis of much later philosophies such as Advaita, Visishtadvaita, Dvaita, and Saivasiddhantha. The notion that only notion is true and it is the fundamental basis for all perspectives. Therefore the world, soul, God and all Physical bodies have been built around notions. This is called notion-driven discourse. An object-driven discourse is the one which gives which gives importance to objects in its approach. It can be seen that Upanishads give more importance to notion-driven discourses. This study is carried out on the basis that all fables of Upanishads are notion-driven concurrently taking Upanishad related literatures as boundaries and also using methodologies such as comparison, description and Historiography.

**Key Words:** Upanishad, dialogue, Idealism, soul, Brahman, world.

## அறிமுகம்

சைவத்தின் பொது நூலாகிய வேதத்தின் இறுதிப் பகுதியாக அமைந்துள்ள உபநிடதங்கள் தத்துவங்களின் ஆணிவேராகத் திகழ்ந்துகொண்டிருக்கின்றன. இதனால் இந்திய தத்துவ மரபின் தொடக்கப்புள்ளியாக உபநிடதத்தை சொல்வதுண்டு. அதனாலே அதற்கு ஞானகாண்டம் என்ற பெயருமுண்டு. (கிருஷ்ணவேணி, 2008, p.21) புறவுலகைப் புறம் தள்ளிவிட்டு அல்லது அதில் காலூன்றி நின்று கொண்டு அகவுலகத்தில் சஞ்சரிக்கின்ற அதாவது பௌதிகத்திற்கு முதன்மை அளிக்காமல் பௌதிகத்திற்கு அப்பாலான உணர்வுகளாக அமைவது கருத்துமுதல் வாதம் எனப்படும். ஆதலால் இது அப்பாலைத் தத்துவம், பௌதிக அதீதம், மீன்மியம், புலன் கடந்த மெய்யியல் என பலவாறு அழைக்கப்படுகின்றது. (வானமாமலை, 2008, p.2).

இவை அனைத்தும் அக்கால குரு சீட பாரம்பரியத்திற்கிடையே நடந்த உரையாடல் வழி கருத்துக்கு முதன்மை கொடுத்துக்

[1] The auther is M.phil research student in the Post Gratuat studies, university of Jaffna, Jaffna, Sri Lanka, kumarasamythavaseelan@gmail.com

[2] The auther is a senior lecturer in the department of Hindu Civilization, university of Jaffna, Jaffna, Sri Lanka. vigna22969@gmail.com

கட்டமைக்கப்பட்டுள்ளது. அது எவ்வாறு உரையாடல் வழி கருத்து முதல் வாதத்திற்கு முதன்மை கொடுத்துக் கட்டமைக்கப்பட்டு பிற்கால தத்துவங்களுக்கு அடிப்படையாக அமைந்துள்ளது என்பதனைத் தெளிவுபடுத்தும் வகையில் இவ்வாய்வு முன்னெடுக்கப்படுகின்றது.

## ஆய்வு முறையியல்

இவ்வாய்வானது முதன்மைத்தரவுகளாக உபநிடதங்களையும், இரண்டாம் நிலைத்தரவுகளாக உபநிடத தத்துவம் சார்ந்து வெளிவந்த நூல்கள், கட்டுரைகள் போன்றவற்றைக் கொண்டு கட்டமைக்கப்படுகிறது. அடிப்படையில் இது விவரண ஆய்வாகவே அமைகிறது. பொருத்தமான சந்தர்ப்பங்களில் வரலாற்று ஆய்வு முறையும், பகுப்பாய்வு மற்றும் ஒப்பீட்டு ஆய்வு முறையியலும் பயன்படுத்தப்பட்டுள்ளன. பொருத்தமான விடயங்களுக்கு மாத்திரம் அடிக்குறிப்பு இணைக்கப்பட்டிருக்கின்றது.

## ஆய்வு முன்னோடிகள்

உபநிடதங்களின் மையப்பொருட்களான பிரம்மம், ஆன்மா, உலகு, கன்மம், மறுபிறப்பு சம்பந்தமாக பல்வேறு ஆய்வுகள் வெளிவந்துள்ளன. குறிப்பாக நடராஜசிவாச்சாரியார் (2007) எழுதிய 'உபநிடதங்களின் சாரம்' என்ற நூலில் உபநிடதத்தில் கூறப்பட்ட தத்துவக்கருத்துக்கள் அலசி ஆராயப்பட்டுள்ளது. செ. தனபாலசிங்கம் (ஆ. இ) அவர்கள் எழுதிய 'உபநிடத சிந்தனைகள்' என்ற நூலிலே உபநிடதம் கூறும் தத்துவார்த்தக்கருத்துக்களும் அது எவ்வாறு பிற்கால தத்துவங்களுக்கு அடிப்படையாக இருக்கிறது என்பன பற்றியும் சுருக்கமாக ஆராயப்பட்டிருக்கிறது. ஆனால் உபநிடதத்தில் கருத்துமுதல்வாதம் தொடர்பாக இதுவரை எந்தவொரு ஆய்வும் வெளிவரவில்லை. ஆகவே அதனை இவ்வாய்வு நிறைவுசெய்ய முற்படுகிறது.

## ஒப்பீடுகளும் விவாதங்களும் உபநிடதம் குறித்த சிறு விளக்கம்

வேதத்தின் ஞானகாண்டப் பகுதியாக விளங்குபவை உபநிடதங்கள். ஞானம் என்பது மெய்ப்பொருள் பற்றிய அறிவைக் குறித்து நிற்கிறது. இது பிரபஞ்சத்தின் தோற்றம், அதன் ஒடுக்கம், அதற்கு அடிப்படையாக அமைந்த சக்தி, மனிதன், மனிதனது இயக்கத்திற்கு காரணமான உள்ளபொருள், இவற்றுக்கிடையே உள்ள தொடர்பு, மனித வாழ்வு, வாழ்வுக்குப் பின்னுள்ள இறப்பு, கர்மம், மறுபிறப்பு, மோட்ஷம் போன்ற பல்வேறு விடயங்களை மிக நுணுக்கமாக ஆராய்ந்திருக்கின்றது. (கிருஷ்ணவேணி, 2008, p.21).

"உபநிஷத்" என்றால் மிக நெருக்கமாக கீழே இருத்தல் என்று பொருள்படும். இது குருவுக்கு அண்மையில் சீடர்கள் நெருங்கி இருந்து குரு கூறுகின்ற மறைஞானக் கோட்பாடுகளை சிரத்தையோடு கேட்டறிதல் ஆகும். இத்தகைய மறைஞான தத்துவக் கருத்துக்கள் அனைத்தையும் விளங்கிக் கொள்ளும் பக்குவமுடைய மாணவர்களுக்கே மாத்திரமே போதிக்கப்பட்டவை. அதனால் அதற்கு இரகசியம் என்ற பெயரும் உண்டு. (லக்ஷமணன், 2005,p.38).

இந்து சிந்தனை மரபில் உபநிடதம் என்ற பெயரில் உள்ள நூல்கள் இருநூறுக்கும் மேற்பட்டவை. அவற்றுள் நூற்றியெட்டு உபநிடதங்கள் பிரதானமானவை. அந்த நூற்றியெட்டிலும் பத்து உபநிடதங்களே மிக முக்கியமாகக் கருதப்படுபவை. அப்பத்துக்கும் சங்கரர் விளக்கவுரை எழுதியதாகவும் அவற்றுள் பெரும்பாலானவை புத்தர் பிறப்பதற்கு முன்பே ஆக்கப்பட்டது எனவும் ஆராய்ச்சியாளர்கள் குறிப்பிடுகின்றனர். காலத்தால் முற்பட்ட உபநிடதங்கள் வசன நடையிலே உள்ளன. காலத்தால் பிற்பட்டவை செய்யுள் நடையில் உள்ளன. இவ்வுபநிடதங்களை ஆக்கியவர்கள் முனிவர்கள் என்றும் அவர்கள் தெய்வ அருள் பெற்றவர்கள் என்றும் அவர்களுள் சிலருடைய பெயர்களைத் தவிர, அவர்களுடைய வாழ்க்கை வரலாறு பற்றிய விபரங்கள் எதுவும் கிடைக்கவில்லை என ஆராய்ச்சியாளர்கள் குறிப்பிடுவர். (லக்ஷமணன், 2005, p.40). இத்தகைய உபநிடதங்களில் இடம்பெற்ற உரையாடல்களினூடாக கருத்துமுதல்வாதத்தினுடைய வகிபாகம் மதிப்பிடப்படுகிறது.

## கருத்துமுதல் வாதம் ஒரு விளக்கம்

பொருளுக்கு இரண்டாவது இடம் கொடுத்து கருத்துக்கு முதன்மை கொடுக்கும் தத்துவத்திற்கே கருத்துமுதல் வாதம் என்று பெயர். (வானமாமலை, 2008, ஜீ.2) இதனை ஆத்மீக வாதம், மனம் முதல் வாதம், கற்பனாவாதம் என்று பலவாறு அழைப்பர். இது ஆன்மா, உணர்வு, மனம் ஆகியவற்றிற்கு முதன்மை தருகின்றது. உணர்வே அடிப்படை உண்மை நாம் புலன்களின் வழி அறியும் சடப்பொருளான இவ்வுலகமும் அதன் உற்பத்திப்பொருட்களும் ஆன்மாவைச் சார்ந்தே இருக்கின்றன.(வானமாமலை, 2008, p.2).

உபநிடதங்கள் கருத்துமுதல்வாதத்தை உள்ளுணர்வாகவும் மறைபொருளாகவுமே வெளிப்படுத்துகின்றன. சாதாரண விளிப்பு நிலையில் உண்மையாகத்தெரிகின்ற ஒன்று யோக நிலையிலும் ஞான நிலையிலும் பொய்மையாகிவிடுகிறது. புறக்காட்சியும் புறப்பொருளும் இல்லை ஆனால் ஆன்மா பிறவிக்கு உட்பட்டு உழல்கின்றது. ஒரு பொருள் என்பது புலன் உணர்வாக எண்ணமாக உள்ளத்துள் உள்ளது. இது பொருளோடு சம்பந்தம் அல்லது அறிவோடு ஏற்படும் சம்பந்தம் எனப்படுகின்றது. உண்மையில் உள்ளது நம் மனத்தின் எண்ணப்பிரதிபலிப்பே உலகமும் புறத்தோற்றங்களும் யதார்த்த உலகம், பிரத்தியட்ச வாழ்வு, இயற்கை ஆகிய இவை அனைத்தும் நம் கருத்தில் தான் உள்ளன என்று கூறும் வாதமே கருத்துமுதல் வாதமாகும். இதனை உபநிடத உரையாடல்கள் தொடக்கிவைத்துள்ளன. (வானமாமலை, 2008, p.2).

## கருத்துமுதல்வாத அடிப்படையில் பிரம்மம்

உபநிடதத்தில் காணப்படுகின்ற கருத்தியல் ரீதியான உரையாடல்களை ஆராய்ந்து பார்க்கின்ற வேளையில் குரு குலக் கல்வி முறையில் குரு சீடர்களாக தந்தை மகன், கணவன் மனைவி, கடவுள் பக்தன், முனிவர் மாணவன், கடவுள் கடவுள் எனும் உறவு நிலைகளில் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள் இடம்பெற்றன. (வரதராஜன், 2015, p.38). இவ்வாறாக கருத்து முதல் வாதத்திற்கு முதன்மை கொடுத்து உரையாடல் வடிவில் இடம்பெற்ற பிரம்மம், ஆன்மா, உலகு பற்றிய மெய்ஞ்ஞான ஆராய்ச்சி தொடர்பான சம்பாசனைகளே பிற்கால தத்துவ வளர்ச்சிக்கு முன்னோடியாக அமைந்து காணப்படுகின்றன. (கிருஷ்ணவேணி, 2008, p.30).

சாந்தோக்கிய உபநிடதத்திலே (அண்ணா,1957,pp.6784). உத்தலாகலருக்கும் சுவேதகேதுவுக்கும் இடையில் இடம்பெற்ற உரையாடலைப் பார்க்கின்ற வேளையில் பிரம்மம் பற்றிய விளக்கம், பிரம்மத்தின் சர்வ வியாபகம், பிரபஞ்சத் தோற்றம் என்பன உரையாடப்படுகின்றன. அதாவது சுவேதகேது 25 வயது வரை குருகுல வாசம் செய்தும் உண்மைப் பொருளை அறியவில்லை. அவன் தந்தையாகிய உத்தலாகலர் அதனை விளக்குகின்றார். நதிகள் கடலில் பாய்ந்து செல்கின்றன கடலில் கலந்து விட்டு பிறகு இது நான் என்று அது தன்னைப் பிரித்துச் சொல்ல முடியுமா? அது எங்ஙனம் அறியும்? அவ்வண்ணமே இவ்வுலகத்துப் பிராணிகளெல்லாம் சத்திலிருந்து தோன்றியும் அதிலிருந்து தான் தோன்றுகின்றன என்று உணரவில்லை. மேலும் எது அது மாத்திரமான சூட்சும வஸ்த்துவாகவே அதுவே நீயாக உள்ளதாய் (தத் த்வ மசி) ஒரு சின்னஞ்சிறு வித்தில் இருந்து மிகப்பெரிய ஆலமரம் உண்டாகிறது அது உண்டாவதற்கு முதல் அந்த ஆலமரம் எப்படி சிறு விதைக்குள் அடங்கியிருக்கிறதோ அவ்வாறே இவ்வுலகம் முழுவதும் ஆத்மசக்தியில் அடங்கியிருக்கிறது (இராமநாதன், 2007, p.177)

தண்ணீரில் போட்ட உப்பு என்னவாகிறது? கரைந்து கண்ணுக்குத் தெரியாமல் போகிறது இருந்தும் அது அந்த தண்ணீர் முழுவதும் வியபித்திருக்கின்றதல்லவா? அதே வண்ணம் பரம்பொருள் இவ்வுலகில் மறைந்திருந்தாலும் எங்கும் வியாபித்தும் மறைந்து நிற்கிறது. ஆகவே ஆத்மா நீயும் அதுவே. கண்ணைக் கட்டி காட்டில் விட்டால் என்னவாகும்? அங்கேயே உழன்று கொண்டு இருக்க

வேண்டியது தான் இவ்வண்ணமே முன் செய்த கருமங்கள் உள் ஞானத்தை மறைத்து போகக் கட்டுக்களால் கண்ணைக் கட்டி இந்த உலகம் என்னும் காட்டில் உன்னைக் கொண்டு வந்து விட்டிருக்கிறது. ஊருக்கு எப்படித் திரும்பிப் போவது என்ற வழிவகை அறியாமல் பயந்து கொண்டு மயக்கத்தில் நிக்கிறாய் உனக்கு தகுந்த ஒரு குரு கிடைத்து உன் கட்டுக்களை அவிழ்த்து விட்டால் வழி தேடி ஊர் போய் சேருவாய். என பிரம்மம் பற்றிய உரையாடல்கள் கருத்தியலுக்கு முதன்மை கொடுத்து இடம்பெற்றன. (இராமநாதன், 2007, p.228).

பிருகதாரணிய உபநிடதத்திலே (அண்ணா, 1957, pp.133 230). ஞாக்கியவள்ளிக்கும் மைத்திரேயிக்கும் இடையில் இடம்பெற்ற உரையாடலும் பிரம்மம் பற்றியதாகும்.

## கருத்துமுதல்வாத அடிப்படையில் ஆன்மா

கட உபநிடதத்திலே நசிகேதனுக்கும் யமனுக்கும் இடையே நடைபெற்ற உரையாடல் ஆன்மா, கன்ம மறுபிறப்பு பற்றியது ஆகும். அதிலே மரணத்தின் பின்னர் ஆத்மாவின் நிலை யாது? என நசிகேதன் யமனிடம் கேட்கிறான். அதாவது உலகத்திலே ஒரு மனிதன் இறந்த பின் அவனது ஆத்மா தொடர்ந்து இருக்கிறது என சிலரும் அது தொடர்ந்து இல்லை என்று ஒரு சிலரும் கூறுகின்றனர் இதில் எது உண்மை என்று நீர் எனக்குத் தெளிவாகச் சொல்ல வேண்டும் என்கிறான். அதற்கு யமன் நசிகேதா மனிதன் விரும்ப வேண்டியது என்பது ஒன்று. ஆனால் அவன் விரும்புவது வேறொன்று. இந்த இரண்டு இலட்சியங்களுமே வெவ்வேறு பயன்களை உடையவை விரும்ப வேண்டியது விடுதலை இதை விரும்புபவர்கள் இன்பமும் மற்றவர் துன்பமும் அடைகின்றனர் (சுவாமி ஆசுகோஷானந்தர், 2001, pp.4552). ‘அன்னப் பறவை நீரையும் பாலையும் பிரித்து பாலை மட்டும் உட்கொள்வது போல’ அறிவுடைய ஒருவன் அந்த இரண்டு இலட்சியங்களையும் பகுத்து அறிந்து முக்தியை மட்டுமே விரும்புகிறான். (சுந்தரம், 2002, p.5).

இந்த உலகம் மட்டுமே உண்மை என்று எண்ணிக் கொண்டு இருப்பவர்கள் திரும்பத் திரும்ப மரணத்தின் வலைக்குள் வந்து விழுகின்றார்கள். அண்டத்தில் இருப்பதே பிண்டத்தில் உண்டு என உணர்ந்து ஜீவன் தான் வினைகளை அனுபவிக்கிறது என்று உணர்ந்து மெய்ப்பொருளை அறிந்தவன் மெய்ப்பொருள் ஆகிவிடுகிறான். இந்த உடம்பு அழிந்தால் ஆன்மாவும் அழியும் என்று எண்ணி அறியாமையில் மூழ்கி வாழ்ந்து விட்டவர்கள் மறுபடி மறுபடி பிறவி எடுக்கிறார்கள். அவர்களுள் தோற்ற வேற்றுமைகளுக்குள் ஒரே உண்மை இருப்பதை யார் அறிகிறார்களோ அவர்கள் தான் அமைதியும் ஆனந்தமும் பெறுகிறார்கள் (சுந்தரம், 2002, p.13) என்று கட உபநிடதத்திலே யமன் விளக்கமளிக்கிறார்.

நாரதர் சனத்குமாரர் ஆகியவர்களிற்கிடையே நடைபெற்ற உரையாடலும் ஆத்மா பற்றியதே ஆகும். ஆத்மாவைப் பற்றி அறிய வந்த நாரதர் சனற்குமாரரிடம் வினாவ அதற்கு அவர் பதில் அளிக்கிறார். அளவு கடந்தது எதுவோ அதுவே சுகமாகும். வேறு செல்வத்தில் சுகம் கிடையாது. அந்த அளவு கடந்ததை நீ அறிந்து கொள்ள வேண்டும். பார்ப்பதும் கேட்பதும் அறிவதும் கரணங்களின் துணைக் கொண்டு நிகழ்கின்றன. காண்போன், காணப்படு பொருள், காணுதல் எனும் மூன்று கூறுகள் மனபோதம் என்னும் ஒரே கூறாக அமைகின்றன. புத்தியின் உச்சநிலை அகண்டமாக விரிவடைகிறது. எது அகண்டமோ அதில் பல வஸ்த்துகள் இல்லை. ஒன்று தான் உள்ளது. அதுவே அத்வைத நிலையாகும். எப்பொழுதும் ஆகாரம் சுத்தமானால் அந்தக்கரணம் சுத்தமாகும். அந்தக்கரணம் சுத்தமானால் இறைவனின் நினைவு நிலை பெறும். அந்த நினைவு நிலை பெற்றாலே உடனே இவ்வுலகக் கட்டுக்கள் அனைத்தும் தளர்ந்து போகும். பேரம்பலத்தில் உள்ளதெல்லாம் சிற்றம்பலத்தின் அடக்கம். ஆனால் அவ்வித்தையால் அறிவிழந்தவர்கள் உள்ளத்திலே உரைந்துள்ள இவ் அரிய பொக்கிஷத்தை உணர்வதில்லையே என நாரதருக்கு சனக்குமாரரின் விடை மூலம் ஆத்ம ஞானம் பற்றி எடுத்துரைக்கப்படுகின்றது.

பிரஜாபதி, விரோஜனன், இந்திரனுக்கிடையே இடம்பெற்ற உரையாடலைப் (அண்ணா,1957,ஜீஜீ.109126). பார்க்கின்ற வேளையில் பிரஜாபதியிடம் அசுர குலத் தலைவன் விரோஜனனும் தேவர்களின் தலைவன் இந்திரனும் ஆன்மாவை அறியும் பொருட்டு செல்கின்றனர். இருவருக்கும் பிரஜாபதி சரீரமே ஆன்மா என உபதேசிக்கின்றார். இதனை ஏற்ற விரோஜனன் ஆத்மாவை உடம்பாக பூசிக்கிறான். இவ் உபதேசத்தை ஏற்க மறுத்த இந்திரன் மீண்டும் பிரஜாபதியிடம் கேட்டு அவர் காண்பது கண் அன்று. கண்ணைக் கருவியாகக் கொண்டு காண்பது ஆன்மா. பேசுவது நாக்கு அன்று. நாக்கைக் கருவியாகக் கொண்டு பேசுவது ஆத்மா. கேட்பது காது அன்று. காதைக் கருவியாகக் கொண்டு கேட்பது ஆன்மா. எண்ணுவதும் ஆத்மாவே மனத்தையே கண்ணாகக் கொண்டு தியானத்தில் மூழ்கிப் பரமாத்மாவைக் கண்டு பரமானந்தம் அடைவதும் ஆத்மாவே சுருக்கமாச் சொன்னால் சரீரம் வேறு ஆன்மா வேறு எனக் கூறுகிறார்.

இவ்வாறு உபநிடதங்களிலே பௌதிகத்திற்கு கடந்த விடயங்களுக்கு காரண காரிய அடிப்படையில் கருத்தியலுக்கு முதன்மை கொடுத்து உரையாடப்பெற்ற பிரம்மம், ஆன்மா, உலகம், கன்ம மறுபிறப்பு, விடுதலை போன்ற விடயங்கள் பிற்கால தத்துவ வளர்ச்சிக்கு அடிப்படையாக அமைந்தன.

## உபநிடத உரையாடல்களும் பிற்கால தத்துவங்களும்

உபநிடதத்திற்கு பிற்பட்ட காலங்களில் தோன்றிய இந்து தத்துவங்களுள் முதன்மையானதாக வேதாந்தமும், சைவசித்தாந்தமும் விளங்குகின்றன. அவற்றிற்குரிய அடிப்படையான கருத்துக்களை கருத்துமுதல்வாதத்தின் வழி அமைந்த உரையாடல் மூலம் உபநிடதங்கள் தன்னகத்தே கொண்டு காணப்படுகின்றன.

உபநிடத மகாவாக்கியங்களே மூவகை வேதாந்தங்களுக்கும் வித்திட்டன. சங்கரரின் அத்வைதம் உபநிடதத்தை அடிப்படையாகக் கொண்டது. ஏகம் சத், தத்துவமசி, அகம் பிரம்மம் அஸ்மி, அதாவது ஒரு பரம்பொருள் கொள்கையையே அத்வைத வேதாந்தமானது. சங்கரர் உபநிடதம் பற்றிய விளக்கத்தைத் தரும் போது ‘அஞ்ஞான இருளைப் போக்கும் பிரம்ம ஞானம்’ என்று குறிப்பிடுகின்றார். (லக்ஷ்மணன், 2005, p.328). உள்பொருளாகிய பிரம்மத்திற்கு நிற்குண, சற்குண நிலையைக் குறிப்பிட்டு உபநிடதம் விளக்கியது போல சங்கரரும் பிரம்மத்திற்கு நிற்குணம், சற்குணம் எனும் இரு நிலையைக் கொடுத்து நிற்குண பிரம்மத்திற்கே முக்கிய இடமளிக்கிறார்.

இராமானுஜரின் விஷ்டாத்வைதக் கோட்பாடும் உபநிடதங்களில் ஆராயப்பட்ட விடயங்களையே அடிப்படையாகக் கொண்டது. (கிருஷ்ணவேணி, 2008, p.31). பிரம்மத்தின் விசேட இயல்புகளாக ஆதியானது, அனைத்திற்கும் அடிப்படையானது, சொல்லால் விபரிக்க முடியாது, சத்தியம், ஞானம் முதலியன இதன் இயல்புகளாகும். அதனை இராமானுஜர் உபநிடதங்களின் அடிப்படையில் விளக்கி ஈஸ்வரனுக்குரிய பண்புகளாக அதாவது பிரம்மம் உண்மைப் பொருள், பரிபூரண குண பூரண அநாதியானவன், எங்கும் நிறைந்தவன், அந்தர்யாமி, அண்ட சராசரங்களை இயக்குபவன், எல்லாவற்றையும் மீண்டும் ஒடுக்குபவன் என இனங்காட்டினார்.

மத்துவரின் துவைதக் கோட்பாடு பிரம்மம், ஆன்மா பற்றிய சிந்தனைகள் உபநிடத உரையாடல்களை அடிப்படையாகக் கொண்டே எழுச்சி பெற்றன. (கிருஷ்ணவேணி, 2008, p.31) குறிப்பாக மூவகை வேதாந்திகளும் உபநிடதங்களுக்கு விளக்கவுரை எழுதியமையும் குறிப்பிடத்தக்கது. ஆன்மா தானே பிரம்மம் என அறிவதற்கும் பிரம்மத்தை அடைவதற்கும் தன்னைப் பீடித்துள்ள அவத்தை நீங்குவதற்கும் உபநிடதங்களில் குரு சீடனுக்கு ஞான மார்க்க நெறியினை எடுத்துக் கூறியமையை அடியொற்றி வேதாந்திகளும் சித்தாந்திகளும் ஆன்ம ஈடேற்றத்திற்கான வழிவகைகளை எடுத்துக் கூறுகின்றனர். (சிவஞானபோதம், 8ஆம் சூத்திரம்).

சைவசித்தாந்தத்தில் பிரம்மம் பதி எனப் போற்றப்படுவதற்கும் அதற்கு தடத்த சொருப இலக்கணம் என இயல்புகள் அமையப் பெறுவதற்கும் உபநிடத உரையாடல்களும் விசாரனைகளும் அடிப்படையாக அமைந்தன. சைவசித்தாந்தம் உரையாடல்கள், விசாரணைகளின் வழி வந்த உபநிடத மகாவாக்கியங்களை ஏற்று தமது தத்துவக் கருத்துக்களைக் கூறுகின்றது(கிருஷ்ணவேணி, 2008, p.31).

இவ்வுபநிடதங்களில் காணப்படுகின்ற கருத்துக்கள் சைவசித்தாந்த தத்துவ வளர்ச்சியில் எவ்வகையில் இடம்பெற்றுள்ளது என்பதை மெய்கண்ட சாத்திரங்களின் மூலம் தெளிவாக அறிய முடிகின்றது. குறிப்பாக வேதாந்தமாகிய உபநிடதங்கள் முழுவதையும் அங்கீகரித்து வேதாந்த உண்மைகளை தெளிவு செய்வது சிவாகமமாகிய சித்தாந்தம் ஒன்றே ஆகும் என்பதனை உமாபதி சிவாச்சாரியார் தனது சிவப்பிரகாசப்பாடலிலே எடுத்துக்காட்டியுள்ளார்.

*'பிரிவரும் அத்துவிதமாகும் சிறப்பினதாய் வேதாந்தத்*

*தெளிவாம் சைவசித்தாந்தத் திறன் தெரிக்கலுற்றான்'*

*(திருவிளங்கம், 1974, p.12)*

உபநிடதங்கள் தத்துவமஷி நீயே அது அதாவது நீயும் பிரம்மமும் ஒன்று என்கிறது. சைவசித்தாந்தம் இக்கருத்தை ஏற்றுக்கொள்கிறது. உபநிடதம் எடுத்தவுடன் நீயே அது என்றால் பாமர மக்களுக்கு விளங்கிக் கொள்ள முடியாது. அதனால் சித்தாந்தம் அறிவால் குறைந்த ஆன்மாக்களையும் பல வழிகளிலும் அழைத்துச் சென்று சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற வழிகளைத் தாண்டிச் சென்று பரம்பொருளும் ஆன்மாவும் முக்தி நிலையில் இரும்பைக் காந்தம் அணைப்பது போலவும், தீயானது இரும்பை தன்வயமாக்கி வைத்திருப்பது போலவும், நீரோடு கலந்து உப்புப் போலவும் அத்துவிதமுறையில் கலந்திருக்குமென எடுத்தாள்கின்றது. (சிவஞானசித்தியார் சுபக்கம், 2010, பாடல். 321.)

வேதாந்தம் உள்ளது ஒன்று என்ற கொள்கையை நிலை நாட்டும் பொருட்டு பிரம்மம் ஒன்றே உண்மைப் பொருள் என்று கூறுகின்றது. ஆனால் சித்தாந்தம் உள்ளது ஒன்று என்ற உபநிடத மகாவாக்கியத்திற்கு பிரம்மம் ஒன்று அதற்கு வேறாக பிரம்மம் இல்லை. ஆகவே பிரம்மம் என்ற வேறு ஒன்று இல்லை. ஏனைய பொருட்கள் இருக்கின்றன. அவை ஆன்மா, உலகம் என்பன. என முப்பொருள் உண்மையைக் கூறி உலகை ஆன்மா அனுபவிக்கச் செய்து இறுதியில் சிவத்தன்மையை ஆன்மா அடையும் நிலைக்குக் கொண்டு செல்கின்றது.

வேதாந்தம் அகம் பிரம்மாஷ்மி நானே பிரம்மம் என்கிறது. சித்தாந்தக் கொள்கைப்படி ஆன்மா சார்ந்ததன் வண்ணமாகின்றது.(லக்ஷ்மணன், 2005, ஜீ.393). சரீரத்தைச் சார்ந்து இருக்கும் போது சரீர வண்ணமாக இருக்கின்றது. பக்குவம் வந்த காலத்து பிரம்மத்தைச் சார்ந்து பிரம்ம வண்ணமாய் இருக்கின்றது. எப்படி சரீர வண்ணமாய் இருக்கும் போது சரீரம் ஆகாது ஆன்மா இருந்ததோ அதே போன்று பிரம்ம வண்ணமாய் இருக்கும் போது அது பிரம்மம் ஆகாது. இதுவே சித்தாந்திகளின் பாடல்களில் தெளிவாக்கப்படுகின்றது. (இருபா இருபஃது, 2003, p.257). வேதாந்தம் நானே பிரம்மம் என்று கூறுவதுடன் மாத்திரம் நின்று விடுகின்றது. நான் என்பது சரீரம் அன்று பிரம்மம் அன்று அது ஆன்மா இதனையே சித்தியார் 'கண்ட இவையின் மேல் நான் காரைத் கழிபரமும் நானன்லேன்'. (சிவஞானசித்தியார் (சுபக்கம்), 2010, பாடல். 298). என்று கூறுகின்றது.

உபநிடத உரையாடல்களில் ஆன்மா பற்றி குறிப்பிடுகின்ற போது ஞாக்கியவல்லியார் ஆத்மனின் இயல்பை 'நேதி நேதி இதுவன்று இதுவன்று' என எதிர் மறையில் குறிப்பிடுவதனை பிருகதாரணிய உபநிடதத்தில் காணலாம். (அண்ணா, 1957, p.216). 'உடலில் நின்றும் இந்திரியங்களில் நின்றும் உடலில் செயல்களில் நின்றும் மரணத்தில் நின்றும் வேறான பொருளே ஆத்மா' என சாந்தோக்கிய உபநிடதம் குறிப்பிடுகின்றது. (அண்ணா, 1957, pp.118

*121).* இதனை சிவஞானபோதம் மூன்றாம் சூத்திரம்

*'இலது உலது என்றலின் எனதுடல் என்றலின் ஐம்புல ஒடுக்கம்ஞ்ஞ்..*

*...மாயா இயந்திரத் தனுவினுள் ஆன்மா'* (சிவஞானசுவாமிகள், *1936,* p.ஙகக)

எனக் குறிப்பிடுகின்றமை நோக்கத்தக்கது.

உபநிடதங்கள் ஐந்து வகையான கவசங்கள் பற்றிக் கூறுகின்றன. அதாவது அன்னமய கோஷம், பிராணமய கோஷம், மனோமய கோஷம், விஞ்ஞானமய கோஷம், ஆனந்தமய கோஷம் பற்றிக் கூறுகின்றதது (பொன்னையா, *2007,* p.*23*). இதனையே சைவசித்தாந்தம் ஆன்மா ஐந்து வகையான கோஷங்களை உடையது. இவ் ஐவகைக் கோஷங்களோடு கூடிய நிலையில் சார்க்கிரம், சொர்ப்பனம், சுழுத்தி, துரியம், துரியாதீதம் எனும் ஐந்து அவத்தைகள் ஏற்படுகின்றது என்று கூறுகின்றது.(ஞானகுமாரன், *2012,* p.*47*).

உருத்திரன் என்ற தெய்வத்தை விளக்கும் வகையில் கடவுள் பற்றிய முழு அம்சமும் சுவேதஸ்வர உபநிடத உரையாடல்களில் கூறப்பட்டுள்ளது. எல்லாத் திசைகளிலும் பார்வையை உடையவன், இவனுடைய கரங்கள் எங்கனும் அசையக் கூடியவை. அவனே ஆணும் பெண்ணும் நீரில் தீயில் தாவரத்தில் பழத்தில் எல்லாம் உரைகின்றான் என பல்வகையில் விளக்கப்பட்டுள்ளது. (பொன்னையா, *2007,* p. *8587*). இதுவே சைவசித்தாந்தப் பதிக் கோட்பாட்டுக்கு முன்னோடியான கருத்துக்களாக விளங்குகின்றன. மேலும் சுவேதாஸ்வர உபநிடதத்தில் கடவுள் பசுபதி எனக் குறிப்பிடப்படுகின்றது. (பொன்னையா, *2007,* p.*111*). இது சைவசித்தாந்த பதி பசு என்ற அடிப்படைக் கொள்கைக்கு முன்னோடியாக அமைந்துள்ளது. சுவேதாஸ்வர உபநிடதத்தில் வருகின்ற 'பாஷ' என்ற சொல் சைவசித்தாந்தம் கூறும் பாசத்திற்கான முன்னோடி ஆகும் என்ற வகையில் சைவசித்தாந்தம் கூறுகின்ற முப்பொருள் உண்மைக்கு சுவேதாஸ்வர உபநிடதம் அடிப்படைக் கருத்தை விளக்கியுள்ளது. (பொன்னையா, *2007,* pp.*88 91*).

உபநிடதங்களில் இறைவன் பல்வேறு சக்திகளோடு தொடர்புபடுகின்ற அம்சம் முக்கியமாகக் குறிப்பிடப்டுகின்றது. (கந்தையா, *1998,* ஜீ.*52*). இச்சக்தியின் தொடர்பு சைவசித்தாந்தத்தில் சிறப்பாகப் பேசப்படுகின்றன.

*'தன்னிலமை மன்னுயிர்கள் சாரத் தரும்*

*சக்தி பின்னமிலான் எங்கள் பிரான்'*

(ஸ்ரீ உமாபதி தேவநாயனார், *1953,* p.*4*)

எனும் திருவருட்பயனுடைய பாடலடி உபநிடதங்களுடன் ஒப்பிட்டு நோக்கத்தக்கது.

உலகைக் குறித்து உபநிடத உரையாடல்களிலும் விசாரனைகளிலும் உலகம் பிரம்மத்தில் நின்று உண்மையில் வெளிப்பட்டது என்ற கருத்து தோன்றின. (லக்ஷ்மணன், *2005,* p.*56*). இதனையே சிவஞானபோதம் '....தோற்றிய திதியே ஒடுங்கிமலத்துலதாம்......' (சிவஞானபோதம், *1* ஆம் சூத்திரம்) என்கின்றது. இங்கு திதி என்பது உள்பொருள் என்பது பொருளாக அமைகின்றது.

பந்த நிலையில் பொருட்கள் பலவாகவும் முத்தி நிலையில் பொருள் ஒன்றாகவும் இருப்பது உபநிடதம் கண்ட உண்மை ஆகும். ஆன்மாக்களுக்கு இப்பொழுது உள்ள நிலை பந்த நிலை மாறுதல் அடைகின்ற நிலை அறிவு சுத்தமான அறிவு அன்று ஆன்மாக்களுக்குச் சீவத்துவம் போய் சிவத்துவம் பிறக்கும் நிலையில் நித்தியமான நிலை ஏற்படுகின்றது. அறிவு சுத்தமான அறிவாகும். முத்தி நிலையில் சீவன் தன்னை சிவனாய் காணும் இதனை 'யாவையும் சூனியம் சத்தெதிர் ஆதலின் .....' (வேங்கடாச்சலபதி, *1999,* p.*46*) என சிவஞான போதம் கூறுகின்ற பாடலடியானது சிவத்திற்கு எதிரில் இரண்டாவது பொருள் எதுவும் இல்லை என்பதை எடுத்துக் காட்டுகிறது. இவ்வகையில் பந்த நிலையில் பொருள் பலவாதலும் முக்தி நிலையில் பொருள் ஒன்றாதலும் எனும் உபநிடதம்

கண்ட உண்மையினை ஐயுற்று வினாவிடை செய்து தெளிந்து கூறியதே சைவசித்தாந்தம் ஆகும்.

சுவேதாஸ்வர உபநிடதம் பக்தி பற்றி வற்புறுத்திக் கூறுகின்றது. குறிப்பாக ஞானத்தோடு பக்தியும் யோக நிலைக்குத் தேவை என்ற கருத்து வற்புறுத்தப்படுகின்றது. பக்தியானது கடவுளிடம் மட்டுமன்றி குருவிடமும் இருத்தல் வேண்டும் என்கிறது. (பொன்னையா, 2007, p.167). சைவசமய தத்துவத்திலே எல்லாப் பிரிவுகளும் குருவின் முக்கியத்துவத்தை வற்புறுத்தியிருப்பதற்கு மூலம் உபநிடதம் ஆகும். இறைவனே குரு வடிவமாக மானிட சட்டை தாங்கி எழுந்தருளி உயிர்களை எல்லாம் ஆட்கொண்டு அருளுகின்றான் என்பது சைவசித்தாந்தக் கொள்கை.(திருவருட்பயன், குறள் 5 8). எல்லாம் வல்ல சிவன் திருப்பெருந்துறையில் குருந்த மர நிழலில் குரு வடிவம் கொண்டு மாணிக்கவாசகரை ஆட்கொண்ட திறத்தினை மெய்கண்ட தேவர்

*'ஐம்புல வேடரின் அயர்ந்தனை வளர்ந்து எனத்*

*தம்முதல் குருவுமாய்த் தவத்தினில் உணர்த்தி விட்டு*

*..............' (சிவஞானபோதம், 8 ஆம் சூத்திரம்)*

என்று சிவஞானபோதத்தில் எட்டாம் சூத்திரத்தில் கூறியுள்ளார். திருவருட்பயன் 'அருளுரு நிலை ' என்னும் அதிகாரம், பக்தியானது கடவுளிடம் மட்டுமன்றி குருவிடமும் செலுத்த வேண்டும் என்னும் உபநிடதக் கொள்கையில் தெளிவாக அமைகின்றது. இவ்வகையில் உபநிடதங்கள் கூறுகின்ற தத்துவ சிந்தனைகள் பிற்பட்ட கால சைவசித்தாந்த மெய்கண்ட சாத்திரங்களுக்கு அடிப்படையாக அமைகின்றன எனலாம். மேலும் உபநிடதங்களில் உரையாடல்களின் வழி பெறப்பட்ட கன்மம், கன்மமறுபிறப்பு பற்றிய சிந்தனைகள் சைவசித்தாந்தத்தில் கன்மம் பற்றிய கோட்பாட்டுக்கு அடிப்படையாக அமைந்துள்ளது. (சிவப்பிரகாசம்,பாடல்.29).

உபநிடதங்களே சாங்கியம், யோகம், மீமாம்சை, நியாயம், வைசேடியம் ஆகிய ஐவகைத் தரிசனங்களுக்கும் அடிப்படையாகின. (ஜெயமோகன், 2009. P.64). ஆத்மவாதிகளும் தமது கொள்கையை வலியுறுத்துவதற்காக உபநிடதங்களையே எடுத்தாள்வர்.

பிரஸ்த்தான திரயத்தில் ஒன்றாக விளங்கும் உபநிடதங்களின் விளக்க உரையாகவே பிரம்ம சூத்திரம் அமைய உபநிடத சாரமாக பகவத்கீதை அமைகிறது. உடல் வேறு ஆன்மா வேறு என்பதனை விளக்கும் வகையில் கட உபநிடத்தில் கூறப்பட்ட கருத்தை அதாவது வண்டியில் கட்டப்பட்ட குதிரை போல ஆன்மா உடலில் கட்டப்பட்டுள்ளது என்னும் கருத்தையே பிற்கால பகவத் கீதையில் கிருஷ்ணரால் கூறப்பட்டுள்ளது. உபநிடதங்களாகிய பசுக்களில் இருந்து பெறப்பட்ட பாலே பகவத்கீதை என இராதகிருஷ்ணர் கூறுவதும் கவனிக்கத்தக்கது.

பிற்கால அறிஞர்கள் பலர் தமது தத்துவக்கோட்பாடுகளை உபநிடதங்களில் இருந்தே கையாண்டுள்ளனர். உதாரணமாக இராஜராம் மோகன்ராய், ஜயானந்த சரஸ்வதி, விவேகானந்தர், காந்தி, பாரதி 'மண்ணும் உபநிடத நூல் எங்கள் நூலே' (சுந்தரமூர்த்தி, 2009, p.18). எனப் போற்றியுள்ளனர்.

## முடிவுரை

எனவே உபநிடதத்திலே உரையாடல்கள் மூலம் கருத்துமுதல்வாத வழி அமைந்த பிரம்மம், ஆன்மா, உலகம், கன்ம மறுபிறப்பு முதலிய தத்துவங்கள் ஆராயப்பட்டுள்ளன. அந்த ஆராய்ச்சி செல்நெறியிலே பிற்காலத்தில் தத்துவங்கள் வளர்ச்சி அடைந்து கோட்பாட்டுத் தளத்திற்குச் செல்வதற்கு கருத்துமுதல்வாத உரையாடல்கள் அத்திவாரமாக அமைந்தன என்பதில் எந்தவித ஐயமும் இல்லை எனலாம்.

**References**


Anna (uraiyasiriyar). (1957). *Upanidhathasaaram.* Chennai: Sri Ramakirushnamadam.

Iramanadhan, V. (2007). *Upanishadam Pesum Unmaikal*. Chennai: Sri Hindu Publication.

Janakumaran, N. (2012). *Saiva Siddhanta Thelivu*. Jaffna: Thoondi.

Kandhaiya, M. (1998). *Saivasidhanta Nokkil Kailasapathi Smiruthi*. Sri Lanka: University Of Jaffna.

Kirushnaveni, A. N. (2008). *Saivasiddhantam oor arimukam*. Colombo: Semamadu Pathippakam.

Lakshmanan, K. (2005). *India Thaththuva Janam*. Chennai: Palaniyappa Pirathars.

Nadaraja Sivachchariyar. (2007). *Upanisadankalin saaram*. India: Narmatha Pathippakam.

Ponnaiya, A. (2003). *Irupa Irupakthu*. Chennai: Saivasiddhanta Nootpathippu Kalakam.

Ponnaiya, I. (uraiyasiriyar). (2007). *Suvedasvaram (Moolamum Uraiyum).* Colombo: Kumaran Puththaka Ellam.

Radhakrishnan, S. (1971). *Indian Philosophy.* London: Allen and Unwin.

Sivajanasuwamikal. (1936). *Sivajanapodham*. Chennai: Saiva Siddanta Makasamaajam.

Sri Umapathuidhevanayanar. (1953). *Meikandasaaththiram*. Thiruvavaduthurai: Thiruvavaduthurai Aadhinam.

Sundharam, P. (2002). *Kadopanisath*. Chennai: Vanathi Pathippakam.

Suntharamoorthi, I. (eds). (2009). *Parathiyar Kavithaikal*. Chennai: Paavai Puplication.

Suwami Asukoshanandhar. (2001). *Kado Upanishadam*. Chennai: Sri Iramakirichna Madam.

Thanabalasingam, S. *Upanidhatha Sinthanaikal*. Jaffna: Sanmukanaatha Achchakam.

Thiruvilangam, M. (uraiyasiriyar). (1974). *Sivappirakasam.* Jaffna: Koodduravu Tamil Vitpanaik Kalakam.

Thiruvilangam, M. (uraiyasiriyar). (2010). *Sivajanasiththiyaar Supakkam*. Jaffna: Sivathondan Sapai.

Vanamaamalai, N. (trans.). (2008). *Uyirin Thotram*. Chennai: New Censari Puk House.

Varatharajan, K. (2015). *India Thaththuva Tharisanam.* Chennai: Barathi Puththakaalayam.

Vengadachchalapadhi, A. (1999). *Sivajanapodha urai*. Chennai: Kalloori Valakam.

Vethanathan, M. (pathippu). (2009). *Sivajanapodha Sitturaiyum Vilakkamum*. Jaffna: Saiva Siddhanta Aaivu Niruvanam.

# தமிழும் சோதிடமும்

# Tamil and Astrology

திலக். கி. பாஸ்கரன் / Thilak.K.Baskaran[1]

பொறியாளர் சு. சிவராம்கிருஷ்ணன் / Er.S.Sivaramkrishnan[2]

Date of submission: 2019-05-01
Date of acceptance: 2019-07-02
Date of Publication: 2019-07-30

Corresponding author's
Name: Thilak K. Baskaran
Email: baskaraastrology@yahoo.in

***Abstract***

Tamil language is a classical language and is one of the longest surviving classical languages. Recent archeology findings reveal that Tamil civilization was the oldest one. The trace of Tamil is seen all over the world. Also the root word analysis indicates that the most of the languages could not find its meaning in their language but makes correct meaning in Tamil language. Therefore it is clear that Tamil is the mother of all the languages. Tamil has been developed with 3 sangam (Era). The time of third (last) sangam period is said to be BC500 and could even be earlier. Therefore, the first and second sangam period could have been even older. Tholkappiyam is a work on the grammar of the Tamil language and the earliest extant work of Tamil literature and linguistics. The period at which the Tamil language had Grammar proves the antiquity and beauty of Tamil language. Tamil language evolved naturally. Tamil people's life is completely based on the nature (Planets – Astrology). The knowledge and understanding of the ancient Tamil people about Nature – Planetary position (Astrology) is astonishing. Their festivals, rituals, life style, customs etc are evident that their life was completely based on the nature. The language that evolved naturally and the civilization that grew on the basis of nature should have similarity in it. This article explores such similarity and brings out how Tamil and their civilization are similar in their concepts. It also proves that the concepts evolved based on nature will have unique similarity.

**Key Words:** Tamil and Astrology, Tamils life style, Astrology, Nature, Tholkappiyam, Planets, Lemuria, Kumari kandam.

## முன்னுரை

தமிழ் என்ற மொழி, இயற்கையாக உருவான மொழி (Victor, *2012*, p.*97*). தமிழர்களின் வாழ்வியலும், இயற்கையை தழுவிய வாழ்வியலே (Victor, *2012*, p.*141*) என்ற அடிப்படையில் உருவான கருதுகோள் தான், "தமிழும் சோதிடமும்" என்ற இந்த அறிய ஒப்புமை படைப்பு. தமிழையும் தமிழர்களையும் பெருமைக்கொள்ள வைக்கும் இன்னும் ஓர் சான்று.

தமிழ் என்ற மொழி இயற்கையான மொழி (Devaneya Pavanar, *2018*, p.*170*). சோதிடம் என்பது இயற்கையை அறிய உதவும் கருவி. இயற்கையை மையப்படுத்தி அமையும் தமிழும், சோதிடமும் ஒரே மாதிரியான கட்டமைப்பை கொண்டிருக்கும் என்பதற்கு இந்த கட்டுரை சாலச்சிறந்த சான்று.

[1] The author is a inventor of Baskara Astrology (KB system), Madurai, India, baskaraastrology@yahoo.in

[2] The author is a follower of Baskara Astrology (KB system), Senior Engineer, Bangalore, India, scientificastrologics@gmail.com

### காலச்சக்கரம் – ராசிமானம்

சோதிடத்தின் அடிப்படை காலச்சக்கரம். காலச்சக்கரம் என்பது ராசிமானம். ராசி மானம் எல்லாவற்றையும் தன்னகத்தே கொண்டுள்ளது. சோதிடத்தில் கூறப்படும் எந்த ஒரு விடயமும் காலச்சக்கரத்திலிருந்தே சொல்லப்படுகிறது (Baskaran, *2005*, p.*1*).

இந்த ராசிமானத்தின் அடிப்படை 12 ராசிகள். பன்னிரண்டு ராசிகளை மேலும் பிரிக்கும் பொருட்டு அதனை சந்திரனின் சுழற்சியை கொண்டு 27 நட்சத்திரங்களாக பிரித்தனர். இவ்வாறு பிரிக்கும் பொது அவை 18 முழு நட்சத்திரமாகவும் 9 பகிர்ந்தளிக்கப்பட்ட நட்சத்திரமாகவும் அமையும். இதனை மேலும் சீர் செய்ய, நட்சத்திரத்திற்கு 4 பாதங்கள் வீதம் 108 பாதங்கள் உருவாக்கப்பட்டன. இதைப்பற்றி மேலும் பின்னர் விளக்கப்படும் (Baskaran, *2013*, p.*25*) .

| | | | |
|---|---|---|---|
| | | | |
| | காலச்சக்கரம் | | |
| | | | |
| | | | |

### ஆண் – பெண் ராசிகள்

சோதிடத்தில் பனிரெண்டு ராசிகளையும் ஆண் மற்றும் பெண் ராசி என்று இரு ராசிகளாக உருவாகியுள்ளனர் (Baskaran, *2017*, p.*50*).

| | | | |
|---|---|---|---|
| பெண் | ஆண் | பெண் | ஆண் |
| ஆண் | காலச்சக்கரம் | | பெண் |
| பெண் | | | ஆண் |
| ஆண் | பெண் | ஆண் | பெண் |

### இயக்கங்களை குறித்த ராசிகள்

சோதிடத்தில் சரம், ஸ்திரம், உபயம் என்ற இயக்கங்களை குறித்த ராசிகள் உள்ளன (Baskaran, *2017*, p.*55*).

| | | | |
|---|---|---|---|
| உபயம் | சரம் | ஸ்திரம் | உபயம் |
| ஸ்திரம் | காலச்சக்கரம் | | சரம் |
| சரம் | | | ஸ்திரம் |
| உபயம் | ஸ்திரம் | சரம் | உபயம் |

### உயிர்பற்றுபொருளப்பற்று என்ற ராசிகள்

சோதிடத்தில் பன்னிரெண்டு ராசிகளையும் உயிர்பற்று (லக்னம் சார்ந்தது) மற்றும் புறம் பொருளப்பற்று (லக்னம் சாராதது) ராசி என்று இருராசிகளாக உருவாகியுள்ளனர (Baskaran, *2010*, p.*48*).

### ஐந்திணை

சோதிடத்தின் பஞ்ச பூத தத்துவமான நெருப்பு நிலம் காற்று நீர் ஆகாயம்

| | | | |
|---|---|---|---|
| பொருளப்பற்று புறம் | உயிர்பற்று அகம் | பொருளப்பற்று புறம் | பொருளப்பற்று புறம் |
| உயிர்பற்று அகம் | காலச்சக்கரம் | | பொருளப்பற்று புறம் |
| பொருளப்பற்று புறம் | | | உயிர்பற்று அகம் |
| உயிர்பற்று அகம் | பொருளப்பற்று புறம் | உயிர்பற்று அகம் | பொருளப்பற்று புறம் |

*(நட்சத்திரம்) என்பதே ராசி மனம் உருவாக இருந்த அடிப்படை காரணமாகும் (*Baskaran, *2017,* p.*60).*

### லக்னம்

சோதிடம் என்பது வெளிச்சம் (சூரியன்) விழும் இடம். இதையே சோதிடத்தில் லக்னம் என்கிறோம். சோதிடத்தில் ஒருவரின் விதியை தீர்மானிப்பது லக்கினமே (Baskaran, *2013,* p.*23).*

| | | | |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | ல<br>லக்னம் | | |

*மூலம்:* <http://www.baskaraastrology.co.in/>, http://www.scientificastrologyexpert.com/tamil.. html

### பருவ காரகங்கள்




| |
|---|
| ஒரு உயிரை உருவாக்கும் தன்மையை கொண்டதால் குரு என்ற கோள் குழந்தை பருவத்தை குறிக்கிறது. |
| புதன் என்ற கோள், இளமை மற்றும் பள்ளி பருவத்தை குறிக்கிறது. |
| செவ்வாய் (ஆண் ), சுக்கிரன் (பெண்) பதின் மற்றும் திருமண பருவத்தை குறிக்கிறது. |
| சூரியனும் சந்திரனும், தந்தை மற்றும் தாயின் பருவத்தை குறிக்கிறது. |
| ராகுவும் கேதுவும், தாத்தா பாட்டி பருவத்தை குறிக்கிறது. |
| சனி வயோதிகத்தை குறிக்கிறது. (Baskaran,*2017*,p.*87)* |

### தமிழ் சோதிடம் – ஒப்புமை

சோதிடத்தின் அடிப்படை காலச்சக்கரம் / ராசிமானம். இந்த ராசிமானத்தின் அடிப்படை 12 ராசிகள். அதுபோன்று தமிழின் அடிப்படை:

*12 உயிர் எழுத்துக்கள்.*

| | | | |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | காலச்சக்கரம் | | |
| | | | |

| | | | |
|---|---|---|---|
| ஔ | அ | ஆ | இ |
| ஓ | | | ஈ |
| ஒ | காலச்சக்கரம் | | உ |
| ஐ | ஏ | எ | ஊ |

*மூலம்:* https://en.wikipedia.org/wiki/Tamil_grammar

### ஆண் பெண் ராசிகள் – குறில் நெடில்

சோதிடத்தில் ஆண் பெண் ராசியைப்போல், தமிழ் மொழியில் குறில் நெடில் என்ற இந்த தன்மையே உயிர் எழுத்துக்கள் உருவாக அடிப்படையாக உள்ளது.

| | | | |
|---|---|---|---|
| பெண் | ஆண் | பெண் | ஆண் |
| ஆண் | காலச்சக்கரம் | | பெண் |
| பெண் | | | ஆண் |
| ஆண் | பெண் | ஆண் | பெண் |

| | | | |
|---|---|---|---|
| நெடில் | குறில் | நெடில் | குறில் |
| குறில் | | | நெடில் |
| நெடில் | காலச்சக்கரம் | | குறில் |
| குறில் | நெடில் | குறில் | நெடில் |

*மூலம்:* <https://en.wikipedia.org/wiki/Tamil_grammar>

### தனி நிலை எழுத்து – ஃ – வல்லினம் மெல்லினம் இடையினம்

சோதிடத்தில் சரம், ஸ்திரம், உபயம் என்ற இயக்கத்தை போல், தமிழ் மொழியில் வல்லினம், மெல்லினம், இடையினம் என்ற இந்த தன்மையே மெய் எழுத்துக்களின் வகைகளைக் குறிக்கிறது.

| | | | |
|---|---|---|---|
| உபயம் | சரம் | ஸ்திரம் | உபயம் |
| ஸ்திரம் | காலச்சக்கரம் | | சரம் |
| சரம் | | | ஸ்திரம் |
| உபயம் | ஸ்திரம் | சரம் | உபயம் |

| | | | |
|---|---|---|---|
| இடையினம் உயிர்மெய் | வல்லினம் உயிர் | மெல்லினம் மெய் | இடையினம் உயிர்மெய் |
| மெல்லினம் மெய் | காலச்சக்கரம் | | வல்லினம் உயிர் |
| வல்லினம் உயிர் | | | மெல்லினம் மெய் |
| இடையினம் உயிர்மெய் | மெல்லினம் மெய் | வல்லினம் உயிர் | இடையினம் உயிர்மெய் |

*மூலம்:* https://en.wikipedia.org/wiki/Tamil_grammar

### ஐந்திணை

*தமிழர்களின் ஐந்திணையே, சோதிடத்தின் பஞ்ச பூத தத்துவம். குறிஞ்சி முல்லை மருதம் நெய்தல் பாலை என்பதே நெருப்பு நிலம் காற்று நீர் ஆகாயம் (நட்சத்திரம்) என்ற தன்மையை உணர்த்துகிறது (*Baskaran*, 2017,* p.*60).*

| | | | |
|---|---|---|---|
| நீர் | நெருப்பு | நிலம் | காற்று |
| காற்று | காலச்சக்கரம் | | நீர் |
| நிலம் | | | நெருப்பு |
| நெருப்பு | நீர் | காற்று | நிலம் |

### எழுத்துக்களின் எண்ணிக்கை

*12 ராசி என்ற நிலையிலிருந்து இன்று சோதிடம் 249 உப நட்சத்திரம் என்ற பரந்த நிலையை, விம்சோத்ரி திசாபுத்தி அடிப்படையில் அடைந்துள்ளது. அதாவது 27 நட்சத்திரத்தை மேலும் 9 பகுதியாக பிரிக்கும் போது அவை 243 உப நட்சத்திரமாக கிடைக்கும். இதில் இரண்டு உப நட்சத்திரம் 3 ராசிகளில் பகிர்ந்தளிக்கும் படி அமையும்.*

*அதேபோல், தமிழில் 12 உயிர் எழுத்துக்கள், 18 மெய் எழுத்துக்கள், 216 உயிர் மெய் எழுத்துக்கள் , 1 ஆய்த எழுத்து என்று 247 எழுத்துக்கள் உள்ளன. இவை வரி வடிவம் தாங்கிய எழுத்துக்கள். மேலும் ஒலி வடிவம் தாங்கி குற்றியலிகரம், குற்றியலுகரம் என்ற ஒலி அசைவுகளின் தன்மையோடு (உப நட்சத்திரத்தை 6 ராசிகளில் பகிர்ந்தளித்தது போல்) மொத்தம் 249 ஒலிகள் உள்ளன (*Victor*, 2012,* p.*107).*

*12 ராசி என்ற தன்மையிலிருந்து 249 உப நட்சத்திரம் என்ற தன்மையைப்போல், 12 உயிர் எழுத்திலிருந்து 249 ஒலிகளின் தன்மை என்பது சோதிடம் தன்னிறைவை அடைந்ததே என்று கூறலாம் (*Baskaran*, 2017,* p.*17). இவ்வாறு எழுத்துக்களின் எண்ணிக்கை அதிகமாக உள்ளதால் தான் தமிழில் ஒரு வார்த்தையை அதே ஒலியோடு ஒலிக்க முடிகிறது உதாரணம். தமிழ் என்ற வார்த்தையே.*

*சோதிடத்தில் 249 உப நட்சத்திரம் இருந்தால் தான் துல்லியமான பலனை சொல்ல முடியும் என்பதை இயற்கை சுட்டிக்காட்டுகிறது. தமிழும் சோதிடமும் இயற்கையை தழுவியது என்பதை இங்கு கவனிக்கவும். சோதிடத்தில் எல்லாவற்றிற்குமான விடையை நாம் காலச்சக்கரத்திலிருந்து எடுக்கிறோம் என்பதை உணர்த்தும் வகையிலே "எல்லா சொற்களும் பொருள் குறித்தனவே" (தொல்காப்பியம், சொல் 640) என்று தொல்காப்பியம் பறைச்சாற்றுகிறது (*Victor*, 2012,* p.*236).*

### லக்னம்

*சோதிடம் என்பது வெளிச்சம் (சூரியன்) விழும் இடம். இதையே சோதிடத்தில் லக்னம் என்கிறோம். சோதிடத்தில் ஒருவரின் விதியை தீர்மானிப்பது லக்கினமே. அதேபோல் ஒரு எழுத்தாயினும், பல எழுத்துக்கள் சேர்ந்து ஒரு சொல்லாயினும், பல சொற்கள் சேர்ந்து பொருள் தரும் ஒரு சொற்றடர் ஆயினும், பல சொற்கள் சேர்ந்து ஒரு செய்யுள் ஆயினும், செய்யுளின் தொகுப்பாக அணி ஆயினும், இந்த அனைத்து நிலைகளில் தேர்ச்சி பெற்று புலமை என்ற ஒவ்வொரு நிலையில், சோதிடத்தில் ஒருவரின் தலை எழுத்தை லக்கினம் தீர்மானிப்போதுபோல் தமிழில் விதிகளைத் தீர்மானிப்பது இலக்கணமே*

(Baskaran, *2002*, p.*42*). இந்த லக்கினமும் இலக்கணமும், ஒன்று தான்.

சோதிடத்தில் பருவ காரகங்கள் மனிதனின் ஒவ்வொரு படிநிலையை கூறுகிறது. அதே போல் தமிழ் இலக்கணமும் இந்த படி நிலையை அப்படியே எடுத்துரைக்கிறது.

| | | | |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | ல<br>லக்னம்<br>இலக்கணம் | | |

மூலம்: https://ta.wikipedia.org/wiki/தமிழ்_இலக்கணம்

**பருவ காரகங்கள்**




சோதிடத்தில் ஒவ்வொரு பருவ நிலையை அடைவதுபோல் எழுத்து என்ற அளவிலிருந்து, புலமை என்ற அளவிற்கு 6 படிநிலை இலக்கணத்தைக் கொண்டுள்ளது தமிழ் மொழி.

| | |
|---|---|
| குழந்தை பருவத்தை குறிக்கிறது. | எழுத்து |
| இளமை மற்றும் பள்ளி பருவத்தை குறிக்கிறது. | பொருள் |
| பதின் மற்றும் திருமண பருவத்தை குறிக்கிறது. | சொல் |
| தந்தை மற்றும் தாயின் பருவத்தை குறிக்கிறது. | யாப்பு (செய்யுள்) |
| தாத்தா பாட்டி பருவத்தை குறிக்கிறது. | அணி |
| வயோதிகத்தை குறிக்கிறது. | புலமை |

(Baskaran,*2013*,p.*178*)

மூலம்: https://ta.wikipedia.org/wiki/அறுவகை_இலக்கணம்

**ஆண் பெண் ராசிகள் அகம் (லக்னம்சார்ந்தது), புறம் (லக்னம்சாராதது)**

சோதிடத்தில் ஆண் பெண் ராசியைப்போல், தமிழ் மொழியில் அகம் புறம் என்ற லக்னம் சார்ந்ததும், லக்னம் சாராததுமான இலக்கியங்களை (உதாரணம்: அகநானூறு புறநானூறு) கொண்டுள்ளது


| | | | |
|---|---|---|---|
| பெண் | ஆண் | பெண் | ஆண் |
| ஆண் | காலச்சக்கரம் | | பெண் |
| பெண் | | | ஆண் |
| ஆண் | பெண் | ஆண் | பெண் |

| | | | |
|---|---|---|---|
| புறம் | அகம் | புறம் | அகம் |
| அகம் | காலச்சக்கரம் | | புறம் |
| புறம் | | | அகம் |
| அகம் | புறம் | அகம் | புறம் |

மூலம்: https://ta.wikipedia.org/wiki/பொருள்_இலக்கணம்

### தமிழர்களின் வாழ்வியல்

தமிழர்கள் தங்களது வாழ்வை இயற்கையை ஒட்டியே அமைத்துக் கொண்டனர். தமிழர்கள் முழு நிலவு நாளையே, மாதத்தின் முதல் நாளாக கொண்டிருந்தனர். அதனாலேயே சித்திரை நட்சத்திரத்தில் சந்திரன் வரும் முழு நிலவு நாளை சித்திரை மாதம் என்று மேஷத்தில் (சூரியன் மேஷத்தில் இருக்கும் போது) எடுத்து கொண்டான். இவ்வாறாகவே தமிழ் மாதங்கள் உருவாகின. அதற்கு அவர்களின் சோதிட அறிவே காரணம்.




| மாதம் | தேதி | சிறப்பு |
|---|---|---|
| சித்திரை | 14 April - 13 May | முழு நிலவு நாள்: சித்திரை. சித்திரை திருவிழா, சித்ரா பவுர்ணமி, வருட பிறப்பு |
| வைகாசி | 14 May - 14 June | முழு நிலவு நாள் : விசாகம். வைகாசி விசாகம் |
| ஆனி | 15 June - 15 July | முழு நிலவு நாள் : அனுஷம். ஆணி திருமஞ்சம் ஆணி உத்திரம் |
| ஆடி | 16 July - 16 August | முழு நிலவு நாள் : உத்திராடம். ஆடி வெள்ளி, ஆடி அமாவாசை. ஆடி பட்டம் தேடி விதை |
| ஆவணி | 17 August - 16 September | முழு நிலவு நாள் : அவிட்டம். ஆவணி அவிட்டம் விநாயகர் சதுர்த்தி |
| புரட்டாசி | 17 September - 16 October | முழு நிலவு நாள் : உத்திரட்டாதி. ஆயுத பூசை |

| | | |
|---|---|---|
| ஐப்பசி | 17 October - 15 November | முழு நிலவு நாள் : அஸ்வினி. ஐப்பசி மழை ஐப்பசி வெள்ளி தீபஒளி திருநாள் |
| கார்த்திகை | 16 November - 15 December | முழு நிலவு நாள் : கார்த்திகை. திரு கார்த்திகை கார்த்திகை பௌர்ணமி |
| மார்கழி | 16 December - 13 January | முழு நிலவு நாள் : மிருகசீரிடம். ஆருட தரிசனம் |
| தை | 14 January - 12 February | முழு நிலவு நாள் : பூசம். தை பூசம் |
| மாசி | 13 February - 13 March | முழு நிலவு நாள் : மகம். சிவராத்திரி |
| பங்குனி | 14 March - 13 April | முழு நிலவு நாள் : உத்திரம். பங்குனி உத்திரம் |

மூலம்:https://en.wikipedia.org/wiki/Tamil_calendar / Baskaran. 2017,p.46 / Victor, 2012,p.141

## முடிவுரை

மேற்கூறிய கருத்துக்கள் மூலம், தமிழர்கள் ஒவ்வொரு மாதத்திலும், ஒரு வரலாற்று புதையலை வைத்துள்ளனர் என்பதை அறியலாம். இயற்கையை தழுவிய தமிழர்களின் வாழ்வு, நம் தட்ப வெப்ப நிலை, வேளாண் பற்றிய அறிவு, அது சார்ந்த பண்டிகைகள் அனைத்தும் தமிழர்களே இந்த சோதிட கலையை உருவாக்கினர் என்பதற்கு சான்று. மேலும் இயற்கையை ஒட்டி அமையும் எந்த ஒரு கலையும் ஒத்த அமைப்பை கொண்டிருக்கும் என்றும், வெவ்வேறு காலகட்டத்தில் அவை பரிணமித்து காலக்கண்ணாடி போல் செயல்படும் என்பதும் திண்ணம். இதற்கு இயற்கையாய் உருவான தமிழ் மொழி எப்படி இயற்கையின் தன்மையை கூறும் சோதிடத்தோடு தொடர்பு கொண்டுள்ளது என காண்க (Victor,*2012*,p.*101*). மேலும் தமிழ் என்ற மொழி எப்படி சூசகமாக, உப நட்சத்திரம் கொண்டே நாம் சோதிடத்தில் நிறைவு நிலை அடைய முடியும் என்று கூறுவதையும் காண்க.

இயற்கை=தமிழ்=சோதிடம். தமிழ் என்ற சொல் அமிழ்து என்ற சொல்லிலிருந்து உருவானது (Victor, *2012*, p.*93*). அமிழ்து உண்டவனுக்கு மரணம் இல்லை என்பதால். (புவி உள்ள அளவும் தமிழ் இருக்கும் என்பதைவிட) தமிழ் உள்ள அளவும் இந்த புவி இருக்கும் என நம்மை பெருமிதம் கொள்ள செய்வது இந்த "தமிழும் சோதிடமும்". தமிழிற்கும், இயற்கைக்கும், பாஸ்கரா சோதிடத்திற்கும் உள்ள மேலும் பல வியக்கத்தக்க தொடர்புகளோடு மீண்டும் இன்னொரு கட்டுரையில் சந்திப்போம்.

## References

Aruvagai Ilakkanam. (2011). In Wikipedia. Retrieved from https://ta.wikipedia.org/wiki/அறுவகை_இலக்கணம்

Baskaran, K. (2013a). *The Secrets of Baskara Astrology Part 1.* Madurai: Thilak Astro Books.

Baskaran, K. (2013b). *The Secrets of Baskara Astrology Part 2.* Madurai: Thilak Astro Books.

Baskaran, K. (2017a). *Baskara Jodhida Varud*amalar. Madurai: Thilak Astro Books.

Baskaran, K. (2017b). *Baskara Naveena Natchathira Jodhidam.* Madurai: Thilak Astro Books.

Baskaran, K. (2017c). *Panchangam Baskara Jodhida Varuda malar.* Madurai: Thilak Astro Books.

Baskaran,K. (2005). *Astrologics of Kaalchakra*. Madurai: Mother Meera Publication.

Baskaran,K. (2010). *Baskara Jodhida Ragasiyam.* Madurai: Thilak Astro Books.

Porul Ilakkanam. (2019). In Wikipedia. Retrieved from https://ta.wikipedia.org/wiki/பொருள்_இலக்கணம்

Tamil Grammar. (2019) In Wikipedia. Retrieved from https://en.wikipedia.org/wiki/Tamil_grammar

Victor, Ma. So. (2012). *Kumarikkandam*. Ariyalur: Yaathisai Pathipagam.

Victor, Ma. So. (2012). *Seyyan.* Ariyalur: Yaathisai Pathipagam.

Victor, Ma. So. (2018). *Ulagin Muthal Semmoli, Tamilil.* Ariyalur: Yaathisai Pathipagam.

# டாக்டர் மகாதிரின் அரசியல் தலைமைத்துவத்தில் 'அமைச்சியல்'
# 'Amaicciyal' in Dr.Mahathir Mohammed's Political Leadership

பிரேமநந்தினி தேமுடு / Premananthini Dhemudu[1]
முனைவர் மோகனதாஸ் இராமசாமி / Dr.Mohana Dass Ramasamy[2]

### *Abstract*

Political leaders possess different styles of administration. Every style has certain characteristics. This research paper focuses on the political leadership characteristics portrayed by the World famous Malaysian Prime Minister Dr. Mahathir Mohammed as in *Thirukkural* under the chapter of 'Amaicciyal' (*Political leadership*). Thirukkural being one of the oldest works in Tamil Literature deals with everyday virtues of an individual in all aspects. Thus an in- depth focus into the 'Amaiciyal' and the current leader will help to prove that this scripture which is being old in nature but the messages emerged are still relevant, applicable and timely. As a conclusion this article tries to establish with relevant examples the immense contribution of Thirukkural to the world of political leadership.

Date of submission: 2019-04-08
Date of acceptance: 2019-06-10
Date of Publication: 2019-07-30
Corresponding author's
Name: Premananthini Dhemudu
Email:prishana19@yahoo.com

**Key Words:** Political leadership, *Thirukkural, Amaicciyal,* leadership characteristics, Dr.Mahathir

### முன்னுரை

*2018ஆம் ஆண்டு மே மாதம் 9ஆம் தேதி, மலேசிய அரசியலின் வரலாறுகாணா மாற்றம் நிகழ்ந்த நாள் "புதிய மலேசியாவின்" விடியல்; 62 ஆண்டுகளுக்கும் மேலாக அரசாங்கத்தை தன் பிடியில் வைத்திருந்த ஆளும் கட்சியின் இறப்பு. மலேசிய அரசியலில் விஸ்வரூபம் எடுத்த இந்த எழுச்சிக்கு வித்திட்டவர் 93 வயதான துன் டாக்டர் மகாதிர் முகமது ஆவார் (*Al Jazeera*, 10* May *2018). தலைமைத்துவம் என்பது இருளைத் தூற்றுவதற்கு பதிலாக ஒரு மெழுகுவர்த்தியை ஏற்றி வைப்பது என்று பொருள்படும் (*Sharma*, ஸி. 2015). எல்லாவிதமான முரண்பாடுகள் இருந்தபோதிலும், சுதந்திரம் பெற்றதிலிருந்து அதிகாரத்தில் இருந்த ஆளும் கட்சியை வீழ்ச்சியடையச் செய்ய மகாதிரின் அரசியல் ஆளுமையே முக்கியக் காரணம் என்பது வெள்ளிடை மலையே (*BBC*, 10* May *2018).*

### ஆய்வு நோக்கம்

*அரசியல் களத்தில் தன் தடத்தை வளுவாகப் பதித்த டாக்டர் மகாதிர் கஷ்டங்களை சகித்துக்கொள்பவராகவும் அனர்த்தங்களின் போது நிதானத்தையும் உறுதியையும் கடைப்பிடிப்பவராகவும் சவால்களுக்கு முன்னால் திடமாக நிற்பவராகவும் தன் கீழுள்ளவர்களது கண்ணியத்தை சம்பாதித்துக் கொண்டவராகவும் உணர்ச்சிகளுக்கு அப்பால் நின்று தீர்க்கமாக நடந்து கொள்ளும் திறனைக்கொண்டவராகவும் இருப்பது இவரின் தலைமைப் பண்புகளின் பட்டியலில் சில எனக் கூறலாம். இவரின் உறுதியும் துணிச்சலும் மக்களின் உள்ளத்திலும் உறுதியை ஏற்படுத்தி மலேசிய அரசியல் மாற்றத்திற்கு பிள்ளையார்சுழி போட வைத்தது மட்டுமல்லாது ஒட்டுமொத்த அரசியல் உலகையே மலேசியாவின்*

[1] The author is a PhD research scholar in the Department of Indian studies, University Malaya, Kuala Lumpur, Malaysia. prishana19@yahoo.com

[2] The co-author is a senior lecturer in the department of Indian Studies, University Malaya, Kuala Lumpur, Malaysia. rmdassa@gmail.com

பக்கம் பார்க்க வைத்தது என்று கூறினால் அது மிகையாகாது. டாக்டர் மகாதிரின் அரசியல் ஆளுமையை திருவள்ளுவரின் 'பொருட்பாலில்' அமைந்துள்ள 'அமைச்சியல்' அதிகாரத்தின் கோணத்திலிருந்து நோக்குகையில் நாம் நிறைய ஒற்றுமைகளைக் காணலாம்.

## ஆய்வுப் பின்புலம்

திருவள்ளுவரின் உலக பொதுமறையான திருக்குறள், உலகப்புகழ் பெற்ற தமிழ் இலக்கியமாகும். இதில் 1330 குறள்கள் பத்து பத்தாக 133 அதிகாரங்களின் கீழ் தொகுக்கப் பெற்றுள்ளன. திருக்குறள் சங்க இலக்கிய வகைப்பாட்டில் பதினெண்கீழ்க்கணக்கு எனப்படும் பதினெட்டு நூல்களின் திரட்டில் இருக்கிறது. இது அடிப்படையில் ஒரு வாழ்வியல் நூல். மாந்தர்கள் தம் அகவாழ்விலும் சுமுகமாக கூடி வாழவும், புற வாழ்விலும் இன்பமுடனும் இசைவுடனும் நலமுடனும் வாழவும் தேவையான அடிப்படைப் பண்புகளை விளக்குகிறது. இந்நூல் அறம், பொருள், இன்பம் அல்லது காமம் என்னும் முப்பெரும் பிரிவுகளாய் (முப்பால்) பிரித்தும் அழகுடன் இணைத்தும் கோர்த்தும் விளக்குகிறது. (Varatharajan Mu, 1949)

வாழ்வியலின் எல்லா அங்கங்களையும் திருக்குறள் கூறுவதால், அதைச் சிறப்பித்துப் பல பெயர்களால் அழைப்பர்: திருக்குறள், முப்பால், உத்தரவேதம், தெய்வநூல், பொதுமறை, பொய்யாமொழி, வாயுறை வாழ்த்து, தமிழ் மறை, திருவள்ளுவம் என்ற பெயர்கள் அதற்குரியவை. கருத்துக்களை இன, மொழி, பாலின பேதங்களின்றி காலம் கடந்தும் பொருந்துவது போல் கூறி உள்ளதால் இந்நூல் "உலகப் பொது மறை" என்றும் அழைக்கப்படுகிறது. இப்பொதுமறையில் 'அமைச்சியல்' அதிகாரத்தை ஆராயிந்து, அதில் குறிப்பிடப்பட்டுள்ள அரசியல் தலைவர்களிடம் இருக்க வேண்டிய பண்புகளை நோக்குகையில், அவை அனைத்தும் டாக்டர் மகாதிரிடம் பிரதிபளிப்பது அரசியலுக்கு அவர் ஒரு கலங்கரை விளக்கம் என்பதை உள்ளங்கை நெல்லிக்கனியென மெய்பிக்கிறது.

## ஆய்வு நெறி

இந்த ஆய்வுக் கட்டுரை தரப்பகுப்பாய்வு (qualitative) நெறியைப் பின்பற்றி மேற்கொள்ளப் பட்டுள்ள நூலக ஆராய்ச்சியாகும் . பொதுவில் இலக்கியங்களில் வெளிப்படும் கூறுகளை ஆய்வு செய்வதற்கு இந்த தரப்பகுப்பாய்வு நூலக ஆராய்ச்சி நெறி பயன்படுத்தப்படுகிறது (Sabitha Merican, 2005).

## அமைச்சியல் அதிகாரம்

திருவள்ளுவர் மூன்று காலம் உணர்ந்த ஞானி. அவரால் எழுதப்பட்ட குறள்கள் ஒவ்வொன்றும் அனுபவத்தின் சொத்து. பொருட்பாலில் 'அமைச்சியல்' அதிகாரதில் வள்ளுவர் ஒரு அரசியல் தலைவன் எப்படிப் பட்ட பண்புகளையும் திறமைகளையும் கொண்டிருக்க வேண்டும் என்பதை தெள்ளத் தெளிவாகக் கூறியுள்ளார். எந்த அளவுக்கு டாக்டர் மகாதிர் ஒரு அரசியல் தலைவராக வள்ளுவர் கூறிய இப்பண்புகளை வெளிப்படுத்தியுள்ளார் என்பதின் சிறு ஆய்வு இது. திருக்குறள் என்ற பரந்த சமுத்திரன்தின் சிறு துளிளை மட்டும் இங்கு பகிர்ந்துக்கொண்டுள்ளேன்.

## பொருத்தமான நேரத்தில் பொருத்தமான தீர்மானத்தை எடுத்தல்

பொருத்தமான நேரத்தில் பொருத்தமான தீர்மானத்தை எடுப்பதும் வெற்றிகரமான தலைமைத்துவத்தின் பண்பாகும். டாக்டர் மகாதிர் அழிவை நோக்கிச் சென்றுக் கொண்டிருந்த மலேசியாவின் அரசியல் தலைவிதியை மாற்றும் விடயம் தொடர்பான தீர்மானம் மேற்கொள்ளப்படுவதற்கு முன்னர் பல்வேறு கோணங்களிளும் அதனை நோக்கி அதன் அனைத்து சாதக பாதகங்களையும் அலசி ஆராயந்து மக்களின் சுமையை 100 நாட்களில் குறைக்க 10 தீர்மானங்களைக் கொண்ட தேர்தல் அறிக்கையை முன்வைத்து, அதற்கான காரியத்தில் இறங்கி வெற்றியையும் கண்டார் . தக்க சமயதில் அவர் எடுத்த முடிவு நாட்டின் எதிர்காலம் சின்னா பின்னமாகாமல் காப்பாற்றப்படுவதற்கு வித்திட்டது. வள்ளுவரின் குறளில் பின் வருமாறு கூறியுள்ளார்.

*'கருவியும் காலமும் செய்கையும் செய்யும்*

*அருவினையும் மாண்டது அமைச்சு'*
*(குறள்: 631)*

ஒரு சிறந்த அரசியல் தலைவன் செயலுக்கு உரிய கருவியும், ஏற்றக் காலமும், செய்யும் வகையும் செய்யப்படும் அறியச் செயலும் சிறப்படையச் செய்ய வல்லவன் என்பது இக்குறளின் பொருள் என்று மு.வரததாசனார் கூறுகிறார் (Varatharajan M, 1949). டாக்டர் மகாதிரும் தக்க காலத்தில் அதாவது மலேசியாவின் 14ம் பொதுத் தேர்தலுக்கு முன் நஜிப் துன் ரசாக்கின் ஊழல் அரசங்கதினை முடிவுக்குக் கொண்டு வர சரியான முடிவெடுத்து ஆளுங் கட்சியான தேசிய முன்னனியிலிருந்து (Barisan Nasional) வெளியாகி மலேசிய மக்கள் ஐக்கிய கட்சி (Parti Peribumi Bersatu Malaysia, PPBM) என்ற எதிர் கட்சியை உருவாக்கி, இதர எதிர் கட்சிகளை தன் கருவிகளாகப் பயன்படுத்தி அக்கட்சிகளுடன் 'பாகாத்தான் ஹாராப்பான்' என்ற கூட்டணியமைத்து ஆட்சியைக் கைப் பற்றினார் (News Straights Times, 13 Dec 2016).

### பிரித்தல், காத்தல், சேர்த்தல் எனும் அரசியல் சூட்சமம் அறிதல்

அரசியல் சூட்சம் தெரிந்த ஒருவரால் தான் நல்ல உறுதியான அரசியல் தலைவனாக முடியும். இத்திறமை இல்லாத் தலைமை காலத்தால் கரைந்துவிடும் செயற்கை தலைமைகள் மட்டுமே. தேவையற்றதை விலக்குவதும், தேவையானதை ஏற்பதும், பிரிந்துப் போனவர்களை பொருத்தலும் என்ற வல்லமையுடன் செயல்படுவதே ஒரு அரசியல் தலைவரின் திறன். இதை தான் வள்ளுவர் பின்வரும் குறளில் கூறியுள்ளார்:

*'பிரித்தலும் பேணிக் கொளலும் பிரிந்தார்ப்*

*பொருத்தலும் வல்ல தமைச்சு'*

*(குறள்: 633)*

நாட்டிற்கு நெருக்கடி வரும்போது பகையானவரைப் பிரித்தல், தம்முடன் இருப்பவரைக் கொடையாலும் இன்சொல்லாலும் பிரியாமல் காத்தல், தேவைப்பட்டால் முன்னே நம்முடன் இருந்து பிரிந்தவரைச் சேர்த்துக் கொள்ளுதல் என்னும் இவற்றில் வல்லவரே அமைச்சர் என்று சாலமன் பாப்பையா அவர்கள் இக்குறளுக்கு விளக்கம் கூறியுள்ளார் (Soloman, 2014) .

இக்குறளில் கூறியுள்ளது போல டாக்டர் மகாதிர், மலேசிய நாட்டிற்கு 2015ம் ஆண்டு அரசியல் நெருக்கடி ஏற்பட்ட பொழுது, தேசிய முன்னனியிலிருந்து வெளியாகி, மகாதிரின் கொள்கைபால் நம்பிக்கைக் கோண்டவரை பி.பி.பி.எம் (றிறிஙிவி) என்ற கட்சியைத் தொடங்கி தன்னுடன் சேர்த்துக் கொண்டு, பிரிந்திருந்த ஜனநாயக செயல் கட்சி, மக்கள் நீதிக் கட்சி மற்றும் இதர சில கட்சிகளுடன் கூட்டணியமைத்து ஆட்சியைக் கைப்பற்றினார் (Channel News Asia, 3 Oct 2015). டாக்டர் மகாதிரின் படிப்படியான இச்செயல்கள் வள்ளுவரின் குறளைப் படித்தோ இவர் செயல்பட்டது என எண்ணத் தோன்றுகிறது.

### வாசித்தலும் அறிவு தேடலும்

ஒரு நல்ல அரசியல் தலைவர் அறிவுத்தேடலை விரும்புபவராகவும் நிறைய வாசிப்பவராகவும் இருப்பது சிறந்த மற்றொரு பண்பெனலாம். பத்திரிகைகள், சஞ்சிகைகள், அறிக்கைகள் முதலியவற்றை வாசிப்பதனூடாக தலைவர் தன்னைச்சுற்றி நிகழ்பவற்றை ஆழ்ந்து புரிந்துகொள்ள இப்பண்பு உதவுவதுமட்டுமன்றி அடுத்தவர்களின் மரியாதையை அவர் சமபாதித்துக்கொள்ளவும் காரணமாக அமைகிறது. இதன்மூலம் பொருத்தமான தீர்மானத்தை எடுப்பதற்கு அல்லது உரிய சந்தர்ப்பம் நழுவி தீர்மானம் எடுக்காமலிருப்பதைத் தவிர்க்கவும் உதவுகிறது. இதை வள்ளுவர் பின்வருமாரு கூறுகிறார்.

*'மதினுட்பம் நூலோடு உடையார்க்கு அதினுட்பம்*

*யாவுள முன்நிற் பவை'* *(குறள்: 636)*

மேலுள்ள குறள், நுட்பமான அறிவுடன், நூலின் அறிவும் உள்ளவருக்கு மேலான அறிவு என்று எதுவும் முன் நிற்க முடியாது என்று பொருள்படுகிறது (Varatharajan, 1949). முன்னேற்றத்திற்கு அடிப்படையே வாசிப்புதான் என்பது டாக்டர் மகாதிரின் அசைக்க முடியாத நம்பிக்கை. வாசித்தலைத் தன் அன்றாட வாழ்க்கையின் ஒரு முக்கிய அம்சமாகக் கொண்டிருக்கும் இவர் அரசியல் மற்றும் மருத்துவத்தைத் தவிர்த்து தொழில்நுட்பம், பொருளாதாரம், சுற்றுலா போன்ற துறைகளிலும் அதீத அறிவு கொண்டவராக இருப்பதற்கும் வாசிப்பே காரணம் என்று கூறினால் அது மிகையாகாது.

1997/98யில் ஆசியப் பொருளாதார நெருக்கடியின் போது, மலேசியாவின் பொருளாதாரத்தை உயிர்வாழச் செய்ய உலக வங்கியால் பரிந்துரைக்கப்பட்டபோதும், சர்வதேச நாணய நிதியத்திடம் இருந்து கடன் வாங்குவதைத் தவிர்க்கும்படி வலியுறுத்தினார் மகாதிர். நீண்டகாலமாக பொருளாதார மற்றும் நிதி நிர்வாகத்தின் வாசிப்பு அறிவொளியால் தவறான தீர்மானத்தை எடுக்கும் அபாயத்திலிருந்து மலேசியாவைத் தடுத்து நிறுத்தி, அப்பொருளாதார நெருக்கடியிலிருந்து மலேசியாவை தன் தனி வழியில் மீட்டெடுத்து உலகமே புகழும் வண்ணம் வெற்றி கண்டார் மகாதிர் (Okposin, 2000). புத்தக வாசிப்பின் அறிவை மட்டும் சார்ந்து இருக்காமல், அவ்வறிவை சூழ்நிலைக்கேற்ப நடைமுறைக்கும் சரியாக அமையும் வகையில் செயல்படுத்துவதில் அவருக்கு அவரே நிகர் என்பதையும் டாக்டர் மகாதிர் நிரூபித்து இருக்கிறார். இதைத்தான் வள்ளுவரும் இப்படி கூறுகிறார்.

*‘செயற்கை அறிந்தக் கடைத்தும் உலகத்து*

*இயற்கை அறிந்து செயல்’ (குறள்: 637)*

நூலறிவால் செயலைச் செய்யும் வகைகளைச் அறிந்த போதிலும் உலகத்தின் இயற்கையை அறிந்து அதனோடு பொருந்துமாறு செய்யவேண்டும் என்பது இக்குறளின் மு.வரதராசன் விளக்கம் (Varatharajan, 1949). பல்வேறு மொழி நாட்டு நூல்களின் வழி, புதிய செயல் திறங்களை அறிந்திருந்தாலும், தன் நாட்டின் இயற்கை மக்கள் இயல்பு ஆகியவற்றை அறிந்து அவற்றிற்கு ஏற்ப செயல்படுத்தி வெற்றிகண்டவர் இன்னும் வெற்றிகண்டுக் கொண்டிருப்பவர், மேலும் மேலும் வெற்றியைக் காணப்போகின்ற மலேசிய மார்கண்டேயன் டாக்டர் மகாதிர்.

## முடிவுரை

வையத்துள் வாழ்வாங்கு வாழ நன்னெறிகளை வகுத்தளித்துள்ள திருக்குறள் ஏறக்குறைய 2000 ஆண்டு பழமையானது என்று கணிக்கப்படுகிறது. திருக்குறளை இயற்றிய திருவள்ளுவர் கி.மு. 2ம் நூற்றாண்டுக்கும் கி.பி 5ம் நூற்றாண்டுக்கும் இடையில் வாழ்ந்தவராகக் கருதப்படுகிறார் எனினும் அவர் அன்று எழுதிச் சென்ற கருத்துத் துளிகள் முத்துத் துளிகளாக இன்றைய வாழ்வுக்கும் நடைமுறைக்கும் கூட மிக பொருந்திய வண்ணம் இருப்பது வியப்பே. தமிழர்களாகிய நாம் உலகப் பொதுமறையாக விளங்கக்கூடிய திருக்குறளை நன்கு கற்பதோடு ஓதி உணர்ந்து பிறர்க்கு உரைத்து உலகமெங்கும் பரப்பி உலக மாந்தர் அனைவரும் பயனுறப் பாடுபட வேண்டும்.

## References

Goh, M. (2015, September 22). Malaysia’s opposition band together under new Pakatan Harapan alliance. *Channel NewsAsia*. Retrieved 3 October 2015.

Hana Naz Harun. (2016, December 13). PPBM officially signs agreement to join Pakatan Harapan. *New Straits Times*. Retrieved 20 February 2019 from https://www.nst.com.my/news/2016/12/196556/ppbm-officially-signs-agreement-join-pakatan-harapan

Malaysia’s Mahathir Mohamad sworn in aftershock comeback victory. (2018, May 10). *BBC News*. Retrieved from https://www.bbc.com/news/world-asia-44063675

Malaysia's opposition pulls off shocking election win. (2018, May 10). *Al Jazeera*. Retrieved from https://www.aljazeera.com/news/2018/05/malaysia-opposition-pulls-shocking-election-win-180509184811723.html

Marican, S. (2005). *Kaedah Penyelidikan Sains Sosial.* Petaling Jaya: Pearson/Prentice Hall.

Okposin, S. B., & Cheng, M. Y. (2000). *Economic Crises in Malaysia: Causes, Implications & Policy Prescription.* London: Asean Academic Press.

Pakatan wins the impossible dream. (2018, May 10). *Free Malaysia Today*. Retrieved from https:// www.freemalaysiatoday.com/category/nation/2018/05/10/pakatan-wins-the-impossible-dream/

Promchertchoo, Pichayada. (2018, May 10). I accept people's verdict': Najib on Malaysian election results. *Channel NewsAsia*, Retrieved 11 August 2018 from https://www.channelnewsasia.com/news/asia/i-accept-people-s-verdict-najib-on-malaysian-election-results-10220254

Sharma, R. (2015) .*The Mastery Manual.* Mumbai: Jaico Publishing House.

Solomon, P. (2014*) .Thirukkural*. Chennai: Kavitha Publications.

*Thirukkural Thiruvalluvar.* (2009, May 7). Retrieved 20 February 2019 from http://www.thirukkural.com/

Varatharasan, Mu. (1949). *Thirukkural Thelivurai.* New Delhi: Sahitya Academy.

Vasudevan, M .(2015). *Thirukkural with Translation and Transliteration* (Kindle edition). New Gen E-Tamil: B014I5ERH4.

# திருலோக்கி
# Thirulokki

முனைவர் ஸ்ரீ அனுராதா / Dr.S. Anuradha[1]

***Abstract***

Thirulokki, Thirulokkimadevi chathurvedimangalam is situated 15 Kms south east of Gangaikondacholapuram and 5 Km north-east of Thugili in Tiruvidaimarudur Taluk of Thanjavur District. This Chathurvedimangalam was created by Parakesari Rajendra Chola I (AD1012 – AD1044) in memory of his mother Lokamadevi, the wife of Rajaraja I. He has constructed Kailasanatha temple and donated gifts to Sundareswarar temple and Sri Rapthi SayanaNarayana Perumal temple in Thirulokki. After Rajendra I's victory (Gangaikondacholan) over Ganges, he brought Ganga water to purify the God and Goddess of Sundareswar temple at Thirulokki. Further, he installed Devasena sametha Subramaniyar and Rishabavakanar comemorating this victory over the Nolambas. These two statues are in Chalukya – Nolamba Art. This paper deals with the importance of the place Thirulokki in religious and historical points of view.

Date of submission: 2019-04-25
Date of acceptance: 2019-05-29
Date of Publication: 2019-07-30
Corresponding author's
Name: Dr.S. Anuradha
Email: sudarsarathy96@gmail.com

**Key Words:** Thirulokki temples, Thirulokkimadevi, Chathurvedimangalam, Rajendra Chola I, Gangetic Valley, Chalukya-Nolamba art.

### ஆய்வு முன்னோடிகள்:

பரகேசரி இராஜேந்திர சோழனின் ஆட்சி ஆண்டில் பொறிக்கப்பட்டு படியெடுக்கப்பட்ட திருலோக்கி கல்வெட்டுகளும், கருவூர் தேவரின் திருவிசைப்பாவும், முதலாம் இராஜேந்திர சோழனின் வீர தீர செயல்கள் பற்றி அறிந்து கொள்ள அவனது மெய்கீர்த்திகளும் திருவாலங்காட்டுச் செப்பேடும் போன்றவை முதல்நிலை ஆதாரங்களாக விளங்குகின்றன. ம.இராசசேகர தங்கமணியின் "முதலாம் இராசேந்திர சோழன்", தி.வை.சதாசிவ பண்டாரத்தாரின், "பிற்கால சோழர் வரலாறு, கே.ஏ.நீலகண்ட சாஸ்திரியின் "சோழர்கள்", தொகுதி 1 மற்றும் 2, மா.சந்திரமூர்த்தியின் "எசாலம் செப்பேடு" இ மா.இராசமாணிக்கனாரின் "சோழர் வரலாறு" "கங்கை கொண்ட இராஜேந்திர சோழன்" அறியனை ஏறிய ஆயிரமாவது விழா கருத்தரங்க கட்டுரை" போன்ற நூல்கள், இரண்டாம் நிலை ஆதாரங்களான கொண்டு இக்கட்டுரை "திருலோக்கி" என்ற தலைப்பில் எழுதப்பட்டுள்ளது.

### திருலோக்கி அமைவிடம்

தமிழகத்தில், சோழ வளநாட்டில், சிவாலயங்கள் காவேரியின் இரு கரையெங்கும் வரலாற்றுச் சிறப்புடன் காணப்படுகிறது. காவிரியின் வடகரையில் ஷஏமநல்லூர்' என்ற பண்டையப் பெயரில் அழைக்கப்பட்டு தற்சமயம் திருலோக்கியாக தஞ்சைமாவட்டத்தில், திருவிடைமருதூர் தாலுக்காவில் துகிலி செல்லும் சாலையில் 5 கி.மீ. வடகிழக்கே அமைந்துள்ளது. மேலும், இவ்வூர் கல்வெட்டுகளில் ராஜேந்திர சிங்க

[1] The author is an Assistant Professor in PG & Research Department of History, Dharmapuram Gnanambigai Government Arts College (W), Mayiladuthurai, Nagapattinam Dist, and TamilNadu, India. sudarsarathy96@gmail.com

வளநாட்டு மண்ணி நாட்டு பிரம்மதேய, திரைலோக்கிய மாதேவி சதுர்வேதி மங்கலம் என்றழைக்கப்படுகிறது. (Annual Report on Epigraphy (A.R.E) 112/1932). இவ்வூர், சூரியனார் கோவில், கஞ்சனூர், திருமங்கலக்குடி, திருமணஞ்சேரி, கொற்கை, மயிலாடுதுறை போன்ற ஊர்களுக்கு அருகே அமைந்துள்ளது.

தல யாத்திரை, திருக்கோயில் தரிசனம், நவக்கிரகத் தலங்கள் தரிசனம் என்ற வகையில் ஆன்மீக சுற்றுலா செல்லும் அன்பர்கள், கோயில் நகரமாம் கும்பகோணத்தை தரிசிக்கும் போது அவர்கள் பட்டியலில் இடம் பெறும் தலம் திருலோக்கி. மயிலாடுதுறை, கும்பகோணம் போன்ற ஊர்களிலிருந்து பேருந்து வசதி இருந்தாலும் துகிலியிலிருந்து 5 கி.மீ ஊருக்குள் செல்ல பேருந்து வசதி குறைவு. ஆட்டோ, மினி பஸ் வசதி உண்டு. இத்திருக்கோயிலுக்கு 2015 ம் வருடம் குடமுழுக்கு நடைபெற்றதால், கோயிலுக்கு வரும் அன்பர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

## தலப்பெயர்கள்

அப்பர் பெருமான் இத்தலத்தை ஈஷஷஎச்சில,; இளமர் ஏமநல்லூர் இலம்பையங்கோட்டூர்'' எனத் தன் சேத்திரக்கோவை திருத்தாண்டகத்தில் குறிப்பிட்டுள்ளார். ஷஏமம்' என்ற சொல்லுக்கு ஷபொன்' என்றொரு அர்த்தமும் உண்டு. நவக்கிரகங்களில் பொன்னவன் என்றழைக்கப்படு;ம் குருபகவான், பிரகஸ்பதி திருலோக்கி சுந்தரேசுவரரை வழிபட்டு அருள் பெற்றதால் இவ்வூருக்கு ஏமநல்லூர் என்ற பெயரும் உண்டாயிற்று.

கங்கை வெற்றிக்குப் பின், கங்கை கொண்டானாகிய முதலாம் இராஜேந்திர சோழன் இவ்வூரை தன் தாய் திருலோக்கிமாதேவி (முதலாம் இராஜராஜனின் மனைவி) யின் நினைவாக திருலோக்கியமாதேவியான சதுர்வேதிமங்கலமாக அமைத்ததை, ஈஷஷஇராஜேந்திர, சிம்ம வளநாட்டு மன்னின் நாட்டு ஏமநல்லூராகிய திரைலோக்கிமாதேவி சதுர்வேதிமங்கலம் என்று சோழர் காலத்தில் அழைக்கப்பட்டதைக் கல்வெட்டுகள் எடுத்துரைக்கின்றன.

முதலாம் இராஜராஜ சோழனுக்கு குருவாக விளங்கிய கருவூர் தேவர், திருலோக்கி சுந்தரேசுவரர; ஆலயத்து இறைவனுக்கு திருவிசைப்பா பாடிய போது அதில், இறைவனை ஷதிரைலோக்கிய சுந்தரம்' என்று அழைத்துள்ளார். தற்சமயம் இவ்வூர் திருலோக்கி என்று அழைக்கப்படுகிறது.

## திருலோக்கியின் கல்வெட்டுச் சிறப்பு

அப்பர் பெருமான் காலத்தில் (பல்லவர் காலம்) ஏமநல்லூர் என்று அழைக்கப்பட்டு, சோழர்கள் காலத்தில் பிரம்மதேய திரைலோக்கிய சதுர்வேதி மங்கலம் என்று அழைக்கப்பட்ட திருலோக்கி, இந்தியக் கல்வெட்டுத் துறையினரால் 1931-32 ஆம் ஆண்டு கல்வெட்டுகள் படியெடுக்கப்பட்டன. எண் 102-112/1931-32 வரையிலான சுமார் 10 கல்வெட்டுகள் முதலாம் இராஜேந்திரன் காலத்திலிருந்து குலோத்துங்க சோழன் காலம் வரை சுந்தரேசுவரர; திருக்கோயிலில் காணப்படுகிறது. குறைவான கல்வெட்டுகள் பிற கோயில்களில் காணப்படுகிறது. அனைத்து கல்வெட்டுகளும் சிதைந்தும், முற்று பெறாமலும் காணப்படுகிறது. கால வெள்ளோட்டத்தில் கட்டுமான பணியில் வரலாற்று ஆதாரங்களின் நிலை கவலைக்குள்ளாக்குகிறது.

கல்வெட்டு துணை கொண்டு திருலோக்கியில் உள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க கோயில்களான சுந்தரேசுவரர; சமேத அகிலாண்டாஸ்வரி திருக்கோயில் முதலாம் இராஜேந்திர சோழனின் கங்கை படையெடுப்பு பற்றிய குறிப்புகள், கங்கை நீரை கொண்டு இவ்வூரை புனிதம் செய்தது, மேலும் வெற்றிச் சின்னங்களான சாளுக்கிய நுளம்ப சிற்பங்களை வைத்ததைப் பார்க்கும் போது, இக்கோயில் முதலாம் இராஜேந்திர சோழன் (கிபி 10121044) க்கு முன் முதலாம் இராஜராஜன் காலத்தில் கட்டப்பட்டிருக்கலாம் என்று தெரிகிறது.

திருலோக்கியில் மற்றொரு கோயிலான கைலாசநாதர் திருக்கோயிலில் உள்ள முதல் கல்வெட்டு குறிப்பு இரண்டாம் ராஜராஜனின்

(கிபி 1051-1063) 8 ஆம் ஆட்சி ஆண்டில் (கி.பி.1059) கருவறையின் மேற்கு மற்றும் வடக்குச் சுவரில் நுந்தா விளக்கு எரிப்பதற்கான தானக் குறிப்புடன் காணப்படுகிறது. A.R.E 109/1932). இக்கோயிலில், சிதைந்த மூன்று கல்வெட்டுகளே படியெடுக்கப்பட்டுள்ள நிலையை வைத்துப் பார்க்கும் போது, இக்கோயில் முதலாம் இராஜேந்திரன் காலத்தில் கங்கை வெற்றியின் நினைவாக கட்டப்பட்டு பின்னாளில், அவரின் புதல்வர்களால் கட்டி முடிக்கப்பட்டதாகக் கருத வாய்ப்புள்ளது.

திருலோக்கியில் மற்றும் உள்ள ஓர் வைணவத் திருக்கோயில் ச‘ிரப்த்தி நாராயணர் திருக்கோயில். இக்கோயில், திரைலோக்கிய சுந்தரம் திருக்கோயிலுக்கு மிக அருகே அமைந்துள்ளது. இக்கோயிலில் உள்ள சிதைந்த மற்றும் முற்று பெறாத கல்வெட்டுகள் வீரராஜேந்திரன் (கிபி 10631070) காலத்தைச் சேர்ந்தது. இத்திருக்கோயிலும் முதலாம் இராஜேந்திரன் காலத்தில் துவங்கப்பட்டு பின் அவரின் புதல்வர்களால் கட்டி முடிக்கப்பட்டதாகக் கொள்ளலாம்.

மூன்று திருக்கோயில்கள் திருலோக்கியில் இருப்பினும், வரலாற்றுச் சிறப்பு மிக்க ‘‘இராஜேந்திர, சோழ தேவர் கங்கை கொண்டு எழுந்தருகின்ற இடத்துத் திருவடி தொழுது’ என்று கல்வெட்டுச் செய்தி (A.R.E 111/1932) முதலாம் இராஜேந்திரனுக்கும், திருலோக்கிக்கும் உள்ள தொடர்பை அறிந்து கொள்ளும் வகையில் அமைந்துள்ளது. மேலும் கங்கை படையெடுப்பின் நினைவாக திருலோக்கி சுந்தரேசுவரர; சமேத அகிலாண்டாஸ்வரி திருக்கோயில் சாளுக்கிய நுளம்ப சிற்பங்கள் வைக்கப்பட்டுள்ளதால், இத்திருக்கோயிலே இவ்வூரில் முதன்மை பெற்று விளங்குகிறது.

### திருலோக்கி கோயில் சிறப்பு

திருலோக்கியில் அருள்மிகு சுந்தரேசுவர சுவாமி திருக்கோயில் கட்டுரை எழுதும் சமயம், கோயில் திருப்பணி நடந்து கொண்டிருந்தது. தற்கால கட்டுமானப் பணியினால், திருக்கோயிலின் பழமை மாறிவிடுகிறது. இராஜகோபுரம் அமைக்கப்பட்டு ஊருக்கு நடுநாயகமாக காட்சி அளிக்கிறது. நுழைவாயிலைத் தொடர்ந்து வௌவால் நந்தி மண்டபம் மராட்டியர் கால பாணியில் கட்டப்பட்டுள்ளது. இம்மண்டபத்தின் தென்புறம் அம்மனுக்கு தனி சன்னதி உள்ளது. இறைவி உமா தேவியார், அகிலாண்டேஸ்வரி என்னும் திருநாமத்தோடு விளங்குகிறார்.

திருக்கோயிலின் அர்த்த மண்டபத்தில், தெற்கு நோக்கி இரதி மன்மதன் சிலை காணப்படுகின்றது. இதன் அற்புத வேலைப்பாடு காண்பவர் மனதைக் கவரும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது. முதலாம் இராஜேந்திர சோழனின் வடநாட்டில், நுளம்ப நாட்டு வெற்றியின் சின்னமாக இத்திருக்கோயிலில் அமைக்கப்பட்டுள்ளது. கோயில் கருவறையில் லிங்கத்திருமேனியாக சுந்தரேஸ்வரர் காட்சி அளிக்கிறார். இத்திருக்கோயில் இறைவனை கருவூர்த்தேவர் அவர்களின் 9ம் திருமுறையில் திருவிசைப்பா இசைத்துத் திருப்பதிகங்கள் பாடியுள்ளார்.

மேலும் கருவறை தென்புற கோ‘;ட்டத்தில் தெட்சிணாமூர்த்தியும், மேற்கோ‘;ட்டத்தில் லிங்கோத்பவரும், வடக்கு கோ‘;ட்டத்தில் துர்க்கை காணப்படுகின்றனர். துர்க்கைக்கு எதிரே சண்டிகேஸ்வரர் சன்னதியும் காணப்படுகிறது. மேற்குப் பிரகாரத்தில், வினாயகர், ஜெயலெட்சுமி, வள்ளி, தெய்வாணை சமேத சுப்ரமணியர் என அடுத்தடுத்து காட்சி அளிக்கின்றனர்.

திருக்கோயிலின் மேற்குப் பிரகாரத்தில், கிழக்கு நோக்கி ரி‘பாருடன் சன்னதி உள்ளது. ரி‘பாருடர், நுளம்ப நாட்டு கலைப்பாணியில் உள்ளது. இத்திருக்கோயிலுக்குப் பெருமை சேர்க்கிறது. ரி‘பாருடருக்கு அருகே, குருபகவான் இருகரம் கூப்பிய நிலையில் வழிபட்டு நிற்பதைக் காணலாம். இத்தலத்தில் குருபகவான் பாவ விமோசனம் பெற்றத்திருத்தலம்.

இத்திருக்கோயில் சுந்தரேச பெருமானை, பிருகு முனிவரும், தேவகுருபானை பிரகஸ்பதியும் வழிபட்டதாகவும் தருமன் என்பாரின் மகன் முங்கைத் தன்மை, இறைவன் திருவளால் நீங்கப் பெற்றதாகவும் புராணங்கள் கூறுகின்றன. இதன் காரணமாக

குருதோ‘ம் உள்ளவர்கள். குருபெயர்ச்சி என்னும் பிரதி வியாழக்கிழமையும் இத்தலத்து ரி‘பாருடருக்கும், குரு பகவானுக்கும் சிறப்பு அர்ச்சனை, ஆராதனை செய்து வழிபட்டு வருகின்றனர். திருச்சுற்றில், கீழ் பிரகாரத்தில், நடராஜர் சிலை, பைரவர்கள், பிட்சாடனர், சூரியன், சந்திரன், சனி பகவான் ஆகியோர் காட்சியளிக்கின்றனர்.

### தீர்த்தங்கள்

இத்தலத்தில், மானதீர்த்தம், இலட்சுமி தீர்த்தம், வருண தீர்த்தம் என மூன்று தீர்த்தங்கள் இருந்ததாகவும், அவற்றில் நீராடி இறைவனை வழிபட்டதில் சுகேது என்பவருக்கு இருந்த நீண்ட நாள் தலைவலி நீங்கப் பெற்றதாக இக்கோயில் தலபுராணம் கூறுகிறது. இன்று, மூன்று தீர்த்தங்களில் இலட்சுமி தீர்த்தம் மட்டுமே திருக்கோயிலின் தென் கிழக்கே உள்ளது.

### ஸ்தலவிருட்சம்

திருலோக்கி, அருள்மிகு சுந்தரேச சமேத அகிலாண்டேஸ்வரி திருக்கோயிலின் ஸ்தலவிருட்சம், சரக்கொன்னை மரம் ஆகும். கோயிலுக்கு அருகே நந்தவனத்தில், மிக அருமையாகப் பராமரிக்கப்பட்டு வருகிறது.

### தலத்தை வழிபட்டோர்

திரைலோக்கிய சுந்தரரை, பிருகு முனிவர், தேவகுருவாகிய பிரகஸ்பதி, சுகேது, இரதிதேவி, கருவு+ர் தேவர், தருமன் ஆகியோர் வழிபட்டு முக்தி அடைந்துள்ளனர்.

### பூஜைகள்

இத்திருக்கோயிலுக்குச் சொந்தமாக 15 ஏக்கர் நிலம் உள்ளது. ஆனால், அதன் வசூல் நிலுவையில் உள்ளது. பொது மக்கள், சமூக ஆர்வலர்கள், வெளியூரிலிருந்து வரும் அன்பர்கள், போன்றோர்களின் உதவியால் கோயிலில் நாள்தோறும் இருகால பூஜைகள் நடைபெறுகின்றன. தமிழ் புத்தாண்டு, தீபாவளி, திருக்கார்த்திகை, தைப்பொங்கல் போன்ற நாட்களில் விசேஷ பூஜைகள் மற்றும் அபிழி‘கங்கள் நடைபெறுகிறது. நவராத்திரி, நித்திய பிரதோ‘ நாயகர் ரி‘பாரூடர்க்கு பிரதோ‘ பூஜை, சனி பிரதோ‘ம் மற்றும் கார்த்திகை அன்று முருகப் பெருமானுக்கு அபிழி‘க ஆராதனைகள் நடக்கின்றது. பூஜைகள், விழாக்கள் போன்றவை பக்தர்களின் நிதி வசூல் மூலமே நடக்கிறது.

### பரிகாரத்தலம்

தடைபட்ட திருமணம், மக்கட் பேறு, கணவன், மனைவி உறவில் பிரச்சனை, குரு ஒரு ஜாதகத்தில் மறைந்திருந்தாலோ, பகை வீட்டில் இருந்தாலோ, இந்த தலத்து இறைவனிடம் வந்து கைதொழுதால் குருவருள் கிட்டும் என்பது அனுபவ உண்மை. ஏனென்றால், குரு பகவானே இத்தலத்து ரி‘பாரூடரைத் தொழுது நிற்கின்றார்.

மேலும் இத்தலம், ரதி மன்மதனைத் திரும்பப் பெற்ற இடம் என புராணம் கூறுகின்றது. சிவபெருமான், தன் நெற்றிக் கண்ணால் மன்மதனை எரித்து சாம்பலாக்கியதைக் கண்ட ரதிதேவி ஈசனிடம் தன் கணவனுக்கு உயிர் பிச்சை அளிக்கும்படி வேண்டினாள். அதன் காரணமாக, திரைலோக்கிய சுந்தரப் ஸீருமானை வழிபட்டால் மீண்டும் கணவனை அடையலாம் என்று பெருமானின் அருள் வாக்குக்கு இணங்க, இங்கே ரதி இத்தலத்து இறைவனை வழிபட்டு தன் கணவனை மீண்டும் அடைந்தாள். இத்தலத்துக்கு அருகே கொற்கை, அட்ட வீரட்டானத் தலங்களுள் ஒன்று. ஈசனின் மன்மதனை எரித்து சாம்பலாக்கிய காமதகன மூர்த்தியாக நின்ற இத்திருத்தலம் அமைந்துள்ளது.

புராணச் சிறப்புகள் பல இருந்தாலும், திரைலோக்கிய சுந்தரம் என்று அறியப்படும் ஷதிருலோக்கி’ வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஊர். வரலாற்று உலகமே வரும் முதலாம் இராஜேந்திர சோழனின் அரியனை ஏறிய 1000வது ஆண்டு (10142014) நடத்தியும், இன்றும் பல வரலாற்றுக் கருத்தரங்குகளில் பேசப்படும் நாயகன் முதலாம் இராஜேந்திரனின் வெற்றிச் செய்திகள், வெற்றிச் சின்னங்கள் கூறும் வேளையில் ஷதிருலோக்கியும்’ அதன் சிறப்பும் மிக முக்கியமானது.

### திருலோக்கியின் வரலாற்று சிறப்புகள்

“கல் தோன்றி மண் தோன்றாக காலத்தே முன் தோன்றிய மூத்தகுடி” என்ற பெருமைக்கு

உரியது தமிழினம். தழிகத்தின் எல்லைகளாக வடக்கே வேங்கடம் முதல் தெற்கே குமரியும், கிழக்கிலும், மேற்கிலும் கடல்களைக் கொண்டு விளங்கியது. வடக்கே இமயம் முதல் தெற்கே இலங்கை வரை புலிக்கொடி நாட்டிய பெருமை சோழ வம்சத்தையே சாரும்.

தமிழகத்தை ஆண்ட சோழர்களின் வரலாறு ஆராய்ச்சிக்கு உரியது என்று வரலாற்று ஆசிரியர்கள் கருதுகின்றனர். சங்ககால சோழ மன்னர்கள் பற்றிய குறிப்புகள் சங்க இலக்கியங்கள் எடுத்துரைக்கின்றது. பெரிப்பிளஸ், தாலமி போன்றோர் சங்ககால நகரங்கள், துறைமுகப் பட்டினங்கள் வாணிபம் போன்றவற்றை கூறுகின்றனர். மகாவம்சம், ஈழநாட்டில் குடியேறிய தமிழ் மக்களுக்கும், சங்ககால சோழர்களுக்கும் உள்ள பூசல்களை குறிப்பிடுகின்றது. பட்டினப்பாளை, புகார் நகரத்தின் சிறப்பை எடுத்துரைக்கின்றது. சங்ககால சோழர்களுக்குப்பின், களப்பிரர் ஆட்சியிலும், அதற்குப்பின் தமிழகத்தை ஆண்ட பல்லவ, பாண்டியர் ஆட்சியிலும் தமிழகத்தில் இருந்த சோழர்களைப் பற்றிய குறிப்புகள் மிகக் குறைவாகவே காணப்படுகின்றது.

பல்லவ பேரரசு, திருப்புறம்பியம் போர் (கி.பி.879) முடிவில் வீழ்ச்சியுற்றது. இப்போரில் பெரும் பங்காற்றியவன் விஜயாலயச் சோழன் (கி.பி.846-881), இவன் வம்சத்தினர் தஞ்சையைத் தலைநகராகக் கொண்டு சுமார் 400 ஆண்டு காலம் ஆட்சி செய்தனர். விஜயாலய சோழன் (கி.பி.846-881) முதல் உத்தம சோழன் (கி.பி.970-985) வரை முற்கால சோழர்கள் எனவும்;, முதலாம் இராஜராஜன் (கி.பி.985கி.பி.1014) காலம் முதல் அதிராஜேந்திரன் (கி.பி.1070) காலம் வரை இடைக்காலச் சோழர்கள் எனவும்;, முதலாம் குலோத்துங்கன் (கி.பி.1070-1120) முதல் மூன்றாம் இராஜேந்திரன் (கி.பி.1246 -1278) வரை உள்ள காலத்தை பிற்கால சோழர்கள் காலம் எனவும் வரலாற்று அறிஞர்கள் சோழர்களின் 400 ஆண்டு கால ஆட்சிக்காலத்தைப் பிரித்துள்ளனர்.

இடைக்காலத்தில், தமிழகத்தை ஆண்ட சோழர்களில் முதலாம் இராஜராஜன் காலம் (கி.பி.985-1014) முதல் அதிராஜேந்திரன் (கி.பி.1070) காலம் வரை சோழப் பேரரசு மிக உன்னத நிலையை அடைந்தது. அதிலும் குறிப்பாக, முதலாம் இராஜராஜன், அவனது மகன் முதலாம் இராஜேந்திரனின் ஆட்சிக்காலம் சோழப் பேரரசின் பொற்காலம் எனக் கூறலாம். இவர்களது ஆட்சியில் ஆட்சிமுறை, ராணுவம், கிராம ஆட்சிமுறை, சமயம், இலக்கியம், கட்டிடக்கலை, நுன்கலை என பல்வேறு துறைகளில் ஒரு புதிய எழுச்சியைக் காணமுடிகிறது.

## முதலாம் இராஜேந்திர சோழனின் சிறப்புகள்

இடைக்கால சோழர்களில், தந்தையை மிஞ்சும் தனையனாக முதலாம் இராஜேந்திரச்சோழன் (கி.பி.1012-1044) சுமார் 33 ஆண்டு காலம் தந்தையுடனும், இவர் ஆட்சிக்காலத்திலும் பல சாதனைகளை செய்து ஒரு சிறந்த மன்னராக விளங்கினார். சோழ வம்சத்தினர், பட்டப்பெயர்களான பரகேசரி, ராஜகேசரி என தங்களது பெயருக்கு முன் சூட்டிக் கொள்ளும் வழக்கம் இருந்ததை கல்வெட்டுக்கள் மூலம் அறிந்து கொள்ள முடிகிறது.

பரகேசரி முதலாம் இராஜேந்திர சோழதேவன், முதலாம் இராஜராஜனுக்கும், திரிபுனமாதேவி என்றழைக்கப்பட்ட வானவன் மாதேவிக்கும் பிறந்தவன். (A.R.E, 448/1918) இவன், ஆடி மாதம் திருவாதிரை திருநாளில் பிறந்தவன் என திருவாரூர் கல்வெட்டின் மூலம் (A.R.E, 674/1919) நாம் அறிந்து கொள்ளமுடிகின்றது. வரலாற்று ஆராய்ச்சியாளர்களின் கருத்துப்படி, பரகேசரி இராஜேந்திர சோழனாக கி.;பி.1012ல் இளவரசு பட்டம் (South Indian Inscription, (S.I.I) Vol.III, எண்.205, வரி.85) ஏற்று, "திருமன்னி வளர இருநில மடந்தையும்" என்ற மெய்கீர்த்தியுடன் சிறப்பாக ஆட்சி செய்ததை கல்வெட்டுகளும், திருவாலங்காடு, எசாலம், கரந்தை செப்பேடுகள் கூறுகின்றது.

திருவாலங்காடு செப்பேடு, முதலாம் இராஜேந்திரனின் வெற்றிப் படையெடுப்புகளை மிக அழகாக எடுத்துரைக்கிறது. சேர, பாண்டிய, சாளுக்கிய

நாடுகளையும், ஈழம், கடாரம், ஸ்ரீவிஜயம் வரை சென்று புலிக்கொடியை நாட்டின் சோழ நாட்டின் கீழ் கொணர்ந்தவன். கங்கை வரை படையெடுத்து சென்று கங்கை நீரை கொணரச் செய்து, புதிய நகரை தூய்மைபடுத்தி, தஞ்சை பெரிய கோயிலுக்கு நிகராக கங்கை கொண்ட சோழீச்சவரம் என்னும் கோயிலை எடுப்பித்து திராவிடக் கலையின் சிறப்பினை உலகுக்கு உணர்த்தியப் பேரரசன்.

பரகேசரி இராஜேந்திர சோழ தேவன், தில்லை நடராசன் மீது நீங்காப் பற்றுடையவன். கண்டராதித்தன் மனைவி செம்பியன்மாதேவியாரும், அத்தை குந்தவை பிராட்டியும், தந்தை வழியில் நடந்து வந்து சிவநெறியைப் பின்பற்றியவர்கள். அதனால் தன் வாழ்நாளில், சிவபக்தனாகவும், பிற மதத்தைப் போற்றும் வகையில் பல அறக்கொடைகள் செய்தும், சைவ, வைணவக் கோயில்களை கற்றளியாக்கியும், தான் தரிசித்த கோயில்களுக்கு பொன்னும், மணியும், சிலைகளும், திருஅமுது படைக்க நில தானங்கள் அளித்ததைக் கல்வெட்டுகளும், செப்பேடுகளும் எடுத்தியம்புகின்றன.

### குடும்பம்

விஜயாலயன் வழி வந்த சோழர்கள் பல மனைவியரைப் பெறும் காலகட்டத்தில் வாழ்ந்தவர்கள். அதனால், அரசர்களின் பிள்ளைகளும் பகுதியாகக் காணப்பட்டனர். முதலாம் இராஜேந்திர சோழனின் குறிப்பிடத்தக்க மனைவியர்களாக முக்கோக்கிழானடிகள் (ARE 73/194), அரிந்தவள்மாதேவி (ARE 632/1909), திரிபுவனமாதேவி (S.I.I.Vol.V 639) ஆன வானவன் மாதேவி, வீரமாதேவி, பஞ் சவன்மாதேவி ஆகியோர் கல்வெட்டுகளில் காணப்படுகின்றனர். இதில் வீரமாதேவி என்பார் இராஜேந்திரனிடம் பேரன்பு கொண்டவள் என்பதனை, அரசன் தன் இறுதி நாட்களை திருவண்ணாமலைக்கு அருகே உள்ள பிரம்மதேசம் என்னும் ஊரில் கழித்து இறந்ததும் அரசனுடன் உடன்கட்டை ஏறினாள் என்பதனை பிரம்மதேசக்கல்வெட்டு (A.R.E 79/1909) கூறுகிறது.

இராஜேந்திரனின் பிள்ளைகள், சோழ நாட்டின் ஆளுமை பெற்ற வேந்தர்களாக முதலாம் இராஜாதிராஜன் (கி.பி.1018-1054), இரண்டாம் இராஜேந்திரன் (கி.பி.1051-1063), வீரராஜேந்திரன் (கி.பி.1063-1070) ஆகிய மூவரும் முதலாம் இராஜேந்திரன் கி.பி.1044ல் இறந்ததும் ஒருவர் பின் ஒருவராய் சோழ வம்சத்தை ஆண்டனர். மேலும், இவருக்கு அருண்மொழி நங்கை, அம்மங்கைதேவி என்ற இரு மகள்கள் இருந்தனர்.

### முதலாம் இராஜேந்திர சோழனும் திருலோக்கியும்

பல்வகை சிறப்பிற்கும், பெருமைக்கும், போற்றுதலுக்கும் உரிய பரகேசரி முதலாம் இராஜேந்திர சோழதேவன், சோழப் பேராசர்களில் ஓர் உன்னத இடத்தை பெற்றுள்ளார். இவரின் பல அரிய சாதனைகளை உலகம் போற்றும் வண்ணம் 1000வது ஆண்டு விழா கங்கை கொண்ட சோழபுரத்தில்; வரலாற்று ஆர்வலர்களால் வெகு விமரிசையாய் (2014) கொண்டாடப்பட்டது. உலகமே தலை நிமிர்ந்து பார்க்க வைத்த பெருமைக்கு உரியவன்.

தனது ஆட்சிக் காலத்தில் (கி.பி.1012-1044) பல அரிய படையெடுப்புகளை நடத்தி தந்தைக்கு நிகராக பல சிறப்புப் பெயர்களைப் பெற்றவன். அதில் குறிப்பாக, கங்கை படையெடுப்புகளும், அதன் வெற்றி சின்னங்கள் வைக்கப்பட்ட பல இடத்தில், திருலோக்கியும் ஓர் முக்கிய இடத்தைப் பெற்றுள்ளது என்பதனை இக்கட்டுரை எடுத்தியம்புகின்றது.

முதலாம் இராஜேந்திரன் கங்கைகொண்ட சோழனாக, வரலாற்று நாயகனாக, தந்தையை மிஞ்சும் போர் திறமைகொண்ட அவனது வீரதீர செயல்களும் (A.R.E 460/1908) பல சிறப்பு பெயர்களும் (S.I.I.Vol. III.,No.205) பெற்றதனை மெய்கீர்த்திகளும், செப்பேடுகளும் (மேலது No.205) உறுதிபடுத்துகின்றன. இவனது, வடநாட்டு படையெடுப்புகளை பார்க்கையில், (பிற்கால சோழ வரலாறு பக்.149) சாளுக்கிய நாட்டு படையெடுப்பு, இடை துறைநாடு வனவாசி, கொள்ளிப்பாகை, மண்ணைக்கடக்கம்,

சக்கரக்கோட்டம், வங்காளம், உத்தரலாடம், கோசலநாடு, தக்கணலாடம் போன்ற இடங்களை வென்றதை கல்வெட்டுகளும், மெய்கீர்த்திகளும் சிறப்பித்துக் கூறுகின்றது.

பரகேசரி இராஜேந்திரசோழனின் வடநாட்டுப் படையெடுப்பு (கிபி 1025) (A.R.E., 111/1932) மூவ்வேந்தரின் 11ஆம் ஆட்சி ஆண்டு கல்வெட்டுகள் மூலம் அறியப்படுகின்றது. இந்த வடநாட்டுப் படையெடுப்புக்கு முக்கிய காரணம், கங்கை நீரைக் கொணர்ந்து தனது நாட்டை புனிதமாக்கியும், கங்கைநீரால் "சோழகங்கம்" (Epigraphica Indica, E.I., XV பக்.49) என்ற ஏரியை அவனது புதிய தலைநகரான "கங்கபுரி" (A.R.E., 118/1888) ஏற்படுத்தவதே ஆகும் என வரலாற்று அறிஞர்கள் கருதுகின்றனர்.

கங்கைகொண்டசோழன், வடநாட்டு வெற்றியில் பல தேசங்களை வெற்றி கொண்டு, பாலதேசத்து அரசன் மகிபாலனையும் வென்று தோல்வியுற்ற மன்னர்களின் தலைமீது கங்கை நீரை நிரப்பிய குடங்களை சுமக்க வைத்து சோழநாட்டிற்குத் திரும்பினான் என கல்வெட்டுச் செய்திகள் கூறுகின்றன. (Travangore, Archaeological Series, (T.A.S) Vol. III., No.34, Vs.71) மேலும், யானைகளை வரிசையாக நிறுத்தி பாலம் அமைத்து அவற்றின் மீது தன் படைகளைச் செலுத்தி கங்கையாற்றை எளிதாக கடந்து சென்றான் என திருவாலங்காட்டுச் செப்பேடுகள் கூறுகின்றன. (S.I.I., Vol.III, No.205, Vs.112)

வடநாட்டில், பல வெற்றிகளைப் பெற்ற பரசேகரி முதலாம் இராஜேந்திரசோழன் கங்கைநீரும், பொன், பொருள் வந்த தனது படைத்தலைவனை கோதாவரி ஆற்றங்கரையில் சந்தித்தான் என்று திருவாலங்காட்டுச் செப்பேடுகள் மூலம் அறிகின்றோம். (A.R.E., 467/1908 & S.I.I. Vol.I., பக்.68) பெரும் மகிழ்ச்சியுடன் படைத்தலைவனை எதிர்கொண்டு, பரிசுகளை ஏற்று, (S.I.I.Vol.III., No.205.205இ வரிகள் 118, 119 & 122) திரும்பி வரும் வழியில் உள்ள தலங்களை தரிசித்து பல நிவந்தங்களை அளித்தான். வெற்றித்திருமகளுடன், வென்ற நாடுகளில் கற்சிற்பங்களையும் கவர்ந்து வந்தான்.

கங்கைநீர் மற்றும் சிற்பங்களைக் பெற்றுத் திரும்பி இராஜேந்திரன, கங்கை நீரால் புனிதப்படுத்திய திருலோக்கியில் கோயில்களைக் கட்டியதை கல்வெட்டுச் செய்திகள் மூலம் இவ்வூருக்கு அரசன் அளித்த முக்கியத்துவத்தை அறிந்துகொள்ள முடிகிறது. இவ்வரசன் மட்டுமல்லாமல் இவனது மகனும் தானம் (யு.சு.நு.இ 113ஃ1932) அளித்த செய்தியினை அறிந்துகொள்ள முடிகிறது. நிவந்தங்கள் அல்லாது வெற்றிச் சின்னங்களான ரிʻபாரூடனர் மற்றும் ஆலிங்கன தேவசேனா சமேத சுப்ரமணியர் சிலைகள் திருலோக்கி சுந்தரேசுவரர் திருக்கோயிலில் பிரதிஷ்டை செய்த செய்தியினையும் அறிந்து கொள்ளமுடிகிறது. (பிற்கால சோழர் வரலாறு, பக்.166)

திருலோக்கி சுந்தரேசுவரர் திருக்கோயிலில், தென்மேற்கு வெளிபிரகாரத்தில், ஒற்றைக் கல்லில் செதுக்கிய நந்தியம்பெருமானின் முதுகின்மேல் ரிʻபவாகனராகச் சிவன்பார்வதி காட்சியளிக்கின்றனர். இச்சிலையின் எழிலுருவம் நுளம்ப சாளுக்கிய கலைப்பாணியை ஒத்திருக்கிறது. நந்நியம்பெருமானின் மேல் காணப்படும் தொங்கு சலங்கை நேர்த்தியாகக் கோர்க்கப்பட்டு அணிவிக்கப்பட்டுள்ளது. சிவன், பார்வதி இருவரையும் சுற்றி மகர தோரணங்கள் சூழ எழிலாக அமர்ந்துள்ளனர். சிவன், பார்வதி இருவரும் நேர்த்தியான சிகை அலங்காரத்துடன் நுளம்ப சாளுக்கிய பாணியில் இத்திருக்கோயில் முதலாம் இராஜேந்திர சோழனின் கங்கை வெற்றிக்கு சாட்சியாக அமர்ந்துள்ளனர். (நன்றி புகைப்படம், கங்கை கொண்ட இராஜேந்திர சோழன், (2017)

திருலோக்கி, அருள்மிகு அகிலாண்டேஸ்வரி சமேத சந்தரேசுவரர் கோயில் மகாமண்டபத்தில் ஆலிங்கன தேவசேனா சமேத சுப்ரமணியர் சிலை இரதி மன்மதன் என்ற பெயரில் கோயிலில் பூசைகளும், திருமண ஒற்றுமை, திருமணம் கைகூட, கணவன், மனைவி ஆயுள் பெருக, தாலிபாக்கியம் நிலைக்க போன்றவற்றிற்காக உள்ளுர், மற்றும் சுற்றுப்புற ஊர்களிலிருந்து இச்சிலைக்கு பரிகாரங்கள் செய்கின்றனர்.

மேலும், கோயில் தலபுராணம் இரதி, மன்மதன் என இச்சிலையினை தொடர்புபடுத்தியும் கூறப்படுகின்றது.

அட்டவீரட்டானத் தலங்களுள் ஒன்றான கொற்கை திருலோக்கி தலத்திற்கு அருகே உள்ளது. கொற்கையில், சிவபெருமான் மன்மதனை காமதகனம் செய்து காமதகன மூர்த்தியாக காட்சியளிக்கிறார். இரதியும், தன் கணவனை உயிர்ப்பிக்க இத்தல இறைவனை வேண்டியதாகவும், அதனால் இங்கு இரதி, மன்மதன் சிலை ஆலிங்கன மூர்த்தியாக பக்தர்களுக்கு அருள்வதாகக் கூறப்படுகிறது. ஆனால், இரதி மன்மதன் சிலையாகக் கூறப்பெறும் தேவசேனா சமேத சுப்ரமணியர் சாளுக்கிய படையெடுப்பின் விளைவாக எடுத்துவந்த நுளம்ப நாட்டு சிற்பமாகும். இதனை திரு.சு.நாகசாமி, (கல்வெட்டு இதழ் 2. 1974) தொல்லியல் துறை, சென்னை அவர்கள் தேவசேனா சமேத சுப்ரமணியர் என்றும் அச்சிலை செதுக்கப்பட்ட கல், சிற்ப அமைதி, நுளம்ப சாளுக்கிய சிற்ப கலைவீவாணி என்பதனை உறுதி செய்கின்றது.

தேவசேனா சமேத சுப்ரமணியர் சிலை 3லு அடி உயரம் கொண்டது. இவரும் திரிபங்க நிலையில் ஒருவரை ஒருவர் தழுவி நிற்கும் கோலத்தில் உள்ளது. திருமுக அமைதியான தோற்றத்துடன் அமைந்துள்ளது. தொடர் அபிழி'கம் மற்றும் கால மாற்றத்தினால் சிறப்பாக கூற இயலவில்லை. இவருடைய ஆபரணங்களும், தவை அலங்காரங்களும் தமிழக பாணியைச் சேர்ந்தது அல்ல என்பதனை உறுதி செய்கிறது. சிலையைச் சுற்றி காணப்படும் மகரதோரணம் மிகுந்த கலைநயத்துடன், ஆடல் மகளிர் இருபுறமும் தாங்கி நிற்கின்றன. மகரதோரணத்தின் கலை வேலைப்பாடு நுளம்ப சாளுக்கிய கலைப்பாணியை ஒத்திருக்கின்றது. (புகைப்படம், கங்கை கொண்ட இராஜேந்திர சோழன், (2017)

## முடிவுரை

திருலோக்கி, திரைலோக்கியமாதேவியார் சதுர்வேதிமங்கலம் என கல்வெட்டுகளில் அறியப்படும் இவ்வு+ர், அப்பர் பெருமானால் பாடப்பட்டும், கருவூர் தேவரால் 9ம் திருமுறையில் திரைலோக்கிய சுந்தரம் என பாடப்பட்டத் திருத்தலம். சுந்தரேசுவரர் சமேத அகிலாண்டேஸ்வரி திருக்கோயில் புராணச்சிறப்பும், வரலாற்றுச்சிறப்பும் மிக்கது. பிருகுமுனிவர், பிரகஸ்வதி (குருபகவான்), இரதிதேவி, கருவூர் தேவர், தருமன் ஆகியோர் வழிபட்டத்திருத்தலம். குருபகவான், நித்திய பிரதோ'மூர்த்தியான ரி'பவாகனரை (நுளம்ப சிற்பம்) வணங்கி நிற்பதால், குருவருள் கிட்டவும், குருதோ' நிவிர்த்திக்கும், அட்சய திருத்திய நாளில் வழிபட்டு செல்வ வளம் பெருக பக்தர்கள் குருவருளை நாடி வருகின்றனர். மேலும், இக்கோயிலில் உள்ள இரதி, மன்மதன் சிலை (தேவசேனா சமேத சுப்ரமணியர்) குடும்ப ஒற்றுமைக்காக வழிபடும் தலமாக உள்ளது. முதலாம் இராஜேந்திர சோழன் தனது கங்கை வெற்றியின் நினைவாக, கங்கை நீரால் புனிதபடுத்தி வெற்றிச்சின்னங்களை இத்திருக்கோயிலில் அமைத்து வரலாற்றில் என்றும் நீங்கா புகழ் பெற்றவன் ஆகிறான். திருலோக்கியும் இவ்வையகம் உள்ள வரை முதலாம் இராஜேந்திரனின் புகழ்பாடும் தலமாக அமைந்துள்ளது.

## References

*A.R.E. Reports, South Indian Inscription*. Travancore Archaeological series. Tamil Nadu: Epigraphica India.


*Kalveddu Ithaz*. Tamil Nadu, India.

Sathasiva Pandarathar, T, Vai. (1974). *Pirkala Sozhar Varalaru*. Chidambram: Annamalai University Press.

Thiyagarajan, N., & Ravichhandran, P., (Eds). (2017). *Gangai Konda Rajenthira Sozhan*. Perambalur: Mercury Printers.



நுளம்பர் நாட்டுச் சிற்பம், ரதி மன்மதன், திருலோக்கி சுந்தரேஸ்வரர் கோயில், படங்கள் *(3)* வழங்கி உதவிய திரு. இரா.மோகன், கங்கை கொண்ட சோழபுரம் மேம்பாட்டுக் குழுமம்.



நுளம்பர் நாட்டுச் சிற்பம், ரிஷபத்தின் மேல் அமர்ந்த சிவன் பார்வதி, திருலோக்கி சுந்தரேஸ்வரர் கோயில்